


# திரு.வி.க. உள்ளமும் உயர்நூல்களும்

சக்திதாசன் சுப்பிரமணியன்
ஜலஜா சக்திதாசன்

# திரு. வி. க
# உள்ளமும் உயர் நூல்களும்


சக்திதாசன் சுப்பிரமணியன்

ஜலஜா சக்திதாசன்



நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

41-பி, சிட்கோ எஸ்டேட், சென்னை-600 098.

முதற் பதிப்பு: ஜூலை, 1989

© திருமதி ஜலஜா சக்திதாசன் (சுப்பிரமணியன்)

Code No. A 440

விலை: ரூ. 25-00

அச்சிட்டோர் :
பாவை பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்,
சென்னை-600 014.

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| முன்னுரை | | ... | iv |
| 1. | தமிழ்க் கடலின் நல் முத்துக்கள் | ... | 1 |
| 2. | திரு.வி.கவின் உரைநடைச் சிறப்பு | ... | 4 |
| 3. | அலை பாயும் உலகிற்கு அருமருந்து | ... | 8 |
| 4. | திரு.வி.கவும் சைவமும் | ... | 68 |
| 5. | திரு.வி.கவும் சன்மார்க்கமும் | ... | 80 |
| 6. | சமரச நோக்கில் வாழ்ந்து காட்டியோர் | ... | 87 |
| 7. | வாழ்வாங்கு வாழ்ந்து காட்டியவர் | ... | 106 |
| 8. | வரலாற்று நூல் | ... | 137 |
| 9. | திரு.வி.க ஒரு சீர்திருத்தவாதி அரசியலிலே | ... | 175 |
| 10. | சமூக சீர்திருத்தவாதி திரு.வி.க | ... | 188 |
| 11. | மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் | ... | 200 |
| 12. | இராயப்பேட்டை முனிவரின் பவளங்கள் | ... | 221 |
| 13. | இறுவாய்-திரு.வி.க ஓர் அந்தணர் | ... | 242 |

# முன்னுரை

## என்னை உருவாக்கிய ஆசிரியப் பெருமான்

**அன்று,**

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்திரண்டாம் ஆண்டு. திருவையாற்று அரசர் கல்லூரியிலே தமிழ் வித்துவான் படித்துக் கொண்டிருந்தேன் நான்.

எங்கள் கல்லூரி மாணவர் பலரும் சேர்ந்து ஒரு கழகம் அமைத்திருந்தனர். அக்கழகத்தின் பெயர் திருவள்ளுவர் கழகம் என்பது. அதன் அமைச்சராக விளங்கியவர் சிவகுருநாதன் என்பவர்.

திருவள்ளுவர் கழகத்திலே தமிழ் நூல்கள் இருந்தன. இலவசமாக அந்நூல்கள் மாணவர்க்கு வழங்கப்பட்டு வந்தன. ஓய்வு நேரங்களில் இந்நூல்களைப் படிக்கலாம், பயன் பெறலாம் என்பதற்காகவே அந்நூல்கள் அங்கு வைக்கப்பட்டிருந்தன.

ஒரு நாள். திருவள்ளுவர் கழகத்திலிருந்த நூல்களைப் புரட்டிக் கொண்டிருந்தேன். திரு. வி. கவின் **'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்'** என்னைக் கவர்ந்தது. நூலை எடுத்தேன்; பக்கங்களைப் புரட்டினேன். அதில் தோய்ந்தேன்; மூழ்கினேன்; முங்கினேன்; ஆழ்ந்தேன்; அமிழ்ந்தேன்.

ஏன்? நாட்டின் நடப்புகளே அதற்குக் காரணம். விடுதலை வேகம் எங்கும் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

உப்புப் போராட்டம் ஓய்ந்து விட்டது. கள்ளுக்கடை மறியல் ஒரு புறம் நடந்து கொண்டிருந்தது!

கோயில் நுழைவு வேண்டி உண்ணாவிரதம். தீண்டாமை ஒழிப்புப் போராட்டம். இவ்வாறு எங்கும் போராட்டம், போராட்டம், போராட்டம்!

மகாத்மா காந்தி தென்னாடு போந்தார். காந்திய மின்சக்தி எங்கும் பாய்ந்தது. எங்கும் எழுச்சி, எழுச்சி, எழுச்சி! வேகம், வேகம், வேகம்! எழுச்சியும் வேகமும் இளைஞரை ஆட்கொண்டன. என்னையும் அவை பற்றிக் கொண்டன.

விளைவு?

**'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்'** என்ற நூலைக் கண்டவுடன் சிக்கெனப் பிடித்தேன்.

நூல் மட்டுமா என்னை கவர்ந்தது? நூலாசிரியரும் கவர்ந்தார். அவரைக் காணத் துடித்தேன்; அறிய ஆர்வம் எழுந்தது.

சிவகுருநாதனை அணுகினேன். தம் கரந்தைத் தமிழ்ச் சங்கம் மூலம் திரு.வி.கவுடன் தொடர்பு கொண்டிருந்தார் சிவகுருநாதன். எனவே எவ்வாறேனும் 'திரு.வி.கவை காணல் வேண்டும். அவர் தம் பத்திரிகையில் எழுத வேண்டும். நானும் பத்திரிகை ஆசிரியனாதல் வேண்டும். நூல்கள் எழுதல் வேண்டும்' என்ற அவா மேலிட்டது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தி ஐந்தாம் ஆண்டு. **'சுதந்திரச் சங்கு'** என்ற பத்திரிகையிலே உதவி ஆசிரியனாகப் பணிபுரியும் வாய்ப்பும் பெற்றேன்.

**'சுதந்திரச் சங்கு'** என்ற பெயர் இப்போது பலருக்குப் புதிதாகத் தோன்றும். ஆனால் மகாத்மா காந்தி தலைமையில் நடந்த உப்புப் போரின் போது **'சுதந்திரச் சங்கு'** பெருந்தொண்டு ஆற்றியது. **'சுதந்திரச் சங்கு'**

விடுதலைப் போரின் முரசு; 'போர்ச் சங்கு' என விளங்கியது. வாரம் மும்முறை. சிறிய அளவு. பக்கங்களும் சிலவே. விலை என்ன தெரியுமா? காலணா! அதாவது இப்போதைய இரண்டே பைசா! அந்தக் காலத்திலே அறுபதாயிரம் பிரதிகள் செலவாயின.

அப்பத்திரிகையை வெளியிட்டவர் சங்கு கணேசன். இவர் பரம தியாகி. அடக்குமுறைச் சட்டத்துக்கு அஞ்சாது பலமுறை சிறை சென்ற சீரியர். அவர் தமது ஆசிரியர் கூட்டத்தில் என்னையும் சேர்த்துக் கொண்டார்.

அப்பத்திரிகையின் செயலகம் திருவல்லிக்கேணி பைகிராப்ட்ஸ் சாலையில் இருந்தது. மாலை நேரத்தில் தேசத் தியாகிகள் பலர் அங்கு வருவர். தமது அநுபவங் களைக் கூறுவர், மெய் சிலிர்க்கும் அப்போது.

ஒரு நாள், பெரியவர் ஒருவர் வந்தார். பத்திரிகைத் துறையில் பழகியவர். திரு.வி.கவை நன்கு அறிந்தவர்.

''இளைஞர் ஒருவரைத் திரு.வி.க தேடுகிறார். அவ்விளை ஞர் ஆங்கிலம் அறிந்தவராயிருத்தல் வேண்டும். ஆங்கிலத்தி லிருந்து தமிழாக்கம் செய்யும் திறமை பெற்றிருத்தல் வேண்டும். பிழையின்றித் தமிழ் எழுத அறிந்திருக்க வேண் டும். தேசிய உள்ளம் படைத்திருக்க வேண்டும். இத்தகைய ஒருவரைத் தம் பத்திரிகைக்குத் தேடுகிறார்'' என்றார் அவர். அப் பெரியவர் என்னை நன்கறிந்தவரே. ''என்னைத் திரு. வி. கவிடம் அழைத்துச் செல்லுங்கள்'' என்று வேண்டி னேன்.

''உன்னைப் பற்றி அவரிடம் சொல்லி விட்டேன், நாளையே நீ சென்று அவரைப் பார்'' என்றார் பெரியவர். கனவு நனவாகியது.

பெரியவர் கூறியவாறே மறுநாள் சாது அச்சுக்கூடம் சென்றேன். திரு. வி. கவைக் கண்டேன். மறுநாள் வருமாறு அவர் கூறினார். மறுநாளும் சென்றேன். சிறிது நேரம் பேசி விட்டு மீண்டும் வரச்சொன்னார்.

குறிப்பிட்ட நாளும் வந்தது; குறிப்பிட்ட நேரமும் வந்தது. சென்றேன். திரு. வி. க, உலகநாத முதலியார் இருவரும் இருந்தனர். 'வா தம்பி!' என்று அழைத்தனர்.

"உனக்கு எவ்வளவு சம்பளம் கொடுப்பது என்பது பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தோம். இப்போது அதிக சம்பளம் கொடுக்க முடியாது. உனக்கு எவ்வளவு வேண்டுமோ கேள்" என்றார் திரு. வி. க.

'நும் கடன் அடியேனைத் தாங்குதல்; என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று பதிலளித்தேன்.

எனது பதில் கேட்டுத் திரு வி. க மகிழ்ந்தார்; உலகநாத முதலியாரைப் பார்த்தார். உலகநாதர் உள்ளே சென்றார். பஞ்சாங்கம் எடுத்து வந்தார். எனது பெயர், நட்சத்திரம், இராசி முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொண்டார். ஒரு நல்ல நாள் குறிப்பிட்டு, அன்று வரச் சொன்னார். அவ்வாறே வருவதாகக் கூறி விடைபெற்று எனது வீடு திரும்பினேன்.

குறிப்பிட்ட நல்ல நாளன்று வேலைக்குச் சென்றேன். குறிப்பிட்ட நல்ல நேரத்தில் '**நவசக்தி**'யின் உதவியாசிரியன் ஆக வேலையைத் தொடங்கினேன். இது ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்து ஆறாம் ஆண்டு, ஜூன் மாதம். அன்று முதல் அவரது இறுதிவரை நான் வேறு எங்கும் வேலை தேடிச் சென்றேன் அல்லன். ஓராண்டா? இரண்டு ஆண்டுகளா? இல்லை. பதினாறு ஆண்டுகள் அவருடன் நெருங்கிப் பழகும் பேறு பெற்றேன்.

நான் சிறு வயதிலேயே தந்தையை இழந்தவன். என் தந்தை அறிஞர்கள் வழி வந்தவர். என்றாலும் அவர் மறைவுக்குப் பின், நங்கூரமற்ற கப்பலானோம்.

இந்நிலையில் என் ஆசிரியத் தெய்வம், பணி பயில வந்த என்னை, "தந்தையினும் களி கூரத் தழுவினார்" என்றால் எவ்வளவு உண்மை!

என்னைக் காணுங்கால் அவர் முகம் மலரும்; புன்னகை அரும்பும். மகிழ்ச்சி பொங்கும்.

ஏன்? என் உருவில் அவர்தம் அண்ணன் அருமை மகன் பாலசுப்பிரமணியனைக் கண்டார்.

தொடக்கத்தில் அவரை நான் நன்கு அறிந்தேன் அல்லன். அவரிடம் நான் சீறிய நாட்கள் பல. வெகுண்ட நாட்களும் பல. ஆனால் அவர் என் மீது சீறியதே இல்லை.

'**நவசக்தி**' அலுவலகம் இராயப்பேட்டையில் இருந்த போது காலை பத்து மணிக்குத்தான் வேலைக்குச் செல்வேன்.

நாள்தோறும் காலை ஒன்பது மணிக்கு சுடுசோறு உண்டு விட்டு, இடைவேளைக்கு தோசையும் எடுத்துச் செல்வேன்.

ஒரு நாள் இடைவேளை. திரு. வி. க கீழே இறங்கி வந்தார். அப்போது நான் தோசை தின்று கொண் டிருந்தேன்.

''என்ன சாப்பிடுகிறாய்?' என்று கேட்டார் அவர்.

'தோசை' என்றேன் நான்.

'நீ சிறு பிள்ளை. ஏன் தோசை கொண்டு வருகிறாய்? தயிர்சாதம் கொண்டு வந்து சாப்பிடு. அதுதான் உன் உடம்புக்கு நல்லது' என்றார்.

என் நலனில் கருத்துகொண்ட, ஆசிரிய பெருமானின் சொல் தட்டுவேனோ?

அன்று முதல் தயிர் சாதம் கொண்டு வரத் தொடங்கினேன்.

'**நவசக்தி**'யின் உதவி ஆசிரியனாக இருந்தபோது, பாரதி பற்றி நூல் எழுத வேண்டுமென்ற வேட்கை என்னுள் எழுந்தது. என் உள்ளக் கிடக்கையை என் ஆசிரிய தெய்வத்

திடம் கூறினேன். அவரும் எனக்கு உற்சாகம் தந்தார். எப்படி எப்படி விவரங்களைச் சேகரிக்க வேண்டுமென அறிவுரை கூறினார்.

இதன்படி உருவானதே '**பாரதி லீலை**' என்ற என் சிறு நூல்.

'சிறு பையன்.' அவன் என்னவெல்லாம் பிரசுரிக்க வேண்டுமென்கிறானோ, எவ்வாறு எல்லாம் பிரசுரம் செய்ய வேண்டுமென நினைக்கிறானோ, அவ்வாறே செய்து விடு. மறுக்காதே!' என்று பெரியவரிடம் சொன்னது. இன்றும் என் காதுகளில் ஒலிக்கிறது.

அதே போல் '**தமிழ் வெறி**' என்ற என் நூலுக்கு மதிப்புரை எவ்வளவு மகிழ்வுடன் எழுதிக் கொடுத்தார்! இவைகளையெல்லாம் மறக்க முடியுமா?

## நாள்தோறும்

பாம்பன் சுவாமி சமாதி வரை நடந்து செல்வோமே! அப்போது நான் அவரிடம் கேட்டவை எத்தனை எத்தனை! இடையில் நான் குறுக்குக் கேள்விகளும் கேட்பேன், அவை களைக் கேட்டு கோபங் கொள்ளவே மாட்டார். ஆணித்தர மான, ஐயம் தகர்க்கும் விடைகள் வரும். எங்கள் உரையாடலில் அரசியல் இடம் பெறும்; சீர்திருத்தம் வரும். இலக்கியம் வரும். சமயமும் வரும். இப்படி எத்தனையோ!

அது மட்டுமா! இன்றும் பலர் 'நீங்கள் திரு. வி. கவின் தத்து மகன் அல்லவா? அவர் உங்களைப் பற்றி அப்படித் தானே கூறுவார்?' என்று கேட்கும்போது என் நெஞ்சு விம்மும். என் ஆசிரியர் மட்டுமா திரு. வி. க!!!

ஒரு முறை பண நெருக்கடி; மற்றும் பல தொல்லைகள் காரணமாக, '**நவசக்தி**' சற்று வேகந் தளர்ந்து ஒய்ந்து, சிறிது காலம் உட்கார்ந்து விட்டாள்.

அப்போதும் திரு. வி.கவைப் பார்த்தேன்.ஆனால் அவர் அது குறித்து ஒரு வார்த்தை கூட என்னைக் கடிந்தார் இல்லை.

'தம்பி! சோர்வடையாதே! மிகவும் ஓடி விட்டாள். சற்று நிற்கிறாள்; சோர்வு போன பின், பிடிப்பாள் ஓட்டம்!' என்று என்னைத் தைரியமூட்டினார். அதுவும் பலித்தது.

சில நாட்கள் கழித்து தனியாக 'நவசக்தி' நடத்த முற்பட்டேன்; வெற்றியும் ஓரளவு கண்டேன். பின்னர் அப்பத்திரிகை, மூத்த மூதறிஞர், பத்திரிகாசிரியர் அமரர் திரு. டி. எஸ். சொக்கலிங்கத்திற்காக திரு. காமராஜ் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

ஒரு நாள் உரையாடலின் போது "ஐயரவர்கள் தமது வாழ்க்கை வரலாற்றை எழுதி வெளியிடுகிறார். தாங்களும் தங்கள் வாழ்க்கை வரலாற்றை எழுதினால் என்ன?" என்று திரு. வி. கவை கேட்டேன்.

'அது வேண்டாம் தம்பீ' என மறுத்தார் தமிழ்த் தென்றல்.

'காரணமென்ன?'

"தமது வரலாற்றைத் தாமே எழுதுவது நமது முன்னோர் மரபு அன்று" என்றார்.

"முன்னோர் செய்யாத பல இன்று செய்கிறோம். நம் முன்னோர் பத்திரிகை நடத்தினரா?" என்று கேட்டேன்.

அவர் புன்னகை புரிந்தார். வாய்ப்புக் கிட்டும் போதெல்லாம் 'வாழ்க்கை வரலாற்றை எழுத வேண்டும்' என்று வற்புறுத்தினேன்.

ஒரு நாள் சீறவும் செய்தேன். "பிற்காலத்தில் உங்களைப் பற்றிப் பல பொய்யுரைகள் கூறுவர்; தவறான செய்திகள் பல பரப்பப்படும். அவைகளைப் பொய்ப்பிக்கும்

ஆதாரம் ஏதும் இல்லாமல் செய்து விடாதீர்கள்!'' என்றேன் கண்டிப்பாக.

கொஞ்சம் காலம் சென்றது. 'வாழ்க்கைக் குறிப்பு' எழுத ஆரம்பித்தார் தமிழ்க்கடல், நான்ஆறுதலடைந்தேன்.

திரு.வி.க மணிவிழாவின்போது அவர் தம் 'வாழ்க்கை வரலாற்றை எழுதி, வெளியிட எண்ணினேன். திரு.வி.க அது 'வேண்டாம்' என்றார் திட்டவட்டமாக. அவர் மறுப்பை உதாசீனம் செய்ய எனக்குத் துணிச்சல் இல்லை.

திரு.வி.க அமரராகி, ஆண்டுகள் பல ஓடிவிட்டன. அவர் வாழ்க்கை வரலாற்றை எழுதுவதே அவருக்கு நான் செய்யும் பெரிய தொண்டு என்று எண்ணி, அதனைச் செய்ய துணிந்தேன். அவர் வாழ்க்கை வரலாறும் நல்ல தொரு முறையில் வெளிவந்தது.

பின்னர் என் ஆசிரியர் பெருந்தகைக்குச் செய்ய வேண்டிய மற்றுமொரு பணி எனக்கு நினைவு வந்தது, அவர்தம் நூல்களின் உயர்வை அனைவரும் உணர வேண்டு மென்பதே அது. அதன் விளைவே இந்நூல்.

எனவே தினமும் என் மனைவி திருமதி. வி. ஜலஜா சக்திதாசனுடன் அந்த நூல் சம்பந்தமாக, சர்ச்சைகள் வரும். அபிப்பிராயங்களை பரிமாறிக் கொள்வோம். தேவை யான நூல்களின் பெயர்களை எழுதிக் கொடுப்பேன் மாலை வேலையிலிருந்து வரும்போது அந்த நூல்களில் கிடைத்த வற்றைச் சுமந்துக் கொண்டு வருவாள். பெரும்பாலும் இருவருமே நூல் நிலையங்களுக்கு ஒன்றாகச் செல்வோம். குறிப்பெழுதுவோம். திரும்பிய பின் இருவரும் அக் குறிப்புக்கள் பற்றி அலசி அலசி பேசுவோம்.

''நீ இந்தப் பகுதியை எழுது! நான் இந்தப் பகுதியை எழுதுகிறேன்!'' என்று சொல்வேன்.

அவளும் மறுக்காமல் அந்தப் பகுதிகளை எழுதுவாள். இப்படியே தான் அந்த பெரும் பணி—எங்கள் தெய்வத்தின் இலக்கிய விமர்சனத்தை—செய்ய ஆரம்பித்தோம்; இனிதே அது நடந்து வந்தது. ஆனால் இடையிலே நான் நோய்வாய்ப் பட்டேன்.

என் மனைவி ஜலஜா சக்திதாசனிடம் 'அந்த நூலை முடித்தே ஆக வேண்டும். அதுவும் நன்றாக எழுத வேண்டும்' என்று கூறினேன். அவளும் எனக்கு 'முடித்தே தீருவோம்' என்று வாக்குக் கொடுத்தாள். அவளது உறுதி எனக்கு அமைதியைத் தந்தது.

**சக்திதாசன் சுப்பிரமணியன்** *(1983)*

*            *            *

என் கணவர் திரு. சக்திதாசன் சுப்பிரமணியன் அமரரானார்.

அவருக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதற்கு ஊக்கம் அளித்தவர் பலர்.

இது என் கன்னி நூல் அல்ல. என் கணவர் எழுதிய பல நூல்களிலும் நான் எழுதிய பல பகுதிகளுண்டு.

என் திருமணத்திற்கு முன்னரே எனக்கு திரு.வி.கவின் நூல்களில் ஈடுபாடு உண்டு. அதனை ஏற்படுத்தியவர் என் தமிழ் பேராசிரியர் அமரர் திரு. ச. கு. கணபதி அய்யர் அவர்கள்.

திரு. வி. கவின் தலைமைச் சொற்பொழிவு, கலாக்ஷேத்திரத்தில் எங்கள் 'தமிழ் அன்பர் கழகம்' என்ற அமைப்பின் ஆண்டு விழாவில் நிகழ்ந்தது. ஈடுபாடு மிகுந்தது.

திரு.வி.கவின் மாணவர் எனக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கணவர் என்றறிந்ததும் மறுப்பே கூறவில்லை. என் கணவர் திரு. சக்திதாசன் சுப்பிரமணியனும், ஆசிரியர் போன்றே—அவர் கூறிய அந்தணராக இருந்ததில் எனக்குப் பெரு மகிழ்ச்சி.

அவர் என் தெய்வம், என் தெய்வத்தை உருவாக்கிய ஆதி இறைக்கு செய்யும் ஒரு தெய்வீகப் பணியாகக் கருதி இந்நூலை நான் முற்றுப் பெறச் செய்கிறேன்.

அறிஞர்கள் ஆதரவும் அன்பும் வேண்டுகிறேன்.

**ஜலஜா சக்திதாசன்**

*3-4-1984* **(சுப்பிரமணியன்)**

# 1

# தமிழ்க் கடலின் நல் முத்துக்கள்

திரு. வி. க அவர்கள் எழுதிய நூல்கள் பல, பற்பல; அவைகளில் உரைநடை நூல்கள் 41. இவைகள் அவர் தமிழ்க்கடலில் மூழ்கி, ஆய்ந்தெடுத்த நல் முத்துக்கள்.

இம்முத்துக்களின் பட்டியலைப் பார்ப்போமா?

## திரு. வி. கவின் நூல்கள்

| வ. எண் | ஆண்டு | நூலின் பெயர் |
|---|---|---|
| 1. | 1907—10 | பெரிய புராணம்-குறிப்புரையும் வசனமும் |
| 2. | 1908 | கதிரைவேற் பிள்ளை அவர்கள் சரித்திரம் |
| 3. | 1909 | திருமந்திரம் (பார்வை) |
| 4. | 1915 | அருணாசல புராணம் (சில சேர்க்கை) |
| 5. | ,, | குசேலோ பாக்கியானம் குறிப்புரை முதல் 2 அத்தியாயங்கட்கு மட்டும். |

| | | |
|---|---|---|
| 6. | 1919 | தேசபக்தாமிர்தம் - திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்- முதல் திருமுறையும் அரும்பதவுரை- சாத்திர குறிப்பு (106 பக்கம் வரை) |
| 7. | 1921 | மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் |
| 8. | ,, | என் கடன் பணி செய்து கிடப்பதே |
| 9. | 1921 | சைவ சமய சாரம் |
| 10. | 1922 | நாயன்மார் திறம் |
| 11. | 1923 | பட்டிணத்து பிள்ளையார் திருப்பாடற்றிரட்டும் பத்திரகிரியார் புலம்பலும் |
| 12. | | மகாபாரதம் |
| 13. | | தமிழ் நாடும் நம் ஆழ்வாரும் |
| 14. | 1925 | சைவத்தின் சமரசம் இன்ப வாழ்வு முருகன் அல்லது அழகு |
| 17. | 1927 | பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை |
| 18. | 1928 | தமிழ்த் தென்றல் அல்லது தலைமைப் பொழிவு |
| 19. | | கடவுள் காட்சியும் தாயுமானாரும் |
| 20. | 1929 | தமிழ் நூல்களில் பௌத்தம் |
| 21. | | சைவத்திறவு |

| | | |
|---|---|---|
| 22. | | இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம் |
| 23. | 1930 | சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து |
| 24. | | நினைப்பவர் மனம் |
| 25. | 1931 | இமயமலை அல்லது தியானம் |
| 26. | 1932 | காரைக்கால் அம்மையார் திருமுறை-குறிப்புரை |
| 27. | 1933 | சமரச சன்மார்க்க போதம் |
| 28. | 1934 | சமரச தீபம் |
| 29. | | சமரச சன்மார்க்க திறவு |
| 30. | 1935 | தமிழ்ச் சோலை அல்லது கட்டுரைத் திரட்டு |
| 31. | | சித்த மார்க்கம் |
| 32. | 1937 | நாயன்மார் வரலாறு |
| 33. | 1938 | முடியா காதலா சீர்திருத்தமா |
| 34. | 1939 | திருக்குறள் விரிவுரை பாயிரம் |
| 35. | 1940 | இந்தியாவும் விடுதலையும் |
| 36. | 1941 | இல்லறவியல் |
| 37. | 1942 | உள்ளொளி |
| 38. | 1944 | திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள்—2 |
| 39. | | ஆலமும் அமுதமும் |
| 40. | 1949 | பரம் பொருள் அல்லது வாழ்க்கை வழி |
| 41. | 1953 | தமிழ்க் கலை |

# 2

# திரு. வி. கவின் உரைநடைச் சிறப்பு

திரு. வி. க ஒரு பெரிய கடல்; பரந்த தமிழ்க் கடல்; ஆங்கிலம், வடமொழி, மற்றும் பிற மொழிகளிலும் ஆழ்ந்த அறிவு பெற்றவர். சமயங்களில் தேர்ச்சி பெற்று, ஆராய்ந்து அலசி உண்மைகளை உணர்ந்தவர்; சன்மார்க்கத்தின் கலங் கரை விளக்கு; அரசியலில் ஈடுபட்டாலும் நேர்மை தவறாது, கடைசி மூச்சுவரை நாட்டு நலன் பற்றிய ஒரே சிந்தையிலிருந்தவர்; அதற்காக தியாகம் பல, எவ்வித விளம்பரமுமின்றி செய்தவர். தமிழ்நாட்டில் பத்திரிகை உலகுக்கு ஓர் ஒப்புவமையற்ற வழிகாட்டி; 'தொழிலாளர் நலனே, நாட்டின் நலன்' என்ற அரும்பெறும் உண்மையைக் காட்டி, தொழிலாளர் இயக்கத்தை இங்கு உருவாக்கி, நடாத்தி, அதை வேரூன்றச் செய்த பெருந்தகையாளர். பெண்கள் விடுதலை தளபதி; கற்றதை கடைப்பிடித்து வாழ்ந்து காட்டிய தமக்கென வாழா பிறர்க்குரியவர் திரு. வி. க அமரரான இவரை காண்பதெப்படி?

காணலாம்; நிச்சயம் காணலாம். எழுத்தாளர்கள் அமரரான பின்னர் உலகில் வாழ்வர். எப்படி? அவர் தம் நூல்களே அவர்கள் உயிர்; அவர் தம் எழுத்துக்கள்—அவர் தம் உள்ளம்; அவர்தம் எழுத்தோவியங்களை ஆராயும் சான்

றோர் கூட்டமே அவர்தம் வாரிசு. எழுத்து என்றும் வாழும்; வாழ்ந்து கொண்டேயிருக்கும்; அதற்கு முடிவே கிடையாது. அதனை உலகினிற்கு தந்தவரோ, நாடுகள் அழிந்தாலும், மக்கள் இனம் உள்ளவரை வாழ்ந்து கொண்டேயிருப்பர் என்பது மிகையன்று. அதே போல தான் திரு.வி.க.வும் அவர் தம் நூல்கள் மூலம் வாழ்கிறார்.

திரு. வி. க எழுதிய நூல்கள் பலவகையின. 1907-ம் ஆண்டு முதல் 1953 வரை இடையறாது எழுத்துத் தொண்டு செய்தவர் திரு.வி.க. சுமார் 55 நூல்கள் தமிழ் தாய்க்கு காணிக்கையாக கொடுத்த பெருமை திரு. வி. கவையே சாரும் இந்நூல்களில் உரைநடை நூல்களுண்டு; செய்யுள் நூல்களும் உண்டு. செய்யுள் நூல்கள் பெரும்பாலும் அவர் கண் பார்வை மறைந்தபின் எழுதப்பட்டவை.

1945-ல் அவர் கண் பார்வை மங்குமுன் எழுதிய உரைநடை நூல்களில் திரு.வி.க வாழ்க்கைக் குறிப்புகள் சிறப்பு வாய்ந்தது.

உரைநடை நூல்களின் இடையே அவர் முதன் முதல் எழுதிய செய்யுள் 'உரிமை வேட்கை' அல்லது 'நாட்டுப் பாடல்', தொடர்ந்து வந்தது, 'முருகன் அருள் வேட்டல்', 'திருமால் அருள் வேட்டல்'. பின்னர் 1942-ல் 'பொதுமை வேட்டல்' செய்யுள் வெளியாகியது.

1932 முதல் 13 ஆண்டுகள், அவர் எழுதிய உரை நடை நூல்கள் சமயம், அரசியல், நல்வாழ்க்கை, சீர்திருத்தம் வாழ்க்கை விமர்சனம்-மதிப்பீடு-சுய வாழ்க்கை வரலாறு ஆகிய பலவகைப் பட்டன.

இவ்வளவு நூல்களை எழுதிய பேரறிஞர் திரு.வி.கவை அவர்தம் நூல்கள் மூலம் காணுதல் எளிதா? இல்லையே! எளிதல்ல என்று தள்ளி விடலாமா? கூடாது, கூடாது! பின் அவர் நூல்கள் மூலம் அவர் உள்ளத்தைக் காண்பது எங்ஙனம்? அவர் நடையை ஆராய ஏதாவது வழிமுறைகள் உண்டா? உண்டு.

திரு.வி.க தம் நடையைப் பற்றி என்ன சொல்கிறார் பார்ப்போமா?

''மொழி நடையைப் பற்றிய போராட்டத்தையும் என் வாழ்க்கை கண்டது. இப்போராட்டம் பொருளற்றது என்பது எனது உள்ளக் கிடக்கை. ஒரே மனிதர் வாழ்க்கையிலே பல திற நடைகள் அமைகின்றன. எழுதிப் பழகப் பழக அவர்க்கு என்று ஒரு நடை இயற்கையாகும். இன்னொருவர்க்கு வேறுவித நடை இயற்கையாகும். இவர் அவரைக் குறை கூறுவதும் தவறு. ஒரே வித நடை எல்லாரிடத்திலும் அமைவது அரிது. உலகம் பலவிதம். ஒரே வித விதைகள் ஒரே வித நிலத்தில் விதைக்கப்படுகின்றன. அவை முளைத்து மரங்களாகுங்கால் எல்லாம் ஒரேவித வடிவங்களையா பெறுகின்றன? இல்லையே! மரங்கள் எத்தனையோ வடிவங்கள் பெறுகின்றன. இஃது இயற்கை அன்னையின் திருவிளையாடல். மொழி நடையும் அவரவர் இயற்கைக் கேற்ற வண்ணம் அமையும். இயற்கை அமைவைக் குறித்து போராட்டம் எற்றுக்கு? என்னுடைய வாழ்க்கையில் மூவித நடைகள் மருவின. ஒன்று இளமையில் உள்ளது; இன்னொன்று சங்க இலக்கியச் சார்பு பெற்றபோது பொருந்தியது: மற்றொன்று பத்திரிகையுலகை உடைந்த நாளில் அமைந்தது. இறுதியே எனக்கு உரியதாய்-உடைய தாய் நிலைத்தது. இந்நடை எளியது; சிறுசிறு வாக்கியங்களாக ஆவது. இந்நடையிலும் நூலுக்கேற்ற, காலத்துக் கேற்ற அமைவு தானே பெறும்.*

திரு.வி.கவின் பேச்சிலே அவர் உள்ளத் தெளிவு தெறிக்கும்; எழுத்திலே அத்தெளிவு பளிச்சிடும். தூய்மையும் உள்ளத் தெளிவும் ஒருங்கே பெற்ற ஒருவரின் பேச்சும் எழுத்தும் ஒரே மாதிரியாக அமைந்ததில் வியப்பென்ன, நவசக்தியின் தலையங்கங்கள் இத்தெளிவுக்கும் தூய்மைக்கும் அத்தாட்சி.வாசகர்களிடம் நேரிடையாக பேசும் அவ்வெழுத்

* திரு.வி. வாழ்க்கைக் குறிப்பு.

துக்கள். இனி இதுபற்றி திரு.வி.க என்ன கருத்து தெரிவிக்கிறார்?

"தமிழ்த் தென்றலும், சீர்திருத்தம் அல்லது இளமை விருந்தும் என்னுடைய எழுத்துப் பேச்சை கொண்ட நூல்கள். எனது எழுத்துப்பேச்சில் பீடும் மிடுக்கும், எழுச்சியும் கிளர்ச்சியும், வீறும் வீரமும் மதர்ந்து—ஏக்கழுத்தம் பெற்ற நடை சிற்சில இடங்களில் திகழும். அலைகள் அமையும் முறையிலேயே எனது எழுத்தும் ஆக்கப்பட்டன.*

* திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்பு.

# 3

# அலைபாயும் உலகிற்கு அரு மருந்து

## திருக்குறள் பாயிரமும் இல்லறமும்

### திரு.வி.கவின் திருக்குறள்-விரிவுரை ஆராய்ச்சி

*திருக்குறள் மிகப் பழமையான நூல்களில் ஒன்று. இரண்டே அடிகளில் மிகப் பெரிய உண்மையை எடுத்துக் கூறும் ஓர் அறநூல். இந்த குறளுக்கு உரை வழங்கியவர் பரிமேலழகர் போன்றோர். திரு.வி.க உரைக்கும் பரிமேலழகர் உரைக்கும் உள்ள வேற்றுமை யாது?*

*திரு.வி.க வின் திருக்குறள் விரிவுரை தற்காலத்துக்கு ஏற்றபடி அமைந்திருப்பதே வித்தியாசம். அது மட்டுமா? இயந்திர காலத்திற்கும் அணுகுண்டு, விண்வெளி யுகத்திற்கும் ஏற்றவாறு விரிவுரை திரு.வி.க தவிர வேறு யாரே தரவல்லார்?*

*திருக்குறளை மட்டும் திரு.வி.க தேர்ந்தெடுப்பானேன்? வேறு நூல்களில்லையா? இது அடுத்த கேள்வி.*

*திருக்குறள் மட்டும் ஏன்?*

*வேறு நூல்கள் உண்டு. ஆனால் உலகிற்கே ஒத்தவாறு இருப்பது திருக்குறள். அது எந்நாட்டவர்க்கும், எக்காலத்திற்கும் பொருந்தும்; அது மட்டுமல்ல, எம்மொழியும்*

ஏற்கும் என்ற காரணங்கள், விரிவுரை ஆராய்ச்சிக்கு அடிகோலின.

இவையெல்லாவற்றையும் விட, உலகிலுள்ள எல்லா கேடுகளுக்கும் மருந்து என்பதை அனுபவப் பூர்வமாக உணர்ந்தவர் திரு. வி. க. 'யாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறவே' என்ற பரந்த நோக்கொடு, இவ்விரிவுரை ஆராய்ச்சியில் ஆழ்ந்தார்; வெளியிட்டார்.

தமிழ்த் தென்றலை ஈர்த்தது திருக்குறளின் அதிகார அமைப்பு. திருவள்ளுவம் முப்பால் கொண்டது. அறத்துப்பால் பொருட்பால், இன்பப்பால் என்று மட்டுமே பிரித்தார் திருவள்ளுவர். வீட்டின் பாலை விடுத்தார். ஏன்?

அறத்தால் பொருள் ஈட்டி, அறவாழ்க்கை வாழ்ந்தால் இன்பம் வரும். இந்த அறவழி இன்பம் வீடு பேற்றைத் தானே நல்கும். வீடு தனித்த ஒன்று அல்ல. இல்லற வாழ்க்கையே அற வாழ்க்கையின் அஸ்திவாரம். எனவே வள்ளுவர் பெண்பாலாரைத் தூற்றினார் இல்லை; துறந்தவரைப் போற்றினார் இல்லை. திரு. வி. கவோ 'பெண்ணினத்தின் வீழ்ச்சி ஆணினத்தின் வீழ்ச்சி' என்ற திடமான கொள்கையுடையவர். இல்லறமே நல்லறம் என்ற ஆணித்தரமான எண்ணமுடையவர். போலித் துறவறம் தேவையில்லாத ஒன்று; கடமைகளை ஒதுக்கிவிட்டு ஓடி ஒளியும் கோழைத்தனம் என்று ஒதுக்கியவர்; கண்டித்தவர்.

துறவறத்தை இல்லறத்திலே மேற்கொண்டொழுகிய முனிவர்கள் எத்தனை, எத்தனை! நாயன்மார்கள் எத்தனை எத்தனை! இந்த சந்தர்ப்பத்தில் காந்தியடிகளை மறக்கலாமா?

## பிற தூண்டுதல்கள்

திரு. வி. க நக்கீரர் கழகச் சார்பில் நடத்திய திருக்குறள் வகுப்புகளும், பின்னர் திருவல்லிக்கேணி தியோசாபிகல் சங்கத்தில் நடத்திய திருக்குறள் வகுப்புகளும், அதன் பின்

தென்காசியின் திருவள்ளுவர் கழகத்தினர் கொடுத்த ஊக்கமும், இந்த அரிய நூலை முதலில் **'நவசக்தி'** யிலும், பின்னர் நூல் வடிவமாக உருப்பெறவும் செய்தன.

அடுத்த பகுதி, இல்லற இயல் தனியே வெளிவந்தது.

பாயிரப் பகுதி 4 அதிகாரங்களும், இல்லற இயல் முதல் 6 அதிகாரங்களைக் கொண்டது. பாயிரப் பகுதியில் 40 குறட்பாக்கள் இடம் பெறுகின்றன.

## முக்கிய குறிக்கோள்

தம் விரிவுரை மூலம் திருவள்ளுவரைப் படம் பிடித்துக் காட்டத் தீர்மானித்தார் திரு. வி. க எப்படி? பொருள் கூறும் போது, வள்ளுவரைப் படமாகக் காட்டுகிறார் தமிழ்த் தென்றல், அதுவே படம் காண ஒளியைக் கொடுக்கும் விளக்காகிறது. கருத்து மூலம் பொய்யாமொழிப் புலவரின் நுண்மை புலனாகிறது. வையத்திலே, வையகத்திற்காக வையத்திற்கெனவே வாழ்ந்த தமிழ் மறைதனைத் தந்த வள்ளுவரின் உள்ளத்தை, 'அடுத்தது காட்டும் பளிங்கும்' போலக் காட்டுகிறது.

உலகம் யாது? பிறப்பும் இறப்பும் மட்டுமே கொண்டதல்ல உலகம். அது எண்ணங்களின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் கூடக் காட்டுவது.

விருத்தி, பொருளையும், கருத்தையும் இணைப்பது; அவர் தம் உயர் எண்ணங்களையும் சீரிய நோக்கங்களையும் குறளைப் படித்தவர்க்கு உணர்த்தும். உற்ற நோய் தீர்க்கும் அருமருந்தை அறியச் செய்யும்; போற்றச் செய்யும்.

## விரிவுரை உருவானபோது!

விரிவுரை காணத் துணிந்தபோது திரு. வி. கவின் சூழ் நிலைதான் என்ன! தொல்லை, தொல்லை எங்கும் தொல்லை! தொழிலாளர்க்குத் தொல்லைகள்! கர்நாட்டிக்

ஆலையின் கதவடைப்பு; தொடர்ந்து பக்கிங்காம் ஆலையில் இதன் எதிரொலி! சூளை ஆலை மூடப்பட்டது. சுமார் பதினாயிரம் தொழிலாளருக்குத் தொல்லை என்றால் தொழிலாளர் தலைவர் திரு. வி. கவைப் பாதிக்காமல் இருக்குமா? இல்லை, வாளாகத்தானிருக்க விடுமா?

தொல்லைகளினூடே தொல்லைகளின் மூலகாரணத்தை ஆராயத் தூண்டின பிரச்னைகள். காரணம் தெளிவாகியது. காரணம் யாது? வள்ளுவர் கூறிய அறம் மங்கியது; மறந்து போனது; விட்டே அகன்றது. அறம் இருந்திருக்குமேல், தொல்லைகளுக்கு இடமேது? கிடையாது. கிடையாது. கிடையவே கிடையாது!

## போராட்டத்திலே

தமிழ்ப் பெரியார் திரு. வி. க. போராடவே பிறந்தவர். போராட்டத்திலே தான் அவருக்கு வளர்ச்சி. போராட்டத்திலே எழும் அமைதிக் குறைவிலே பிறக்கும் அரிய நூல்கள்; சிந்தனை பிறக்கும்; உருப்பெறும்; அரிய சிறந்த வரிவடிவைப் பெறும்; நிலைக்கும். இடவசதி இன்றேல் மிக நன்று; அறவே வசதிகள் இன்றேல் மிக மிக நன்று. மிக, மிக அரிய நூல்கள் உருவாகி, வெளிவரும்.

> 'இடுக்கண் வருங்கால் நகுக; அதனை
> அடுத்தூர்வது அஃதொப்ப தில்

என்ற குறட்பாவுக்கு திரு.வி.கவைவிட ஒரு சிறந்த எடுத்துக் காட்டும் உண்டோ?

## அலைபாயும் மனத்திற்கு அருமருந்து

தொல்லை மிக்க சூழ்நிலையில் அலைபாயும் மனத்திற்கு அருமருந்தாக அமைந்தது திருக்குறள். இதே மருந்து அனைவருக்கும் பயன்பட வேண்டும் என்ற விழுமிய நோக்கத்தில் திருக்குறள் விரிவுரையாக வெளிவந்தது.

## முப்பால்

அறம் பொருள் இன்பம் மூன்றும் முப்பால். அறவழி பொருளீட்டி இன்பம் நுகர்ந்தால், வீடு பேறு தானே கிட்டும் வீடு தனித்திருக்கக் கூடியது அல்ல. முப்பாலை சார்ந்ததே. வீட்டை மறைப்பது கட்டு, காமம், வெகுளி, அழுக்காறு, மயக்கம், இவையே கட்டு, இக்கட்டுகளை கட்டுப்படுத்தி, கட்டுக்குள் அடக்கி, ஒடுக்கி அறுத்தெறிந்தால், மனம் மாசிலாததாகும். மனம் மாசிலாதாகும்போது அப்பர் கூறிய 'எந்நாளும் இன்பமே' என்ற நிலை ஏற்படும். இந்நிலை ஏற்பட்டால் ஏசுபெருமான் கூறிய பரலோக இராச்சியத்தை நம் உள்ளத்தே காணலாம்.

## செவ்விய வாழ்வு!

செவ்விய வாழ்வு, இயற்கையோடு இசைந்த வாழ்வு. இயற்கை வாழ்வு நல்வழியிலே வாழ்ந்து, கல்வி பயின்று, நேர்மையான வழியில் தொழில் புரிந்து, பொருளீட்டி, இன்பம் சீரிய வழியில் வாழ்தலே. துறவறம் செவ்விய வாழ்வு ஆகாது; காழ்ப்பும் ஆகாது; மற்றவை எல்லாம் அறமற்ற வாழ்வே!

## பாயிரம்-விளக்கம்

பாயிரம் என்ற சொல்லுக்கு விரிந்த பொருளுண்டு. அவற்றுள் ஒன்று, நூன்முகம் என்பது. நூலின் முகமே பாயிரம், உடலுக்கு தலையாய அங்கம் முகம். அதே போன்று நூலின் சிறப்பான உறுப்பு பாயிரம்.

பாயிரத்திலுள்ள நான்கு அதிகாரங்கள் முறையே கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் ஆகியன.

## அதிகார அமைப்பின் சிறப்பு

பொருள் இன்பத்துக்கும் அறத்துக்கும் இன்றியமை யாதது. ஆனால் பொருள் ஒன்றே இன்பமோ அறமோ

ஆகாது. அறமற்ற பொருள் பொருளாகாது; இன்பமும் தராது. எனவே அறத்தைச் சார்ந்தே பொருளும் இன்பமும் இருக்கின்றன. எனவே அறம் முதலிலும் பொருள் நடுவிலும் இன்பம் இறுதியிலும் வைக்கப்பட்டது. எவ்வளவு பொருத்தம்!

அரசு, கல்வி, தொழில், செல்வம் ஆகியன பொருள்பாற் பட்டன.

அடுத்து வருவது 'வான் சிறப்பு.' இதுவும் பொருட்பாற் பட்டதே. வான் வறண்டால் பொருளும் இன்பமும் வருமோ? வராது, வராது!

'நீத்தார்' பெருமை' அடுத்த அதிகாரம். நீத்தார் யார்? அவர்கள் சிறப்பு யாது?

நீத்தார், பயனுள்ள வாழ்க்கை வாழ்ந்தவர்; குண மெனும் குன்றேறி நின்றவர் எவ்வுயிர்க்கும் அன்பு காட்டி வாழ்ந்து சிறப்புப் பெற்றவர். மனமொத்த ஒருவனும் ஒருத்தியும் சேர்ந்து வாழ்ந்தவர்; இன்பம் நுகர்ந்தவர். இந்த அன்பின் பெருக்கு என்ன அளிக்கும்?

## மக்கட் பேறு

இத்தகைய அன்புக் கலப்பே சிறந்தது. அது மன மாசைக் கழுவும் இயல்புடையது. மன மாசு ஊறு செய்யும் தடைகளை நீக்கும்; பிற உயிர்களிடம் அன்பு கொள்ளச் செய்யும். இந்த நுட்பம் 'நீத்தார் பெருமை'யில் சிறிதும், நூலின் மற்றப் பகுதிகளிலும் விளக்கப்பட்டுள்ளன.

மன மாசை நீத்த அறவோரே, நீத்தார்.

இயற்கையோடு இயைந்த வாழ்வில் இருக்க கடவுளிடம் உறுதி தேவை. அசையாத உறுதி தேவை. எனவே முதலில் 'கடவுள் வாழ்த்து' இடம் பெறுகிறது.

''பொருளும் இன்பமும் அறத்தில் அடங்கும்.''

எல்லாம் கடவுளிடம் அடங்கும்.

''மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறம்''

## கடவுள்

எல்லாவற்றையும் கடந்து நிற்பான்; எல்லாவற்றிலும் கலந்தும் இருப்பான்; எல்லாவுயிரையும் செலுத்துவான்; இயக்குவான். இவனே கடவுள். இந்த மூன்று குணங்களையும் கொண்டே கடவுள் ஒன்றே. ஆனால் பல பேர் கொண்டது; பேர் அற்றதும்கூட. ''கடவுளை அது என்றும் அவள் என்றும் அவன் என்றும் சொல்வது உலக வழக்கு. ஊர் பேரில்லா ஒன்றை எப்படி சொன்னாலென்ன?''*

மூன்று தன்மையுடைய கடவுளின் எத்தன்மை வழிபாட்டிற்குரியது? எல்லாவற்றிலும் நீக்கமற கலந்து நிற்கும் தன்மையே வழிபாட்டுக்கு உரியது.

இறைவன் நுட்பத்தை அறிவது எங்ஙனம்?

இயற்கை வழிபாட்டாலே சிலருக்கு விளங்கும். மற்றையோருக்கு குருவின் அருள் தேவை.

குருவுக்குரிய ஆற்றல்கள் யாவை?

பன்மையில் ஒருமை காணும் பேராற்றல் பெற்றிருத்தல் வேண்டும். தாம் அறிந்த இந்த உண்மையை விளக்கிக் கூறும் சிறப்பாற்றல் பெற்றிருப்பவரே குருவாகத் தகுதியுள்ளவர்.

'கடவுள் வாழ்த்து' என்றுளதேன்? முதற்பாட்டில் கடவுள் உண்மையும் மற்ற பாக்களில் வாழ்த்தும் சொல்லப்பட்டிருப்பதை ஆராய்ந்தால் 'கடவுள் வாழ்த்து'' என்பதன் நுட்பம் புலனாகும். கடவுளுக்கு உள்ள அனைத்துக் குணங்களையும் கடவுள் வாழ்த்து தெளிவாக்குகிறது.

---

* 'திருக்குறள்—பாயிரம்— திரு .வி. க விரிவுரை' பக். 34.

எல்லாவற்றையும் கடந்துநிற்கும் கடவுள். இயற்கையை உடலாகக் கொண்டவர்: குருவிடத்தில் கோயில் கொண்டவர்; கடவுள் திருவடி போற்றத்தக்கது.

இதுவே கடவுள் வாழ்த்திலுள்ளது,

இந்தப் பத்துப் பாக்களில் முதல் பாட்டில்நுட்பமாகவும் இரண்டாவது சிலரே பயனடையக் கூடியதாகவும் உள்ளது. மூன்றாவது குறட்பா விளக்கம் தருவதாக அமைகிறது. நான்காவது குறட்பா முதல் செயல்முறையை விவரிப்பதாக அமைந்திருப்பது கவனிக்கத் தக்கது.

இந்நூலிலுள்ள எல்லா பாக்களுக்கும் திரு.வி.க. கூறிய விளக்கத்தைக் கூறி ஆராய்ந்தால், நூல் பெருகும். எனவே ஒவ்வொரு அதிகாரத்தினின்றும் ஒரே ஒரு குறளை மட்டும் எடுத்து ஆராய்ந்து திரு.வி.க.வின் உள்ளக் கண்ணாடியை நோக்குவோம்.

**''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு''**

திரு.வி.கவின் விளக்கத்தைப் பார்ப்போமா?

'எழுத்து உலகிலுள்ள எல்லா மொழிகளின் எழுத்துக்களை குறிப்பதாக விளக்கம் தருவது'— உலகிற்கே பாடிய உலகியல் குறட்பாவலன் வான்புகழ் உலகில் வாழ்ந்த திருவள்ளுவரின் பெருநோக்கை, சகோதரமனப்பான்மையை எடுத்துக் காட்டுவதாகும்.

மொழிகளில்—இரண்டு வகை. அவை வரிவடிவ முள்ளவை, வடிவம் இல்லாதவை, இரண்டு வகையும் அகர ஒலியையே முதலாகக் கொண்டிருக்கின்றன.

இந்த விளக்கம், தமிழ்த் தென்றல் திரு. வி. க நாடு, மொழி, வகுப்பு ஆகிய கட்டுகளைக் கடந்தவரென்பதைப் பறை சாற்றுகின்றது.

வடிவங்கள் இரு விதம். ஒன்று ஒலி வடிவம்; இது செவி மட்டுமே உணர்வது.மற்றது வரி வடிவம்—இது கண்ணுக்குப் புலனாவது ஒலி வடிவிற்கும் வரிவடிவிற்கும் வேற்றுமை உண்டு. எவ்றாலும் ஒலி வடிவமே வரிவடிவத்தின் பிறப்பு பிடம். இதுவே நாதம்; இது சீரான ஒலி. காரண ஒலி. இது அகத்திசையொலி எனப்படும். இதுவே ஒலிகளின் மூலம்.

காரிய ஒலி மாறானது. அது புறத்திசை ஒலி எனப் படும்.*

நாதம் அகரம் என்றும், ஆதி அகரம் என்றும் கூறப் பட்டது. எல்லா எழுத்துக்களின் தாயகம் ஆதி அகரம் ஆதி அகரம் தனித்தும் நிற்கும், அகர ஓசையாகவும் இருக்கும், மற்ற எழுத்துக்களெல்லாமாகி அவற்றையும் இயக்கும் பண்புடையது.

இதையே குழலூதும் கண்ணன்''நானே எழுத்துக்களின் அகரமாகின்றேன்''** என்றான்.

அகரத்துடன் மற்றவை ஒன்றும் போதும். அகரம் மட்டும் ஆதியாவதன்றி, பிற எழுத்துக்களுக்கும் முதல் ஆவதால் ஆதி அகரம் நிலையாக உள்ளது. ஒன்றுவது அகம். ஒன்றியது புறம். இரண்டும் பின்னே ஒன்றாகும்.

ஒருவன் குருவை அண்டி பயிற்சி பெற்றால் பொறிகளை அடக்க அறிவான், பொறிகளை அடக்க, அடக்க, உணர்வு தோன்றும்; ஒலியுண்டாகும் அடுத்து மீண்டும் ஒலியுண் டாகும்; மீண்டும் மீண்டும் உண்டாகும். அதுவே தாயொலி அல்லது நாதம் அல்லது ஆதி அகரம்.

இந்த ஆதி அகரம் எல்லா உயிர்களிடையும் உள்ள உட்கரு. ஓங்காரத்தின் முதல் ஒலியே அகரம். ஓங்காரமே

---

* **தொல்காப்பியம்**—எழுத்து-ஆகம உ

** மெய்க்கண்டார்

''அக்கரங்களின்றாம் அகவுயிர்ன்றேல்'', பக், 29.

எல்லாவற்றிற்கும் தோற்றுவாய்.* இதில் அகரம் தோற்று வாய். மற்றிரு ஒலிகளாய உ.ம்—இரண்டும் நிலைக்கும் ஒடுக்கத்துக்கும் அறிகுறிகள்.

இவ்வொலி தோன்றும் இடமும் ஒன்றே. ஒடுங்கும் இடமும் அதுவே. அகரம் ஒளிக்கும் பிறப்பிடம்; ஏன்? தோற்றம், ஒடுக்கம் இரண்டும் ஒரே இடத்தில் இருப்பதால். ஆகையால் அது முதலும் முடிவும் இல்லா ஒரு தொடர்; எனவே அத்தன்மையது இறையடி என்பதைக் காட்டுவ தால் ஒளியாகிறது.

இறைவன் இருள் போக்கும் ஒளி; எங்கும் இருள் இல்லாதவன்—ஒளி அல்லது சோதியானவன். அகரம் ஒளிக்கும் உலகிற்கும் இடையே உள்ளது. ஒளி கடந்த நிலையும் இறைக்கு உண்டு.

இறையொளியாக நின்று எல்லா தோற்றங்களுக்கும் பிறப்பிடம்—ஆதி அகரம். உலகே ஆதி பகவன்.

உலகு வெறும் நிலப்பரப்பா? அல்லது நீர்ப்பரப்பா? இல்லை-இல்லை! அதிலுள்ள உயிருள்ள, உயிரற்ற எல்லா வற்றையும் குறிக்கும்.

இயற்கை ஆண்டவனின் உடல்; இயற்கையோடு இயைந்த வாழ்வே நல்வாழ்வு; செவ்விய வாழ்வு; அத்தகைய வாழ்க்கையை மேற்கொண்டு, ஆண்டவன் பால் அன்பு செலுத்த செலுத்த சட்டுகள் அறும். இந்தக் கட்டுகள் அறுந்த மனிதனையே 'இறை' என்ற சொல் குறிக்கும். ஆறறிவு படைத்த மனிதன் வாழும் உலகு எத்தகையது?

* திருமூலர்:

**''ஓங்காரத்துள்ளே உதிக்க ஐம்பூதங்கள்**
**ஓங்காரத்துள்ளே உதித்த சராசரம்**
**ஓங்கார தீதத் துயிர் மூன்றும் உற்றன**
**ஓங்காரஞ் சிவ பரமசிவமே.''**

'உலகம் பலவிதம், ஒவ்வொருவர்க்கும் ஒவ்வோர் உலகம்' என்ற நிலை கொண்டவன். பற்பல எண்ணங்கள்; பற்பல சுழல்கள்; பற்பலத் தொல்லைகள் என்ற பலவும் கொண்டவனே மனிதன். இவனைக் குறித்து பேராவலுடன் காத்திருப்பான் இறைவன் ஏன்? எதற்காக? தன் அங்கத்தின் அங்கமான மனிதன்; தன் மாற்றுருவானவன் பன்மையில் ஒருமை காண மாட்டானா? எவ்வுயிரையும் தன்னுயிராகப் பேணக்கூடிய பேராற்றல் பெற மாட்டானா என்று ஏக்கத்துடன் காத்திருக்கிறான் படைத்தவன்.

உலகம் ஆராய்ச்சிக்குட்பட்டது. இறைவனோ ஆராய்ச்சிக்கப்பாற்பட்டவன். உலகையே படைத்து, அதிலே தானும் இயங்கி, அதனையே இயக்குபவனும் அவனே. இயற்கை மூலம் அவனை உணர்ந்து, போற்றி, வழிபட்டு, இயற்கை நெறி வாழ்தலே, அவனை அறியும் வழி; காட்டுக்கு தனித்தோடி துறவறம் கொண்டு அல்ல.

ஆதி பகவன்—பல பெயர் கொண்ட ஒருவன்; தனித்தே நின்று, கலந்தும் இருந்து, கலப்பையும் கடந்து தானும் இயங்கி, அனைத்தையும் இயக்குவான் இவன். இவன் தோற்றுவாயும் முடிவுமில்லாத அனாதி.

## பாவ மன்னிப்பு

கண்ணீர் விட்டுக் கதறி முறையிட்டால் ஓடி வந்து பாவ மன்னிப்பு* அளிப்பவனும் ஆதி பகவனே.

இந்தச் செயலுக்குரியவனும், செயலுமாக இருக்கும் ஆண்டவனை, ஞான குரு மூலம் காணலாம். ஆதிபகவன் என்ற பெயரில் ஆதிக்கு ஞாயிறு என்ற பெயரில், ஆதிக்கு ஞாயிறு என்று பொருளும் உண்டு.

பகவன் என்று கடவுளுக்கும் பிறவுயிர்க்கும் வழங்கப் படுதலால் அவன் ஆதி பகவன். ஆதி பகவன் ஞாயிறுக்கெல்

* சுந்தரர் கண் போக்கி, அவர் முறையிட்டு கதறிய பின் ஒளி தந்த நிகழ்ச்சி இதற்கு ஓர் உதாரணம்.

லாம் ஞாயிறாக விளங்குபவன். எனவே ஞாயிறு வழிபாடு, இஃதொரு இயற்கை வழிபாடே!

தனித்திருக்கும் இறைவன், தானே ஞானகுருவாகி உள்ளொளியை ஏற்படுத்தி, அறியாமை இருளைப் போக்குகிறான்.

இம்மூன்று நிலைகளும் எல்லா சமயத்திற்கும் பொதுவானவையே.

எனவே இந்த முதற்பாட்டு விதை; பாயிரம் முளை; அறம், பொருள் இன்பம் இம்மூன்றும் முப்பால் கவடுகள்.

இந்த அதிகாரத்தில் உள்ள மற்ற குறட்பாக்கள் என்ன கூறுகின்றன என்று பருந்துப் பார்வையாகப் பார்ப்போமா?

உலகம் முழு முதற்கடவுளை முதலாக உடையது.

## 2. கடவுளின் இயற்கை

இயற்கை இறையை விரும்பினால் இருவினையுஞ் சென்றடையா.

## 3. கடவுளே குரு

குருநாதன் வாயிலாகக் கடவுள் அறிவுறுத்திய ஒழுக்க நெறியில் நின்றவர் நீண்ட காலம் வாழ்வர்.

## 4. திருவடி போற்றல்

குருநாதன் நெஞ்சத் தாமரையில் எழுந்தருளியுள்ள இறைவனது திருவடியை அடைந்தவர் நீண்ட காலம் வாழ்வர்.

## 5. கற்றதனால் ஆன பயன்

கற்றதனாலாகிய பயன் இறைவனை வணங்குவது.

### 6. துன்பம் ஒழிக்க

துன்பமொழிக்க விருப்பு வெறுப்பில்லா இறைவனடி சேர்தல்.

### 7. மனக் கவலையைத் தீர்க்கும் மருந்து

இறைவன் திருவடியே மனக் கவலையை அழிக்க வல்லது.

### 8. பாவக் கடலை கடக்க

பாவக் கடல்களை கடத்தற்கு இறைவன் திருவடியே துணை.

### 9. பிறவிக் கடல் நீந்த

இறைவனடி சேர்ந்தோர் பிறவிக் கடலை நீந்துவர்.

### 10. இறைவனடியை வணங்க வேண்டும். ஏன்?

இறைவனடியை வணங்கா தலைகள் பயனற்றவாம்.

இக்கருத்துக்கள் எதை வலியுறுத்துகின்றன?

திருக்குறள் ஒரு 'பொது மறை' அன்றோ?

இனி அடுத்து வரும் அதிகாரம் வான் சிறப்பு.

வான் சிறப்பில் மழையின் சிறப்பை விளக்குகிறார் வள்ளுவர்.

கலித்தொகையில்

'வான் தருங் கற்பினால்' என்ற சொற்கள் மழையின் சிறப்பைக் கூறுவனவே.

கடவுள் வாழ்த்துக்குப் பின் 'வான் சிறப்பு' இடம் பெறுவானேன்?

விளைச்சலுக்குத் தேவை அளவான மழை; தேவையான காலங்களில் பொய்யாது பெய்யும் மழை; அளவான மழை ஆக்கமுடைய அறத்திற்கு வழிகோலும். அறம் நன்முறையில்

செய்யப்பட்டால் ஒழுக்கம் பெருகும்; ஒழுக்கம் பெருகினால் தானம், தவம், பூசை எல்லாமே தவறாது நடக்கும்.

ஒருவேளை, அதிகமாக மழை பெய்து விட்டாலோ? வெள்ளம் வரும்; எங்கும் அழிவு, அழிவு, அழிவு!

இதனால் என்ன தெரிகிறது? இயற்கையே கடவுள். பசுமையான இயற்கை ஏற்பட இயற்கையின் மற்றொரு கூறாகிய மழை வேண்டும். மழை இருந்தால் தான் பசுமை. ஆக மழை கருணையின் வடிவம்; இறைவனின் கருணை உள்ளமே மழை. இயற்கை வளமும், மழையும் இறைவனின் இரு கூறுகள்; ஒன்றுக்கொன்று இணைந்த கூறுகளே.

இயற்கை வளத்தை இறைவன் மழை மூலம் பெருக்கு கிறான்.

"தானே மழை பொழிதையலுமாய் நிற்பன"

என்று திருமூலர் இதனையே திருமந்திரத்தில் கூறு கிறார்.

உயிர்களின் நாடி உணவு. உணவு விளைச்சலைப் பொறுத்தது. விளைவுக்கு, மேகம் பிறக்கும் கடலாக்கம் மிக மிக முக்கியம். இவையனைத்தும் பெற்றும், உலகில் ஒழுக்க மில்லையேல் என்னாகும்? அழிவு வரும். எனவே உலகின் முதுகெலும்பு ஒழுக்கம். ஒழுக்கமே மற்றைய நற்பயன்களை விளைவிக்கும்.

இவை எல்லாவற்றிற்கும் மூல காரணம் மழை, மழை, மழையே! மழை மூலம் வாழவைக்கும் இறைவன் கருணை என்னென்று புகழ்வது! இவ்வரிய கருத்தை பொய்யா மொழிப் புலவர் எவ்வாறு எடுத்துரைக்கிறார்?

முதல் மூன்று பாட்டில் இடம் பெறுவது உணவு; நான்கு ஐந்து பாக்கள் விளைவைப் பற்றியும் ஆறில் அதற்குத் தேவையான கடலாக்கம் பற்றியும் கூறும். ஏழில் ஒழுக்கம் இடம் பெறுகின்றன. தான தவ பூசை பற்றி எட்டு, ஒன்பது

குறட்பாக்கள் கூறுகின்றன. பத்தாவது குறள் மழை செய்வ தெல்லாம் ஒன்று சேர்த்துக் கூறுவன.

## மழையின் சிறப்பு

முதல் குறள் உலகுக்கு மழை எத்தகைய அமுதம் என்று கூறுகிறது. அடுத்து இரு குறள்கள் இக்கருத்தை மேலும் விரிவு படுத்துகின்றன. பிறர் நுகரும் பொருட்களை உண்டாக்குவது மழை. அதே சமயம் தானே நுகர் பொரு ளாகவும் ஆகும் தனிச்சிறப்பு மழைக்கே உரித்து.

மழை பொய்த்தால் விளையக் கூடிய விபரீத விளைவு களை இரண்டே வரிகளில் படம் பிடித்துக் காட்டுகிறார் வள்ளுவ பெருமான்.

நான்காவது குறளை மட்டும் ஆராயலாமா?

**விசும்பின் துளி வீழின அல்லால் மற் றாங்கே**
**பசும்புல் தலைகாண் பரிது**

இக்குறளின் கருத்து யாது? மழைத்துளி விழுந்தாலன்றி புல்லுந் தலைக் காட்டாது.

இதே கருத்தை மணக்குடவரும் கூறுகிறார்:

**'வானின்று துளி வீழி னல்லது அவ்விடத்து பசுத்த புல்லினது தோற்றமுங் காண்டல் அரிது'**

இக்குறளை உற்று நோக்கினால் இக்குறட்பாவில் கையாளப்பட்ட சில சொற்கள் நமக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கும். வள்ளுவர் 'விசும்பின் துளி' என்கிறார். ஏன்?

## விசும்பின் துளி

இதற்கு என்ன விளக்கம் தருகிறார் திரு. வி. க. என்று பார்ப்போமே?

'விசும்பின் துளி' என்னும்போது அது வானத்திலிருந்து விழும் மழைத்துளி என்று பொருள் தரும். இது என்ன

வேடிக்கை? வானமா மழை பொழிகிறது? இல்லை, இல்லை! பின் அப்படி சொல்லலாமா? பேச்சு வழக்கில் என்ன சொல்கிறோம்; ''வானம் பொய்த்தது'' என்று கூறுகிறோம். இது தற்கால விஞ்ஞான வளர்ச்சிக்கு ஒப்பாததாக இருக்கலாம். இதை நாமும் அறிந்திருக்கிறோம். பின்? ஏன் இந்த பழங்கால வழக்கு?

வானம் என்னும் போது அது மனத்திற்கு எட்டாத ஒன்று. எட்டாத ஒன்றின் மீது எப்போதுமே எல்லோருக்குமே பற்று அதிகம். குழந்தைகளுக்கு என்ன சொல்கிறோம்? வானத்தில் ஆண்டவன் இருக்கிறான் என்கிறோம். ஏன், நாம் அனைவரும் அதையே ஏற்கிறோம்; நம்புகிறோம். இந்த மரபை ஒட்டியே ஆசிரியர் மழையின் மாண்பை உணர்த்தவே 'விசும்பின் துளி' என்றார்.

மழையின் வகைகள்தான் எத்தனை! துளி, தூறல், ஆசாரம், சோனை, ஆலங்கட்டி ஆகிய வகைகளில் துளியை மட்டும் சிறப்பாகச் சொல்லக் காரணம் யாது?

பசியால் வாடுகிறான் ஒருவன்; அவன் எதற்கு ஏங்குவான்? ஒரு கவளமேனும் உணவு கிடைக்காதா என்று ஏங்குவான். சிறு கூறு ஒன்றே மிக்க பெருமையுடைய பெரியதை அறிய வழிகோலும்.

## மழைத்துளி போதுமா?

அதே போல் வானம் பொய்த்து ''தண்ணீர், தண்ணீர்'' என்று பறக்கும் உயிர்கள் எதை நோக்கி ஏங்கும்? வானத்தை! எதற்காக? மழைக்காக அடை மழைக்காகவா? ஆலங்கட்டி மழைக்காகவா? இல்லை, இல்லை! ஒரு துளி மழைக்காக ஏங்கும். ஏனெனில் பெரிதாக மழை பெய்தால் காய்ந்த நிலம் தாங்காது; ஆலம் பெய்தாலோ உயிர்கட்கு அவதி; தொல்லை; சேதம்! எனவே ஒரு துளி மழை பூமியை நனைக்கும்; குளிர்விக்கும். துளி மிக அதிகமானால் புயலுக்கு ஏதுவுண்டு. மழைத்துளி புல் போன்ற தாவரங்களுக்கு உணவாகும்; வளர்க்கும். பெருமழையோ அஃதல்ல.

எனவே புல், பூண்டு செழிக்க மழைத்துளியே தேவை. தாவர வர்க்கம் செழித்தால் உயிர்களுக்கு உணவுப் பஞ்சம் ஏற்படாது. எனவே 'மழைத்துளி' என்றார்.

## புல் வேண்டின்!

ஒரு வேளை மழை இன்றேல், (மற்று ஆங்கே) பசும் புற்றலை காண்பதரிது,

வெறும் புல் கூட தலை காட்டாது. எப்போது? ஒரு வேளை மழை இல்லாவிடில்! இது கூறும்போது நம் மனக்கண் முன் படம் ஓடுகிறது. எத்தகைய படம்?

மழைத்துளி விழுகிறது. முதன்முதல் புல் துளிர்க்கிறது. விழும் மழையின் தன்மைக்கேற்ப அமைகிறது, பசும்புல். மழைத்துளி சிறியது; முதன்முதல் வரும் தாவரமும் சிறிது. அதுவே பசும்புல்.

## பயிர் செழிக்க...

பின்? மழை பெய்யப் பயிர் செழிக்கும். பயிர் செழித்தால் பசியை அது போக்கும். உயிர்களுக்கு நல் வாழ்வு நல்கும். இதை நல்க மூல காரணம் மழைத்துளியே. இது மிகையன்று. அத்துடனா? நிலத்தின் வெம்மையைத் தணிக்கும்.

பசும்புல் அடுத்தடுத்து வரும் மழையின் அறிகுறி. எனவே உயிர்கள் மகிழும்படி பசும்புல் நம்பிக்கையைக் கொடுக்கும். என்னே மழைத் துளியின் மாண்பு! துளி, தூறலாகி, பெரு மழையாகி விடா மழையாகவும் பொழியும். தாவரங்கள் துளிர் விடும்; செழிக்கும்; நிலம் பச்சைப் போர்வை போர்த்துக் கொண்டு, கண்ணுக்கும் கருத்துக்கும் இனிமை தரும்; வளம் கொழிக்கும்; பொன் விளையும்.

மழை வீழாதாயின்?

மேலே சொன்ன எல்லாமே அரிது, அரிது, மிக அரிது.

## தாவர வளமும் உயிர் வளமும்

தாவர வளமே உயிர் வளம், இரண்டும் ஒன்றின் மேலொன்று சார்ந்தவை. தனித்து இரண்டும் இயங்குதலரிது. தாவரம் வெறும் நிலச்சத்து கொண்டும், ஞாயிற்றின் ஒளிச் சத்து கொண்டும் வளருமா? வளராது, வளராது! ஏன்?

அதற்கு மழைத்துளி மிக மிக அவசியம். தாவரங்களுக்குச் செழிப்பைத் தரும் ஆற்றல் மழை ஒன்றிற்கே உண்டு. இதனைப் போற்றாமல் விடுவது சரியா?

## மழையும் உழவும்

ஐந்தாவது குறள் உழவுக்கு மழை எவ்வளவு அவசியமானது என்பதை வலியுறுத்தும்.

## கடல் வளமும் மழைத் துளியும்

கடலாக்கத்திலுள்ள முதல் குறள், மழை பெய்யா விட்டால் நடக்கக் கூடிய நிகழ்ச்சிகளைக் கூறும்.

மழை பெய்யாவிடில், நிலவளம் தவிர கடல் வளமும் குறையும். அது மட்டுமா?

ஒழுக்கம் என்னாகும்?

கீழ்க் கண்ட குறளே இதற்கு விடை பகரும்.

> **"நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்**
> **வானின் றமையா தொழுக்கு"**

மழையால் உண்டாவது ஒழுக்கம். மழையில்லையேல் ஒழுக்கத்திற்கு சிறப்பான இடம் ஏது! அது குன்றும் என்று குறிப்பாக உணர்த்தப் படுகிறது.

இதைத் தவிர மழையால் வேறு நற்பயன்களுண்டா? உண்டு. தானமும் தவமும்.

தானமும் தவமும் நடைபெறுவதற்கு மழை தேவை. மழை இன்றேல்? தானமும் இல்லை; தவமும் இல்லை; ஏன் தவமே இருக்காது என்பதை அடுத்த குறள் விளக்கும். இது இல்லாவிட்டால் போகிறது. பெரியோர்க்கு பூசையாவது நடக்குமா?

நடக்காது, நடக்காது என்பதைக் கூறுகிறார் வள்ளுவர் ஒன்பதாவது குறளில்.

## மழையின் பணிகள்

ஆக மழையின் தன்மைகள் யாவை?

'அழிப்பதும், ஆக்குவதும்'

மழை இல்லாவிட்டால் அழிவு உண்டு. ஆக்கப் பணிகளில்லை. மிக மிக அதிகமாக மழை பெய்தாலோ?

மழை பெய்யாவிடின் என்ன கேடுகள் விளையுமோ, அவை போன்ற கேடுகள் விளையும்.

மழை கெடுக்கவும் கெடுக்கும்; எடுக்கவும் எடுக்கும்; இரண்டும் செய்ய வல்லது மழை.

இனி அடுத்த அதிகாரம் 'நீத்தார் பெருமை' என்பதை ஆராய்வோம்.

நீத்தாரது பெருமையைக் கூறும் இந்த அதிகாரம், நீத்தார் யார்? மனமாசுகளை விடுத்தவர்; கட்டுகளி னின்றும் விடுபட்டவர்; இவரே நீத்தார் எனப்படுவர்.

## வழிபாடும் நீத்தாரும்

பரம் பொருளை வழிபடுகிறோம். இந்தப் பரம் பொருளுக்குள்ள தனிச்சிறப்பு யாது? பரம் பொருள் வாக்கு மனங்கடந்தவன். நீத்தாரை வழிபடுதல் மூலமாக பரம் பொருளையும் வழிபடுகிறோம். எப்படி? நீத்தாரை வழிபட்டால் அந்த வழிபாட்டை பரம் பொருள் ஏற்கும்;

அருளும் புரியும். நீத்தாருள் குருமார் நிலை எய்துவோரும் உளர்.

நீத்தாருக்குப் பெருமை தருவது அவர்களது எல்லை கடந்த நிலையே. கடவுளுக்குள்ள பெருமையெல்லாம் நீத்தாருக்கும் உண்டு. ஆகவேதான் வான் சிறப்பைத் தொடர்ந்து வருகிறது நீத்தார் பெருமை. நீத்தார் நெஞ்சே கடவுளின் கோவில்; நீத்தார் ஆண்டவனோடு வானில் ஒன்றறக் கலந்தவர். எனவே இவ்வதிகார அமைப்பு சாலப் பொருந்தும்.

## அதிகார பொருள் வகை

இவ்வதிகாரத்துப் பொருளை மூவகை ஆகப் பிரிக்கலாம். முதல்பிரிவு, நீத்தார் பெருமையின் திறத்தைப் பற்றிக் கூறும்; இரண்டாவது ஐந்தழிக்கும் வழி அமைதல் சிறப்பு. அடுத்ததாக ஐந்தவிக்குந் தன்மைக்கு உள்ள அறிகுறி களையும் கூறுகிறார் வள்ளுவர்.

நீத்தார், ஐந்தவித்த தன்மை பெற்றதால் பெருமை பெற்றவர். ஐந்தவித்தவர் யார்? அவர்களை எப்படி அறிவது? அவர்கள் குணம், மொழி, செயல்கள் அவரது பெருமைக்குரிய தன்மையை எடுத்துக் காட்டும். அவர்கள் வெகுளிக்கு இரையாக மாட்டார். இவர்கள் குணக்குன்று, சிறப்பான இனிய சொற்களையே பேசுவர்; இவர்கள் மொழி தனிச் சிறப்பு வாய்ந்ததாகும். செயற்கரிய செயல் களை செய்வர் இத்தகையோர். இதுவே இவர்கள் செயல் சிறப்பு. செயற்கரிய சிறப்பாவது "எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகுதல்."

பொருளின் பாகுபாடுக்கேற்ப முதல் மூன்று பாக்கள் நீத்தார் பெருமையின் திறத்தை விளக்கும்; இடை மூன்று, ஐந்தவித்தல் தன்மையின் சிறப்பு, பெருமை ஆகியன பற்றிக் கூறும். இறுதி நான்கோ, ஐந்தவித்தலுக்குரிய புறச் சின்னங்களையும், அறிகுறிகளையும் காட்டும்.

## நூல்களின் முடிவு

நூல்களின் முடிவு நீத்தார் பெருமையை நாடுவதாக இருத்தல் வேண்டும் என்பது பெருமை திறனில் உள்ள பாட்டின் கருத்து.

உயர்ந்தது எது?

அடுத்த குறளோ, உலகில் உயர்ந்தது எது என்ற கேள்விக்குப் பதிலுரைக்கிறது. உலகில் உயர்ந்தது அறவோர் பெருமையே.

பெருமை எதனால்?

ஐந்தவித்தலால்

ஐந்தவித்தவன், சான்றோன்:

''ஐம்புலன் வகைகளைத் தெளிந்தவன். இவன் வழி உலகம் இயங்கும்.''

அடுத்த ஐந்தாவது குறள் ஐம்புலன்களை காக்கும் மன உறுதியுடையவன் மேலான செல்வத்தை உடையவன்.

ஐந்தவித்தவனே சான்றோன்

## ஐந்தவித்தவன் ஆற்றல்

ஐந்தவித்தவனின் ஆற்றல் பெரிது, பெரிது மாணப் பெரிது.

ஐந்தவித்தவனை அறிவது எங்ஙனம்?

ஐந்தவித்தவனின் அறிகுறிகள்.

ஐந்தவித்தவனுக்குக் கோபம் பிறப்பதில்லை; அவன் ஒரு குணக்குன்று.

ஐந்தவித்தவன் மொழி சிறப்பு:

அவன் பேச்சு முறை அவனைக்காட்டும் அடுத்த அறிகுறி· இது அவன் தனிச் சிறப்பு.

ஐந்தவித்தவன் செயல்:

'செயற்கரிய செயல் செய்வோர்
பெரியவர்; மற்றவர் சிறியவர்.

இந்த அதிகாரத்திலுள்ள கடைசிக் குறளைப் பார்ப் போம்.

**அந்தண ரென்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டு ஒழுகலான்''**

யாரைப் பற்றி இங்கு வள்ளுவர் விளக்குகிறார்? அந்தணரைப் பற்றி; பிறப்பு வழி அந்தணரா? இல்லை, இல்லை, செய்கையால் மேம்பட்ட பெருமக்களினத்தைப் பற்றி.

வள்ளுவர் கூறும் அந்தணர் யார்? முதன் முதல் அவர்கள் ஐந்தவித்தவர்; குணக்குன்றாய் வாழ்பவர்; மொழியால் செயலால் சிறப்புப் பெற்றவர்; அமைதியும் அடக்கமுமே உருவானவர்; மற்றவர் செய்ய இயலாத அரிய செயல்களைப் புரிபவர்.

## அரிய செயல்

எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகுபவர் அதாவது எவ்வுயிரும் தன்னுயிர் எனக் கருதி, பேணி, அன்பு செலுத்துவர் இவர். இவர்களே தம் அன்புச் செய்கையால் அந்தணராவர். அந்தணர் குலத்தில் பிறந்தவர் எல்லாரும் அந்தணர் ஆகார்.

தமது நலமற்று பிற உயிர்கள் இடத்து அருள் தாங்கி நிற்பவரே அந்தணர்; அறவோர்.

முந்திய குறட்பாவின் விளக்கமே இக்குறட்பா. எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுதல் எவரால் இயலும்? தன்நலம் அற்றவராலேயே தாம் அல்லாத பிற உயிர்கட்குச் செந்தண்மை பூண்டு ஒழுதல் கூடும். இதனை

இக்குறளில் 'மற்று' என்னும் சொல் கூறுவதாகும். எவ்வுயிர்க்கும் என்பது, தாம் அல்லாத பிற உயிர்களைக் குறிப்பதாகும். இதனால் பிற உயிர்கட்கு கேடு செய்து தாம் உடலோம்பக் கூடாது என்பது தெளிவாக்கப் படுகிறது.

''புலனடக்கிய பெரியோர் பிற உயிர் பொருட்டே வாழ்வர்''

'மணிமேகலை'யில் இந்த செந்தண்மை பற்றிக் கூறும் சில வரிகளைக் காண்போமா?

'தன்னுயிர்க் கிரங்கான் பிறவுயிரோம்பு மன்னுயிர் முதல்வர்.''

செம்மை+தன்மை = செந்தன்மை என்று மருவியது.

சீவகாருண்யமே செந்தண்மை. செந்தண்மை ஒரு சிறந்த செந்தமிழ்ச் சொல்.

''அனைத்துயிர்க்கும் அருள் தாங்கி'' என்று சீவகாருண்யம் பற்றி சிறப்பித்துக் கூறினார்திருநாவுக்கரசர்.

சீவகாருண்யம்-மனமாசற்ற இடத்திலே தான் மலரும்.

## சீவகாருண்யமும் புலனடக்கமும்

சீவகாருண்யம் மலர வேண்டுமானால் ஐம்புலனடக்கம் மிக மிகத் தேவை. உள்ளத்திலே மட்டும் கருணை யிருந்தால் போதுமா? போதாது; இது மற்றவுயிர்களுக்கு எந்த நன்மையும் தராது. எனவே மற்ற உயிர்களிடம் பலன் கருதாது, பேணி, அன்பு செய்தல் வேண்டும்.

செந்தண்மை பூண்டொழுகலில் எவ்வித கட்டுப்பாடும் இருக்கக்கூடாது. விருப்பு வெறுப்பின்றி, வேற்றுமையின்றி, பாகுபாடு இன்றி, பாரபட்சம் இன்றி, எல்லா உயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுக வேண்டும்.

ஒரு சிலருக்கு மட்டும்; ஒரு கூட்டத்திற்கு மட்டும் என வேற்றுமை பாராட்டினால், அதுசீவகாருண்யமாகாது. சாதி, மதம், மொழி, பெரிய உயிர், சின்ன உயிர் எனப் பிரித்துப் பிரத்யேகமாக அன்பு செலுத்தல் சீவகாருண்யமே அல்ல!

## அந்தணரென்போர் அறவோர்

அந்தணர் நல்லருளுடையவர்; அதாவது அருளாளர் என்னும் பொருளுடையது. அறவோர் என்பவர் மனமாசு களான அழுக்காறு அவா வெகுளி ஆகியவற்றை அறுத்தவர்; அந்நிலை பெற்றவர்.

ஆகவே அந்தணரும் அருளாளர்; அறவோரும் அருளாளர்; ஆக இருவரும் ஒருவரே. எனவே,

''அந்தணர் என்போர் அறவோர்''* என்றார்.

அஃறிணை, உயர்திணை, பெருமை, சிறுமை மற்றும் எவ்வித வேற்றுமையும் கருதாது செந்தண்மை பூண்டொழுகுவது அரிது, அரிது, செயற்கரிது. மனமாசு அற்றவரால் தான் எவ்வுயிருக்குஞ் செந்தண்மை பூண்டு ஒழுக இயலும். புலனடங்கி, மனம் ஒருமைப்பட்ட நிலையில் தான் மாசு முற்றும் அகலும்.

இவ்வாறு செந்தண்மை பூண்டு ஒழுகுவோரே அந்தணர். இது செயற்கரிய செயல். இதுவே அறவோரது செயலும் ஆகும்.

செயற்கரிய செயல் எவ்வுயிர்க்கும் செந்தண்டொழுகும் அந்தண்மை என்று விளக்குகிறார் திரு வி.க.

## நான்காம் அதிகாரம்

## அறன் வலியுறுத்தல்

அறன் வலியுறுத்தல் என்றால் அறத்தின் வலிமையை வற்புறுத்தல்.

இதனையே மனக்குடவர், 'அறன் வலியுறுத்தலாவது அறம் வலிமையுடைத்து என்பதனை அறிவித்தல்' என்றார்.

---

* அந்தணர் என்பது, அழகிய தட்பத்தை உடையார் என—ஏது பெயராதலின் அஃது அருளுடையார் மேலன்றிச் செல்லாதென்பது கருத்து—பரிமேலழகர்.

அறம் எத்தன்மையுடையது?

அறன் தீக்குணங்களை அறுப்பது; மனமாசையும் அகற்றும் தன்மையுடையது. சுருங்கக் கூறின், 'எல்லா நற் குணங்களும் சேர்ந்த ஒன்றே' அறன்.

## அறன் ஒரு மரம்

அறத்தை பெரியதொரு மரத்திற்கு ஒப்பிடலாம். இந்த பெரிய மரத்தின் வேர் இல்வாழ்க்கை; பட்டை, பிள்ளைப் பேறு; மன்றம்-அன்பு; கவடு-விருந்தோம்பல்; கோடு-ஒழுக்கம்; விளார்-பொறை; தளிர்-ஒப்புரவு; இலை-ஈகை; அரும்பு-அருள்; மலர்-தவம்; காய் கனி-மெய்யுணர்வு, அரசு கல்வி, தொழில் முதலியன.

## முப்பாலின் அடிப்படை

அறமே, அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பாலின் அடிப்படை. இம்மூன்றினும் சிறந்ததும் அஃதே.

பொருள் இருந்தால் அறமும் இன்பமும் அங்கு ஏற் படும். பொருளில்லையெனில் அற நிகழ்ச்சிகள் இரா. இன்ப நுகர்ச்சியும் நேரிய முறையில் உறுதல் அரிது. இது உலகறிந்த ஓர் உண்மை.

ஆனால் இப்பொருளுங்கூட நேர்மையான அறவழியில் ஈட்டப்பட்டதாக இருந்தால் தான் சிறப்பு. இன்றேல் இல்லை என்பதை பொருள் என்ற சொல்லே குறிக்கும்.

பொருள் எது, இன்பம் எது நாமறிவோம். அறத்தின் அடிப்படையில் ஈட்டிய பொருள் இன்பம் தரும்; அந்த இன்பம் நிலைக்கும்; நீடிக்கும். அறமற்ற பொருள் பொருளா காது; அதே போன்று தான் இன்பமும்.

## முறை மாற்றம் ஏன்?

இன்றியமையாததன் அறிகுறியாக 'வான் சிறப்பும்' இன்பத்துக்கு அறிகுறியாக 'நீத்தார் பெருமை'யும் பாயிரத்

துள் முன்பே அமைக்கப்பட்டன. இதன் அடித்தளமான அறமோ இங்கே வைக்கப்பட்டது. ஏன்? முறைமாற்றம் அறத்தின் வலிமையை அறிவுறுத்தவே. சாதாரணமாக 'அறன்' என்று மட்டும் தலைப்பு கொடுக்கப் படவில்லை. 'அறன் வலியுறுத்தல்' என்ற தலைப்பு கொடுக்கப்பட்ட தற்கும் இதுவே காரணம். ஒன்றிய உள்ளத்துடனும் நம்பிக் கையுடனும் உண்மை அறத்தை மக்கள் பயிலல் வேண்டும் என்பது ஆசிரியரின் நோக்கம் போலும்!

## நான்கு பொருட் பிரிவு

இவ்வதிகாரத்தில் விளங்கும் பொருளை நான்கெனக் கூறலாம்.

### 1. அறத்தின் விழுப்பம்

இது பற்றி முதலிரண்டு குறட்பாக்கள் கூறும்.

### 2. அறத்தின் இயல்

அடுத்து வரும் இரு குறட்பாக்களும் அறத்தின் இயல் பற்றியன.

### 3. அறச் செயல்

ஐந்து, ஆறு குறள்கள் மூலம் இப்பொருள் கூற வைத் தார் வள்ளுவர்.

### 4. அறப்பேறு

குறட்பாக்கள் ஏழிலிருந்து பத்து வரை இப்பகுதி விளக்கம் பெறும்.

## பொருள் பாகுபாடு: ஏன்?

ஒன்று விழுப்பமுடையதெனின் அதன்மீது சிந்தை செல்வது இயற்கை. அது விழுப்பமுடையதா என்ற தெளிவு பெறுவதற்காக சிந்திக்க, சிந்திக்க அதன் இயல் இனிது

விளங்கும். இயல் விளங்கியதும், அதை வாழ்க்கையில் எவ்வாறு கடைப்பிடிப்பது என்ற சிந்தனை எழும். இதன்பின், அதைக் கடைப்பிடிக்கும் வழி புலப்பட்டபின் கடைப்பிடித்தொழுக முயற்சி எழும். இச்செயலால் பொருளின் பயன் அல்லது பேறு விளையும். இந்த அடிப்படையில் தான் இந்த பொருள் பாகுபடுத்தப் பட்டது.

வள்ளுவப் பெருமான் அறத்தின் விழுப்பம் பற்றி யாது கூறுகிறார் என்று பார்ப்போமா?

உயிருக்கு ஆக்கம் விளைவிப்பது எது? அறம் என்று விடை பகர்கிறார் பொய்யா மொழியார்.

அத்துடனா? இவ்வறத்தினுஞ் சிறந்ததொன்றில்லை என்று வற்புறுத்திக் கூறுகிறார்.

அடுத்த குறளில் இன்னும் ஒரு படி அதிகமாகக் கூறுகிறார். என்ன அது?

அறச்செயல் ஆக்கந் தரும்; மற்றையது கேடு தரும்.

அறத்தின் இயல்பே அதன் சிறப்பு. அதற்குள்ள தனிச் சிறப்பு யாது? மனமாசை களையும் அறம். அதற்காக, அதற்கு ஊறாக உள்ள பொறாமை, ஆசை, கோபம், கடுஞ்சொல் ஆகிய குறைகளை விரட்டும்; அறவே ஒழித்துக் கட்டும்.

இவ்வளவு நலன்களைப் பயக்கும் அறத்தின் ஆதாரம் எது? அறச்செயல். இன்றியமையாதது அறச்செயல். இதில் ஈடுபட வேண்டும். இதை எவ்வளவு அழகாக வள்ளுவர் இரண்டே வரிகளில் மிகச் சுருக்கமாக, ஆனால் திட்டவட்டமாகக் கூறுகிறார்! அதைப் படிக்கிறோம்; வியக்கிறோம். உண்மையை உணர்கிறோம்,

செய்யத்தக்கது அறமே. விடத்தக்கதோ பழியே. எனவே இயன்ற அளவு அறவினை செய்க என்று செவ்விய அவ்வழியை சுட்டிக் காட்டுகிறார்.

## அறப் பேறு

அற நினைவு தோன்றும் போதே அறம் செய்யத் தொடங்க வேண்டும்; அஃது அழியாத் துணையாகத் தொடர்ந்து வரும்.

இப்படி செய்தால் நன்மை உண்டோ?

உண்டு, நிச்சயம் உண்டு என்று உறுதியாகக் கூறுகிறார் தன் அடுத்த குறட்பாவில்.

"அறவினை, மரணத்தை உண்டாக்காத வாழ்நாளைக் கூட்டும். அத்துடனன்றி, அறத்தின் வழி வருவதே இன்பம், பிற, இன்பமாகா" என்று வலியுறுத்துகிறார்.

அதுசரி! ஓர் ஐயம். அறநெறி என்று சொல்லி விட்டால் அதை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டுமா? ஆராய வேண்டாமா? அல்லது ஆராயக் கூடாதா?

இந்த ஐயத்தை உடனே தீர்க்கிறார் வள்ளுவர். எங்ஙனம்? அறநெறி இத் தன்மையது என்று ஆராய வேண்டியதில்லை; கூறவும் வேண்டுவது இல்லை என்று தெளிவுபடக் கூறுகிறார்.

இப்பெரும் புலவரைப் படம் பிடித்துக் காட்டும்

**'அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்**
**புறத்த புகழு மில'**

குறள் பற்றி திரு. வி. கவின் சிந்தனை எப்படியுள்ள தென்று பார்ப்போமா?

முன் குறளில் அறவினை மரணத்தை உண்டாக்காத வாழ்நாளைக் கூட்டும் என்றார்.

அதில் 'அது வாழ்நாள் அடைக்கும் கல்' என்று ஐயம் திரிபறக் கூறுகிறார். அதே சமயம் அதுவே இன்பம் என்றும் தெளிவு படுத்துகிறார். இவ்வின்பம் எத்தகைத்து? அறத்தால் ஈட்டப்பட்ட பொருளும் அறவழியே வந்தது.

எனவே எல்லாம் அறவழியே வருதல் வேண்டும். எல்லா வற்றிலும் அறம் நிலவுதல் வேண்டும். எனவே 'அறத்தால் வருவதே இன்பம்' என்றும் வாழ்வுக்கு இன்பம் மிக மிகத் தேவை என்றும் இன்பத்திற்கு அடிகோலுவதே பொருள். பொருள் இல்லையெனில் இன்பம் இல்லை.

இக்கருத்தை கலித் தொகையிலும் காண்கிறோம்.

''பொருளில்லான் இளமை போல'' என்கிறார் புலவர்.

## அறம் இல்லா இன்பம்

''இன்பத்திடை அறம் இன்றேல் முதன் முதலில் தாய்மை கெடும். தாய் கெட்டால் பெண்மை கெடும். அதனால் ஆண்மையும் கெடும். பெண்மையும் ஆண்மையும் கெட்ட இடம் பேய்மைக்கு இரையாகும். இது திண்ணம். பலவித நோய்கள் தாண்டவமாடும்.''

நோய்கள் நல்ல பிள்ளைகளை ஈனச் செய்யுமா?

வளமில்லா பிள்ளைகளைப் பெறுவதால் என்ன பயன்?

இது ஒரு பேறா?

ஒரு நாட்டின் நிலை தாய்மைப் பண்பைப் பொறுத்து நிற்கும். தாய்மைப் பண்பு அழிந்தால் நாடு அழிந்து போகும். தாய்மைப் பண்பைக் காப்பது, காக்க வல்லது இன்ப அறமேயாகும்,

எனவே அறத்தின் வழி இன்பம் நுகர்ந்தால் தாய்மைப் பண்புக்குக் கேடு நேராது. தாய்மை தூய்மையைக் காத்தாலன்றி உலகம் ஆக்கம் பெறாது. இத் தூய்மைக்கு என்ன வேண்டும்? அற இன்பமே வேண்டும்.

ஆகவே தான் உலகம் நலம் பெற, உள்ளம் தெளிவாக, தாய்மை தூய்மை காக்க ''அறத்தான் வருவதே இன்பம்'' என்றார் வள்ளுவர்.

அற இன்பம் பற்றி அகப்பொருள் நூல்கள் கைக்கிளை, பெருந்திணை, ஐந்திணை (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியன) ஏழு திணைகளைக் கூறும்.

இவற்றில் ஒரு தலைக் காமமான கைக்கிளையும், பொருந்தாக் காமமான பெருந்திணையும், அறவழியில் வரும் இன்பம் அல்ல. மற்ற ஐந்திணையும் அறவழியின. இவை அன்போடு புணர்தலால், அறவழி சேர்ந்தவை. அறத்தின் கூறுகளில் அன்பும் ஒன்று. அன்பில் பிறப்பதே இன்பம்; அறத்தின் விளைவு அன்பு; அன்பின் பயனும் இன்பமே. எனவே அறத்தால் வரும் இன்பம் என்று வலியுறுத்தினார்.

காதல் இன்பமும் அறத்தாலேயே வர வேண்டும். அவ்வாறு இன்றேல் மற்றவை எல்லாம் துன்பமே.

''மற்றெல்லாம் புறத்த புகழுமில''

இன்பம் நுகர அறமற்ற தவறான பாதைகளில் செல்வதை ஏற்கவில்லை என்பதையே 'மற்றெல்லா' என்பது சுட்டிக் காட்டும்.

'புறத்த' என்ற சொல்லோவெனில் பாவத்தால் வரும் பிறனில் விழைவு முதலியன, அக்கணத்துள் இன்பமாய் தோன்றுமாயினும், பின் பெருந் தாங்கொணா துன்பத்தை விளைவிக்கும் என்பதை அறிவுறுத்தும்.

இது ஆண்களுக்கு மட்டுமின்றி பெண்களுக்கும் பொருத்தமுள்ளதே.

'ஒருத்தி-ஒருவன்' இன்ப அறவொழுக்கத்தில் நிற்போரை உலகம் புகழும். மற்றையோரை ஏசும். எனவே அறவழி இன்பமே, இன்பம்; நிலையான இன்பம்.

அறவழியில் நின்று, வாழ்க்கை நடத்தியவர் வீடு பேற்றிற்கு தனி முயற்சி செய்ய வேண்டுவது இல்லை. விடுதலை தானே வரும். விடுதலை என்றால் என்ன? கட்டறுவது; மாசு நீங்குவது.

கட்டறுந்ததும் எல்லாம் இன்பமாகவே விளங்கும். கட்டு அறவொழுக்கம் என்னும் இல்வாழ்க்கையில் அற்றுப் போகும்.

காதல் இன்பம் வெறும் ஆண் பெண் சேர்க்கை மட்டு மன்று, அது விடுதலைக்குரிய பிள்ளைப் பேறு, அன்பு, விருந் தோம்பல், ஒழுக்கம், ஒப்புரவு முதலிய பல அறக்கூறுகளைக் கொண்டது. ஒருமைக் காதல் மாசற்ற நிலை கூட்டு வதற்குத் துணை புரியும்.

திரு.வி.கவின் தெள்ளிய சிந்தனைக்கு இந்த குறள் விளக்கத்தை விட ஒன்று வேண்டுமா?

## அறத்துப் பால்

பாயிர விரிவுரைக்குப் பின் அறத்துப் பாலில் முதலாறு அதிகாரங்களைக் கொண்ட இல்வாழ்க்கை இயலின் விரிவுரை எழுதினார். அறத்துப்பாலில் பொருட்பால், இன்பப் பால் அடங்கும்.

அறம் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் எல்லாவற்றையும் ஒழிக்கும். 'மனத்துக்கண் மாசிலனாதல்' இதுவும் அறத்தின் தன்மையே.

இவைகளைப் பெறுவது எங்ஙனம்?

'இல்வாழ்க்கை', வாழ்க்கைத் துணை, மக்கட்பேறு ஆகியன அன்பின் வழி இருப்பன. அன்பு விருந்தோம்ப உந்தும், விருந்தோம்பல் எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண் டொழுகச் செய்யும். விருந்தோம்பலுக்கு மற்றொரு முக்கிய தேவை 'இன்சொல்.'

அறத்துப்பால் அறத்தை அறிவுறுத்தும் பகுதி. இல்வாழ்க்கை இயல்—இல்வாழ்க்கை படிப்படியே விளக்கிக் கூறும் அதிகாரங்களைக் கொண்ட பகுதி.

இல்வாழ்க்கை இருவிதம். ஒன்று மனைவி மக்களிடை செலுத்தி வாழ்வது. மற்றொன்று இயற்கையிடம் அன்பு

செலுத்தி வாழ்வது. இல்லறத்திலிருந்து இயற்கையன்பு செலுத்துவது வளர்கிறது. எனவே வாழ்க்கைக்கு அமைப்புத் தேவை. அந்த அமைப்பே 'இல்' என்பது. அறத்துடன் கூடிய 'இல்' இல்லறமாகிறது.

இல்லறத்திலே மனைவி மக்களுடன் வாழ வாழ, ஒருவன் மனமாசு சிறிது சிறிதாக அகலும்; அன்பு பெருகும். தன்னலம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து பரநலத்திற்கு இடங் கொடுக்கும். உலகமே ஒரு குடும்பமாகத் தோன்ற ஆரம் பிக்கும். உலகில் வாழும் அனைத்து உயிரும் சோதரமாகப் பொலியும். எனவே இயற்கை உலகிடம் செந்தண்மை பூண்டு வாழ்தற்கே, இல்லறமே அஸ்திவாரம்.

இவ்வதிகாரம் நான்கு விதப் பொருளடக்கத்தை உடையது

1. அறமே இல்வாழ்க்கை என்பது.

2. அறத்திற்கும் இல்வாழ்க்கைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இது இரண்டாவது பகுதி.

மூன்றாவதாக இல்வாழ்பவனின் கடமையைப் பற்றிக் கூறுகிறார் பொய்யா மொழியார்.

இல்லறத்திலே வாழ்பவனுடைய மாண்பு—அடுத்து வரும் பொருள்.

மனமொத்து ஒருவனும் ஒருத்தியும் வாழும் போது, அவர் மன மாசு அகலும். பிறர்க்கென வாழும் இயல்பு ஏற்படும்; இந்த இயல்பினால் அவர்தம் கடமையை அவர் உணர்வர்; தொண்டாற்றுவர். இந்த அறச்செயல் பரந்து விரிந்து அவர்கள் புகழைப் பரப்பும்; அறத்தை வலியுறுத்தும்.

இதன்படி முதல் குறட்பா அறமே இல்வாழ்க்கை எனக் கூறும்.

அடுத்த மூன்று பாக்களும் அறத்துக்கும் இல்வாழ்க் கைக்கும் உள்ள தொடர்பை விளக்கும்.

ஐந்தாம் குறள் பொது வாழ்வில் இல்வாழ்வான் செய்ய வேண்டிய கடமையைச் சொல்லும்.

இதுவன்றி, சிறப்பான முறையில் இல்லறத்து வாழ்வான் ஆற்ற வேண்டிய கடமைகள் எவை என அடுத்த நான்கு குறட்பாக்களும் கூறும்.

ஒன்பது, பத்து குறட்பாக்கள் இல்வாழ்வான் மாண்பை விளக்கும்.

முதல் குறளை எடுப்போமா?

**''அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்**
**பிறன்பழிப்ப தில்லாயி னன்று''**

## அறம்

இல்வாழ்க்கையே அறம். ஏன்? அறம் எனப்படும் மனத்துக்கண் மாசிலாதாகும் நிலையை இல்வாழ்க்கை நல்கும். இல்லற வாழ்க்கை இதை நல்க வேண்டுமானால் அறம் சார்ந்ததாகயிருக்க வேண்டும். நுட்பமான அறத்தின் பருமையே இல்வாழ்க்கை.

## இல்வாழ்க்கையே நல்வாழ்க்கை

பிறவியில் அமைந்துள்ள மாசு எப்படி நீங்கும்? தனித்து வாழ்ந்தால் நீங்குமா? நீங்காது, நீங்காது இயற்கையோடு இசைந்த இல்லற வாழ்விலன்றி மாசு ஒருநாளும் நீங்காது. இது உறுதி, உறுதி, உறுதி! மனமொத்த ஆணும் பெண்ணும் அறத்தின் அடிப்படையில் வாழும் போது, சேர்க்கையில் அன்பு பெருகும்; அன்பு பெருகுமிடத்தில் மாசு மறையும்; தன்னலம் வீழும்; பிறநலம் பெருகும்.

## தியாகம்

பரந்த அன்பு விரியும்; பெருகும்; தன்னலத்தை அழிக்கும். முதன்முதலில் மனைவியிடம் மட்டும் அன்பு

செலுத்திய ஒருவன், பிள்ளை பெற்றவுடன், அந்தக் குழந்தையிடமும் அன்பைப் பொழிகிறான். எனவே, தான், தன் மனைவி என்ற சுயநலம், குறைந்து, கொஞ்சங் கொஞ்சமாகத் தேய்ந்து அறவே மறையும். சுயநலம் மறையும் போது தியாகம் ஆரம்பிக்கும்.

தியாக சிந்தை விருந்தோம்ப உந்தும். விருந்தினர் யார்? சுற்றமும் தெரிந்தவர்களும் மட்டுமா? இல்லை. இல்லை! தாம் அறியாதவர்; முன்பின் தெரியாத புதிய நபர்—இவரே விருந்தினர் எனப்படுவர். விருந்து என்றாலே புதிது என்று பொருள். விருந்தினரை மகிழ்விப்பது எப்படி? இன்சொல்லால்.

இதைக் கருத்திற்கொண்டே திருவள்ளுவர் அதிகாரங்களை அடுத்தடுத்து வைத்தார் போலும்!

## அஃதும்

அஃதும் என்ற சொல்லை ஏன் திருவள்ளுவர் இங்கு கையாண்டார்? தம் காலத்தில் புகுந்த போலித் துறவு அல்லது தனிவாழ்க்கையைக் கண்டிக்கவே இந்தச் சொல்லை உபயோகித்தார். இல்வாழ்க்கை-ஒரு தொடர் நிகழ்ச்சியே!

கற்க வேண்டியவைகளை ஒரு பெண்ணும் ஆணும் கற்று கேட்டு அறிய வேண்டியவற்றை அறிந்து காதலால் ஒன்று பட்டு, பின்னர் மணம் புரிந்து வாழ்கின்றனர். ஒன்றாக வாழ்தலில், மனமாசு அறுகிறது. பின், மெல்ல மெல்ல அறநிலைப் பேறு எய்துகிறார்கள். இந்தத் தொடர் நிகழ்ச்சியே இல்வாழ்க்கை.

## துறவு? தவம்!

துறவும், தவமும் வீட்டை விட்டு ஓட வேண்டும் என்று வற்புறுத்தவில்லை. துறவு காட்டில் தான் முடியும் என்பதும் இல்லை. தவத்திற்கு தனிமை மிக முக்கியம் என்று கண்டிப்பாகக் கூறப்படவுமில்லை!

இல்லறத்தில் இயற்கையான வாழ்வு நடத்தியே, தவம் செய்யலாம். இல்லறத்திலேயே துறவறம் மேற்கொள்ளலாம். இதற்கு எத்தனையோ பெரியோர்கள் வாழ்க்கை சான்று.

பின்னாளிலே அறம், இல்லறம் துறவறம் எனப் பிரிவுண்டது. இல்லறம் பழமையானது. 'அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை' என்று இப்பாடல் கூறுதல் கருதற்பாலது.

பிறன் பழிப்ப தில்லாயின் நன்று:

அறமே இல்வாழ்க்கை, ஆகவே இல்லறத்தைத் தூய்மை யாக நடத்துவது தலையாய கடமை. இல்லையெனில் அது போலி வாழ்க்கை. 'அஃதும் பிறன் பழிப்பதில்லாயினன்று' இது பொருள் படவே அங்ஙனம் கூறினார்.

## பிறன் யார்?

உலக வழக்கில் 'நாலு பேர்' என்று சொல்கிறோம். இந்த நாலு பேர் யார்? அவர்களே மற்றவர். பிறன் என்றால் இங்கு நாலு பேரை குறிக்காது. ஒருவன் கூட என்பதையே குறிக்கும். அதாவது ஒருவன் கூட பழிக்க முடியாத, பழிக்க இயலாத, பழிக்க இடந் தராத ஒரு முன்மாதிரியான இல்லறம் நடத்த வேண்டும் என்பது புலவர் கருத்து.

## பழிகள்

நேர்மையற்ற, அறமற்ற இல்லறம் பழிக்கு இலக்காகும். இந்தப் பழிகள் யாவை?

ஒருத்தி ஒருவனை விடுத்தாலோ ஒருவன் மணம்புரிந்த ஒருத்தியை விட்டு வாழ்ந்தாலோ அதனைப் பிறர் பழிப்பர். ஒருத்தி பல ஆடவருடனோ, ஒரு ஆடவன் பல மகளிரோடோ சேர்ந்து காம வெறிக்கு இரையானால், அது மிகப் பெரிய குற்றம். பொருள் முயற்சியின்றிச் சோம்பிக் கிடத்தலும்,

தவறான வழியில் பொருளீட்டலும், கஞ்சத்தனமும் பழிக்குரியனவே.

பேராசை, பிள்ளையை நல்வழியில் வளர்க்கத் தவறினாலோ, அதுவும் மிக மிகப் பெரிய பழி தரும். இத்துடன், ஒப்புரவும் இன்றி, விருந்தோம்பலும் இன்றேல், இது சாமான்யமான பழியே தராது.

எனவே இந்தப் பழி பயக்கும் ஒரு தவறு கூட இல்லாத இல்லறமாக அமைவதே சிறப்பு என்ற கருத்தைத் தெரிவிக்கிறார் வள்ளுவர்.

இல்வாழ்க்கையின் வேர் அறம். இது பழிக்கு இடம் தராது. பழிப்பு இல்லாத அறமுள்ள வாழ்க்கையே, சுவையுள்ள வாழ்க்கை; மணமுள்ள வாழ்க்கை.

தனித்த செயற்கை வாழ்க்கை அறனெனப் படாது.

இதனை யடுத்து வரும் குறள் இல்வாழ்க்கையை விடுத்து வேறு வழியில் செல்வதால் ஒரு பயனும் கிட்டாது எனக் கூறுகிறது. நல்லதொரு இல்வாழ்க்கை, நோற்றலினும் வலிமையுடையது என்பதைக் காட்டுகிறது மூன்றாவது குறள்.

நல்லதொரு இல்வாழ்க்கையின் பண்புக்கும் பயனுக்கும் தேவையானவை எவை என விளக்குகிறார் நாலாவது குறளில், அதாவது அன்பும் அறனும் தேவை என்கிறார்.

## இல்வாழ்வான் கடமை

அடுத்து வரும் குறட்பாக்களில் இல்வாழ்வான் கடமை என்ன எனக் கூறுகிறார் ஆசிரியர்.

இல்வாழ்வான் பழிக்கு அஞ்சுவான்; பகிர்ந்து உண்பான். இத்தகைய வாழ்வில் குறை இருக்காது. அனைவருக்கும் நிலையான துணையாக நிற்பான். ஏன்? மூவருக்கும் நல்ல

வழியில் நிலையாகத் துணை நிற்பான். இதுவே அடுத்த குறளின் கருத்து.

எட்டாவது குறளில், வள்ளுவர் இல்வாழ்வான் எப்படி நீத்தார்க்கும், உலக இன்பம் நுகர இயலாதார்க்கும், இரந்தார்க்கும் துணையாவான் என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

இல்வாழ்வானுக்கு இன்னும் சிறப்புகள் உண்டோ? உண்டு, உண்டு!

இல்வாழ்வான் என்பவன் தென் புலத்தார். தேவர், விருந்தினர், சுற்றத்தார், தான் என்னும் ஐவர் வாயிலாக அறத்தை வளர்த்தலே, சிறப்பு.

இல்வாழ்வான் மாண்பைப் பற்றிக் கூறும் மற்ற குறள்கள் இல்லற வாழ்க்கையே தலையாய வாழ்க்கை. அந்த வாழ்க்கைக்குத் தேவை முயற்சி; அந்த முயற்சியின் முதிர்ச்சி இல்வாழ்க்கையில் தெய்வத் தன்மை பொலியச் செய்யும். தெய்வத்தன்மை நற்பலனை நல்கும்; இல்வாழ்பவன் தேவருள் ஒருவனாக கருதப் படுவான்.

திரு. வி. கவின் விளக்கத்தைப் படித்தப்பின் செயற்கை வாழ்க்கை பற்றி யாரேனும் சிந்திப்பாரோ?

## வாழ்க்கைத் துணை

இல்லறம் செவ்வனே அமைய வேண்டுமானால், நல்லதொரு வாழ்க்கைத் துணை அமைய வேண்டும். நல்லதொரு வாழ்க்கைத் துணை எத்தகைய சிறப்புப் பெற்றிருக்க வேண்டும் என்பதை விளக்கும் இந்த அதிகாரம். எனவே இல்லறத்திற்கு (இல் வாழ்க்கை) பின் வருவது எவ்வளவு பொருத்தம்!

இந்த அதிகாரத்தின் முதன் குறட்பாவே நல்ல வாழ்க்கைத் துணை சிறப்புத் தன்மைகளை விளக்கும்.

'மனைத்தக்க மாண்புடையள் ஆகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.'

இவ்வதிகாரத்தின் பொருளை மூன்று பகுதியாகப் பிரிக்கலாம்.

முதலாவது மனை மாண்பு:

முதல் மூன்று குறட்பாக்கள் இப்பொருள் பற்றிக் கூறுவன இரண்டாவதாக விளக்கப்படும் பொருள் கற்பு.

நான்காம் குறளிலிருந்து ஒன்பதாவது குறள் முடிய கற்பு; அதன் தன்மை; அது பெண்களைப் பற்றியது மட்டுமன்றி ஆண்களுக்கும் உரியதே எனத் திட்டவட்டமாகக் கூறுகிறார் புலவர் பெருமான்.

மூன்றாவதாக வரும் பொருளான மக்கட்பேறு, இறுதி குறட்பாவில் இடம் பெறுகிறது.

ஆவது பெண்ணாலே!

இல்வாழ்க்கையின் உயிர் பெண். வள்ளுவர் காலத்திலேயே பெண்ணை இழிவாகக் கருதினர். இந்தத் தவறான கருத்தைப் போக்க வள்ளுவர் எடுத்த முயற்சிகளே இவ்வதிகாரத்திலுள்ள பாக்கள். பெண்ணை வாழ்க்கைத் துணை என்றார். இயற்கையோடு இயைந்த வாழ்வை நடத்த ஒருவனுக்குப் பெண் மிகவும் தேவை. அவன் வாழ்க்கை நன்முறையில் நடைபெறா விட்டால், பழி வரும். எத்தகைய பழியும் வராது காக்கும் மாண்பு வாழ்க்கைத் துணையினுடையது.

பழி வராமல் தடுப்பது எது? கற்பு. வாழ்க்கைத் துணையின் கற்பொழுக்கத்தில் விளையும் பயன் என்ன? நன் மக்கட்பேறு. கற்பொழுக்கத்தால் வளரும் உலகமே பெருமை கூடியது. அமைதியும் இருக்கும். பிறவற்றால் அல்ல.

மனையறத்துக்குத் தக்க மாண்பும், கொண்டவனது செல்வ அளவுக்கேற்ற வாழ்வை நடத்தும் தகுதி கொண்டவளே மனைவி.

ஒருவேளை மனைவியிடத்து நல்லியல்பு இல்லையானால் என்னவாகும்?

இதனையே விளக்கும் அடுத்த குறள்:

**''மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை**
**எனைமாட்சித் தாயினும் இல்.''**

மனைமாட்சி யாது?

மனையறத்துக்குரிய நல்லொழுக்கம், வரவுக்கேற்ற செலவு, தியாகம், அன்புடைமை, பிறர்க்கென வாழும் சிறப்பியல்பு; இன்சொல்லே பேசுவது; ஒப்புரவு, விருந்தோம்பல் முதலிய இயல்புகளே மனைமாட்சி எனப்படும். இவை மனைவியிடத்தே இல்லாமல் போகுமானால், அவள் இல்லாளே அல்ல! வாழ்க்கைத் துணையும் அல்ல. அவள் மாண்புடைய பெண்ணாக கருதப்படவே மாட்டாள். அத்தகைய ஒரு மனைவி வாய்த்தால்?

வாழ்க்கை எனைமாட்சித் தாயினு மில்.

மாண்பிலா பெண்ணை மணந்த ஒருவன் வாழ்க்கையில் எல்லாம் இருந்தாலும் பெருமையுடையது ஆகாது. சுருக்கமாக அது வாழ்க்கையே அல்ல. 'அவ்வாழ்க்கை எத்துணை நன்மையுடையதாயினும் ஒரு நன்மையும் இன்றாம்' என்கிறார் மணக்குடவர்.

பரிமேலழகர் இதனையே 'அவ்வில் வாழ்க்கை செல்வத்தால் எத்துணை மாட்சியுடையதாயினும் அஃதுடைத்தன்று' என்று திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்.

இதற்கடுத்த பாட்டும், மாண்பிலா மனைவியால் வரும் தொல்லைகளையேத் தொடர்ந்து கூறுகிறது.

மனைமாட்சி ஞாயிறு போன்றது. மற்றவை கோள்கள்; ஞாயிறு இல்லையேல் கோள்களுக்கு ஒளி ஏது? அதே போன்று மனைமாட்சி ஒன்றில்லையாயின், அதனால் விளையும் பயன் தான் என்ன? ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை, ஒன்றுமே இல்லை.

செல்வங்கள் அனைத்தும் பெற்ற ஓர் இல்லம், இச்செல்வங்களில் ஏதுமில்லா மற்றொன்று; முந்தியதில் இல்லாள் மனைமாட்சி இல்லாதவள்; இரண்டாவதில் உள்ளவளோ ஒப்புவமையில்லாத வாழ்க்கைத்துணை. உலகம் எதைக் கொண்டாடும்? முந்தியதையா? இல்லை, மற்றதையா? இரண்டாவதையே உலகம் கொண்டாடும். ஏன்?

வாழ்க்கை சிறப்பாக அமைய வேண்டற்பாலது முக்கிய மாக ஒன்று. அதுவே மனைமாட்சி.

இத்துடனா? மாண்புள்ள மனைவியால் வேறு பயன் களும் உண்டு. அது பற்றி அடுத்துக் கூறுகிறார் வள்ளுவர்.

நல்ல பண்புள்ள இல்லத்தரசியைப் பெற்ற இல்வாழ் வானுக்கு இல்லாதது ஒன்றுமே இல்லை. மனையாள் மனைமாட்சியில்லாத கடையவளானால், உள்ளது ஒன்றுமே யில்லை. எனவே மனையாள் மாண்பே வாழ்க்கையில் நிறைவு தரும்; அமைதி தரும்.

மூன்றாவது குறள் இத்தகைய பெண்ணின் நிலைப் பற்றிக் கூறும் அவளுடைய உயிர் நாடி கற்பு. கற்பு என்றால் உறுதி என்று பொருள். மன உறுதி பெண்களுக்கு அணிகலன். கற்புடை பெண்மையினுஞ் சி ற ந் த தொன்றில்லை.

## கற்பின் திறன்

அடுத்து வரும் பாட்டுகள் கற்பின் திறனை சிறப்பிக் கின்றன. சிறை வைத்தால், கற்பு காக்கப்படுமா? இல்லை,

இல்லை; நிறையே அவரைக் காப்பதாகும் என்று தெளிவு செய்கிறது ஐந்தாவது குறள்.

மாண்புள்ள வாழ்க்கைத் துணையால் எத்தனையோ நல்ல பயன்களுண்டு. ஆனால் மாண்புள்ள ஒரு பெண் என்று எப்படித் தெரிந்துக் கொள்வது? புரிந்துக் கொள்வது?

கணவனைத் தெய்வமாகத் தொழுவாள். அதனால் இயற்கையைக் கூட மாற்றலாம்.

''பெய்யெனப் பெய்யும் மழை.''

முன் குறட்பா கற்பு காத்தல் எங்ஙனம் என்று சொல்லப்பட்டது. இப்பாட்டில் கற்புக் காத்தலின் ஆற்றல் சொல்லப் படுகிறது.

கற்புடைய ஆடவனை ஓர் கற்புக்கரசி கணவனாகப் பெற்றால் தேவலோக போகத்தை இகலோகத்திலேயே பெறுவர் என்று விவரிக்கிறது எட்டாவது குறள்.

அடுத்து வருவது மீண்டும் எதிர்மறை. ஒருவன் நல்ல தோர் மனையாளைப் பெறாவிட்டால் அவன் எவ்வாறு இருப் பான்? அவன் சோர்ந்து விடுவான்; வீறு நடையிராது; இந்த எதிர்மறை வாயிலாக எச்சரிக்கை செய்கிறார் இக்குறளில்.

அது சரி! இவ்வளவு சொல்லி விட்டாரே? மாண்புடைய வாழ்க்கைத் துணை அப்படி இன்றியமையாததா என்ன? இது மிகையாகாதோ?

ஆகாது, ஆகாது!

வாழ்க்கைத் துணையின் அணி யாது?

மனைமாட்சி மங்கலமாவது எப்போது? நன் மக்கள் பேற்றின்போது மங்கலம் ஆகிறது. முழுமையும் பெறுகிறது.

ஆக, வாழ்க்கைத் துணையின் பொலிவையும் அணியை யும், இவ்வதிகாரத்திலுள்ள கடைசிக் குறட்பா விளக்கும்.

## மக்கட் பேறு

மாண்புடை இல்லறத்தின் சிறப்பு நல்ல மக்களைப் பெறுவதே. இங்கு வள்ளுவர் 'மக்கள்' என்று குறிப்பிடுவது நன் மக்களைப் பெற்ற மக்கள் எல்லாரும் நன் மக்கள் ஆவாரோ? ஆகார்; ஒருக்காலும் ஆகார். அதனால் நன் மக்களைப் பெறுவதே மாண்புடை இல்லறத்தின் சிறப்பு.

மக்கட் பேறு அதிகாரம் பொருள் அடிப்படையில் 5 பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

முதல் பிரிவு மக்கட்பேற்றின் விழுப்பம். இதைப் பற்றி முதற்பா கூறும்.

இரண்டாவது பிரிவோ மக்கட்பேற்றால் விளையும் பயன் பற்றி விளக்கும். இதை இரண்டாவது குறட்பாவில் காணலாம்.

மக்களே சிறந்த செல்வம். இது மூன்றாவது பிரிவு. இதை எடுத்துக் காட்டுவது மூன்றாவது குறட்பா.

நான்காவது பிரிவாக உள்ளது மக்களால் பெறும் இன்பம். இந்த இன்பம் இடம் பெறுவது நான்கு, ஐந்து ஆறு குறட்பாக்களில்.

இத்தகைய மக்களுக்கும் பெற்றோர்க்குமுள்ள இயைபு யாது? இது பற்றிக் கூறுவது ஐந்தாம் பிரிவு. கடைசி நான்கு குறட்பாக்களின் பொருள் இது பற்றியதே.

நல்ல பெற்றோருக்கு நற்பெயர் பெற்றுத் தருவது நன் மக்களே. எனவே வாழ்வில் அடையத்தக்க பேறுகளில் சிறந்தது மக்கட்பேறு.

நன்மக்களைப் பெறுவதால் என்ன பயன்? இதற்கு வள்ளுவரே பதிலளிக்கிறார் இரண்டாம் குறளில். நன் மக்களைப் பெறுவோரை பின்னே எப்பிறவியிலும் தீமைகள் அணுகாவாம்.

செல்வங்களுள்ளே சிறப்பு வாய்ந்தது மக்கட் செல்வம். ஏன்?

பண்புடை மக்களைப் பெற்றால், அவர்கள் பெற்றோரின் மதிப்பிலா செல்வம்; ஈடு இணையற்ற செல்வம். பெற்றோர் தம் நன்வினையால் மட்டும் இப்பேறு கிட்டும்; மற்றவையினால் அல்ல.

சரி, இந்த மக்கள் எல்லாராலும் இன்பம் உண்டோ? நிச்சயம் உண்டு. அந்தக் குறைகளை நோக்குவோமா?

**'அமிழ்தினும் ஆற்ற இனிதே தம் மக்கள்**
**சிறுகை அளாவிய கூழ்'**

அடுத்து வரும் இரு குறள்களும் இந்த இன்பத்தையே விவரிப்பன.

இப்போது அந்த இன்பத்தில் நாமும் பங்கு கொள்வோமா?

ஒரு குழந்தை; அருமையாகத் தாம் பெற்ற குழந்தை; அது என்ன செய்கிறது? அருகே இருக்கிறது ஒரு பாண்டம். அதிலே கூழ் வைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குழந்தை தன் சிறு கையை அந்தப் பாண்டத்திலே விடுகின்றது; எடுக்கிறது; உதறுகிறது; எறிகிறது; இறைக்கிறது; தரையில் தேய்க்கிறது. உடம்பிலும் பூசுகிறது; தலையிலும் அப்புகிறது.

இவ்வளவுடன் நிற்கிறதா? இல்லையே! இன்னும் எத்தனையோ சேட்டைகள்; சிரித்துக் கொண்டே செய்கிறது. இதை நாம் எப்படி அறிகிறோம். அளாவிய என்ற ஒரு சொல் எத்தனையோ கோடி செயல்களை எடுத்து எடுத்து சொல்கிறது.

சிறு கையால் அளவளாவது பற்றி புறநானூற்றுச் செய்யுளின் ஒரு பகுதி மூலம் பரிமேலழார் எவ்வளவு அழகாக சித்திரிக்கிறார்?

**'இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தல்.'**

கூழ் என்பது உணவைக் குறிக்கும்.

## தம் மக்கள்

ஆசிரியர் தம் மக்கள் என்றதேன்? தானே ஈன்ற மக்களின் ஆடல் பாடல், குறும்பு, சேட்டை இவைகளில் பெற்றோர்க்கு எல்லையில்லா இன்பம் உண்டாவது இயற்கை. தம் குழந்தைகள் தொல்லை, இன்பம் தரும்; வெறுப்பைத் தராது. எனவே 'தம் மக்கள்' என்றார். குழந்தை, இருவர் காதலின் விளைவு.

அவ்வுருவற்ற இருவரின் காதல் உயிராக உருப்பெற்று, குழந்தையாக உயிர்பெற்றது. கரை கடந்த அன்பின் சாட்சி தம் குழந்தை. ஆகவே 'தம் மக்கள் தம் மக்களே!'

## இன்ப வீடு

இல்வாழ்க்கையில் இன்பம் இடையறாது அளிப்பது குழந்தையே. இந்த அன்பு, தன் இல்லத்தில் மட்டும் அன்றி, மற்ற மக்கள், மற்ற உயிர்கள் ஆகியவற்றிற்கும் பரவச் செய்யும். இதுவே உலகை இன்ப மயமாக்கும். இன்ப வீடாக்கும். இதுவே மக்கட்பேற்றின் தலையாய சிறப்பு.

## சிறு கை

குழந்தையின் கை சிறியதாகத்தானே இருக்கும். அதைக் கூடவா விவரிக்க வேண்டுமென சிலருக்குத் தோன்றலாம், குழந்தையின் கை அழகானதுதான்; சிறியதுதான்; அதில் சந்தேகமே இல்லை. ஆனால் அதே கையின் அழகு பன் மடங்காகத் தெரியும். எப்போது? கூழை அளவளாவும் போது. கொஞ்சம் அதையும் ரசிப்போமே! பிஞ்சுக் கை. சின்னஞ்சிறு கை; அச்சின்னஞ்சிறு கையில் வழிந்தோடும் கூழ்! அந்த அழகுக் கையின் விரல்களின் அமைப்பு இன்னும் எவ்

வளவு அழகாகத் தோன்றுகிறது! இதை அறிந்து, உணர்ந்து, அனுபவித்தது போலல்லவா உள்ளது 'சிறு கை!' என்ற சொல்.

## அளாவிய கூழ்

உணவு ஒரு பாண்டத்தில் உள்ளதுதான். இதில் ஒரு சிறப்பும் இல்லை. ஆனால் திடீரென தனிச்சிறப்பு பெறுகிறது. அது எப்படி?

அச்சிறு கை அதில் புரியும் விந்தைகள் எத்தனை. எத்தனை? இதைவிட வேறோர் உவகை உண்டோ? கூழ் காணாத தரை இருக்குமா? கூழ் அப்பாத தலை உண்டோ? கூழ் வழியாத சிறு கை உண்டோ?

எத்தனை, எத்தனை அற்புதங்கள்!

இத்தகைய கூழின் சுவை கெட்டு விடாதோ? கெடாது, கெடாது, கெடவே கெடாது. ஆனால் சுவை மிகும்.

'அமிழ்தினும் ஆற்ற இனிதே!

சாதாரணமான கூழ். இதற்கு சுவை மிகுந்து விட்டது. அமிழ்தினும் இனிதாகி விட்டது, ஏன்? சிறு கை அளாவியதால். யாருக்கு? பெற்றோருக்கு.

அமிழ்து என்று சொல்வானேன்? அமிழ்தம் மரணத்தைப் போக்குவது. இக்கூழை உண்ணும் பெற்றோர் கவலையை மறக்கின்றனர். கவலை மறப்பதால் நரை, திரை, மூப்பு வரவே வராது. என்றென்றும் இளமை. மக்கட்பேற்றின் மாண்பு.

இந்த இன்பம் பெற்ற சிறு குடில் ஒளி பெற்றது; இன்ப வீடாகியது. பெற்றோர் மூப்பு இன்றி விளங்கினர். இத்தனை இன்பமும் வாரி, அள்ளி அள்ளி வழங்கியது யார்? மாண்புடை வாழ்க்கைத் துணை, வாழ்க மாண்புடைய பெண்மை! ஓங்குக!

ஒரு சாதாரண நிகழ்ச்சி பேராற்றல் படைத்தவரிடம் எத்துணை பெருமை பெறுகிறது!

இது தவிர மக்கட் பேற்றினால் வரும் இன்பங்களை அடுத்து வரும் இரு குறள்களில் காணலாம். பெற்றோரது உடலை மக்கள் தீண்டுகின்றனர். அது தரும் இன்பம்தான் எவ்வளவு. மழலையை உதிர்க்கும் செல்வனின் சொற்களைக் கேட்ட பெற்றோருக்கு காதுகளுக்கு வேறு இன்பம் ஈடாகுமா? இந்த மழலைச் சொற்களின் முன் குழலோசை இனிதாகுமா? ஆகாது, ஆகாது!! யாழ்? மழலை இன்பம் யாழிசையினும் மிக மிக இனிது.

இந்த இன்பமூட்டுவதுடன் மக்கள் பணி தீர்ந்து விடுகிறதா? இல்லை! பெற்றோருக்கும் மக்கள் செய்ய வேண்டிய கடமைகள் உண்டு; அதே போல் மக்களுக்கு பெற்றோர் செய்ய வேண்டிய கடமைகள் உண்டு. இதனையே அடுத்து வரும் நான்கு குறட்பாக்களிலே தெளிவாக்குகிறார் பொய்யா மொழியார். தந்தை மகனுக்கு ஆற்ற வேண்டிய கடமை யாது? அவர் தம் மகனை கற்றறிந்தோர் சபையில் முந்தியிருக்கச் செய்தல் வேண்டும். இந்த சபைகளிலுள்ள கற்றறிந்தோர் எத்தகையோர்? அவர்கள் ஒழுக்கமுள்ள கற்றறிந்தோர். இவர்களுடைய சபைகளில் முந்தியிருக்கக் கூடிய கல்வியறிவை தந்தை புகட்டல் வேண்டும்.

மகன் தந்தைக்கு இதற்குப் பதிலாகச் செய்யும் கடமை யாது?

தந்தையின் புகழை நிலைக்கச் செய்ய வேண்டும். ஒழுக்கத்துடன் வாழ்ந்து, நன்மாதிரியாக அனைவரிடமும் நடந்து கொண்டு நல்ல பெயரெடுக்க வேண்டும். இன்னாருடைய மகன் இவன். ''இவனைப் பெறுதற்கு இவன் தந்தை என்ன நோன்பு நூற்றானோ!'' என்ற புகழ்ச்சியை தந்தைக்குப் பெற்றுத் தருவதே மகனின் கடமை.

தந்தைக்கு மட்டும்தான் இந்தப் புகழ்ச்சியா? தாய்க்கு இதில் பங்கில்லையா? நிச்சயம் உண்டு. எல்லோரும் தன்

மகனைச் 'சான்றோன், சான்றோன்!' எனப் புகழ்வதைக் கேட்கிறாள் தாய். பெரும் மகிழ்ச்சி ஏற்படுகிறது. அந்த மகிழ்ச்சி எதைவிடப் பெரிது?

அவனை மகனாகப் பெற்றெடுத்த போது ஏற்பட்டதே அந்த மகிழ்ச்சியைக் காட்டிலும் பெரிது; மிகப் பெரிது; மிக மிகப் பெரிது.

## சும்மா வருமா இன்பம்?

இந்த உவகை சுலபமாக, சும்மா வருமா?

வராது. அதற்குத் தாய் தன் மகன் உலகுக்கு அன்பு செய்து நன்மை செய்பவனாக முதலில் நினைவை ஊட்ட வேண்டும்; வெறும் பால் உடலை வளர்க்கும். இந்த நினைவோ அறிவை வளர்க்கும்; உலகிற்கும் தொண்டு செய்யும்.

வளர்ப்பு முறையைச் சார்ந்தது இந்த அறிவு வளர்ச்சி. எனவே பெற்றோர் தம் மக்களை நல்ல முறையில் வளர்க்க வேண்டும். தம் மக்களை அறிவுடையவராக இருப்பதற்கு மட்டுமன்றி 'மாநிலத்து மன்னுயிர்க்கும் நல்லதையே செய்யும் படி' மக்களை வளர்க்க வேண்டும்.

இப்பெரும் பணியில் தாயின் பங்கு மிக அதிகம்.

## அன்புடைமை

அன்புடைமை மக்கட்பேறுக்கு அடுத்துவரும் அதிகாரம். ஏன்? உலகைக் கட்டி ஆள்வது அன்பு. அன்பே கடவுள்; கடவுளே அன்பு. அன்பு மிகுந்தால் தியாகம் பிறக்கும்; தியாகம் தன்னல அழிவைக் குறிக்கும். மக்களை ஈன்ற தாய் தந்தையர் தியாக மூர்த்திகளாகின்றனர். அன்புள்ள இடத்திலே தியாகம் பிறக்கும்; வளரும்; பரவும்; நிகழும்.

நான்கு பகுதிகளையுடையது இந்த அன்புடைமை அதிகாரம்.

அன்பின் இயல் முதல் பகுதி. முதலிரண்டு பாக்கள் அன்பின் இயல் பற்றியது.

அன்பின் இயல் யாது? அன்பைத் தடுக்க இயலாது. அது கண்ணீர் வாயிலாகத் தன்னை வெளிப்படுத்தும். அதை தடுக்கவோ, அடைக்கவோ முடியாது; அத்துடனா? அன்புடைமையாவது பிறர்க்கென்று வாழும் இயல்புடையது.

இரண்டாம் பகுதி பிறவிப் பயன் அன்புடைமையின் உண்மை. மூன்று முதல் ஆறு குறட்பாக்கள் வரை பிறவிப் பயன் அன்புடைமையில் உண்மையும் பற்றியது.

பிறப்பு எப்படி நிகழ்கிறது? இரு உயிர்கள் அன்பினால் இணைவதால், ஏற்படுகிறது. எனவே உயிர் உடல் தாங்குதல் என்பது அன்பு நெறியில் நிற்பதாகும். எவரை உயிருள்ளவர் என்பது? எவர் எப்போது 'பிணம்' எனக் கருதப்படுவர்?

அன்புள்ள உடலே உயிருடையது. அன்பில்லா உடல் உயிரற்றப் பிணம் போன்றது. அது மட்டுமா? அகத்தில் அன்பில்லாவிடின், புற உறுப்புக்களால் என்ன பயன்? எனவே என்ன தெரிகிறது? உயிர் வாழ்க்கைக்கு அன்பு மிகமிகத் தேவை.

அடுத்த பகுதி இல்வாழ்க்கையில் அன்பெழுதலும் அதன் விளைவு பற்றியும் கூறுவது. இதைப் பற்றி கூறும் குறட்பாக்கள் ஏழு, எட்டு, ஒன்பது ஆகியன.

அன்பு செலுத்துவதில் அறவழி அன்பு எங்கே செலுத்துகிறோம்? இல்லறத்திலே. அதன் பயனே மக்கட்பேறு. அதுவே இல்வாழ்க்கையின் இன்பப் பேறு இது எப்போது ஏற்படும்? அன்பு கொண்டொழுகும் போது.

ஏழாம் குறளின் கருத்தும் இதுவே. இது அன்பின் எழுச்சியும் விளைவும் பற்றி விவரிப்பது.

அடுத்த குறளைச் சற்று ஆராயலாமா?

**''அன்பீனும் ஆர்வம்முடைமை அதுவீனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு.''**

அன்பு விருப்பத்தையும், விருப்பம் நட்பையும் தரும். எவ்வாறு?

அன்பு அகத்திலிருப்பது, அது படிப்படியாக வளர்ந்து, எங்கும் எல்லோரிடமும் பரவும் தன்மைத்ததாக வேண்டும். முதலில் அன்பு ஆர்வமாக அரும்பும். பின்னே நட்பாக மலரும். விதை முளையாகிச் செடியாகி, மரமாகி, அரும்பாகி, மலராகிப், பிஞ்சாகிக், காயாகிக், கனியாகி உலகிற்கு முறைமுறையே பயன்பட்டு மீண்டும் பலப்பல விதைகளாகிக் கூர்ந்து பெருகுவது போல, அன்பும் மக்களின் அகத்தில் தேங்கி விருப்பமாகி, வேட்கையாகி காதலாகி, நண்பாகி, அந்தண்மையாகிக் கூர்ந்து பெருகி, மீண்டும் அன்பாகிப் பெருகுதல் இயல்பு விருப்பம், வேட்கை, காதல், நட்பு முதலியன அன்புக் கூறுகள். இதையே சேக்கிழாரும் ஊர்ஜிதப் படுத்துகிறார். ''முன்பு செய் தவத்தின் ஈட்டம்'' என்றார் கண்ணப்பர் வரலாறு (பெரிய புராணம்).*

## ஆர்வமும் நண்பும்

அன்பு ஆர்வத்தை ஈனும், ஆர்வம் அன்பை ஈனும். ஆர்வம் அன்பின் சிறு கூறு. அது வளர்ந்தவுடன் நண்பாகும். நட்பு அழுக்காறு, வெகுளி, பகை முதலியவற்றைக் கடந்தது. அன்பு இந்நிலை அடையும்போது எவ்வுயிர்க்கும் செந் தண்மை பூண்டொழுகும் சிறப்புப் பெறும்.

இது பற்றியே 'நண்பென்னும் நாடாச் சிறப்பு' என்றார் வள்ளுவர்.

---

* திரு.வி.க திருக்குறள் விரிவுரை—அறத்துப்பால், பக். 661.

அன்பில்லாவிடின் என்னாகும்? அன்பின்மையின் கொடுமையே, இந்த அதிகாரத்தின் நான்காவது பகுதி கடைசி குறள் இதுபற்றி கூறுவதே.

அன்பைக் காண முடியாது. செயல் மூலம் உணரலாம். அன்பை உணர்த்தும் வாயில்கள் சிலவுண்டு. அவைகளுள் சிறந்தது ஒன்று கண்; அது சிந்தும் கண்ணீர் அன்பு நெகிழ்ச்சியால் தோன்றும்.பிறர்க்குதவும்போதும் தோன்றும். இது பயன் கருதா உதவியாக மாறும். தியாகம் தோன்றும். இத்தகைய அன்பு பெருக்குக்கென்றே மனித உடல் வழங்கப் படுகிறது. அன்பு பெருக்குக்கு இலக்காகாத உடல் உயிரற்றது. தோலின் பாவை; இது வற்றல் மரம்.

அன்பு அறவழியிலும்பெருகும்; மறவழியிலும் பெருகும். அறவழி நடந்து மறவழியைக் கடிதல் நல்லது.

பத்தாம் குறளில் அன்பின்மையின் கொடுமை உரைக்கப் பட்டுள்ளது. அன்பு வளர்ச்சி எப்படி அறத்தின் வழியும் மறத்தின் வழியும் நிகழும் என்பதை இக்குறளிலிருந்து அறிவோம். அறத்துக்கும் மறத்துக்கும் அன்பே துணை!

பேராசைக் காரணமாக அறவழி அன்பு தம் மக்களிடம் செலுத்தும் ஒருவன், பிறர் பொருளைத் தன் முன்னேற்றத் திற்காகக் களவாடுவது தவறு. இது மறவழி. இதைத் தவிர்த்தே ஆக வேண்டும்.

அன்பிலாதாரை அறம் என் செய்யும்?

அன்பில்லாத மக்களை அறக்கடவுள் ஒறுக்கும். எப்படி? என்பிலாத உயிரை வெயில் சுட்டெரிப்பது போல்.

அறத்தின் வலிமை அதிகம். அறத்திற்கு மாறுபட்டு நடந்தால் துன்பம் 'அலை அலையாய்' வரும் என்பதற்கு இக்குறளே சான்று.

அன்புடைமையின் வலிமைதான் என்னே!

## விருந்தோம்பல்

விருந்தோம்பல் அன்புடைமையின் விளைவு; பயனும் அஃதே. சுற்றம் அறிந்தவர், நண்பர் இவர்களுக்கு மட்டும் விருந்து வைத்தல் விருந்தோம்பல் ஆகுமோ? ஆகாது. ஆகாது! ஏதோ ஒரு பலனைக் கருதி பெரிய அளவில் ஆடம்பரமான விருந்தளித்தல், விருந்தோம்பலின் ஒரு கூறு தானே? இல்லை, இல்லை!

விருந்து என்றால் புதுமை என்று பொருள். விருந்தினர் என்பவர் நாம் முன்பின் அறியாத புதியவர். இப்புதியவரை பேணல் அல்லது சோறிடுவது விருந்தோம்பல் என்று பொதுவாக வழங்கப்படுகிறது. இதன் உட்பொருள் என்ன? அன்பால் தியாகஞ் செய்தல் என்பது.

விருந்தோம்பல்—பரந்த அன்பின் விளைவு.

இல்வாழ்க்கையில், வாழ்க்கைத்துணை நலத்தால், மக்கள் பேறு ஏற்படும். அன்பு ஊற்று கொஞ்சங் கொஞ்சமாக படிப்படியே திறக்கப் பெறுகிறது. தன்னளவில், தன் மனைவி மக்கள், சுற்றம் என்ற எல்லைக்குள் உட்பட்டு இருந்த அன்பு, விரிவு பெறுகிறது. பரவும் அன்பு பெருகி மற்றவர்க்கும் பகிர்ந்தளிக்கப் படுகிறது. இது தொண்டாக மாறுகிறது. இதுவே அந்தண்மை. அந்தண்மையாவது எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகுவது.

விருந்தினரை உபசரிக்கத் தூண்டுவது அன்பே. அஃதே அந்தண்மை; செந்தண்மை. ஆகவே விருந்தோம்பல் அன்பு வண்ணமாவது. அன்பு பெருக்கே விருந்தோம்பல். ஆதலின், இவ்வதிகாரம் அன்புடைமையைத் தொடர்ந்து வருகிறது.

அதிகாரத்தின் பகுதிகள்:

இவ்வதிகாரம் நான்கு பகுதிகள் கொண்டது:

விருந்தோம்பலின் விழுப்பம் பற்றிக் கூறுவது முதல் பகுதி.

முதல் ஆறு குறட்பாக்கள் இப்பொருள் பற்றியது.

அடுத்த பகுதியில் வள்ளுவர் இச்சிறப்பைச் செய்யத் தவறினால் என்னாகும் என்பதை அறிவுறுத்துகிறார் விருந்தோம்பாமையின் இழிவு பகுதியில். எட்டாம், ஒன்பதாம் குறட்பாக்களில் இப்பொருள் இடம் பெறுகிறது.

அடுத்து வரும் பகுதி விருந்தோம்பும் முறை. ஆனால் குறட்பாக்களில் இதை தமது ஏழாவது குறட்பாவிலேயே விவரிக்கிறார் பொய்யா மொழியார். இம்முறையின் முக்கியத்துவம் கருதி முன் குறட்பாவிலேயே வைத்தார் போலும்!

விருந்தோம்பலின் பயனிலையே கடைசியில் வரும் பகுதி. கடைசிப்பகுதியான இப்பொருள் பகுதி, கடைசி குறளில் கூறப்பட்டுள்ளது.

விருந்தோம்பல் ஏன்?

இல்வாழ்க்கையின் உயிர்நாடி விருந்தோம்பல். விருந்தோம்பல் இல்லாவிடில் இல்வாழ்க்கை, இல்வாழ்க்கை ஆகாது. விருந்தோம்பலால் வறுமை வராதோ? வரவே வராது. விருந்தோம்பும் ஒருவன் வறுமையுற மாட்டான். செல்வம் அவனைத் தேடி வரும். இல்லத்தில் செல்வம் கொழிக்கும். தெய்வம் அருள் சொரியும்; பெரியோர் ஆசி என்றுமிருக்கும். விருந்தினர் மனம் மகிழும் முறையில் ஓம்புவது மிக்க சிறப்பாகும். அவ்வாறு செய்யாது கிடப்பது மடமை.

விருந்தோம்பலின் விழுப்பம்:

வள்ளுவர் விருந்தோம்பலின் விழுப்பம் குறித்து என்ன சொல்கிறார் பார்ப்போமா? இல்வாழ்க்கையில் ஏன் அன்பை வளர்க்கிறோம்? விருந்தினரைப் பேணி உபசரிப்பதற்காக. அத்துடனா? அவர்களுக்கு உபகாரம் செய்வதற்காகவும் அன்பை வளர்க்கிறோம். இந்த முதல் பாட்டு இல்வாழ்க்கைக்கும் விருந்தோம்பலுக்கும் உள்ள தொடர்பை

உணர்த்துகிறது. விருந்தினர் இருக்கும்போது அவர்களை விடுத்து தான் மட்டும் உண்ணுதல் கூடாது. இடைவிடாது விருந்தினரையே உபசரித்து வந்தால், நமக்கு பாதிப்பு ஏற்படாதா என்ற ஐயம் தோன்றுமானால் அதற்கும் விடை கிடைக்கிறது அடுத்த குறளில். விருந்தினரை உபசரிப்பதால் வாழ்க்கை ஒரு நாளும் கேடுறாது. வறுமைத் துன்பமோ பிற துன்பங்களோ ஒருநாளும் அண்டாது. ஆனால் ஒன்று. விருந்தினரை சரியானபடி உபசரித்தால்தான் செல்வம் பெருகும்.

விருந்தினரை உபசரித்தல்: எப்படி?

விருந்தினரை உபசரிப்பது ஒரு தனி கலை. அவர்களைக் கண்டவுடன் முகம் சுருங்கக் கூடாது. முகமலர்ந்து உபசரிக்க வேண்டும். முகமலர்ந்து விருந்து ஓம்புவோன் வீட்டில் செல்வம் குறையவே குறையாது. மேலும் மேலும் பெருகிக் கொண்டேயிருக்கும்.

அள்ளி, அள்ளி செலவு செய்தால், குறையாதோ? செல்வம் குறையாதென்றாலும் விளைச்சல் இதற்கு ஈடு கொடுக்குமா? ஓ, தாராளமாக! எவன் விருந்தினரை உபசரித்து, மிகுந்தவற்றை உண்கிறானோ, அவனது நிலத்தில் விளைச்சல் எப்படியிருக்கும் தெரியுமா? விதை இடுதலே இல்லாமல் நிலம் தானே விளையும். அப்போது விளைச்சல் இந்த விருந்தோம்பலுக்கு ஏற்றவாறு பெருகுமன்றோ?

விருந்தோம்பல்-ஒரு தொடர்ச்சியான செயல்:

அதுவும் சரி, ஒரு நாளைக்கு எத்தனை பேருக்கு விருந்தோம்ப வேண்டும்? ஒரு மாதத்தில் எத்தனை நாள் விருந்தோம்ப வேண்டும்? இத்தகைய ஐயப்பாடுகள் தீர்க்கப் பட்டுள்ளனவா?

இந்த சந்தேகங்களும் தெளிவுபடுத்தப் படுகின்றன. அடுத்த குறளே இதைத் தீர்க்கும். விருந்தோம்பலுக்கு எண்ணிக்கை கூற முடியாது. கால வரையறைக்குள்ளும் உட்படாது. வந்த விருந்தினரை பேணி, இனி வரும்

விருந்தினரை எதிர்பார்க்க வேண்டும். விருந்தோம்பல் இடையறாத ஓர் செயல். அவ்வாறு 'செல்விருந்து ஓம்பி வருவிருந்து' பார்த்திருக்க வேண்டும். இதன் பயன் என்ன? அவன் பெரியோருக்கு இனியவனாவான்.

## விருந்தோம்பு முறை

'விருந்தோம்பல் முறை' அனைவரும் அறிந்ததே. ஆனால் வள்ளுவர் என்ன கூறுகிறார் பார்ப்போமா?

**'மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து'**

அனிச்சமலர் மோந்தால் உடன் வாடி விடும். விருந்தினரோ முகபாவம் மாறுபட்டிருந்தால், வாடுவர். எனவே முகந்திரிந்து விருந்தினரை ஓம்பலாகாது. எனவே விருந்தினரைக் கண்டு முகஞ் சுளிக்கக் கூடாது. அனிச்ச மலர் மென்மையானதும், சிறப்பானது கூட.

## இரண்டு பூக்கள்

இப்பாட்டில் இரண்டு பூக்கள் காட்சி அளிக்கின்றன. ஒன்று அனிச்சம் பூ; மற்றொன்று விருந்துப் பூ. அனிச்சம் பூவைக் காட்டிலும் மென்மையுடையது விருந்துப் பூவாம்.

விருந்துப்பூ மிகவும் மென்மை உடையது என்பது எவ்வாறு புலனாகிறது?

## முறைப்பாடு

மென்மையானதே குழையும். வலியது குழையாது. எனவே குழையும் என்ற சொல் இரண்டு பூக்களின் மென்மைத் தன்மையை உணர்கிறது.

## அகமும் முகமும்

விருந்து குழையும்போது, முதலில் அது முகத்தில் தெரியும்; ஆனால் அதற்கு முன்னரே அவர்கள் அகம்

குறையும்; மனம் சுருங்கும்; இது வெளியே காண முடியாது. ஆனால் உடனுக்குடன் புலனாவது முகத்தின் குழைவே.

விருந்தோம்புவோர் முகத்திரிவு எத்தகையது? வெங்கதிர் பொழியும் கடும் வெயில் போன்றது. அது விருந்தினர் மனத்தைச் சுடும்; அகக்குழைவை ஏற்படுத்தும்.

அன்போடு விருந்தினரை உபசரிக்க முதலில் மிகத் தேவையானது முகமலர்ச்சி. அது போதுமா? போதாது. அவர்களை இனிய சொற்களால் வரவேற்க வேண்டும். இவை இரண்டுமே விருந்தோம்பலின் பண்புகள்.

## விருந்தோம்பாமையின் இழிவு

விருந்தோம்பலின் முக்கியத்துவமும் செய்யும் முறையும் விளக்கப்பட்டன. கட்டாயமாக விருந்தோம்ப வேண்டும் என்ற சட்டமில்லையே. அப்படி விருந்தோம்பாவிடின் என்னாகும்?

விருந்தோம்பாதார் இவ்வுலகில் வறியராய் வருந்துவர். இதை மறைக்க பற்றற்றவர் போல் நடிப்பர்; எதிலும் தமக்கு விருப்பமில்லை என்று சொல்லித் திரிவர். இதைக் காட்டிலும் வேறு நடிப்பு உண்டோ?

ஆக, செல்வத்திற்கு, அழகு விருந்தோம்பல்; இதைச் செய்யாவிடின் அவர்கள் மூடராவர். கண் உடையவர் ஆயினும் குருடராகக் கருதப்படுவர்.

## விருந்தோம்பலின் பயனிலை

விருந்தோம்பலின் பயன் அதற்குச் சமமாக இருக்கும். குறையவே குறையாது. விருந்தோம்பலை அளந்து அதன் பலனுடன் ஒப்பிட முடியுமா? இது அடுத்த கேள்வி. முடியாது; முடியாது!

ஆனால் ஏற்படும் பயன் நாம் செய்த விருந்தோம்பலின் தன்மையைக் காட்டுவதாக அமையும். விருந்தோம்பலும்

ஒரு வகை வேள்வியே. வேள்விக்குள்ள பயன் இதற்கும் உண்டு. நல்ல முறையில் செய்த விருந்தோம்பல் இன்பம் கொடுக்கும். 'விருந்தின் துணைத் துணை' என்றார் ஆசிரியர் விளக்கும் போது.

விருந்தோம்புகிறோம். யாரை? மனிதரை. மனிதரை மட்டுமா? இல்லை. மகேசன் உருவான மனிதனை, ஏன் கடவுளையே என்று கூறுகிறார் திரு.வி.க.

## இன்சொல்

விருந்தோம்பலுக்கு மட்டும் இன்சொல் தான் பேச வேண்டும் என்றிருக்கிறதா? மற்றவற்றிற்கு இனிய சொல் கூற வேண்டாமோ?

இனிய சொல் கூறுதல் இனிய மனத்தின் சான்று. மனத்தின் இனிமை சொல்லில் இன்சொல்லாக மிளிரும். இத்தகை இன்சொல்லின் வலிமையை குறிக்கத்தானோ என்னவோ இந்த அதிகாரத்தில் பல பல இடங்களில் இது பெரிதும் சாட்சியளிக்கிறதை பாக்களில் காண்கிறோம்.

இனிமையும் மாசற்ற நிலையும் இனிய சொற்களை ஈனும். அன்பு பெருகப் பெருக மனமாசு அகலும். மன மாசற்ற நிலை ஏற்படும். அதன்பின் தானே அழுக்காறு போன்றவை ஓடி மறையும்.

இன்சொல் என்ற இவ்வதிகாரத்தையும் மூன்று கூறு கொண்டதாகப் பிரிக்கலாம்.

இன்சொல் எவ்வளவு இன்றியமையாதது என்பதை வற்புறுத்தவே முதலில் இன்சொல் மாண்பு வைக்கப்பட்டது போலும்! இதற்கென முதல் நான்கு பாக்கள் ஒதுக்கி யிருப்பதும் அதைக் கருதித்தானோ?

அடுத்து, எந்த ஒன்றிற்கும் பயன் கூற வேண்டிய நிலை, இன்றுள்ளது. இதற்காகத்தான் பொய்யாமொழியார் இன்சொல்லின் பயனை அடுத்து வைத்து, இதை விவரிக்க

முன் பகுதிக்கு செய்தது போல் அடுத்த நான்கு குறட் பாக்களைப் பாடினாற் போல் தோன்றுகிறது.

இன்சொல்லின் எதிர்மறை வன்சொல். இன்சொல்லைப் பற்றி இனியவையே கூறி விட்டால், போதுமா? இது மிகையாக கூறப்பட்டதாக படிப்பவர் மனம் எண்ணிவிடக் கூடாதென்று, அடுத்து வருவது வன்சொல் வேண்டாமை என்ற அறிவுரைப் பகுதி. ஏன் வேண்டாம்? இதற்குக் காரணம் கூறுவதாக அமைவதே இவ்வதிகாரத்தின் கடைசி குறட்பா.

வள்ளுவர் இன்சொல்லைப் பற்றி என்ன கூறுகிறார் பார்ப்போமா?

இன்சொல் என்றால் என்ன?

வாயிலே பிறப்பது சொல். இதற்கு அடிப்படை மனம். மனம் நினைப்பதை வாய் சொல்லும். இனிய மனத்தினின்று மட்டுமே இன்சொல் பிறக்கும். இன்றேல் மனத்தினின்று இன்னா சொல் பிறக்கும்.

இன்சொல் தன்மைகள் யாவை? உதட்டளவிலே தோன்றி வருவதல்ல இன்சொல்: மனத்தினின்று உள்ளன்புடன் தோன்றும். உண்மையான அன்பு கொண்டதாக இருக்கும். அன்பு கொண்ட செந்தண்மையில் பிறவாமலிருக்க முடியுமா? மாசற்ற மனம் என்னும் உரத்திலே, செந்தண்மை நீர் ஊற்றப்பட்டு, அறம் வளர்ந்த உள்ளத்தே இனிய சொற்களே பிறக்கும்.இவற்றில் வஞ்சனை கிடையா. இனிய சொல்லின் பளிங்கு முகம். இனிமையான முகமே இனிய சொல்லின் பறை. அகம் மகிழும்; முகம் மலரும். இதுவே இன்சொல்லின் இலக்கணம். இந்த இலக்கணம் பின்பற்றுவோருக்கு மனமகிழ்ச்சிக்குக் குறைவே இருக்காது. அது ஈகையிலும் சாலச் சிறந்தது.

அடுத்த குறளை சற்று உன்னிப் பார்ப்போம்.

> **''பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு**
> **அணியல்ல மற்றுப் பிற''**

ஒருவனுக்கு ஆபரணமாவது எது? பணிவுடைய இன்சொற்களே. பொன்னும் மணியும் ஆபரணம் ஆகா. ஒருவனுக்கு உரிய அணி அவனது இன்சொல். மற்றவை அல்ல.

ஈகையினடியில் இன்சொல் நிலவுதல் வேண்டும் என்று கூறியது முன் குறள். இப்பாட்டில் இன்சொல்லே ஒருவற்குரிய அணி என்று தெளிவாகிறது. இன்சொல் வழி பிறக்கும் ஈகை அணி போன்றது.

## ஒருவற்கு அணி

அணியப்படுவது அணி. மக்கள் தங்கள் தங்கள் நாகரீகத்திற்கேற்ப அணி பூணுவது வழக்கம். முதன் முதல் கண்ணைக் கவர்வது அணியே. அணிகள் இருவிதம். ஒன்று புற அணி; மற்றொன்று அக அணி. புற அணி உடலை அலங்கரிப்பது; அக அணி உள்ளத்தை வெளிப்படுத்தும் செய்கைகள், சொற்கள் ஆகியன.

## பணிவுடையன் இன்சொலனாதல்

அடக்கமுடையவனுடைய அணி இன்சொல். பணிவு இன்றேல் இன்சொல் ஆகாது. பணிவு எல்லோரிடமும் இராது; ஏன் சிலரிடம் தலையே காட்டாது. சுருக்கமாகச் சொல்லின் முனைப்பற்ற இடத்தில் நிகழ்வது பணிவு. இதை தாயுமானார், 'கருவி கரணங்களோய்ந்த தொண்டர்கள்' என்றார்.

'அகனமர்ந்த' 'பணிவுடைமை' ஆகிய இரு சொற்களும் ஒரே கருத்தைக் கூறுவன. அதாவது பணிவுடைமை, மாசு அறாத இடத்தில் தோன்றுமா? இடம் பெறுமா? நிற்காது. மூன்றும் நடக்கவே நடக்காது.

எனவே பணிவுடைமையினின்று இன்சொல் தோன்றுதலால் 'பணிவுடையன் இன்சொலனாதல்' என்றார் தமிழ்

மறை தந்தவர். பணிவிலா இன்சொல், போலியானது; விரும்பத்தக்கதுமல்ல.

ஆதல்:

இன்சொலன் ஆதல் என்று திருவள்ளுவர் கூறுவானேன்? இன்சொல்லாக ஒன்று கருதப்படுவது எப்போது? பணிவுடன் கூடி ஒன்றாகிய பின்னரே. எனவே 'ஆதல்' என்ற சொல் கையாளப்பட்டது.

மற்றும் பிற அல்ல:

நிறைய புற அணிகளை அணியலாம்; அழகு ஏற்படுவதாகக் கற்பனை செய்யலாம்; மகிழலாம்; மயங்கலாம்; ஆனால் முடிவு? அழிவே. புற அணியால் மகிழ்பவர்கள் அழிந்து விடுவார்கள். அவர்கட்கு நல்லறிவு புகட்ட வேண்டி 'மற்றும் பிற அல்ல!' என்றார்.

அழகு அக அணிகளில் உள்ளதேயன்றி புற அணிகளில் அல்ல. இதனையே வள்ளுவர் மீண்டும் வலியுறுத்துகிறார்.

## இன்சொல்லால் பயன்

நல்லவற்றையே விரும்பி, இனியவை சொன்னால் தீயன தேயும். அறம் வளரும். இன்சொல்லால் அல்லவை தேய்ந்து அறம் பெருகும். இது பொதுப்படை.

இனிமையினின்று சிறிதும் வழுவாது இன்சொல்; அன்பை உண்டாக்கும்; அன்பு உண்டானவுடன் இன்பம் வரும். அறத்தை வளர்க்கும். இன்சொல் அன்பாலும் அறத்தை வளர்க்கும். விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால் இன்சொல் வழங்குவோரிடத்தும் கேட்போரிடத்தும், ஆக இரு சார்பிலும் நயனையும் பயனையும் பயக்கும் தன்மையுடையது.

இன்சொல்லே பேசினால், அது வறுமையை விரட்டி விடும். வறுமை இன்சொல் உடையவனை அணுகவே அணுகாது. இருமை இன்பந்தரக் கூடியது இன்சொல்.

ஆனால் இருமை இன்பம் கிட்ட இன்சொல் எத்தகையதாக யிருக்க வேண்டும்?

அது சிறுமையற்றதாக இருக்க வேண்டும்.

## வன்சொல் கூடாது

இன்சொல் விடுத்து வன்சொல் மொழிவது சரியா? இல்லை, இல்லை; நிச்சயமாக தவறு. இன்சொல் இன்பம் பயக்கும். இதை ஒருவன் உணர்வான்; தெளிவும் கொள் வான். அப்படியிருக்க வன்சொல் வழங்குவனோ? (வழங்க மாட்டான்).

இனிமையை விடுத்து இன்னாதனதக் கொள்வானோ அறிவுடையவன்? மாட்டான். இனிமையை விடுத்து இன்னாதனதக் கொள்ளல் அறியாமை என்று ஒதுக்குவான்.

ஏன்? வன்சொல் கொடுமை உள்ளதால், அதை ஒதுக்கு வான். அப்படியும் ஒருவன் வன்சொல் கையாள்வது எதனை ஒக்கும்?

'கனியிருப்பக் காய் கவர்ந்தற்று' அதாவது ''நல்ல கனிகள் இருக்கும்போது காய்கள் கைக்கொள்வதை ஒக்கும்.''

மக்கள் இன்சொல் வழங்கிப் பேறு பெறவே படைக்கப் பட்டார்கள். அவர்கள் படைப்பு நோக்கின், இயற்கைக்கு மாறுபட்டு இன்னாசொல் வழங்குவது முறை யல்ல அப்படியும் நெறியற்று வழங்குவோர் நெறியற்ற கள்வர் என்று கூறுவது பொருத்தமாகும் என்கிறார் திரு. வி. க

எனவே நல்லதே நினைக்க!

நல்லதே செய்க.

நல்லன பேசுக.

தீயன தவிர்க்க.

என்று அறிவுரை வழங்குகிறார் தமிழ்த் தென்றல் திரு. வி. க.

அலை பாயும் மனத்திற்குத் திருக்குறள் காட்டிலும் ஒரு சிறந்த மருந்துண்டோ இவ்வையகத்தில்!

# 4

# திரு. வி. கவும் சைவமும்

சைவம், சைவம் என்கிறார்களே அஃது என்ன? மக்கள். தொன்மையோடு, பொருளுண்மை—சமரச நிலை முதலியன வுடன் கூடிய மெய்ப்பொருள் வழிபாடு. சைவத்திலே இந்த மெய்ப்பொருளை 'சிவன்' என்றழைத்தனர். சிவஞான சித்தியார் இதைப் பற்றி என்ன கூறுகிறார்?

**''இதுவாகும் அதுவல்ல வெனும் பிணக்கதின்றி**
**நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே காண**
**நிற்பது யாதொரு சமயம் அது சமயம் பொருள் நூல்**
**ஆதலினால் இவையெல்லாம் அருமறை ஆகமத்தே அடங்கிவிடும்**
**அவை யிரண்டும் அரனடிக் கீழடங்கு''***

பிற சமயங்களைப் பொய் என்று தள்ளாதது உண்மை யான சைவம். இவர்கள் தொழும் சிவனோ, அன்பு உருவான வன். சைவம் என்றார் சிவசம்பந்தம். சிவம் + அன்பு = இது சிவசம்பந்தம்; இதுவே அன்பு சம்பந்தம். ''அன்பே சிவம்'' இந்த நெறி பற்றி ஒழுகுவோர் எல்லோரும் சைவரா வாரோ? இல்லை, இல்லை.

இந்த அன்பு சமயத்தில் ஒழுகுவோர் சாதி மதம் பாராட்ட மாட்டார். எவ்வுயிர் இடத்திலும் அன்பு கொண்

---

* 'சைவ சமய சாரம்', பக். 6.

டொழுகுவர். எல்லாவுயிர்களிடத்தும் அன்பு செலுத்து வோரே சைவர்.

சைவத்தின் ஆணிவேர் அன்பை விடுத்து, ருத்ராட்சம், விபூதி மட்டும் அணிந்து திரிந்தால் ஊரை ஏமாற்றலாம்; மக்களை ஏமாற்றலாம்; நாட்டை ஏமாற்றலாம். ஆனால் மனசாட்சியை ஏமாற்ற முடியுமா? விபூதி தூய்மை யைக் காட்டும் புறச்சின்னம். ஆனால் அகத்திலே மாசு இருந் தால், சைவராவது எங்ஙனம்?

அன்பு நெறிக்கு அடையாளமாக ஏற்பட்ட புறச் சின்னங்களை மட்டுந் தாங்கி, உயிர்களுக்குத் தீங்கு நினைப் பவர் சைவர் ஆவாரோ? ஆகார்.

உண்மையான சைவம் ஓர் ஊர், ஒரு நாடு என்ற சிறு எல்லைக்குள் அடங்குவதில்லை.

'எவ்வுயிரும் பராபரன் சந்நிதியாகும்; இலங்கும் உயிர் உடலனைத்தும் ஈசன் கோயில்' என்ற கொள்கையில் சிறந்து விளங்கும் மக்கள், எந்நாட்டவர் ஆயினும் சரி, எக்குலத்தவராயினும் சரி, எவ்வேடத்தவர்களாயினும் சரி, அவர்கள் அனைவரும் சைவரேயாவர்.*

இதை வலியுறுத்தியே மாணிக்க வாசகர்,

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

என்று திருவாய் மலர்ந்தருளினார் போலும்.**

சைவ வழிபாடு எத்தனை வகையுண்டு? இரு வகை யுண்டு. ஒன்று ஆலய வழிபாடு. மற்றொன்று நடமாடுங் கோயில்களாகிய உயிர் வழிபாடு. இவைகளில் எது சிறந்தது:

---

* சைவத் திறவு - உ

** சைவ சமய சாரம் - வழிபாடு - பக். 11.

''எவ்வுயிரும் நீங்காதுறையும் இறை சிவனென்று எவ்வுயிர்க்கும் அன்பாயிரு

சைவ சமய நெறி.*

சைவர்களாக வாழ்ந்த நாயன்மார் வரலாற்றில் என்ன காண்கிறோம். அவர்கள் சாதி மதம் பாராட்டவில்லை என்று உணர்கிறோம். பிற உயிர்களிடம் அன்பு கொண்டு, அவைகளைப் பாதுகாத்து வந்ததையும் அறிகிறோம். சைவ ஜீவகாருண்ய மதம். கொல்லா விரதம் கொண்டவரே சைவர்.

'இயற்கை, சிவனின் ஒரு பகுதி.ஏன், இயற்கையே சிவன். அதில் வாழும் ஒவ்வொரு உயிரும் சிவனின் அங்கமே. இயற்கை வடிவங்களைக் கொண்டே இறையுண்மையை அறிதல் வேண்டும்.'**

யாண்டும் நிறைந்துள்ள ஒருவனே இறைவன். அவனை எப்பெயர் கொண்டு அழைத்தாலென்ன? ஜெஹோவா, அல்லா, ஏசு—எல்லா பெயரும் ஒன்றையல்லவா குறிக்கும். எந்த ஒன்றை?

நீக்கமற நிற்கும் ஒரே கடவுளைக் குறிக்கிறது. அவன்,

'நினைப்பவர் மனம் கோயிலாகக் கொண்டவன்'

அப்பர் (நினைப்பவர் மனம்-பக்கம் 5)

அடுத்த ஐயம். அண்டமெலாம் வியாபித்திருக்கும் கடவுளை திருவுருவம் மூலம் வழிபடலாமா? நாம் வாழ்

---

* சைவ சமய சாரம்.

** சைவத் திறவு-பக். கூகூ.
பக். 83 - உள்ளொளி - உள்ளுணர்வும் வழிபாடும் இதே கருத்து.
பக் -52-சித்த மார்க்கம்.
''சிவம் அங்கிங்கெனாதபடி பிரகாசமாயிருப்பது. சிவம் இல்லாத இடம் இல்லை எவ்வுயிர்க்கும் உயிராயிருப்பது சிவம் சிவம் எல்லா உயிரிலும் இருத்தலால் எல்லா உயிரும் சகோதரம் என்பதில் ஐயமில்லை.

கிறோம் பூமியிலே. மொத்த பூமியையும் நம்மால் ஒரே நொடியில் பார்க்க முடிகிறதா? முடிகிறது. எவ்வாறு? பெரிய உருவங்களைச் சிறிய உருவங்களாகவும் காட்டும் கருவிகள் மூலம் பார்க்கிறோம். இறைவனை அப்படி காண முடியுமா? முடியாது, முடியாது! ஏன் முடியாது? இயற்கை அன்னையைப் பார். 'அங்கே அகண்டாகாரமாக பார்த்த இடமெல்லாம் நிறைந்து நிற்கிறான் இறைவன். இப்பெரு வடிவை உள்ளும் முறையில், நினைப்பற நினைந்து இறைவன் அல்ல பிறிது மற்றின்மை கண்ட அகக்கண்ணாளர்கள் அருள் வழிகோலியிருக்கிறார்கள். அவ்வழியே சைவ சமயத்தின் திறவு என்க.'*

இந்த நூலில் திரு.வி.க சிவனின் திருவுருவ விளக்கத்தில் கூறுகிறார்.

''இறையின் உருவம் செம்மை-நெருப்பு என்று சொல்லப்பட்டது. செம்மையின் விளிம்பில் நீலமிருத்தலைக் காண்கிறோம்.''

''செம்மையில் நிலமும், நீலத்தில் செம்மையும் மிளிர்தல் இயல்பு.''**

''செம்மை எது? நீலம் எது? செம்மை வெம்மையைக் குறிப்பது; நீலம், தண்மையைக் குறிப்பது.

இவ்வெம்மை ஆணென்றும், தண்மை பெண்ணென்றும் உள்ளத்தில் பதியுமாறு உருவகிப்பன.''***

உலகம் ஆண் பெண் மயமாக இருத்தலை குறிக்கும் படியே மாணிக்கவாசகர்:

'தோடுடைய செவியன்' என்றார்.

---

* திரு.வி.கவின் சைவத்திறவு-ச'கூ.

** சைவத்திறவு-திருவுருவ விளக்கம்-பக். ச' அ

*** சைவத் திறவு—பக். ச கூ

"தோடு—பெண்மையையும், செவியன் ஆண்மையையும் குறிக்கும். ஓங்காரமே உலகிலுள்ள எல்லா ஒலிகளுக்கும் தலையாயது. இதையே தோடு குறிக்கும் என்றார். அறத்தைக் காட்டுவது 'விடை' சுடலைப் பொடி—இறைவனின் மறுபதிப்பான மனிதனின் ஆரம்பமும்—முடிவும் ஒன்றே என்று கூறுவது.*

இவ்வாறு 'இறையை அங்கிங்கெனாதபடி' என்று அறிய முடியாதார், தேவாரப் பாட்டை ஊன்றிக் கவனித்தால் பல நுட்பங்கள் புலனாகும்.

"தோடுடைய செவியன் விடையேறி
ஓர் தூ வெண்மதி சூடி
காடுடைய சுடலைப் பொடி பூசி
என துள்ளங்கவர் கள்வன்."

இது மட்டுமா?

"குறியே போற்றி, குணமே போற்றி
நெறியே போற்றி, நினைவே போற்றி"

என்றார் மாணிக்க வாசகர்.

## அலைப்பாயும் மனமும் ஆண்டவனும்

அலைப்பாயும் மனம் ஆண்டவனை வெறுமையில் காண முடிகிறதா? இல்லை. அவனை நினைப்பதே அருமை. பின்னே எப்படித்தான் நினைப்பது? எந்த நேரத்தில் நினைப்பது? காலக் கட்டுப்பாடு உண்டா? இல்லை. இறைவனை எங்கும் காணலாம்; எந்நேரத்திலும் நினைக்கலாம். காலவரையறை இல்லை; இங்குதான் நினைக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தமும் இல்லை. என்றாலும் நினைப்பதுதான் கடினமாக உள்ளது. யாருக்கு? பெரும்பான்மையோருக்கு. "எல்லாவற்றிலும் கலவாது, எல்லாவற்றிலும் கலந்து" என்ற சிறப்புகள் கேட்பதற்கு நன்றாகவே உள்ளன. நடைமுறையில் அவனை நினைக்க

* From dust we come and unto dust we go.

இவ்வியல்பு உதவி செய்வதில்லை. எனவே ஆண்டவனை நினைத்து, அந்த நினைப்பை நிலை நிறுத்த வேண்டுமானால் முதலில் அவனை நினைவூட்டக் கூடிய ஒரு குறியில் நெஞ்சை நிலை நிறுத்த வேண்டும். அக்குறி, கண்ணையுங் கருத்தையுங் கவரக் கூடியதாகவும், வனப்பு உடையதாகவும், ஓவியமாகவோ, சிற்பமாகவோ இருந்தால் நல்லது. அக்குறியில் முதலில் நெஞ்சு படியும்; சிறிது காலத்திற்குப் பின் அலையும் நெஞ்சு ஒரு நிலையுறும். அந்நிலைத்த நெஞ்சில் மற்ற எண்ணங்கள்—முக்கியமாக தீய எண்ணங்கள் அருகும்; நல்லெண்ணங்கள் பெருகும். இதற்கென்றே திருக்கோயில் வழிபாடு ஏற்பட்டது. ஆற்றல் பெற்ற மனம் எந்த இடத்தையும், தன் நல்லெண்ணத்தில் கோயிலாக்கிக் கொள்ளும்.

திருக்கோயில் வழிபாட்டின் நோக்கம் விழுமியது*

தெய்வங்களின் அடிப்படைத் தத்துவங்கள்;

திருக்கோயில்களில் குடி கொண்டிருக்கும் சில தெய்வங்களின் அடிப்படைத் தத்துவங்களை தமது 'உள்ளொளி'யில்-(உள்ளுணர்வும் வழிபாடும்** என்ற பகுதியில்) மிகவும் தெளிவாக விளக்குகின்றார் திரு.வி.க.

## அர்த்த நாரீசுரம்

அர்த்த என்றால் பாதி. நாரீ என்றால் சக்தி-பெண். சுரம் என்றால் ஆண் சக்தி.

அர்த்த நாரீசுரம் பெண்மையும் ஆண்மையுஞ் சேர்ந்த ஒன்று. இது எதை உணர்த்துகிறது?

''இயற்கை உலகை நோக்க நோக்க அர்த்த நாரீசுரத்தின் நுட்பம் விளங்கும்.'' இயற்கை-புல் பூண்டுகளிலிருந்து மேநிலை மக்கள் வரை எல்லாமே ஆண் பெண்

* திரு.வி.க. நினைப்பவர் மனம், பக். 12.

**உள்ளொளி-பக்.154.

மயம் தான். இதையே அர்த்த நாரீசுரம் விளக்கும். பெண் ஆணாயிலங்கும் இயற்கை உலகின் படம்-ஓவியம் அர்த்த நாரீசுரம்.''

## விஞ்ஞான ஆராய்ச்சி

இக்கால விஞ்ஞான உலகம் பலதிற ஆராய்ச்சி செய்து எல்லாவற்றிற்கும் அடிப்படையாக உள்ள சக்திகள் இரண்டு என்றும் அவை புரோடான், எலெக்ட்ரான் என்றும் கண்டு பிடித்திருக்கிறது. புரோடான்-ஆண்சக்தி; எலெக்ட்ரான்-பெண்சக்தி. இவ்விரண்டு சக்திகளும் சடம். இந்த சட சக்தி முதலாக உள்ளது 'சித் சக்தி.' இதையே நம் நாட்டவர் இலிங்கம் என்று வழிபடுகின்றனர்.

'அண்டம் இலிங்க மயம்; அணு இலிங்க மயம்; உடல் இலிங்க மயம்; உயிர் இலிங்க மயம்; எல்லாம் இலிங்க மயம்.**

சிவன்-சித்து அல்லது ஆண்; சக்தி-அம்மன் அல்லது பெண்.

அரங்கநாதன் உரு-தத்துவம்.

அரங்கநாத வடிவம் எப்படியிருக்கிறது?

பாற்கடலில் பாம்பணை மீது பள்ளி கொண்டிருக்கிறான் அரங்கன்.

பாற்கடல், விந்து அல்லது ஒளிமயத்தைக் குறிக்கும். அரவணை நாதத்தைக் குறிக்கும். நாதத்துக்கு மேல் தத்துவமே கிடையாது. அரங்கன் நாத அலைகளான பாம்பின் மீது பள்ளி கொண்டிருக்கிறான். இது எதை உணர்த்தும்? பள்ளி கொண்டான். மௌனத்தின் சின்னம்; பிரம்மனோ-படைப்பை-இடையறா ஆக்கத் தொழிலைக் குறிப்பன.

---

* உள்ளொளி-பக். 169.

** ,, ,, ,,

'இத்திருவுருவம் உள்ளத்தில் பதியப் பதியப் படிப்படியே அதன் நுட்பங்கள் விளங்கி விளங்கி, விந்துவைக் கடந்து, நாதத்தை உணர்ந்து, அதையுங் கடந்து, அரங்க நாதனை உணரும் பேற்றை உண்டாக்கும்.*

## இசை வெள்ளப் பெருமான்

இதே இசை வெள்ளத்திலே தான் மட்டுமின்றி உலகையே மயக்கி வைக்கிறான் கண்ணன்; அவன் நிற்பதோ புன்னை மரத்தின் கீழ்; கையிலோ இசை பொழியும் குழல்; சுற்றிலும் பசுக் கூட்டம்; பெண்-குழாம்.

இயற்கைக்குச் சான்று புன்னை மரம். இந்த இயற்கையை உடலாகக் கொண்டுள்ள பராபரன் கண்ணன் அதன் அடியில் நிற்கிறான். இசை வெள்ளம் பிரணவத்தின் எழுச்சி; பசுக் கூட்டம் சாந்தத்துக்கு அறிகுறி. இந்த சாந்தமே, மூர்க்க ஆண்மையை அழிக்கும்; அமைதிப்படுத்தும். இந்தஅமைதியைக் காட்டுவதே பெண்கள் குழாம் (கோபியர் கூட்டம்) இந்த சாந்தம் எவ்வாறு வந்தது?

இசைப் பெருமான் கண்ணனின் குழலோசையே எல்லையில்லா சாந்தத்தை ஏற்படுத்தியது; பரப்பியது; நிலைத்தது.

''கண்ணபிரானின் புன்னைமரக் கோலத்தை நினைத்து வழிபட்டால் சாந்தமும் அமைதியும் விளைந்து தெய்வீகம் கூடும்'' என்று கூறினார் திரு.வி.க.**

## குன்றாடும் குமரன்

முருகப் பிரானை—குன்றாடும் குமரனைக் காண்போமா?

---

* உள்ளொளி, பக். 157.

** ,, ,, ,,

அவன் கருணை விழி, பொன்மேனி. மயில் ஊர்தி, கோழிக் கொடி, வள்ளியும் தெய்வயானையும், வேலுங் கொண்ட காட்சி, கண்கொள்ளாக் காட்சி!

இவ்வோவியத்தின் உள்ளுறை என்ன?

தோகை விரித்தாடும் மயில் பரந்த இயற்கை உலகைக் காட்டுவது. அதன் மீது அமர்ந்திருக்கும் அழகனே முருகன். அவனே இயற்கை; இயற்கையே அவன். மயில் விந்துவைக் குறிக்கும்; அதை நடத்துபன் முருகன் விந்துவுக்கு மேல் நிற்பது நாதம். அதைக் குறிப்பதே கோழியின் கூவல். வள்ளியும் தெய்வயானையும் வேலும் முறையே இச்சா, கிரியா, ஞான சக்திகளைக் குறிப்பன. நாத தரிசனம் ஏற்பட்ட பின்னர் இச் சக்திகள் எழுச்சி பெறும்.

இந்த முருகனை உள்ளன்புடன் வழிபட்டால் இந்த மூன்று சக்திகள் எழுச்சி பெற்று, மனிதனைத் தெய்வமாக்கும்.

## கூத்தர்பிரான்

மக்கள் திரளாகத் தில்லைக்குச் செல்கிறார்கள். ஏன்? நடராஜனைக் காண. அது ஒரு கூத்தோவியம்.

"எல்லாவற்றையுங் கடந்து உருவமற்றதாயுள்ள கடவுள் நிலை, போக்குவரவற்றது; அசைவற்றது; தொழில் அற்றது. அதற்கு கூத்தேது? இயற்கையை உடலாகக் கொண்டு அதன் கூறுகள் எல்லாவற்றிலும் வீற்றிருக்கும் கடவுள் நிலைக்குத் தொழில் தானே உண்டாகும். அதற்குத் தொழில் இல்லையேல் இயற்கை எங்ஙனம் இயங்கும்? உயிர்களைத் தன்னைப் போலாக்கவே கடவுள் இயற்கையை உடலாகத் தாங்கி அதை இயக்குகிறது. அதனால் அது தொழிலுடையதாகிறது. அத்தொழில் ஐந்து வகை: அவை ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பன.*

* உள்ளொளி, பக். 159.

''ஐந்தொழிலும் நிகழ அப்பன் கூத்தாடுகிறன்; நடம் புரிகிறான்.''

தில்லையில் மட்டுமா கூத்தாடுகிறான்?

இல்லை, இல்லை!

உலகில் எல்லா படைப்புகளிலும் நடம் புரிகிறான்.

தில்லையில் அவன் ஆடுவது ஆனந்தக் கூத்து. ஆனால் திருவாலங்காட்டிலோ ஊர்த்துவ தாண்டவம்! இம்மாற்றங்கள் ஏன்?

திருவாலங்காட்டில் கோரமான கொள்ளை, கொலை போர் இவைகளைக் குறிக்கும் கோரரூபம் (காளி என்கிறார்கள்). இத்தீய சக்திகளை எதிர்த்துப் போர். இங்கு இரத்தப் புரட்சிக்கு எதிர்ப்பு, கடும் எதிர்ப்பு!!! எனவே உக்கிர தாண்டவம்.

ஆனால் தில்லையில் காதல் நடனம். அம்மையுடன் காதல் நடனம். இது படைப்புத் தொழிலின் அறிகுறி.

அழகை வழிபட்டே, அழகை இறவனை அடைவதற்குரிய சிறந்ததொரு விளக்கத்தை தவப் பெரியார் திரு வி.க. தவிர யாரே தர வல்லார்?

## அவதாரங்கள்—உயிர் வரலாறு

அவதாரங்களைப் பற்றியும் கூறுகிறார் திரு. வி. க. நம் நாட்டில் இந்த அவதாரங்களுக்கும் டார்வினின் உயிர் வரலாற்றிற்கும் உள்ள தொடர்பினை விளக்குகிறார். இந்த உயிர் வரலாற்றினை டார்வின் விளக்கு முன்னரே நம் நாட்டு கோயில்களில் தசாவதார சிற்பங்கள் செதுக்கப் பட்டன.*

---

* தமிழ் நாடும் நம்மாழ்வாரும், பக். 67.

இந்த சைவ சமயத்திலுள்ள சமரசம் எத்தகையது?

உலகில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சமயமுண்டு என்று கூறுவது மிகையன்று. தெய்வம் ஒன்றே. அவரவர் அறிவு, ஆராய்ச்சி, அன்பு நிலைக்கேற்றவாறு புலப்படுகிறது.

கிறிஸ்து ஒருவரே கடவுளை ஓர் இடத்தில்

"பரலோக ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறது"

என்றும்,

பின்னொரு இடத்தில்,

"பரலோகத்திலுள்ள எங்கள் பிதாவே!"

என்றும், உலகுய்ய ஓதியிருக்கிறார்.

நம் தமிழ்ப் பெரியோர்,

'அப்பன் நீ, அம்மை நீ, ஐயனும் நீ'

என்றனர்.

இந்த உண்மையே கீதையில் கண்ணன் 'நீ எப்படி நினைக்கிறாயோ அவ்வுருவில் நான் வருவேன்' என்கிறான். யாரிடம்? தன்னை வழிபாடு செய்வோரிடம்.

எங்கும் நிறைந்திருக்கும் கடவுளை ஒரே நோக்கில் அளந்து விட முடியுமா? முடியாது, முடியாது!! இதனையே கம்பர்,

'தோள் கண்டார், தோளே கண்டார்'

என்றார்.

'எச் சமயம் எல்லாச் சமயங்களையும் சகோதர சமயங்களாகத் தழுவுகிறதோ, அதுவே சமரச நோக்குடைய சன்மார்க்க சமயம்.

## முதற் கடவுள்

முருகு, கந்தழி என்று முதல் முதல் கடவுளை அழைத்தனர். பின்னர் சிவன், திருமால் போன்ற எத்தனையோ பெயர்களை மனிதன் ஆண்டவனுக்குக் கொடுத்தான். இத்தனைப் பெயர்களிலும் இருந்தவன் ஒரே இறை. எனவே பன்மையில் ஒருமை காண்பதே அறிவு.

## சமயங்கள் எத்தனை, எத்தனை!

எத்தனையோ சமயங்கள் கொண்டது தமிழ் நாடு. இந்து, சமணம், புத்தம் ஆகியன. சமணம் அகிம்சையையும், புத்தம் கருணையையும் போதித்தன. சமணமும் புத்தமும் துறவற வாழ்க்கைக்குச் சிறப்புக் கொடுத்தன. துறவற மாவது இயற்கைக்கு மாறான செயற்கை வாழ்க்கை. சைவத்தில் இறைவனே இயற்கை. இறைவனின் உடலா ... இயற்கையோடு இசைந்து வாழ வேண்டுமானால் பெண் துணை தவிர்ப்பது மதியீனம். பெண் மாயை அல்ல என்று வலியுறுத்தியது ஏன், நாயன்மார், அனைவரும் இல்லறத்தில் வாழ்ந்தவர் தானே?

சமரசத்தில் உயர்ந்தோர்க்கு தாழ்ந்தோர் உழைத்தல், கைமாறு பாராத பணி, தலையாயன. அது மட்டுமா? உண்மையான சன்மார்க்க நோக்குடையவர் பிறப்பு வேற்றுமை பாராட்ட மாட்டார். எவ்வுயிரையும் தன்னுயிர் போல் பேணுவர்; முறையிட்டால், உள்ளமுருகி, குற்ற முணர்ந்து முறையிட்டால், நிச்சயம் பாவ மன்னிப்பு உண்டு. இவையனைத்தும் தன்னிடத்தே கொண்டது சன்மார்க்கம்.

இது மட்டுமா? சைவம் சீவகாருண்ய மதமானதால் பிறரைத் தொல்லை கொடுக்கும் செயல்களை மனத்தாலும் நினைக்காது; செய்யவும் செய்யாது. பிறர் குற்றங்களைப் பாராட்டாது புறங்கூறலைத் தவிர்க்கும். எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாத அருள்நெறியே சைவம். ஆகவே இதனை சமரச சீவகாருண்ய சமயம் என்று அழைத்தால், தவறாமோ? ஆகாது, ஆகாது!!

# 5

# திரு. வி. கவும் சன்மார்க்கமும்

ஜோதி வடிவில் இறைவனைக் கண்ட மெய்ஞானி இராமலிங்க அடிகள். இந்த இறையைக் காண அவர் பின் பற்றிய வழியோ, சமரச சன்மார்க்கம். பாமரன் ஒருவன் இறை என்ற ஒளிப்பிழம்பை எங்ஙனம், படிப்படியாகக் காணலாம் என்பதற்கு அவர் காட்டிய ஆறு வழிகள், அவர் தம் அன்பு உள்ளத்தின் எடுத்துக்காட்டு. யோகாந்தம், காலந்தம், நாதாந்தம், போதாந்தம், வேதாந்தம், சித்தாந்தம் என்ற அம்முறைகளை உறுதியுடன் முயன்று, பின்பற்றினால், படிப்படியாக மனிதனுக்கு மன அமைதி ஏற்பட்டு, அந்த 'அருட் பெருஞ்ஜோதி தனிப் பெருங் கணையை'க் காண இயலும்.

யோகம்—தியானத்தைக் குறிக்கும். ஒரு சில நிமிடங்க ளேனும் மனத்தை ஒன்றில் நிலைநிறுத்தி, உலகையே ஆளும் அந்த ஒன்றுடன் இணைக்க முயன்றால், காலம் செல்லச் செல்ல கலப்பு ஏற்படும்.

இந்தக் கலப்பு வெகுளி, காமம், மயக்கம் ஆகியவற்றை விரட்டும். இதுவே காலந்தம் அல்லது மெய்யறிவு.

மெய்யறிவு என் செய்யும்? ஒலியில் அடங்கியதும், ஒலி மயமானதும் ஆன இறையை அறியும், உணரும், இன்பம்

நுகரும். இதுவே நாதாந்தம். நாதத்தில் ஒன்றிய சீவன், சிவனுடனும் ஒன்றி விடும்.

ஒலி மூலம் உணர்ந்தபின், அவன் ஒளிப் பிழம்பான சோதி வடிவைக் காண்கிறான். இறைவனை 'அருட்பெருஞ் சோதியாகவும்; 'சுடரே சூழொளி விளக்கே' என்று ஆண்டவனை விளித்துச் சிக்கெனப் பிடித்தேன்'* என்ற மாணிக்க வாசகரைப் போல் ஆண்டவனை பிடிக்கிறான். நம் நாட்டில் விளக்கைக் கண்டதும் தொழுவதேன்? போத நிலையில் விளங்குஞ் சோதியை நினைப்பூட்டும் அறிகுறியே அது. ஏன்; குத்து விளக்கு எதைக் குறிக்கிறது? இந்த அரிய நுட்பத்தை விளக்குவதே குத்து விளக்கு.

இது புறச் சின்னம். முதல் முதல் சோதி தரிசனம் நிகழும் இடம் புருவமத்தி என்று யோக நூல்கள் கூறும். அவ்விடத்தைக் குறிக்கவே நம் நாட்டார் சந்தனம் முதலியவற்றால் பொட்டிடுதலுண்டு.** இராமலிங்க அடிகளார் இதைச் சுட்டிக்காட்டி சில பாக்களும் பாடியுள்ளார்.

வேதம் என்பது அறிவு. இது விளங்குமிடமே வேதாந்தம். இந்நிலையே வேத நிலையென்பது. வேதத்தின் அந்தத்தில் எல்லாம் அறிவு மயமாய் விளங்கும். ஓரிடத்தில் திரண்டு காட்சியளித்த சிவசோதி எல்லா இடங்களிலிலும் பரவுகிறது. இது ஒரு பெருநிலை.

இப்பெரு நிலையை அடைந்த ஒருவன் அடுத்த மிகப் பெரிய நிலையை அடைவான். அது தான் சித்தாந்தம். எங்கும் நீக்கமற நிறைந்து ஒளிரும் அருட் பெருஞ் சோதியைத் 'தான் அஃது' என்னும் இரண்டற உணரும் ஒரு நிலையே சித்தாந்தமென்பது.

இவ்வாறந்தங்களில் நிகழும் ஒவ்வோர் அனுபவத்தையும் ஒவ்வொரு முகமாக ஞானிகள் கூறுவது வழக்கம். இக்

---

* இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம், பக். 21.

** ,, ,, ,, பக். 23-24.

கருத்துப் பற்றியே தமிழ் மக்கள் முழு முதற் பொருட்டு ஆறுமுகங் கூறினர் போலும்!

இந்த ஷடாந்தத்தில் விளங்குவது சமரச சன்மார்க்கம். ஆணவமற்ற ஒரு நிலையை இராமலிங்க அடிகள் போதித்தார்.*

இந்த சன்மார்க்கம் சமரசத்திற்கு அடிகோலும்; சமரசம் எப்போது வரும்? மனிதன் பாலுள்ள அழுக்காறு அவா வெகுளி முதலியன விரட்டப்படும் போது. எத்தனையோ காலமாக இத்தீய சக்திகள் உள்ளனவே! அவைகளைப் போக்குவது எப்படி?

## சமரசம்-வழிகோலுவது எவ்வாறு?

சமரசம் பெருக வேண்டுமானால் மனிதன் தன் நாட்டுப் பற்றை பிற நாடுகளைப் பாதிக்காத பற்றாகக் கொள்ள வேண்டும். அவனுக்கு மொழிப் பற்றிருக்கலாம், அதில் தவறில்லை. ஆனால், அது மொழி வெறியாதல் கூடாது. அவனது சமய உணர்வு கட்டுக் கடங்கி, பிற சமயங்களை வெறுக்காததாக அமைதல் வேண்டும். பிறப்பின் அடிப் படையில் பிறந்த சாதி வைத்து, மாந்தரிடையே உயர்வு தாழ்வு கற்பிப்பது அறிவுடைமை ஆகாது. அவ்வாறு செய் தால் அது ஒரு மாபெருங் குற்றம்.

## சமரசம் ஏன்?

சமரச சன்மார்க்கத்தில் ஒளிவடிவான கடவுளை எவரும் காணலாம்.

'எச்சமயத்தவரும் வந்திறைஞ்சா நிற்பர்'

(தாயுமானார்).

எதற்காக இவ்வாறு சொன்னார்? சிதம்பரத்தின் பொது மையக் குறித்து இவ்வாறு கூறினார் தாயுமானார்.

---

* இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம், பக். 28.

ஆனால் இராமலிங்க சுவாமிகள் காலத்தில் என்ன வாகியது? சிதம்பரம் ஒரு சிலர் உரிமைக் கோயிலாயிற்று. சாதிப் பேய் புகுந்தது. சாதியே கடவுள்; சமயமே கடவுள் என்ற கொக்கரிப்பினூடே, உண்மையிலேயே வழிபாடு நடத்துகிறவனுக்கு இடமே இல்லாது போயிற்று.

இக்கொடுமையை ஒழிக்கவே பிறந்தது சமரச சன் மார்க்கம். உண்மையான செம்பொருட்கு தோற்றமில்லை; ஒடுக்கமில்லை; மாறுதலும் இல்லை. இந்த 'சத்' என்பதை அறிய 'மார்க்கம்' அல்லது வழியாக அமைந்ததே இயற்கை. இறையும் இயற்கையும் ஒன்றே. இவ்வுண்மையை உணர்ந் தவன் சன்மார்க்கம் என்றால் எது என்பதை உணர்வான். சன்மார்க்கம் பற்றிய உண்மைகளை அவன் அறிவான். அடிகளின் அன்பு சமயத்தை, சீவகாருண்யத்தை உயிர் ஓம்பலை உணர்வான்; செயல்வழி நிற்பான்.

அடிகள் எப்படி விளக்குகிறார் பார்ப்போம்?

அடிகள் விளக்கவில்லை. இறையை வேண்டுகிறார்; இறைஞ்சிக் கேட்கிறார்; கெஞ்சுகிறார்; மன்றாடுகிறார்; எதற்கு?

'எல்லாமுடைய அருட்பெருஞ்சோதி அற்புதக் கடவுளே! இது தொடங்கி, எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கியத் தடைகளாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம், ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும், எங்கள் மனதில் பற்றா வண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய இலட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும், எவ் விடத்தும், எவ்விதத்திலும், எள்ளளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும். எல்லாமாகிய தனிப் பெருந்தலைமை அருட்பெருஞ்சோதி ஆண்டவரே! தேவரீர் திருவருட் பெருங் கருணைக்கு வந்தனம்!!*

---

* இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம், பக். 39.

சத்தின் மார்க்கமாகிய இயற்கையோடு இயைந்து வாழ வேண்டுவது மக்கள் கடமை. உலகிலுள்ள சமயங்கள் யாவுஞ் சன்மார்க்கம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டுள்ளன. இந்த சன்மார்க்கம் பிற உயிர்களையும் தன்னுயிர் போல் ஓம்பச் செய்யும். பிற உயிர்கட்குத் தீங்கு செய்தல் தம்முயிர்க்குத் தீங்கு செய்தலாக முடிவது அவர்க்கு நன்கு தெரியும். இப்பெரு நிலையே சன்மார்க்கம். இதன் அஸ்திவாரம் — அருளறம்; சுவர்கள் — அன்பு, பண்பு சம நோக்கு, கூரை-அறிவு-அதாவது மெய்யறிவு.*

கடவுளிடத்து நிலையான உறுதியிருந்தால் இவை கிட்டும்.

இயற்கையோடியைந்த வாழ்வில் மனிதன் முழுமை பெறுகிறான். இயற்கையோடியைந்த வாழ்வு யாது?

பொருந்திய உணவு - அதாவது கொழுப்புச் சத்து அதிகமில்லாத பொருத்தமான, உணவு; சூட்சும அறிவை மயக்கமான நிலையில் தள்ளாத எளிய உணவு; பிற உயிர்களைத் தன் உணவுக்கென கொல்லாத, அன்பு கொண்டு பிற உயிர்களையும் வாழவைக்கும் எளிய சுத்தமான உணவு. அதே போல் மற்ற துறைகளும்.

சன்மார்க்க சமரசம் பின்பற்ற காட்டிற்கு ஓட வேண்டியதில்லை. துறவறம் மேற்கொள்ள வேண்டிய தில்லை. பொருந்திய ஒருத்தியும், ஒருவனும் இல்லறம் மேற் கொண்டு, அன்பால் கட்டுண்டு, அன்பின் வழியே நடாத்தும் வாழ்க்கையே இயற்கையோடியைந்த வாழ்க்கை. பெண் ணினத்தை வெறுக்காது சன்மார்க்கம்.

ஏன்? இராமலிங்க அடிகளாரே இல்லறம் வெறுத்தவ ரல்லவே! இறையைக் காணாமற் தோல்வி கண்டாரா? இல்லையே!

---

* மேலும் விவரங்களறிய 'மனித வாழ்க்கையும் காந்தி அடிகளும்' சமய வாழ்வு-பகுதியைப் படிக்கவும்.

பன்மையில் ஒருமை காண என்று ஒருவன் அறிகிறானோ, அன்றே அவன் சன்மார்க்கன் ஆவான்.

தெள்ளிய அறிவை அடிகோலுவது சன்மார்க்கம். மக்களுக்கு சகிப்புத் தன்மையை ஊட்டுவதும் சன்மார்க்கமே. காழ்ப்பு, வெறுப்புக்களை ஒடுக்கி, சீரிய எண்ணம், நல்ல பழக்க வழக்கங்களை நல்கவும் சன்மார்க்கமே தேவை என்றார் திரு. வி. க. 'ஆலமும் அமுதமும்' என்ற மற்றொரு நூலில்.

''உலகின் ஒரு பக்கத்தில் ஆலம்; இன்னொரு பக்கம் அமுதம். ஆலம் ஒடுங்குதல் வேண்டும்; அமுதம் எழுதல் வேண்டும். எளிதில் அஃது எழுமா? இரண்டையும் நிகழ்த்தும் ஒன்று உள்ளதா? உள்ளது. அதுவே சமயம் என்பது.''*

ஆலம் எது?

ஆலம் என்ன என்று விளக்குகிறார் தமிழ்த் தென்றல்.

மனிதன் இயற்கை விட்டு விலகிச் செய்யும் பாவக் குவியல்கள். இது யுத்தமாக உருவெடுக்கிறது.

## வாளுக்கு வாள்

''யுத்த ஆலத்தை ஒடுக்கத் துப்பாக்கிக்கு துப்பாக்கியும், பீரங்கிக்கு பீரங்கியும், குண்டுக்குக் குண்டும் விடப்படுகின்றன.''**

இவ்விடுகை ஆலத்தைப் பெருக்கும்.

இதற்கு எடுத்துக்காட்டாக பைபிளில் மத்தேயுவின் புதிய அதிகாரத்தில் 26-51 முதல் 53-பகுதியும் சான்று.

ஆலத்தை ஒடுக்க சமரச சன்மார்க்கம்.

இந்த ஆலத்தை ஒடுக்குவது எங்ஙனம்?

* 'ஆலமும் அமுதமும்', பக். 13.

** 'ஆலமும் அமுதமும்', பக். 15.

ஆலத்தை ஒடுக்கக் கூடியது சமரச சன்மார்க்கமே.

ஏற்கெனவே குவித்த பாவங்கள் எப்படிப் போகும்? அவை போனால் அன்றோ உய்ய வழி?

பாவங்களைப் போக்கவும் வழியுள்ளது சமரச சன்மார்க்கத்தில். செய்த பாவங்களை நினைந்து, நினைந்து உருகி, ஆண்டவனிடம் உள்ளத்தோடும் உண்மையுடனும் முறையிட்டால், உய்வு நிச்சயம் உண்டு. பாவங்கள் விலகிப்போம்.

## உய்வின் விளைவு

இந்த உய்வு ஏற்பட்டால் அதனால் ஏற்படும் விளைவு என்ன?

சமரசத்தை அடித்தளமாகக் கொண்ட புதிய உலகு உருவாகும். புதிய உலகில் பிரிவு பிணக்குகள் இரா; சமய வாதங்கள் இடம் பெறா; குறுகிய மனப்பான்மையால் விளையும் பூசல்கள் மறைந்தே போம். கலகங்கள் குழப்பங்கள் நடைபெறாத ஒரே நிலையான நல்லரசு ஏற்படும்.

சுருங்கக் கூறின் புதிய உலகம் என்ற அமுது தோன்றும். சமரச சன்மார்க்கம் எல்லா முறை கேடுகளுக்கும் தீர்வு தரும். சமதர்மம் தழைத்தால் ஆலம் ஓடி ஒளிந்து, மறைந்தே விடும்.

ஒரு நாடு சன்மார்க்க நெறியைப் பின்பற்றாவிடில் என்ன நடக்கும் என்பதையும் விவரிக்கிறார் திரு. வி. க.*

தற்போதைய உலகின் நடப்புக்களை நோக்கி, அவைகளை அவர் கூறியவற்றுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், அவர் எவ்வளவு பெரிய தீர்க்கதரிசி என்பது விளங்கும்.

---

* 'சன்மார்க்க சங்கம்', பக். 284–285. 'தமிழ்ச் சோலை' அல்லது 'கட்டுரைத் திரட்டு' - இரண்டாம் பகுதி.

# 6

# சமரச நோக்கில் வாழ்ந்து காட்டியோர்

## பெரிய புராணம்

இலக்கியம் காலத்தைக் காட்டும் கண்ணாடி. கால சுழற்சியில் சூழ்நிலையில் ஏற்பட்ட ஒரு சில மாறுதல்களை— ஒட்டியோ அல்லது வெட்டியோ, மக்கள், இலக்கியம் மூலம் அந்நிகழ்ச்சிகளுக்குச் சவால் விடுவர். இது பொய்யல்ல; மெய், மெய்! !

குலோத்துங்கன் காலத்து ஆட்சியிலே மக்களிடை ஏற்பட்ட அமைதியின்மையே கம்பராமாயணத்திற்குத் தூண்டுகோலாகியது. மேல் நாட்டிலே சர் ஜான் மூரின் உத்தோபியா (Utopia) என்ற நூல் வெளிவந்ததே, ஏன்? அரசாட்சியில் ஏற்பட்ட அதிருப்தியே அதற்குக் காரணம். இப்படியே சொல்லிக் கொண்டே போனால் பக்கங்கள் நிறையும்.

இந்தியாவில் புராணங்கள் ஏன் எழுதப்பட்டன?* வரலாற்றின் ஏடுகளைப் புரட்டுவோம். இந்தியாவில் இந்து பௌத்தம் சமண மதங்களே ஆதியில் இருந்தன என்பது புலனாகும். இந்த மதங்களில் ஆதிமதம் இந்து மதம். இந்து

* 'முருகன் அல்லது அழகு', பக். 100.

மதம் வேத மதமாக இன்றி சாதி மதமாக மாறியவுடன் பௌத்தமும் சமணமும் வேரூன்றின.* சாதி மட்டுமன்றி மனிதருள் உயர்வு தாழ்வு என்ற வேற்றுமைகள் புகுந்து இந்து மதத்தின் சாரம் புறக்கணிக்கப்பட்டது. அதுமட்டுமா? ஜீவகாருண்யத்தை உயிர் நாடியாகக் கொண்ட இந்து மதத்தில், உயிர் பலி வேள்விகளில் புகுத்தப்பட்டன. இந்து மதத்தின் உள்ளத்தைப் புறக்கணித்து தொழில் முறையில் விளைந்த பாகுபாடுகளைப் பயன்படுத்தி, பெண்ணடிமை, தீண்டாமை போன்ற நச்சு சக்திகள் புகுந்தன; விளையாடின; மக்களை ஆட்டி வைத்தன; மதத்தின் ஆணி வேரை அசைத்தன; தகர்த்தன.

இச்சமயத்திலே இரு மதங்கள் இந்தியாவில் செல்வாக்குப் பெற்றன. ஒன்று இரிடப தேவரின் ஜைனம்; மற்றொன்று கௌத்தம புத்தரின் பௌத்தம். ஜைனம் கொல்லாமை, அகிம்சை ஆகியவற்றை வலியுறுத்தியது. பௌத்தம் அன்பு மார்க்கத்தை போதித்தது.

நாளடைவில் இம்மதங்களின் உண்மை அறம் மறந்து மறத்தில் வீழ்ந்து புறத் தோற்றங்களில் அதிக கவனஞ் செலுத்தின. உருவ வழிபாட்டை எதிர்த்த இம்மதங்களில் உருவ வழிபாடு புகுந்தது. ஆடம்பரமான சடங்குகள் புகுந்தன. விழாக்கள் எடுத்து, விழைய வேண்டிவற்றை விரட்டின. மேலும் பிரசாரத்திற்குத் தேவையான புராணங்களைத் தோற்றுவித்தன. இப்படிப் பிறந்ததே ஜாதகக் கதைகள். ஜைனமும் பௌத்தமும் துறவறத்தை வலியுறுத்தின.

ஜாதகக் கதைகள் கண்டவுடன் இந்து மத பேரறிஞர் என்ன செய்தனர்? தாமும் புராணங்கள் எழுதத் தலைப்பட்டனர். அப்படிப் பிறந்த புராணங்களில் சில தென்னகத்திலும் இறக்குமதி ஆயின. ஆனால் அதற்கு முன்னரே தமிழ்

---

* 'இந்தியாவும் விடுதலையும்', 'இடைக்கால இந்தியா', பக். 89-91 & 92.

நாட்டில் வழக்கில் இருந்தது திருத்தொண்டர் தொகை. எனவே சேக்கிழார் இதனைத் தமிழில் நூலாக வடித்தார்.

சேக்கிழார் பெரிய புராணத்தை ஏன் தேர்ந்தெடுத்தார். சமண சமயத்தைக் கண்டிக்கும் பொருட்டே இந்த நூலை தேர்ந்தெடுத்தார் என்பர் பலர். உண்மை இதுவல்ல. சமண சமயத்தைக் கடிதல் பொருட்டு அவர் பெரிய புராணம் எழுதவில்லை. சமணத்திலும் பௌத்தத்திலும் பின் வந்தோரால் புகுத்தப்பட்ட அறிவீனமான செயல்களையே பெரிய புராணத்தில் கடிந்தார் என்பதே உண்மை. அது மட்டுமன்று. இந்து மதத்தில் சாதிமத வேறுபாடுகள் புரிந்து, உயர்வு தாழ்வு வேற்றுமைகள் ஏற்படுத்தி வளர்த்தன; சடங்குகள் பலவும் புகுந்து இந்து சமயத்திற்கு ஊறு விளைவித்தன. இவைகளைப் போக்கவே பெரியபுராணத்தை-தமிழ் நாட்டிலே தோன்றிய சிவனடியார் வரலாற்றை சேக்கிழார் பாடினார் என்பதே உண்மை. சேக்கிழார் நாளில் ஜாதி வேற்றுமை உண்டு. ஆனால் பூசலில்லை. தனிப்பட்ட எந்த வகுப்பாரும் தனி மன்றங்களோ அல்லது நிறுவனங்களோ வைத்து, இத்தகைய சாதிப் பூசல்களை வளர்க்கவில்லை. என்றாலும் அமைதியாக இருந்த மக்களிடையே சாதி வேற்றுமை சமுதாயத்தில் புரையோடி விடக் கூடாதென்றே சேக்கிழார் பெரிய புராணத்தைப் பாடினார் என்றால் மிகையாகாது. அத்துடனா? தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்து, தொண்டு புரிந்த நாயன்மார்கள் அல்லது வேறு பகுதிகளில் இருந்த சமயத் தொண்டர்களை சேர்த்துக் கொண்டனர் என்பது "அப்பாலும் அடிசார்ந்த அடியார்க்கு அடியேன்"* என்ற வாக்கு உணர்த்துகிறது.

இதனை சேக்கிழார்,

"மூவேந்தர் தமிழ் வழங்கும் நாட்டுக்கு அப்பால் முதல்வனார் அடிசார்ந்த முறைமையோடும்" என்று விவரிப்பது அவர் பண்பிற்கும் பரந்த மனத்திற்கும் சிறந்த எடுத்துக் காட்டு.

---

* 'திருத்தொண்டர் தொகை' -பத்தாம் செய்யுள்.

நாயன்மார் கூட்டத்திற்கு அறுபத்தி மூவர் என்று கூறுவர். ஆனால் அறுபத்தி மூவரே அடியவர்கள் என்று கொள்ளலாகாது. அறுபத்தி மூவர் அல்லாத ஏனைய பக்தரும் அடியவரே.

இது எப்படிப் புலனாகிறது?

சேக்கிழாரின் வாழ்த்துப் பாடலைப் பார்ப்போம்.

**''உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்.''***

இப்பாடலில் 'உலகெலாம்' என்பது தாய்மையைக் குறிக்கும். மங்கலத்தை குறிக்கும் சொல்லே உலகு. உலகம் எது? அதில் வாழும் அனைத்து உயிர்களுமே உலகு. ஆராய்ந்து, ஆராய்ந்து அறிவதற்கரிய ஒன்று கடவுள். எல்லா உயிர்களும் கடவுளே. கடவுள் எல்லா சமயத்தாருக்கும் பொதுவுடைமை. கடவுளே இயற்கை. எல்லா உயிர்களும் நுகர்ந்து இன்புற ஏற்பட்டதே இயற்கை. ஒளியாகிய உயிர்களிடத்திலே விளங்குவதும் ஆண்டவனின் ஒளியே. அத்தகைய ஒளியை மலர் தூவி, சிலம்படி வாழ்த்தி வணங்குவோம் என்றார் சேக்கிழார்.

இங்கு அம்பலத்தாடுவான்-உலகின் உயிர்களை ஆட்டுவிப்பவன்; உயிர்களின் ஒவ்வோர் அசைவிலும் ஆடுபவன்; அனைத்தையும் ஆட்டுவிப்பதால் தானே எப்போதும் எங்கும் ஆடுபவன் என்ற பொருள் கொள்ளலாம்.

சேக்கிழார் பாடிய அதே பெரிய புராணம் திரு.வி.கவையும் கவர்ந்தது. திரு.வி.க அதே பெரிய புராணத்தில் கருத்து செலுத்தியதேன்?

---

* இதே கருத்துக்கள் கீழே குறிப்பிட்டவைகளிலும் காணலாம். 'அகர முதலெழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு'—திருக்குறள்.
''உலகம் யாவும் தாமுள ஆக்கலும்''—கம்பன்.

இந்நூல் எழுதியதற்குத் தூண்டுகோலாக அமைந்தவர் திரு. கதிர்வேற்பிள்ளை. பெரிய புராணம் (1907-1910) முதன் முதலில் வெளி வந்தது. பின்னர் தனி நூலாக வெளி வந்தது.

அக்கால நிலை என்ன? மக்கள் எப்படி வாழ்ந்தனர்? சாதி, சாதி என்ற கூக்குரல் எங்கும் ஒலித்தது. உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்ற பூசல்கள் எத்தனை, எத்தனை! பெண்கள் உரிமை மறுக்கப்பட்டு, அடிமைகளென வீட்டிலே அடுப்பங்கரையிலே மட்க வைத்த காலம்; சிலரே ஆலயத்துட் செல்லலாம், சிலர் கோயிலின் வெளிச்சுவர் பக்கம் கூட போகக் கூடாதென 'தீண்டாமை' தலை விரித்தாடிய காலம்; மதமென்ற பெயரில் போராட்டங்கள், கலகங்கள், வாக்குவாதங்கள் மலிந்த காலம். இந்தக் கொந்தளிப்பு நிறைந்து நாட்டை அலைக்கழித்த காலத்தில் இதற்கொரு மாற்று மிகத் தேவையாயிற்று. அது என்ன?

பல பெயர் தெய்வத்திற்குக் கொடுத்தோம். அதிலும் பூசல். முருகனே சிறந்தவன்; இல்லை, இல்லை! சிவனே சிறந்தவன்; திருமால் போன்ற தெய்வமே இல்லை. 'ஏசு தான் உங்களுக்கு வழி காட்டுவார்!' 'அல்லா தவிர உங்களுக்கு வேறு கதி ஏது?' எனப் பல. ஐயப்பாடுகளைப் போக்குவது, மிக அவசியம்; மிக மிக அவசியம். இந்த அறியாமை இருளைப் போக்கத் தேவையானது திருமூலர் வாக்கே.

'ஒன்றே குலம், ஒருவனே தெய்வம்' என்பதை மக்கள் உணர்ந்தே ஆக வேண்டும்—இது மிக மிக அவசியம்.

தொழின் முறையால்-மனு நீதிப்படி, ஏற்பட்டிருந்த வகுப்பு அல்லது சாதியில் புகுந்த, பிறப்பு வழி உயர்வு தாழ்வைப் போக்காவிட்டால் உய்வு வருமா? வராது, வராது, வரவே வராது.

இதற்கு உய்வு எது? சமரச சன்மார்க்கமே உய்யும் வழி. சமரச சன்மார்க்கம் என்றால் என்ன? உலகில் உள்ள பல மார்க்கங்களும் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டுள்ளன. அதாவது பிறப்பின் குறிக்கோளை அடைதல். பிறப்பின் குறிக்கோள் யாது? தத்தம் ஆற்றலுக்கு ஏற்றபடி ஆண்டவனைத் துதித்து, அறிந்து, பின் உறுதி நிலை அடைதலே. இதற்கு முதன் முதல் அறியவேண்டிய உண்மை-எப்பெயரில் அழைத்தாலும், எப்படி விளித்தாலும், மெய்ப்பொருள் ஒருவனே. அவனுக்கு முதலும் இல்லை. முடிவும் இல்லை. மொழி, நாடு, சமயம் முதலிய வேற்றுமைகளும் இல்லவே இல்லை. அத்தகைய இறைவன் எல்லா உயிர்களிலும் நீக்கமற இருப்பவன். 'பன்மையில் ஒருமைத் தன்மையுடையது.' அவன் வேற்றுமையில் ஒற்றுமையையும் காண்பவன். இதை அறிந்து செயல்படுவதே மாந்தர் உய்ய சிறந்த வழி. குறுகிய மனப் போக்கைப் போக்கினால்...

இப்பரந்த நோக்கு வருமாயின், சாதி, மதம், மொழி, உயர்ந்தோர், தாழ்ந்தோர் போன்ற குறுகிய மனப்போக்குகள் தானே மறையும். எல்லா உயிர்கள் மாட்டும் அன்பு பெருகும். பயன் கருதாப் பணி எங்கும் பரவும். கற்றவைக்கு ஏற்றபடி இயற்கையுடன் கூடிய இல்லற வாழ்வு அமையும். பெரிய புராணத்தில் திரு.வி.க வற்புறுத்தியவை எவை?

இயற்கை வழி இல்வாழ்வு சமரச சன்மார்க்கத்தின் அடிப்படை. தவறு செய்தால் உய்வு உண்டா? நிச்சயம் உண்டு. எப்போது? தவறு செய்தபின் அதை உணர்ந்து இறைவனிடம் உண்மையாகவே முறையிட்டால், பாவ மன்னிப்பு நிச்சயம் உண்டு. சமரச சன்மார்க்கத்தில் பாவமன்னிப்பு ஒரு சிறப்பான அங்கம். முறையீட்டிற்கு ஓடி வருவான் ஆண்டவன்.

திரு.வி.க பெரியபுராணத்தில் கருத்து செலுத்தியதன் காரணங்களில் முக்கியமானவை மூன்று. சமரச சன்மார்க்கக் கொள்கைகளைப் பரப்புவது முக்கிய நோக்கமாகும். அடுத்த

படியாக பெண்ணினத்தை இழிவுப்படுத்தி, இவ்வினத்திற்கு ஏற்பட்டிருந்த தாழ்நிலையைப் போக்க வேண்டும் என்ற கருத்தையும் பெரிய புராணம் கொண்டுள்ளது என்றால் மிகையன்று. அத்துடனா? அருளுடைய பொதுவுடைமை யைப் பிரசாரம் செய்வதும் மற்றொரு முக்கிய நோக்க மாகும்.

ஈண்டு பெரிய புராணத்துடன் நாயன்மார் திறம் என்ற சிறு நூலையும் சேர்த்து ஆராய்வோம்.

நாயன்மார் யார்?

நாயன்மார் என்பவர் ஆண்டவன் அடிக்கு அன்பு செலுத்தி தலைமைப் பேறெய்தியவர் என்று பொருள். இவர்கள் பற்பல மரபுகளில் பல்வேறு சாதிகளில் தோன்றிய வர்; பற்பல இடங்களில் தோன்றியவர்; வெவ்வேறு மரபில் தோன்றியவர்; தொண்டிலும் தொழிலிலும் வேற்றுமை உண்டு. கோலத்தாலும் மாறுபாடு அதிகம். ஆனால் கடவுளிடம் அன்பு செலுத்துவதில் ஒன்றுபட்டவர். இவர் கள் சாதிகளைப் பற்றி இன்றும் யாரும் கவலைப்படுவ தில்லை. அறுபத்தி மூவர் அனைவர்க்கும் ஒரேவித வழிபாடு, வழிபாடு செய்பவரும் உயர் குலத்தினர் ஆகக் கருதப்படு பவரே! உதாரணமாக, வேடர் கண்ணப்பருக்கும், திருஞான சம்பந்தருக்கும் ஒரே மாதிரியான வழிபாடுதான்! சலவை தொழிலாளர் திருக்குறிப்புத் தொண்டரை யாரேனும் அவர் சாதி பற்றி, குலம் பற்றித் தொழாமல் விடுவரோ? இல்லை!

அறுபத்தி மூவரில் வேதியவர் இருந்தனர். வேளாளர், சான்றோர், பரதவர், வேடர் என பற்பல சாதியர் இருந் தனர்.* ஆனால் பூசல் உண்டோ? இல்லை, இல்லை.

---

* அறுபத்தி மூவர்—நாயன்மார்-குலம் தனி அட்ட வணையில் காண்க.

## 'காரைக்கால் அம்மையார் திருமுறை'

பெண்களைப் பற்றி மிகத் தாழ்மையான கருத்துக்கள் நிலவிய அக்காலத்தில், அவைகளை திரு.வி.க. அவர்கள் எழுதிய 'காரைக்கால் அம்மையார் திருமுறை' அறிஞர் களுக்கு ஒரு பெரிய கலங்கரை விளக்கமாகவும், அறியாமை யால் பெண்ணை மாயை என்று வெறுத்த கும்பலுக்கு சாட்டையடியாகவும் அமைந்தது. இது மிகையன்று, உண்மை, அப்பட்டமான உண்மை.

திரு.வி.க சமுதாயத்தில் புகுந்த இந்த உயர்வு தாழ்வு மனப்பான்மையைப் போக்கும் வழியை சுந்தரர் மூலம் வலியுறுத்தினாரோ என்று தோன்றுகிறது.

''தண்கையிலை யது நீங்கி நாவலூர் வாழி
சைவனார் சடையனார் தயை னாராய்
மண் புகழ அருட்டுறையான் ஒலைகாட்டி
மணக்க விலக்க வன்தொண்டாய் அதிகை சேர்ந்து''

சமூகக் கட்டுப்பாடுகள் நிறைந்த அக்காலத்தே, சுந்தர மூர்த்தி நாயனார்-உயர்குல பிராமண குலத்தைச் சேர்ந்த வராயினும், பரவை என்னும் உருத்திர கணிகையையும், சங்கிலி என்னும் வேளாளப் பெண்ணையும் மணந்தார். இம்மணவினைக்கு ஏற்பாடு செய்து, தூதும் சென்றவர் யார்? தில்லை நடராஜனே.

''நண்பினுடன் அருள் புரிய ஆரூர் மேவி
நலங்கிளரும் பரவை தோள் நயந்து வைகித்
திண்குலவும் விறன் மிண்டர் திறங்கண் டேத்துத்
திருத் தொண்டத் தொகையருளாற் செப்பினானே''

அது தான் போகட்டும். தம் குலத்திலே பெரியோர் நிச்சயித்த பெண்ணைத் திருமணம் செய்யாவண்ணம் தடுத்தாட் கொண்ட தியாகேச பெருமானின் இச்செயலுக்

குக் காரணமென்ன? பின்னர் கலப்பு மணத்தை ஆதரித்து சாதிப் புன்மையை நொறுக்கவா? ஒடுக்கவா?

நீங்களே சிந்தியுங்கள்.

## அடிச் சேரர்

மற்றொரு நாயனாரைச் சந்திப்போமா!

சேரமான் பெருமாள் நாயனார்-சேர நாட்டு மன்னன். மன்னனுக்குரிய எல்லாப் பரிவாரங்களும் சூழ வந்தான். எதிரே வந்தான் ஒரு வண்ணன். அவன் தலையிலே ஒரு மூட்டை, மூட்டையிலே என்ன இருந்தது? உழவு மண். மழையில் வண்ணான் நனைந்திருந்தான். மழையிலே மண்ணும் கரைந்து உடல் முழுவதும் வழிந்து இருந்தது. எனவே உடல் முழுவதும் வெள்ளை வெளேரென்று தெரிந்தது. சேரன் 'எங்கும் சிவனையே காண்பவன்!' தம் மு ' எதிர்ப்பட்ட வண்ணானையா கண்டான்? இல்லை, இல்லை! திருநீறு பூசிய சிவபிரானாகவே தோன்றினான். ஒரே கணம் சேரன் வண்ணான் காலடியில் வீழ்ந்தான்.

வண்ணான் அஞ்சினான்; நடுங்கினான். அலறினான்! என்ன என்று? 'அடிசேரன்' என்று அலறினான். எனவே சேரனுக்கு அடி சேரன் என்ற பெயர் வந்தது.*

நாடாளும் மன்னன் எங்கே? அழுக்கைப் போக்கும் வண்ணான் எங்கே? பெருமை எங்கே? உயர்வு எங்கே? தாழ்வு எங்கே?

சிவன் என்னும் அன்பில் எப்படி எப்படி அனைத்தும் கரைந்து மறைந்தன பார்த்தீர்களா?

## பசுவைப் பேண்-ஜீவகாருண்யமே தலையாயது

சண்டேசுவரரைக் காண்போமா?

---

* 'நாயன்மார் திறம்', பக்.10

வேதியர் எச்ச தத்தன் மகன் விசாரசருமன், ஒரு நாள், பசுக்களை மேய்த்துக் கொண்டு சென்ற ஒருவனைப் பார்த்தார் அவர். அவன் பசுக்களை அடித்தான்; துன்புறுத்தினான். வாயில்லாத அவை கண்ணீர் வடித்தன.

கண்டார் விசாரசருமன். மனமிளகினார்.

'பசு எத்தகைய அருமையான உயிர்! அதனைத் துன்புறுத்தலாமா? என்று இரங்கினார்.

மேய்ப்பவனை அழைத்தார். 'ஆனிரையை நானே இனி மேய்க்கிறேன்!' என்றார்.

அவ்விதமே அப்பணியை மேற்கொண்டார். பசுக்கள் இவர்தம் அன்பிலே திளைத்து, பாலைப் பெருக்கின. இந்தப் பாலை விசாரசருமர் என்ன செய்தார்?

மண்ணிலே லிங்கமொன்று செய்தார். அத்திமரத்தடியில் நிழலிருக்கும்படி லிங்கத்தைச் செய்தார். அதற்குப் பாலை அபிஷேகம் செய்தார். இது ஒரு நாளா, இரண்டு நாளா? இல்லை, இல்லை! தினமும் செய்வார்.

பாலை இங்கே கொடுத்துவிட்ட பசுக்கள் வீட்டிலே என்ன செய்தன? உரியவர் வீட்டிலேயும் பாலைப் பெருக்கின எங்கும் பாலாறு ஓடியது.

இது கண்டனர் அந்தணர். பொறாமையுற்றனர். தந்தையிடம் ஏதேதோ கூறினர். எச்சதத்தனும் கொஞ்சம் கலங்கினான். ஒரு நாள் மரத்தின் மேலேறி ஒளிந்துக் கொண்டான் தன் மகனைக் கண்காணிக்க. மகன் செய்கையைக் கண்டான்; வெகுண்டான்; ஒரே குதி. பால் குடங்களை உதைத்தான். விசாரசருமன் பக்கத்திலிருந்த கோலை எடுத்தான். தந்தையின் கால்களை வெட்டி மீண்டும் பூசையில் ஆழ்ந்தான்.

சிவபிரானே அவர் தந்தை ஆனார். விசாரசருமன் சண்டேசுரர் ஆனார்.

என்னே! ஜீவகாருண்யத்தின் சக்தி!!!

## இல்லறத்திலே தன்னடக்கம்

**தில்லை நகர் வேட்கோவர் துர்த்த ராகித்**
**தீண்டிலெமைத் திரு-நீல கண்டமென்று**
**சொல்லு மனையாள் தனையேஅன்றி மற்றுந்**
**துடியிடையாரிடை யின்பந் துறந்து மூத்தங்**
**கெல்லையி லோடி இறைவைத்து மாற்றி நாங்கள்**
**எடுத்தில மென்று இயம்புமென இழிந்து பொய்கை**
**மெல்லிய லாளுடன் மூழ்கி இளமை எய்தி**
**விளங்கு புலீச்சரத்தரனை மேவினாரே.**

தில்லை நகரிலே ஒரு சிவனடியார். குயவர் குலத்தினர். அடியவர்களுக்குத் திருவோடு கொடுப்பது அவர் தொண்டு. சிவபெருமான் பெயரால் 'திருநீலகண்டம், திருநீலகண்டம்' என்று சொல்லி வந்ததால் திரு நீலகண்டர் என்ற பெயர் பெற்றார்.

அவர் மனைவியும் அவருக்கேற்ற மனம் படைத்தவரே. ஒரு நாள், எப்போதும் போல் பரத்தை இல்லம் சென்று வந்தார். கணவனிடம் கடுங்கோபமுற்றார் அம்மையார். கணவன் தன் மூர்க்கத்தை அவள் மீது செலுத்த நாயனார் எண்ணிய போது அம்மையார்,

"நீர் எம்மைத் தீண்டுவீராயின் திரு நீலகண்டம்!" என்றார்.

அவ்வளவே! 'எம்மை' என்று சொன்னவர் மனைவி. 'எம்மை' பன்மை; பெண்ணினத்தையே குறிப்பது எனக் கொண்டார், திரு நீலகண்டர். 'இனி பெண்களையே தீண்டுவதில்லை,' என உறுதி கொண்டார் திரு நீலகண்டர். எத்தகையவர்? இளைஞர்; சபலமுள்ளவர். பின் என்ன செய்தார்? மனவுறுதி கொண்டு, அதன் வழியே நடந்தார்.

மற்றவர்க்கு இது தெரியாது.

அடியவன் புகழைப் பரப்ப சிவனடியார் கோலத்தில் வந்தார் சிவபெருமான். திருவோடு ஒன்றைக் கொடுத்தார். தாம் வரும் போது திருப்பித் தர வேண்டும் என்றார். 'சரி' என்றார் நாயனார்.

சில காலம் கழிந்தது. வந்தார் அடியார். திருவோடு கேட்டார். நீலகண்டன், வைத்த இடத்தில் தேடினார். எல்லாப் பக்கமும் பரந்து பரந்து பார்த்தார். ஓடு மறைந்தே போயிருந்தது. மாற்று ஓடு தருவதாக சிவனடியாரிடம் கெஞ்சினார்; மன்றாடினார்; மனமுருக வேண்டினார். அடியார் மனமிரங்கினாரா? இல்லை, இல்லை.

குளத்தில் மனைவி கைப்பிடித்து ஓடு மறைந்து விட்டதாக சத்தியம் செய்யும்படி கட்டளையிட்டார்:

நீலகண்டர் தயங்கினார்.

சிவன் அவர் இல்லற வாழ்வில் அவர் கடைப்பிடித்த கடினமான புலனடக்கத்தை வெளிப்படுத்த தீர்மானித்திருக்கிறாரே! விடுவரோ? அவர் தாம் இல்லற வாழ்க்கையில் மறைந்திருந்த புலனடக்கத்தை உலகுக்கு உணர்த்தினாரா ஏன்?

தன்னடக்கத்திற்காகவும் புலனடக்கத்திற்காகவும் ஒருவன் மனைவி மக்களை விட்டு காட்டுக்கு ஓடவேண்டியது இல்லை. இல்லறத்திலேயே மனைவியுடன் வாழ்ந்துக் கொண்டு, புலனடக்கம் கடைப்பிடிக்கலாம் என்பதைக் காட்டவே போலும்!

குயவன் ஒருவனுக்கு புலனடக்கம் இருந்தது. திடமனம் இருந்தது அஃதாயின் சாதியை அடிப்படையாகக் கொண்டதல்ல புலனடக்கம். தனிப்பட்ட மனிதன் ஒருவரின் மன உறுதியைப் பொறுத்தது என்பதை சுட்டிக் காட்டுவது

திருநீலகண்டர் வரலாறு என்பதைத் தெளிவுறக் காட்டு கிறார் திரு. வி. க.

## கண்ணே ஈந்த பெருமகனார்!

இது போன்றதே கண்ணப்பரின் உறுதியும்.

'கண்ணுக்குக் கண் கொடுத்து தொண்டு செய்யக் கூடியவர் உலகில் எத்தனை பேருளர்?

கண்ணப்பன் யார்? வேடுவன். வேட்டையாடி மிருகங் களை உண்டவன். முதன் முதலின் சிவனை அறியாதவன். ஆனால் இலிங்கத்தைக் கண்டவுடன், சட்டென மனம் மாறினான் தீராக் காதல் கொண்டான் இறைவனிடம், அதனால் இலிங்கத்தைக் கண்டவுடன் 'உடும்புப் பிடியாக' பிடிக்கக் கூடியவன் கண்ணப்பன் தவிர வேறு யார்?

உயர்குல அப்பர் சுவாமிகள் வேடுவன் கண்ணப்பனைத் தொழுதார்* என்றால் சிறுமையாகி விடுமோ? ஆகாது. ஆகாது! சிவனடியாரிடை வேற்றுமை உண்டு என்று சொல்ல இடமிருக்குமோ? இருக்காது, இருக்காது, இருக்கவே இருக்காது!!

## இடைச்சாதி இழுக்காமோ?

திருமூலர் யார்?

'ஒன்றே குலம் ஒருவனே தெய்வம்' என்ற பேருண்மையை ஒரே ஒரு வாக்கியத்தில் சொன்னவர். இந்த மெய்ஞானியின் வாக்கை நாம் உண்மை உணர்ந்து ஏற்கிறோம்; போற்றுகிறோம்; அதன் வழி நடக்க முயல்கிறோம். ஏன்?

---

* திருநாவுக்கரசு சுவாமிகள், பக். 149, நாயன்மார் வரலாறு.

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு**

என்றார் வள்ளுவர்.

பொய்யாமொழியார் கூறியபடி, இடைக்குலத்தை சேர்ந்தவர் திருமூலர். அவர் வாக்கைத் தவிர்க்க வேண்டும் என்றால், அது எத்தகைய மடமை? அவ்வாறாயின் கண்ணனின் கீதையைப் படிக்கப் புகுவோமா?

இடைச்சாதி இழுக்காரோ?

## பெண்ணினமே போற்றி! சிவனடியே போற்றி,போற்றி!!

பெண் சிவனடியார்களும் உண்டு. அவர்கள் இறைவனுக்குச் செய்த தொண்டில், ஒரு குறைவும் காணவே முடியாது, இது உறுதி, உறுதி, உறுதி!!

அத்தகையோரில் காரைக்கால் அம்மையார் ஒருவர். அவரைப் பற்றி திரு.வி.க. தனி திருமுறை எழுதினார்.

ஒரு பெண். அடக்கத்தின் இருப்பிடம். உறுதியின் சிகரம்; உறுதி பிறந்திட்டால் ஒரு பெண் எவ்வளவு உயர்ந்து விடுவாள் என்பதற்கு காரைக்கால் அம்மையார் வரலாறே ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

அதே போன்று மங்கையர்க்கரசியார் பெருமையை யாரே வர்ணிக்கக் கூடும்?

காரைக்கால் அம்மையார் இல்லத்தரசியே; கணவனுக்கு மனமிசைந்த மனைவி. இறைவன் திருவருளால் பெற்றார் மாங்கனி. இந்த மாங்கனியைக் கண்டு பயந்தான் கணவன். மருண்டான்; ஏன்? இவள் சாதாரண பெண்ணல்ல; 'தெய்வம் இது' என்று அச்சமுற்றான்.

மனைவியை விட்டகன்றான். பாண்டி நாடு சென்றான். வேறொரு பெண்ணை மணந்தான். தான் பெற்ற பெண்ணுக்கு தன் முதல் மனைவி பெயரையே சூட்டினான்.

தன் கணவனை நாடிவந்தார் காரைக்கால் அம்மையார். கணவன் அவள் காலடியில் வீழ்ந்து வணங்கினான். தத்துவ ஞானி அம்மையார் பேய் வடிவம் கொண்டார். ஏன்? தன்னை நிராகரித்த நாயகனையும் பிரியக் கூடாது; தான் வாழ்வது மற்றவர்க்குத் தெரியக் கூடாதென உறுதி பூண்டார் அம்மையார். பேய் வடிவங் கொண்டார்.

அம்மையாரின் உறுதிதான் என்னே!

**''அன்றுந் திருவுருவங் காணாதே ஆட்பட்டேன்**
**இன்று திருவுருவங் காண்கிலேன் என்றும்**
**எவ்வுருவோன் நும்பிரான் என்பார்க்**
**கென்றுரைக்கேன்**
**எவ்வுருமோ நின்னுருவ மேது.''**

காரைக்கால் அம்மையார் எவ்வாறு கணவனைப் பிரியாதிருந்தாரோ, அதே போன்று கணவன் நின்ற சீர் நெடுமாறன் பாண்டியனை சிறிதும் பிரியவில்லை மங்கையர்க் கரசியார். பாண்டியனுக்கு கூன்பாண்டியன் என்ற பெயருண்டு. கூன்பாண்டியன் சமணத்தை பின்பற்றினான். மங்கையர்க்கரசிக்கோ சைவசமயத்தில் பற்றுண்டு. ஆயினும் கணவனுக்காக தன் சமயத்தை மாற்றிக் கொண்டாரா? இல்லை, இல்லை! சைவ செம்மல் திருஞானசம்பந்தர் மதுரைக்கு எழுந்தருளியபோது, சைவ சமயத்தை அங்கு நிலை நாட்டிய பெருமை மங்கையர்க்கரசியாரையே சாரும்.

'நாயன்மார் செய்து வந்த திருத் தொண்டில் பெரிதும் நாயகிமார் துணை செய்தனர். பெண் மக்களின் உதவியின்றி எக்காரியமுஞ் சித்தி பெறாது. மங்கையர்க்கரசியார் ஒருவர் உழைப்பில்லாவிடில் சைவ சமயமெங்கே? சிவனடியார் எங்கே?' என்று எழுதினார் திரு. வி. க.*

நாயன்மார் உண்மை, உறுதி, அஞ்சாமை, ஒழுக்கம், வீரம் முதலியவற்றை காத்து வந்தனர். தாம் கொண்ட வீடு

* 'நாயன்மார் திறம்', பக். 27.

வைராக்கியம் முற்றுப் பெறு மட்டும் உயிரையும் மதியாது உழைத்தனர்.

அறவொழுக்கம் பேணினர். பிற உயிர்க்குந் தீங்கு செய்யாது தியாகத்துக்கு உட்படுவதே அறவொழுக்கம். பிறர்க்குத் தீங்கு செய்ய ஒருவர் வாழ்வது அறநெறியல்ல.

நாயன்மார் வரலாற்றைப் படித்தால், அவர் போன்று ஒழுக்கமாக வாழ முடியும். அவ்வாறு வாழ்ந்தால், தானே மன உறுதி உண்டாகும். மன உறுதி வந்தால் உண்மையாகப் போராட அஞ்சாமை தானே வரும். அஞ்சாமையிலிருந்து வீரம் பிறக்கும் என்கிறார் திரு.வி.க.

## நாயன்மார் சாதிகள்

| | பெயர் | சாதி |
|---|---|---|
| 1. | சுந்தரமூர்த்தி நாயனார் | ஆதிசைவம் |
| 2. | மெய்ப்பொருள் நாயனார் | வேந்தபெருமான் |
| 3. | திருநீலகண்டர் | குயவர் |
| 4. | இயற்பகை நாயனார் | வணிகர் |
| 5. | இளையான்குடி மாறனார் | வேளாளர் |
| 6. | அமர்நீதி நாயகர் | வணிகர் |
| 7. | விறன் மீண்ட நாயனார் | வேளான் |
| 8. | ஏனாதி நாத நாயனார் | ஈழகுலசான்றோர் |
| 9. | கண்ணப்பர் | வேடர் |
| 10. | குங்குலியக் கலய நாயனார் | மறையவர் |
| 11. | மானக்கஞ்சாற நாயனார் | வேளாளர் |
| 12. | அரிவாட்டாய நாயனார் | வேளாண் |
| 13. | ஆனாய நாயனார் | ஆயர்குலம் |
| 14. | மூர்த்தி நாயனார் | வேதியர் |
| 15. | உருத்திர பசுபதி நாயனார் | அந்தணர் |

| | | |
|---|---|---|
| 16. | நந்தனார் | அரிசன் |
| 17. | திருக்குறிப்புத் தொண்ட நாயனார் | வண்ணார் |
| 18. | சண்டேசுர நாயனார் | வேதியர் |
| 19. | திருநாவுக்கரசர் | வேளாளர் |
| 20. | காரைக்கால் அம்மையார் (புனிதவதியார்) | வணிகர் |
| 21. | அப்பூதி அடிகள் | மறையவர் |
| 22. | திருநீல நக்க நாயனார் | மறையவர் |
| 23. | நேமி நந்தி | அந்தணர் |
| 24. | ஞான சம்பந்தர் | வேதியர் |
| 25. | ஏயர் கோன் கலிக்காம் | வேளான் மரபு |
| 26. | திருமூல நாயனார் | இடையர் |
| 27. | மூர்க்க நாயனார் | வேளான் |
| 28. | சோமாசி மாற நாயனார் | வேதியர் |
| 29. | சாக்கிய நாயனார் | வேளாளர் |
| 30. | சிறப்புலி நாயனார் | வேதியர் |
| 31. | சிறுத்தொண்டர் பரஞ்சோதியார் | மாமாத்தியர் |
| 32. | கழற்றிற்றறிவார் | சேரர் |
| 33. | கணநாத நாயனார் | வேதியர் |
| 34. | கூற்றுவ நாயனார் | குறுநில மன்னர் |
| 35. | புகழ்ச் சோழ நாயனார் | மன்னர் |
| 36. | நரசிங்க முனையரைய நாயனார் | மன்னர் |
| 37. | அதிபத்த நாயனார் | வலைஞர் |

| | | |
|---|---|---|
| 38. | கலிக்கம்ப நாயனார் | வணிகர் |
| 39. | கலிய நாயனார் | செக்கார் |
| 40. | சத்தி நாயனார் | வேளாளர் |
| 41. | ஐயடிகள் காடவர் கோன் | பல்லவர் |
| 42. | நின்ற சீர் நெடுமாறநாயனார் மங்கையர்க்கரசியார் | பாண்டிய மன்னர் |
| 43. | வாயிலா நாயனார் | வேளாளர் |
| 44. | கழற்சிங்க நாயனார் | பல்லவர் |
| 45. | இடங்கழி நாயனார் | வேளிர் |
| 46. | செருந்துணை நாயனார் | வேளாளர் |
| 47. | புகழ்த்துணை நாயனார் | ஆதிசைவம் |
| 48. | கோட்புலி நாயனார் | வேளான் |
| 49. | முப்போதும் திருமேனி தீண்டுவார் | வேதியர் |
| 50. | பூசலார் | மறையவர் |
| 51. | கோச்செங்கட் சோழன் | சோழர் |
| 52. | திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் | பாணர் |
| 53. | சடைய நாயனார் | |

மற்ற நாயன்மார்கள்

54. இசை ஞானியார்

55. திருவாரூர் பிறந்தார்

56. பரமனையே பாடுவார்

57. பத்தராய் பணிவார்

58. கணம் புல்ல நாயனார்

59. பொய்யடிமை இல்லாத
புலவர்

60. தண்டியடிகள்

61. எறிபத்த நாயனார்

62. தில்லைவாழ் அந்தணர்

63. முருகனார் வேதியர்

64. காரி நாயனார்

65. முழு நீறு பூசிய நாயனார்

66. அப்பாலும் அடிச்சார்ந்தார்

# 7

# வாழ்வாங்கு வாழ்ந்து காட்டியவர்

'திரு. வி. கவைப் பற்றி இன்னும் நன்றாக அறிய வேண்டுமானால், அவர்தம் வாழ்க்கைக் குறிப்பைப் படியுங்கள்' என்று எங்கள் ஆசிரியர்கள் கூறியது இன்னும் எங்கள் காதுகளில் ஒலிக்கின்றது. அந்த நாளிலே, வாழ்க்கைக் குறிப்பில் என்ன பிரமாதமாக இருந்து விடப் போகிறது. எல்லா வாழ்க்கைக் குறிப்புக்கள் போலத்தான் இதுவும் இருக்கும் என்று அலட்சியமாக எங்கள் இளம் உள்ளம் நினைத்ததும் உண்டு. ஆனால் பிற்காலத்தில் அவர்தம் வாழ்க்கைக் குறிப்பை படித்தபோது, அஃது ஒரு பெரிய சவாலாகவே இருந்ததைக் கண்டோம்; அறிந்தோம்; வியந்தோம்.

## இதன் பின்னணி

நாட் குறிப்பு அவர் எழுதவில்லை. தம் நினை வேட்டிலிருந்து பல ஆண்டுகளுக்குப் பின் புரட்டி, மிகவும் செவ்விய முறையில் தம் வாழ்க்கைக் குறிப்பை எழுதியுள்ளார் திரு.வி.க என்றால் அது மிகையே அன்று.

'இது என்ன பிரமாதம்! ஆங்கிலக் கவிஞன் வில்லியம் வொட்ஸ்வொர்த் தன் வாழ்க்கை வரலாற்றில்—தன் இளம் பிராயம் பற்றி, தம்முடைய 'பிரிலூட்' (Prelude) என்ற கவிக்கோர்வையாக ஐம்பது ஆண்டுகள் கடந்த பின்

எழுதவில்லையா? ஏதேதோ மிகையாகக் கதைக்கிறீரே' என ஆங்கில ஈடுபாடு உடைய சிலர் கேட்கலாம்.

அவர்களுக்கு ஒன்று மட்டும் சொல்லலாம். திரு.வி.க வாழ்க்கைக்குறிப்பை தாமே வலிந்து எழுதவில்லை என்பது உண்மை. பல அன்பர்கள் வற்புறுத்தலுக்கு இணங்கி பின் எழுதத் தொடங்கினார்.

அப்போது அவர் நிலை தான் என்ன?

அவர் முதுமையில் நலங்குன்றியிருந்த காலம் அது.

நலிந்த உடல்; குன்றிய பார்வை. எனினும் தடுமாறாத நினைவு; இதுவே இந்நூலின் சிறப்பு.

இந்நூலை எழுதியதற்குக் காரணமுங் கூறியிருக்கிறார் திரு.வி.க. தம் அணிந்துரையில்.

தமிழ்க் கடலின் அலைகளில் நீந்துவோமா?

''எனது வாழ்க்கை பல இயக்கங்களிலும் தொண்டுகளிலும் ஈடுபட்டது. அவைகளில் நல்ல நிகழ்ச்சிகளும் இருக்கும்; தீய நிகழ்ச்சிகளும் இருக்கும். நல்லன கொண்டும் தீயன விலக்கியும் மற்றவர் வாழ்தற்கு, எனது வாழ்க்கைக் குறிப்புகள் ஓரளவிலாதல் துணை புரியும் என்னும் நம்பிக்கை இதை எழுதுமாறு என்னை உந்தியது.''

''எவருடைய வாழ்க்கையில் அறிவு படிப்படியே வளர்ந்து எவ்வுயிரும் பொதுவெனுந் தெளிவு தோன்றித் தம் உயிரே பிற உயிரும் என்னும் உணர்வு பொங்கித்* தொண்டு செய்யும் அன்புச் செல்வமாகிய அந்தண்மை அமைகிறதோ, அவர் வாழ்க்கை வெற்றி உடையதென்றும், மற்றவர் வாழ்க்கை தோல்வி உடையதென்றும் எனது கல்வி, கேள்வி, ஆராய்ச்சி, அனுபவம் முதலியன எனக்கு உணர்த்துகின்றன.

---

* பகவத் கீதை-பக்தி யோகம்-3, 4 ஸ்லோகங்கள் கூறுவதையும் படித்து, ஒப்பிடுக.

எனது வாழ்க்கையில் அந்தண்மை இடம் பெற்றதா? இல்லையா? இதற்குச் சோதனை வேண்டும். என் வாழ்க்கைக் குறிப்புக்கள் வெளிவரின் சோதனைக்கு வழி ஏற்படும்'' என்கிறார் தமிழ்த் தென்றல் தமது அணிந்துரையில்.*

தொழிலாளர் சிலர் அவரை அணுகி இந்நூல் எழுதிய போது ஒரு விண்ணப்பஞ் செய்தனர். அது என்ன? 'நூலை புலவர்க்கென்று எழுதாதீர்கள்-எங்கட்கென்றும் எழுதுங்கள்' என்று விண்ணப்பஞ் செய்தனர்.**

## ஏட்டுப் படிப்பா? அனுபவக் கல்வியறிவா?

எம்.ஏ.,பி.ஏ. என்ற பட்டம் தான் கல்வி என நினைக்கும் இக்காலத்தில் 'திரு.வி.க என்ன பட்டம் பெற்றார் என்ற கேள்வி எழும்.

வெறும் முதுகலைப் பட்டமோ அல்லது வேறு பட்டமோ ஆழ்ந்த கல்வியறிவைக் கொடுத்து விடாது. அறிவு வளர வேண்டுமானால், அதைப் பெறுவதற்கான உழைப்பு வேண்டும்; சிரத்தை வேண்டும்; முயற்சி வேண்டும்; தீரா அறிவுப் பசி எப்போதும் இருத்தல் வேண்டும். கடின உழைப்பு உடன் அமைதல் வேண்டும். இன்றேல் பட்டங்கள் மட்டும் பெறலாம். ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்ற பழமொழிப்படி.

## விளையும் பயிர்

'விளையும் பயிர் முளையிலேயே தெரியும்' என்பது முதுமொழி.

பிற்காலத்தில் திரு.வி.க. சிறந்த அறிவாற்றல் படைத்தவராக இருக்கப் போகிறார் என்பதற்கு அறிகுறியாக

---

* அணிந்துரை-வாழ்க்கைக் குறிப்பு-கரு.

** வாழ்க்கைக் குறிப்பு, பகுதி I, பக். கூ.

அவர் தம் இளமை பழக்க வழக்கங்களே சான்றாக அமைந்தன.

"யான் விடியற் காலத்தில் எழுவேன்; பழம் பாடங்களைப் படிப்பேன்; புதிய பாடங்களையும் நெட்டி நெட்டிப் பார்ப்பேன்; விளங்காத இடங்களை இராயப் பேட்டையில் வதியும் நல்லாசிரியரை அணுகித் தெளிவு செய்து கொள்வேன். அவைகள் பின்னே பள்ளிக்கூடத்தில் போதிக்கப் படுங்கால் பழமையாகவே தோன்றும். எக் கூத்தாடினாலும் யான் படிப்பில் கண்ணுங் கருத்துமாயிருப்பேன்."*

## இயற்கை உருவாக்கிய சேய்

இயற்கையே என்னை உருவாக்கியது என்பான் ஆங்கிலப் பெருங்கவிஞன் வில்லியம் வெர்ட்ஸ் வொர்த். திரு.வி.க வை உருவாக்கியதும் இயற்கையே. இயற்கையே அன்னை; இயற்கையே ஆண்டவன்; இயற்கையே எல்லா தத்துவங்களுக்கும் பிறப்பிடம்.

இயற்கையே பெரும்பள்ளி. மிகப்பெரிய பல்கலைக் கழகம். பொதுமை-அறம், அந்தம்-எல்லாம் ஒன்றே என்ற மாபெரும் தத்துவத்தை ஓதும் பெரிய ஆசான்.

இயற்கை திரு. வி. கவை மாற்ற வேண்டிய நேரங்களில் மாற்றியது. அதேசமயம் திரு வி.கவின் அறிவைத் தீட்டியது; பட்டை தீட்டாத வைரமாக இருந்த அவர் தம் அறிவு பட்டை தீட்டப் பட்டது! பற்பல நிறங்கள்; பற்பல சாலங்கள் புரியும் அறிவுச் சிதறல்கள் சிதறின.

இதை எவ்வாறு சாட்சியின்றி கூறுவது? சாட்சியா இல்லை! திரு. வி. கவின் கன்னி நூல் எனப்படும் 'கதிரைவேற்பிள்ளை சரித'மே இதற்குச் சிறந்த அத்தாட்சி.

திரு. வி. க. தம் மாணாக்கர் பருவ விளையாட்டுகளை விவரிக்கிறார். நாமும் அந்த விளையாட்டில் சேருவோமா?

* வாழ்க்கைக் குறிப்பு, பகுதி I, பக். 84.

“காலையில் சில மாணாக்கர் என் வீட்டுக்கு வருவர். அவருடன் யான் தோட்டங்கட்குப் போவேன். ஒவ்வொரு நாள் ஒவ்வொரு தோட்டம் எங்களை அழைக்கும். தோட்டத்தில் நாங்கள் பலவாறு பிரிந்து பிரிந்து ஆடுவோம். சிலர் ஏற்றமிறைப்பதிலும் கவலையடிப்பதிலும் தலைப்படுவர். இவ்விரண்டிலும் என் மனஞ் செல்வதில்லை. யான் கிடங்குகளில் நீத்தியெடுத்து இறைத்துப் பார்ப்பேன்; வெற்றிலை கிள்வோருடன் சேர்ந்து கொள்வேன்; வாழை அறுப்பதில் கருத்துச் செலுத்துவேன். வாழை பூக் கொய்வதிலும் தண்டு உரித்தெடுப்பதிலும் எனக்கு வேட்கை அதிகம். அகத்திக் கிளைகளை வெட்டிச் சாய்த்து கீரைக் காம்புகளை சுமையாகக் கட்டுவதில் இறங்குவேன்.”*

சிறுபிள்ளை விளையாட்டிலே வேலைகளும் இடம் பெற்றன. பிற்காலத்தில் தொழிலாளர் படைத் தலைவனாக ஆதற்கு முதல் அறிகுறியாக இவ்விளையாட்டுக்கள் அன்றோ எடுத்துக் காட்டின!

## விளையாட்டும் வினையும்

அதுதான் போகட்டும். வேறு விளையாட்டுகளும் அவர் பிள்ளைமை பிராயத்தில் இடம் பெற்றன. சிவலிங்கம் மணலில் செய்து விளையாடினார். இது எதற்கு முன் அறிவிப்பு? பிற்காலத்தில் அவர் பெரிய புராணம் எழுதப் போவதற்கு!

பூசலார் என்பவர் ஒரு சிவனடியார். சிவபிரானுக்குக் கோயில் கட்ட நினைத்தார். கையிலோ காசில்லை; தயங்கினாரா? இல்லை, இல்லை. கற்பனையில் கோயில் கட்டினார்; அதற்கென கும்பாபிடேக நாளையும் குறித்தார்.

அதே நாள்; பெரிய மன்னன் ஒருவன் நிறைய நிதி கொட்டி கட்டிய சிவன் கோயிலுக்கு கும்பாபிடேகம் செய்ய

---

* திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள்-பிள்ளைமை-பக். 85.

நினைத்தான். சிவபிரான் எந்தக் கோவில் கும்பாபிடேகத்தை ஏற்றார்? மனக்கோயில் கட்டிய வறியன் பூசலார்க் கோயில் கும்பாபிடேகத்தையே ஏற்றார்.

வரலாறு அவ்வாறாயின், அவர் தம் அடியார் அறுபத்தி மூவரின் முன்னுரையைக் காலத்திற்கேற்ப விஞ்ஞான ரீதியில்—அணுகுண்டு விண்வெளிப் பயணம் போன்ற—மாறிக் கொண்டே வரும் சூழ்நிலைக்கு மாறாக அருமருந்தாக அமையுமாறு உலகிற்கே ஓர் அரிய விரிவுரையைத் தந்த திரு.வி. கவை எத்துணைச் சிறப்புடன் போற்றி ஏற்றியிருப்பார்!

அவர் பிள்ளைமைக்கால விளையாட்டுக்களைப் பற்றி மேலும் அறிய வேண்டின், அவர் வாழ்க்கைக் குறிப்பு முதல் பகுதியை ஊன்றிப் படிக்க வேண்டும். அப் பகுதி சொல்லும் அரிய விவரங்கள் எத்தனை, எத்தனை!

திரு.வி.கவின் இந்தப் பிள்ளைமையை நன்வழியில் அவர்தம் பெற்றோரும், நல்லாசிரியன்மாரும் நன்கு பண்படுத்தி, பயன்படுத்தியிராவிடின், அறிவுக் கடலாகத் திரு.வி.க இருந்திருப்பாரா? பண்பு மிக்க மனிதராக இன்றும் போற்றப் படுவாரா? சற்றே சிந்தியுங்கள்!

## எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும்

திரு. வி. கவின் பள்ளிப்படிப்பு முற்றுப் பெறவேயில்லை: என்றாலும் அது அவர்தம் அறிவாற்றல் வளரத் தடையாக இருந்ததோ என்றால், இல்லவே இல்லை; ஏன்?

பள்ளிப் படிப்பில்லா விட்டாலும் திரு. வி. கவின் அறிவு வேட்கை சிறந்த ஆசிரியர்களைத் தேடிச் சென்றது. நாடிச் சென்றது. கிட்டியபோது மனம் ஒரே கூறாக செவியுணவை ஏற்றது; இருத்திக் கொண்டது; ஆராய்ந்தது, உண்மை எது என்றும் தெளிந்தது.

தமிழ் அறிவை அவருக்குப் பெருக்கியவர் கதிரைவேற் பிள்ளையே.

''நரசிம்மனைப் பாடிய நாவால்
நாயகனைப் பாட மாட்டேன்!'

என்றார் ஓர் இசைப் பேரறிஞர்.

கதிரைவேற் பிள்ளை ஒரு கடல்; தமிழ்க் கடல்; அவரிடம் பாடம் கேட்டப் பின், வேறு எவரிடமும் பாடம் கற்க திரு.வி.க வுக்கு மனம் இல்லை; என்றாலும் முறையாகத் தமிழ் பயில வேண்டும் என்ற தீரா அவாவோ தணியவில்லை; தணிக்கவும் இயலவில்லை. இந்தக் காதலை பின்னும் அதிகரிக்கச் செய்தவர் மயிலை பாலசுந்தர முதலியார் ஆவார்.

கல்வி வெறி அடங்காது; அடங்கவே அடங்காது. தமிழில் நல்லாசிரியனைத் தேடித் தேடி அலைந்தது. கற்றுக் கொடுப்பார் ஒருவரும் இல்லையே என்று ஏங்கித் தவித்தது.

அப்போது மயிலை வித்வான் தணிகாசல முதலியார் வந்தார். அவர் ஓர் அறிவுக் குன்று; அனுபவக் குன்று. சமயம் சினம் மிக்க எரிமலை. அவரை அணுகி தம் விருப்பம் தெரிவித்தார் திரு.வி.க. உடனே நன்னூலில் சில கேள்வி களைக் கேட்டார் தணிகாசல முதலியார். திரு. வி. க வின் தமிழ் அறிவைச் சோதித்தார். 'திருவருட் பயன்' தொடங்கி னார்.

இது கண்டு வியந்தவர் பலர். ''கிழவர் எப்படிப் பையனுக்கு எளியரானார்?'' என்று சிலர் அதிசயித்தனர்; பலர் பொறாமையுங் கொண்டனர். கலகமும் செய்தனர்; ஏன்? திரு.வி. கவின் பாடங்கேட்டலை நிறுத்துவதற்காக. வித்துவான் அசைந்தாரா இல்லை.

ஒன்றை மட்டும் கற்று, கிணற்றுத் தவளையாக இருக்க தமிழ்த் தென்றல் மனம் இடந்தரவில்லை. திருக்குறள்

சிதம்பர முதலியாருடன் சேர்ந்து திருக்குறள் படித்தார், நுட்பங்களை இராயப்பேட்டை திருக்குறளார் விளக்கக் கேட்டார். தம் அறிவில் நிலைக்கச் செய்தார். அவ்வப்போது அவருக்கெழுந்த ஐயப்பாடுகளைத் தெளிவு படுத்தியவருள் சாமி வேதாசலமும் (மறைமலையடிகளும்) ஒருவராவர்.

கம்பராமாயணமும் வில்லிபாரதமும் அவரைக் கவர்ந்தன. அராய்ச்சியில் ஈடுபட்டார். இவருடைய இவ்வாராய்ச்சியில் கலந்து கொண்டவர் தேவப்பிரசாதம் பண்டிதராவார்.

எந்த ஒரு பொருள் எடுத்துக் கொண்டாலும் அது பற்றித் தெளிவாகத் தமிழ்க் கடலால் கூற முடிந்ததென்றால் அதற்குக் காரணம் திரு. வி. க. ஒவ்வொரு பொருள் பற்றியும், அது பற்றி ஆய்ந்தறிந்த பெரியோருடன் ஆராய்ச்சி செய்ததே!*

தமிழில் மட்டுமா அறிவை வளர்க்கப் பெரியோரை நாடிச் சென்றார்?

வடமொழியிலும் கருத்து செலுத்தினார். பாம்பன் குமரகுருகுஹதாச சுவாமிகள் வடமொழிக் கடலையும் தென்மொழிக் கடலையும் ஒருங்குண்ட பெருமேகம்; 'அறிவு மலை; மெய்ஞானத்தில் இமயம் போன்றவர்; உபநிடத கருத்துக்களைக் கூறுவதில் வல்லுநர். இந்தப் பெரியாரிடம் உபநிடதம் கேட்டார் இராயப்பேட்டை முனிவர். செவியால் கேட்டதை மனத்தில் என்றும் அழியாமல் பதித்தார்.

மற்ற நூல் விளக்கவுரைகளையும் தவிர்க்கவில்லை திரு. வி. க. மருவூர் கணேச சாஸ்திரியார் நூல் விளக்கவுரை நடக்குமிடங்களில் எல்லாம் திரு. வி. க நிச்சயம் இருப்பார்.

தெலுங்கு அறிவுக்கு என்ன செய்தார்? திரு. வி. கவுடன் வெஸ்லி கல்லூரியில் பணியாற்றினார் ஒரு தெலுங்குப் பண்டிதர். அவர் பெயர் கிருஷ்ணமாச்சாரியார் என்பது.

---

* வாழ்க்கைக் குறிப்பு, பக். 107-கல்வி.

தெலுங்கு மொழியில் பேரறிஞர். அவருடன் தமிழ்க் கடல் தெலுங்கு மொழிக் கடலில் நீராடியது; நீந்தியது; மூத்துக் குளித்தது.

இத்துடன், கடலங்குடி நடேச சாஸ்திரியாரின் மொழி பெயர்ப்பு நூல்களும் அறிவுக் கண்களைத் திறந்தன.

## ஆங்கிலம்

மெட்ரிகுலேசனே படித்த திரு. வி. க ஆங்கில மொழியிலும் கவனம் செலுத்தினார். ஏன்? மேல்நாட்டு உள்ளக் கிடக்கைகளையும் அறிய வேண்டும் என்பதற்காக. இதற்கு உறுதுணையாக இருந்தவர்களில் சச்சிதானந்தம் பிள்ளை ஒருவர். மற்றவர் மதராஸ் டைம்ஸில் இருந்த கிளின் பார்லோ என்பவர். அத்துடனா? பிரம்ம ஞான சமாஜத்தில் அன்னி பெஸன்ட் அம்மையாரின் தொடர்பு அம்மொழியில் வல்லமையை அதிகரித்தது. கீதாஞ்சலியை இயற்றிய தாகூரின் கவிதை அவரை ஈர்த்தது.

## பாலி மொழி

ஜைன மத மடங்களில் சாக்கிய பௌத்த சங்கத்தின் நடத்துநர்களின் தொடர்பு ஏற்பட்டது. இவர்கள் மூலம் திரிபிடகமும், வேறு பாலி மொழியிலிருந்த நூல்களையும் அறிந்தார். பௌத்தத்தின் மூல நூல்களை ஆராய்ந்தார்.

அதே போலத்தான் ஜைன நூல்களையும் ஆராய்ந்து தெளிந்தார்.

அரபி மொழி ஞானம் வேண்டுமே. அதற்கென்ன செய்வது? அதற்கும் ஒருவர் ஏற்பட்டார். அவரே அப்துல் கரீம் என்பவர்.

இது போன்று அவர் கல்வி பள்ளி அறைக்குள் அடைபட்டு இருக்கவில்லை. வையமே கல்விக் கூடமாக மாறியது. அறிவுச் சுடர் விட்ட இடமெல்லாம் பறந்து சென்றார். வல்லுநர் தம் வாய்மொழி கேட்டார்; அவை தம் நினைவை

விட்டு அகலாது மனத்தில் பூட்டி வைத்தார். சமயம் வரும் போது கல்வி திடீரென குதிப்பாள்; சிரிப்பாள்; கும்மாளம் போடுவாள்.

தகுதிகளைத் தேடி, தெரிந்து, உணர்ந்து, தெளிந்து, மனத்தில் நிலையாக நிறுத்தி இருத்தியதாலன்றோ இன்று திரு. வி. கவின் திறனை பற்பல துறைகளில் காண்கிறோம்!

## கற்றலும் கேட்டலும்

அவர் என்ன கூறுகிறார் கேட்போமா?

'யான் கற்றன சில; கேட்டன சில. இரண்டும் எனக்குச் செல்வம் ஆயின. பொருட் செல்வம் பெறாத எனக்குக் கல்விச் செல்வம் சிறிது வாய்த்தது. இச்செல்வத்தை யான் பெறாதிருப்பேனேல் என் வாழ்வு என்னவாகியிருக்கும்? கல்விச் செல்வம் என்னை தொண்டனாக்கிற்று; தமிழ்த் தொண்டன் ஆக்கிற்று!

'யான் பெற்ற கல்விச் செல்வம் பல மொழிப் பொருள் களினின்றும் திரண்டது. பல மொழிக் கருத்துக்கள் என் உள்ளத்தில் ஊறாத முன்னர் எனக்குத் தமிழ்க் காவியங்கள் வழங்கிய காட்சி ஒரு விதம்; ஊறிய பின்னர் வழங்கிய காட்சி வேறுவிதம்.'*

தமிழ் மொழியைத் தவிர பிற மொழிகளை ஏன் கற்க வேண்டும்? கூடாது, கூடாது! அது நம் தாய்மொழிக்கு இழிவு செய்வதாகும் என்று வாதிட்டுப் போரிடும் இக்காலத்திலே, அந்தப் பிரச்சினைக்கு திரு. வி. க என்ன தீர்வு கூறுகிறார் பார்ப்போமா?

## மணிவிழா முடிவுரை: பிணக்கு ஏன்?

''வடமொழி தென்மொழிப் பிணக்கு நாட்டில் எழும்பியுள்ளது. அப்பிணக்கு இப்பொழுது பொது மக்களிடை பரவி வருகிறது.''

* வாழ்க்கைக் குறிப்பு, பக். 116.

"வடக்கு மொழி வடமொழி என்றும், தெற்கு மொழி தென்மொழி என்றும் பொருள் வழங்கப் படுகின்றன. எனக்குத் தோன்றும் பொருள் வேறு. வடமொழி ஆலமரத்து மொழி என்றும், தென்மொழி அழகும் இனிமையும் பொருந்திய மொழி என்றும் எனக்குத் தோன்றுகிறது."

"வடமொழியும் நமது நாட்டு மொழி-தென் மொழியும் நமது நாட்டு மொழி என்பது என் கருத்து. எல்லாத் தாய் மார்கட்கும் ஒரு நா; நம் தாய்க்கு இரண்டு நா."

"தமிழர் ஒரே மொழி பயிலல் வேண்டும் என்னும் நியதி இல்லை; பல மொழி பயிலலாம்; தமிழுடன் வடமொழி பயிலலாம்; அராபி பயிலலாம்; ஆங்கிலம் பயிலலாம்; பிரெஞ்சு பயிலலாம்; லாத்தீன் பயிலலாம்; பிறவும் பயிலலாம். பல மொழிப் பயிற்சி, தாய்மொழிக்கு ஆக்கந் தேடுவதாகும். நச்சினார்க்கினியர் வடமொழி பயின்ற தமிழர். அவர் உரையில் தமிழ் மணங்கமழ்தல் கண்கூடு. பரிமேலழகர் வடமொழியில் பெரும் புலவர். அவர் உரைக்கண் தமிழ்த்தாய் கூத்தாடுதல் வெள்ளிடை மலை. சிவஞான முனிவர் வடமொழிக் கடலையும் தென்மொழிக் கடலையும் உண்ட பெருங் காளமேகம். அவர் உரை நடையில் தமிழ் அன்னையின் திருவோலக்கம் புலப்படுகிறது. என்முன் வீற்றிருக்கும் மீனாட்சி சுந்தரனார் பல மொழிப் புலவர். அவர்தம் பல மொழிப்புலமை தமிழுக்கு எவ்வளவு நலஞ் செய்கிறதென்பது நமக்குத் தெரியும். ஆதலின் வடமொழி பயின்றால் தமிழ் மாண்டா போகும்? தமிழ் ஆற்றலில்லாத மொழியா? தமிழ் கன்னியாயிற்றே. வட மொழியும் பயிலலாம்; பிற மொழியும் பயிலலாம். தமிழ் மொழியின் செழுமையை மட்டுங் காத்தல் வேண்டும். தாய் மொழி நலம் பேணிப் பல மொழி பயில்வதை ஒரு கடமை யாகவுங் கொள்ளலாம். அதனால் தமிழ்த்தாய்க்குக் கேடு நேராது. நேருமாயின், தமிழ் வீரம் வாளா கிடக்குமோ? ஆகவே வடமொழி மீது காழ்ப்புக் கொள்ளாது தமிழுக்கு ஆக்கந் தேடலாம்.*

---

* வாழ்க்கைக் குறிப்பு, பகுதி II, பக். 976.

"பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து"

—திருக்குறள்

திரு.வி.க வாழ்க்கைக் குறிப்பிலே என்ன காண்கிறோம்? அவர் பரந்த மனத்தைக் காண்கிறோம். பிறரைப் பாராட்டும் பெருந்தன்மையைக் காண்கிறோம். தம்மைப் பற்றி மட்டுமே பறை சாற்றா சிற்றியல்பினைக் காண்கிறோம். தமக்கு உதவி செய்தவர்; அறிந்தவர்; பிரபலமானவர்; தம்மிடம் பயின்றவர் என்ற பாகுபாடு ஏதுமின்றி எல்லோரையும் குற்றங் காணாது குறை கூறாது போற்றியிருப்பதைக் கண்டு எவ்வளவு வியப்படைகிறோம்! தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர் முதல் பெரிய அறிஞர் பலர் போற்றப் படுகின்றனர். சாதி, மதம் என்ற வேற்றுமை சிறிதுமின்றி 'அனைவரும் ஒன்றே!' என்று போற்றும் அரிய குணத்தைக் காண்கிறோம். அதே சமயம் தம்மிடம் பத்திரிகைத் தொழில் கற்க வந்த உதவி ஆசிரியர்களை அவர் மறந்தாரில்லை. தம்மிடம் உதவி ஆசிரியராகப் பணிபுரிய வந்த இளைஞர்களை அவர் உதாசீனம் செய்யவில்லை; ஒதுக்கவும் இல்லை; எள்ளியாடவும் இல்லை. இத்தகைய பெரிய மனம் திரு.வி.க அன்றி வேறு யாருக்கு வரும்?

"'நவசக்தி'யை மீண்டும் வாரப் பதிப்பாகவே தாண்டவம் புரியச் செய்தேன். அப்பொழுது 'நவசக்தி' ஆசிரியக் கூட்டத்தில் சக்திதாஸ் சுப்ரமணியமும், நேமம் கிருஷ்ணசாமியும் சேர்ந்தனர். கிருஷ்ணசாமி மீண்டும் பள்ளிக்குச் செல்ல 'நவசக்தி'யினின்று விலகினார். இராம நாதனும் அரங்கசாமியும் வந்தனர். 'நவசக்தி' சமதர்ம சன்மார்க்க மயமானாள். எனது நீண்ட கால விருப்பம் ஒருவாறு நிறைவேறியது. காங்கிரஸ் மந்திரிசபை அமைந்த சமயத்தில், 'நவசக்தி' நல்ல தொண்டு செய்தாள்."

'இராமநாதன் சமதர்மத் தொண்டுக்கென்று இலங்கை நோக்கினார்.'*

* திரு.வி.க வாழ்க்கைக் குறிப்பு, பக். 295.

சக்திதாஸ் சுப்ரமணியன், அவரிடம் பத்திரிகை ஆசிரியப் பயிற்சி பெற்ற உதவி ஆசிரியன்; அவரே அப் பத்திரிகையின் ஆசிரியனாகவிருந்து ஆற்றிய தொண்டினை புகழக்கூடிய ஒருவர் இருப்பாரேல், திரு. வி. கவைத் தவிர, அது வேறு யார்?* ஓர் இளைஞனைப் புகழும் திரு. வி. கவின் உள்ளம் எத்துணை பெரியது!!!

ரா. கிருஷ்ணமூர்த்தி, பிற்காலத்தில் 'கல்கி' ஆசிரியராக இருந்து பேரும் புகழும் பெற்றவர். அவரும் திரு. வி. க விடம் பயிற்சி பெற்றவரே. அத்தகைய பெரும்புள்ளிகளைப் பற்றி மட்டும் எழுதி மற்றவரை மறந்திருக்கலாமே! ஆனால் திரு. வி. கவின் உயர்ந்த உள்ளம் அதற்கு இடம் தந்ததா? இல்லையே!

## மணிவிழா வேண்டாம்!

1942—திரு. வி. கவுக்கு மணிவிழா கொண்டாட நினைத்த அந்த இளைஞனை (சக்திதாஸ் சுப்ரமணியனை) திரு. வி. க எவ்வாறு அன்புக் கட்டளையிட்டு தடை விதித்தார் பார்ப்போமா?

''ஓராண்டுக்கு முன்னரே (1942) சக்திதாஸ் சுப்பிர மணியத்தின் விரைவு 'நவசக்தி'யில் எனது மணிவிழா வருகையைக் குறித்து மணியோசை எழுப்பியது. அச்சமயம் 'நவசக்தி'யில் சுத்தானந்த பாரதியார் வாழ்த்து வெளி வந்தது. யான் 'நவசக்தி' நிலையம் போந்து 'என்னை அறியாமல் மணிவிழாவைக் குறிப்பிட்டதைப் பற்றி வருந்து கிறேன்; இனி அதை வலியுறுத்தாது விடுக' என்று வற்புறுத்தினேன். சுப்ரமணியம் என் வற்புறுத்தலுக்குச் செவி சாய்த்தனர்.''**

ஆனால் மற்றவர் வாளாயிருப்பரோ? மணிவிழாவைக் கொண்டாட வேண்டும் என்று நாரண துரைக்கண்ணனார்

* முன்குறிபிட்ட நூல், பக். 296.
** திரு. வி. க வாழ்க்கைக் குறிப்பு-II, பக். 968.

போன்றோர் வற்புறுத்தினர். திரு.வி.க அதற்கு இணங்கியே தீர வேண்டியிருந்தது.

மணிவிழா பற்றிய முழக்கம் பத்திரிகைகளை நிரப்பின.

திரு. வி. கவின் மனநிலை யாது? ''அம்முழக்கம் என் மண்டையைக் குடைந்தது''* என்கிறார் இராயப்பேட்டை முனிவர்.

இது போன்று எந்தவித விளம்பரமும் வேண்டாம் என்று சொல்கிறவர், எத்தனை பேர்! எந்தவித வசதியும் வேண்டாம் என்று ஒதுக்கியவர் எத்தனை பேர்! வறிய நிலையிலும் 'பணம் வேண்டாம்!' என்று உதறிய பெருந்தகையோர் எத்தனை, எத்தனை!

இவைகளைச் செய்யக் கூடியவர்க்கு நெஞ்சுரம் தேவை; பற்றின்மை தேவை; தன்னடக்கம் தேவை. இவையனைத்தும் பெற்ற ஒரே மனிதகுல மாணிக்கம் திரு. வி. க.

## குணம் நாடி குற்றம் நாடி...

திரு. வி. க கொள்ளையளவில் ஈவேராவுக்கு மாறுபட்டவர். இந்த கொள்கைப் போர் இருவர் பத்திரிகைகளிலும் நடந்தன. இரண்டும் தீப்பொறி கக்கும்; நாயக்கர் சீறி சீறி விழுவார்; திரு.வி கவோ தம் பத்திரிகையில் பதிலடி கொடுப்பார்.**

இக்கொள்கை வேற்றுமை திரு.வி.கவின் சமநோக்கை பாதிக்கவே இல்லை. ஈவேரா பற்றி முழுமையாக அறிய வேண்டுமானால், அவர்தம் அரிய குண நலன்களை அறிய வேண்டும் என்றால் திரு. வி. கவின் வாழ்க்கைக் குறிப்பை ஊன்றிப் படிக்க வேண்டும் அதில் பெரியார் பற்றி நாம் அறியும் புதிய செய்திகள் தான் எத்தனை எத்தனை!!

---

* முன் குறிப்பிட்ட நூல், பக். 973.

** குடியரசு தாக்கல், பக். 388-வாழ்க்கைக் குறிப்பு I. வாழ்க்கைக் குறிப்பு I, பக். 434.

"தூத்துக்குடி மாசிலாமணிப் பிள்ளை ஒரு தீர்மானத்தை எடுத்துப் பேசிய போது இடையில், 'பிராமணக் குறும்பு' என்றொரு சிறு பாணம் பெய்தார். அஃது இராமசாமி நாயக்கரைப் புண்படுத்தியது. அந்நாளில் நாயக்கருக்கு வ கு ப் பு வ ா த ம் நெருப்பாயிருந்தது. இப்பொழுதோ?*

இது நடந்தது 1922 ஆம் ஆண்டு தூத்துக்குடி மகாநாட்டில்.

## கலங்காத நெஞ்சம்

மற்றுமோர் சுவையான நிகழ்ச்சி:

8. 3. 1924 ஆம் ஆண்டு மந்தை வெளியில் நாயக்கர் ஒரு சொற்பொழிவாற்றினார். இராச நிந்தனை என்று கைது செய்யப்பட்டார், வழக்கு நடந்தது. ஓரிரவு. இராயப்பேட்டையில் குகானந்த நிலையத்தில் நாயக்கர் ஒரு திண்ணையில் தூங்கினார். மற்றொரு திண்ணையில் திரு. வி. க உறங்கினார்.

திடீரென இரவு பதினொரு மணிக்கு மழை தொடங்கியது.

திரு வி.க எழுந்தார்; நண்பரை எழுப்பினார்; புரட்டினார்; பெரியார் கண் விழிக்கவேயில்லை. மழையிலே ஆழ்ந்த தூக்கம். ஒரு மணி நேரமா? இரண்டு மணி நேரமா? இல்லை, இல்லை! ஐந்து மணி நேரம்! அவர் அப்போதிருந்த சங்கடமான சூழ்நிலை யாது? மிகவும் கொடுமையான 124-ஏ சட்டப்படி வழக்கு நடந்துக் கொண்டிருந்த காலம். அக்கலக்கமான சூழ்நிலையிலும் நாயக்கர் மனங்கலங்கவில்லை.

---

* திரு.வி.க—வாழ்க்கைக் குறிப்பு, பக். 347.

உறக்கம்—கவலையற்ற உறக்கம் அவரை ஆட்கொண்டதென்றால் அவர் மனத்துணிவுக்கு வேறு சான்றும் தேவையோ!

இதுவன்றோ அவர் கலங்காத நெஞ்சத்திற்குச் சிறந்த அத்தாட்சி?

காலை ஆறு மணிக்கு எழுந்தார் வைக்கம் வீரர்.

'மழை பெய்தது தெரியுமா?' என்று நண்பரை வினவினார் திரு.வி.க.

''மழையா!'' என்றார் நாயக்கர்.

எப்படி?

## கொள்ளத் தக்கன

கொள்ளத் தக்கன, போற்றத் தக்கன எங்கேயிருந்தாலும் ஏற்க சிறிதும் தயங்க மாட்டார் திரு.வி.க. அவருக்குப் பெருமை தருவதும் அஃதே.

## வைக்கம் வீரர்

வைக்கம் சத்தியாகிரகத்தின் போது பெரியார் நடத்திய தீண்டாமைப் போராட்டம் பற்றி 'வைக்கம் வீரர்' என்று தலைப்பீந்து நாயக்கரின் தியாகத்தை வியந்து, வியந்து 'நவசக்தி'யில் வெளி வந்த எழுத்தோவியங்களை யாரே மறக்க முடியும்? மறுக்க முடியும்?

எவரேனும் இவைகளை 'ஒன்றுமில்லை சும்மா' என்று உதாசீனமாகத் தள்ளி விட முடியுமா?

'குடியரசு' விட்ட சொல்லம்புகள் எத்தனை, எத்தனை!

அவ்வாறிருந்தும், வைக்கம் வீரர் பற்றி ஆணித்தரமாக எழுத இவரால் எவ்வாறு முடிந்தது?

இது எதைக் காட்டுகிறது. திரு.வி.கவின் சமநோக்கைப் பறைச் சாற்றுகிறது. 'சமநோக்கு' எளிதோ?

அத்துடனா?

வைக்கம் வீரரைப் புகழவும் புகழ்ந்தார், திரு,வி.க.

'வைக்கம்வீரர்'க்குப் பலதிற அணிகளுண்டு. அவைகளுள் ஒன்று வைராக்கியம். 1920 ஆம் ஆண்டிலே சென்னையில் கூடிய மகாநாடொன்றுக்கு டாக்டர் வரதராஜுலு நாயுடுவும் இராமசாமி நாயக்கரும் போந்தனர். இருவரும் இராயப்பேட்டை 'பவானி பாலிக பாடசாலை'யில் தங்கினர்; இரவில் டாக்டர் சுருட்டுப் பிடித்தனர்; நாயக்கர் சிகரெட் பிடித்தனர். இரண்டு புகையும் என்னை எரித்தன. சிகரெட்டை விட வேண்டுமென்ற உறுதி நாயக்கருக்கு எப்படியோ உண்டாயிற்று. சிகரெட் பயிற்சி நாயக்கரை விட்டு ஓடியது, வைராக்கியம் என்ன செய்யாது.*

இராமசாமி நாயக்கர் புலால் உண்பவர். அவ்வுணவை அவர் அவசியமாகவுங் கொள்ளவில்லை; அநாவசியமாகவுங் கொள்ளவில்லை. நாயக்கரும் யானும் பலப்பல நாள் பலப்பல இடங்கள் சுற்றியுள்ளோம். வீரர் மனம் புலால் மீது சென்றதே இல்லை. அவர் புலால் உண்பதை என் கண் இன்னுங் கண்டதில்லை.**

நாயக்கர் பெயர் சொன்னாலே அவர் சாதி வெறி கொண்டவர் எனத் தூற்றுவோர் பலர். தமிழ் முனிவரின் கருத்து என்ன?

''நாயக்கர் சாதி வேற்றுமையை ஒழித்தவர்; அதை நாட்டினின்றும் களைந்தெறிய முயல்பவர். சாதி வைதிகர்

---

* வாழ்க்கைக் குறிப்பு, பக். 436.

** வாழ்க்கைக் குறிப்பு, பகுதி I, பக். 437.

எவரேனும் நாயக்கர் வீட்டுக்குப் போதருவரேல், அவர் கருத்து வழியே நடந்து அவருக்கு வேண்டுவ செய்வர். இதை யான் கண்ணாரக் கண்டிருக்கிறேன்.*

## கல்லும் கரைந்தது!

அஞ்சா நெஞ்சம் படைத்த வைக்கம் வீரர் அழுதார்!

நாயக்கராவது அழுவதாவது? அழுதார்! இது உண்மை, உண்மை, முற்றிலும் உண்மை!!!

1942 ஆம் ஆண்டு. ஜெனரல் ஆஸ்பத்திரியில் இராமசாமிப் பெரியார் படுக்கையில் படுத்திருந்தார். அவரைக் காண சர்க்கரைச் செட்டியாரும், சண்முகாநந்த சாமியும், சானகிராம பிள்ளையும், திரு. வி. கவும் சென்றனர்.

"யான் அவர் கட்டிலிலே நெருங்கி அமர்ந்தேன். நாயக்கர் என் கையைப் பற்றிக் கதறினார். என் குட்டை நனைந்தது. இருவருங் கருத்து வேற்றுமையுடையவர். போரிட்டவர் நாயக்கர் கண்கள் ஏன் முத்துக்களை உகுத்தன? அக்காட்சி கண்டவர், 'இங்கே பலர் வருகிறார்; போகிறார். எவரைக் கண்டும் நாயக்கர் அழுதார் இல்லை, இவரைக் கண்டதும் அவருக்கு அழுகை ஏன் பெருகியது?' என்று ஒருவரோடொருவர் பேசியது என் காதுக்கு எட்டியது"

அழுகைக்கு காரணம் என்ன?**

## எல்லாம் நன்மைக்கே

"காஞ்சி மகாநாட்டிலே நாயக்கருக்கும் எனக்கும் உற்ற கருத்து வேற்றுமை காரணமாக அவர் 'குடியரசு' எய்த சொல்லம்புகள் பொறுமையை என்பால் நிலை பெறுத்தின. சொல்லம்புகளை யான் தாங்கப் பெருந்துணைச் செய்தவர் நண்பர் நாயக்கர்.***

---

* அரசியல்-பக். 438 - திரு. வி. கவின் வாழ்க்கைக் குறிப்புகள்

** திரு.வி.க வாழ்க்கைக் குறிப்புக்கள், பக். 438.

*** அரசியல், பக். 437-திரு.வி.க வாழ்க்கைக் குறிப்பு கள்.

நட்பு வேறு, கருத்து வேற்றுமை வேறு!

பெரியாரின் துணைவியார் நாகம்மை காலமடைந்தார். அவ்வம்மையார் படத்தைத் திறந்து வைத்தவர் யார் தெரியுமா?

'குடியரசு' சொல்லடி பெற்ற வீரர்; பெரியார் தாக்குதல் பலவற்றிற்கு ஈடுகொடுத்த அஞ்சா நெஞ்சர் திரு.வி.க.

ஈரோட்டில் இந்த படத்திறப்பு நடந்தது.

## சீர்திருத்தச் செம்மல்

''பெண்மை ஓங்குக! பெண்மையே கடவுள்!'' என்று பேச்சளவில், சீர்திருத்தம் முழங்கியவர் சிலர்; முழங்குகிறவர் பலர். பேச்சளவில், எழுத்தளவில் நிற்கும் சீர்திருத்தவாதிகள் எத்தனையோ பேர். நடைமுறையில் ஏற்பவர் எத்தனை பேர்?

கலப்பு மணத்தை ஆதரித்து வீராவேசமாகச் சொற் பொழிவாற்றுபவர் எத்தனை, எத்தனை பேர்! தம் வீட்டின் அருகே நடக்கும் கலப்புத் திருமணங்களில் கலந்து கொண்ட பிரமுகர் எத்தனை பேர்!

திரு.வி.க **'பெண்ணின் பெருமை'** நூலை எழுதிய போது அவரைப் போற்றியவர் இலையென்றே சொல்லலாம்; தூற்றியவரோ பலர்.*

பெண்ணுலகின் மாசுகளை சட்டம் மட்டும் களையுமா? ஒருக்காலும் களைய இயலாது. சமூகமும் சட்டத்துடன் இணைந்து, முற்பட்டு உழைத்தால் தான் தீமைகளை அகற்ற முடியும். சமூகத்தின் துணையில்லா சட்டம் வெறுஞ் சட்டமே. சீர்திருத்தத்திற்கு வழிகோலாது என்கிறார் திரு.வி.க.

---

* வாழ்க்கைக் குறிப்பு-II, பக். 668.

## செயல் வீரர்

ஆறே ஆண்டுகள் இல்வாழ்க்கை நடத்தி மனைவியை இழந்த திரு.வி.க மறுமணத்திற்கு இசைந்தாரா? இல்லை. ஏன்?

''என் மனைவி எங்கே மறைந்தாள்? மறைந்தது அவளது பருவுடல். அவளது நுண்மை அன்பாகி என்னில் ஒன்றி, என்னைத் தொண்டனாக்கி யான் ஆற்றும் பணிக்குத் துணை புரிகிறது''* என்கிறார் திரு.வி.க.

## எதிர்ப்பிடை ஆதரவு

திரு.வி.க கலப்பு மணத்தை ஆதரித்தார்.

அருண்டேல் ருக்மிணி தேவி திருமணம் உறுதி செய்யப் பட்டது.

அவ்வளவே! கிளர்ச்சி, கிளர்ச்சி, எங்கும் கிளர்ச்சி!

'இந்து' பத்திரிகை சீறியது; சுதேசமித்திரன் வீறியது.

இத்துணை எதிர்ப்புகளையும் கண்டு அஞ்சாது ஆதரவு அளித்தவர் ஒருவரே. அவரே திரு.வி.க. ஆதரவு தந்த பத்திரிகையோ 'தேச பக்தன்.'

இத்திருமணத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து சீறிய சிலர் நேரடியாக திரு.வி.க.வின் பத்திரிகைக் கூடத்திற்குச் சென்றனர்; அவரைத் திட்டித் தீர்த்தனர்; கடற்கரையில் கூட்டங்கள் கூட்டினர். அன்னிபெஸண்ட் அம்மையாரையும் திரு.வி. கவையும் வசை பாடினர்.

திரு.வி.க அஞ்சி, ஒளிந்தாரா? இல்லை, இல்லை! அருண்டேல் ருக்மிணி திருமணத்திற்குப் பின் சென்னை சங்கத்திற்கு அழைத்தார். வாழ்த்தும் கூறினார்.

---

* வாழ்க்கைக் குறிப்பு, பக். 752.

இவர்கள் திருமணத்திற்கு எதிர்ப்பு ஏன்?

ருக்மிணி அம்மையார் பிராம்மணர். அருண்டேல் வெள்ளையர்!

நிறம் என்ன செய்யும்?

அவ்விருவரின் குருதியின் நிறம் ஒன்றே அல்லவோ?

அவர் ஆதரித்த மணங்களுள் குறிப்பிடத் தக்கன இரண்டு. ஒன்று சச்சிதானந்தம் பிள்ளையின் மகனின் திருமணம்.

மற்றொன்று பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தரின் மணமும் ஆகும்.

இவர் நிகழ்த்திய கைம்மை மணங்களும் பல, பலப்பல!

## திரு.வி.க. போற்றிய பெண்கள்

பெண்கள் சீர்திருத்தங்களுக்கு அறைகூவி அழைத்த பெண்மணிகளை தமிழ் அண்ணல் மறந்தாரில்லை. சீர்திருத்த மேடையில் சூறாவளி பிரசாரம் செய்த வீராங்கனை அலர்மேல் மங்கையை எவ்வளவு புகழ்ந்துள்ளார்.

கல்வி கேள்விகளிற் சிறந்தோரை மட்டும் போற்ற வில்லை தமிழ்த்தென்றல். அன்னி பெஸன்ட் அம்மையாருடன் அசலாம்பிகை அம்மையாரும் போற்றப் படுகிறார். தமக்குப் பாடம் சொன்ன அன்னபூரணி அம்மையாரை கல்யாண சுந்தரனார் ஏற்றி போற்றியிருக்கிறார். பட்டம் பதவி பெற்ற E. I. சொக்கம்மா, இராஜேஸ்வரி அம்மையார், கிருஷ்ணவேணி அம்மையார், E. T. பத்மாவதி அம்மையார் ஆகிய அனைவருமே அவர்தம் வாழ்க்கைக் குறிப்பில் இடம் பெறுகின்றனர்.

இல்லத்தரசிகளுக்கும் தனிச் சிறப்பு நல்கியிருக்கிறார் தமிழ்க்கடல். திருவண்ணாமலை மகாநாட்டுக் கூட்டத்தில் பங்கேற்ற நாகம்மை; மூவலூர் இராமாமிருதம் அம்மையார்;

இசை வல்லுநர் தாமரைக்கண்ணி அம்மையார்; பார்வதி அம்மையார் ஆகியோர் பற்றி அவர்தம் 'வாழ்க்கைக் குறிப்புக்கள்' மூலம் அறிகிறோம்.

டாக்டர் முத்துலட்சுமி அம்மையாரைப் பற்றி எவ்வளவு சிறப்பாக எழுதியிருக்கிறார்!

''டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் சென்னைச் சட்டசபையில் ஒரு மசோதா கொண்டு வந்தார். அது வழுக்கி வீழ்ந்தவரின் முன்னேற்றத்தைக் குறிக்கொண்டது. அச்சசோதரிமார் கோயிலில் பொட்டு கட்டுதலை நிறுத்தி மணவாழ்க்கையராதற்கு வழிகோலத் துணைபுரிவது. அம்மசோதாவுக்கு எதிர்ப்புக்கள் பிறந்தன. எங்கெங்கிருந்து பிறந்தன? குருட்டு நம்பிக்கையுடையவரிடத்திருந்து மட்டும் பிறக்கவில்லை; தேசீய பத்திரிகைகளிடம் இருந்து பிறந்தன; தேசீயவாதிகளிடமிருந்து பிறந்தன; சீர்திருத்தக்காரென்று தம்மை பறைச் சாற்றியவரிடத்திருந்தும் பிறந்தன.''*

தமிழ்க்கடல் என்ன செய்தார்? 'நவசக்தி' வாயிலாக முத்துலட்சுமி அம்மையார் மசோதாவுக்கு வரவேற்புக் கூறினார். கூட்டங்களிலும் அந்த மசோதாவை ஆதரித்துப் பேசினார்.

சாரதா மசோதாவுக்கும் எழுந்த எதிர்ப்புக்கள் கொஞ்சமா நஞ்சமா? இந்த பெரும் எதிர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆக்கம் தந்தவர் தமிழ் முனிவரே!

## திரு. வி. கவும் ஏனையோரும்

திரு. வி.க. தன்னைப் பற்றி என்ன கூறுகிறார்? தனக்கும் ஏனையோருக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் யாவை?

''யான் உலகன்; இந்தியன்; தமிழன்; தனி மனிதன். தனி மனிதன்—தமிழனாக—இந்தியனாக—உலகனாக

* திரு. வி. க வாழ்க்கைக் குறிப்புக்கள், பக். 737.

விரிந்து பெருகுகிறேன். யான் தமிழ்நாட்டில் பிறந்தவன்; தமிழ்நாட்டிலிருந்து பணி செய்கிறேன். அத்தொண்டுகளில் தமிழ் நாட்டுக்குத் தக்கவை தமிழ் நாட்டுக்கும், இந்தியாவுக்கு உரியவை இந்தியாவுக்கும், உலகுக்குப் பொருந்தியவை உலகுக்கும் பயன்படும். எனக்கு வகுப்பு வெறி, நிறவெறி முதலியன நஞ்செனத் தோன்றும். இவை களை ஒழிக்க வேண்டி யான் சன்மார்க்கத் தொண்டாற்று கிறேன். இக்கருத்துடைய என்னை வகுப்புவாதிகளும், அவர் போன்ற மற்றவர்களும் எள்ளுகிறார்கள்; தாக்குகிறார்கள். என் உழைப்பெல்லாம் ஆரியர்க்குப் போகின்றன என ஓலமிடுவோரும் உளர். ஐயோ பாவம்! ஆரியர் யார்? தமிழர் யார்? ஹிந்து யார்? முஸ்லீம் யார்? இந்தியர் யார்? இங்கிலீஷார் யார்? கீழ் நாட்டவர் யார்? எல்லாரும் மனிதரே, எல்லாரையும் மனிதரென்று உணரச் செய்வதே சிறந்த சீர்திருத்தத் தொண்டு. மற்றையது அடவி காட்டுக் கூக்குரல். கூக்குரலிடுவோர் வசை மொழிகளை ஏற்றுக் கொள்வதும் எனது தொண்டின் கூறுகளில் ஒன்று.''*

## தொழிலாளர் தளபதி

இங்கிலாந்தின் தொழிற்கட்சித் தலைவர் கீழ் ஹார்டி என்பவர். அவர்தம் தொடர்பு ஏற்பட்டது திரு. வி. கவுக்கு. அவருடைய வரலாறு தமிழ் அண்ணலின் நெஞ்சைத் தொட்டது; தொழிலாளர் உலகைப் பற்றிச் சிந்திக்கச் செய்தது. தொழிலாளர் பற்றிய நூல்களையும் ஆராயத் தூண்டியது.

வெஸ்லி கல்லூரியில் அவர் தமிழாசிரியராக இருந்த போது ஒரு நாள் ஒருவர் அவரிடம் வந்தார். யார் அவர்?

செல்வபதி செட்டியார்.

திரு. வி. கவை வெங்கடேச குணாமிர்த சபையில் சொற்பொழிவற்ற அழைக்கவே வந்தார். அச்சபையில்

* வாழ்க்கைக் குறிப்புக்கள், பக். 844.

பெரும்பாலோர் தொழிலாளர்களே. அவர்களே இக்கூட்டங்களை நடத்தினர் என்றால் மிகையாகாது.

இங்கே சொற்பொழிவாற்றினார் தமிழ்த் தென்றல்.

தமிழாசிரியர் பதவி விடுத்து 'தேச பக்த'னின் ஆசிரியப் பீடத்தில் அமர்ந்தார் திரு.வி.க. திவான் பகதூர் கேசவப் பிள்ளையுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் பெற்றார்.

கேசவப் பிள்ளை மில் தொழிலாளர் குறைகள் பற்றி கட்டுரைகள் பல எழுதி வந்தார். இவை ஆங்கில பத்திரிகை 'இந்தியன் பேட்ரியட்'டில் வெளி வந்தன.

அவைகளில் சிலவற்றை தமிழில் மொழி பெயர்த்து 'தேசபக்தனில்' வெளியிட்டார் திரு.வி.க.

## தொழிலாளர் இயக்கத்துக்கு வித்து

1918 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இரண்டாம் தேதி சனிக்கிழமை ஐங்காராமியம்மாள் பங்களாவில் 'வெங்கடேச குணாமிர்த வர்ஷிணி சபை' சார்பில் ஒரு கூட்டம் கூட்டப் பட்டது.

பல்லாயிரக்கணக்கான தொழிலாளர் கூடியிருந்தனர்.

திரு.வி.க இக்கூட்டத்தில் மேற்கு நாட்டில் தொழிலாளர் இயக்கம் தோன்றிய வரலாற்றையும், பொருளாதார விடுதலையின் மாண்பையும் விவரித்தார். தொழிற்சங்க இயக்கம் ஒவ்வொரு நாட்டிற்கும் மிக்க அவசியம் என்று வலியுறுத்தினார்.

தொழிலாளர் உற்சாகம் கொண்டனர்; அது கரை புரண்டோடியது. தொழிலாளர் சங்கம் எப்போது அமைக்கப் படும் என்று ஆவலோடு கேட்கவாரம்பித்தனர்.

கேசவப் பிள்ளையை தொழிற் சங்கம் அமைக்க வேண்டினார் திரு.வி.க.

''நான் வெளியூரில் இருப்பவன். அடிக்கடி சென்னைக்கு வருவேன்; போவேன்; சென்னையிலேயே வசிக்கும் ஒருவரையே தலலவராகக் கொள்ளல் நன்று. அத்தகையவர் வாடியா. அவரையே தலைவராகக் கொள்ளுங்கள்'' என்றார் கேசவப் பிள்ளை.

வாடியா தியாசோபிகல் சங்கத்தைச் சேர்ந்தவர். அன்னி பெசன்ட் அம்மையாரின் வலக்கை என விளங்கியவர்.

அவரை அணுகினர் தம் விண்ணப்பத்துடன்.

அவரும் இணங்கினார்.

## தொழிலாளர் சங்கம்—தோற்றம்

சென்னையிலே முதல் தொழிலாளர் சங்கம் 1918 ஆம் ஆண்டு ஏப்ரல் 27 தேதி தோற்றுவிக்கப் பட்டது. இச்சங்கத்திற்கு வாடியா தலைவர்; திவான்பகதூர் கேசவப் பிள்ளையும் திரு.வி.கவும் உதவித் தலைவர்களாகத் தேர்ந் தெடுக்கப் பட்டனர்.

இவ்வாறு காணப்பட்ட தொழிலாளர் சங்கங்கள் பெருகின; விரிந்தன, வேரூன்றின. இவ்வளவு குறுகிய காலத்தில் எப்படி வேரூன்றியது? இதற்குக் காரணம் திரு.வி கவின் நாவன்மையே! அயராத அவர்தம் உழைப்பை உரமாகக் கொண்டு ஆங்காங்கே சங்கங்கள் அமைக்கப் பட்டன.

இவ்வாறு தென்னாட்டில் எழுந்த தொழிலாளர் விழிப்புணர்ச்சி காட்டுத்தீபோல் நாடு எங்கும் பரவியது. பம்பாய், கான்பூர், கல்கத்தா, நாகபுரி முதலிய பல இடங்களிலும் தொழிலாளர் சங்கங்கள் தோன்றின. தொழிற் சங்கங்களில் ஈடுபட்டோர் பலர்; பற்பல அரசியற் கட்சியினர்.

## இயக்கத்திற்கு எதிர்ப்பு

தொழிற் சங்கம் பிறந்தது. சில வாரங்களுக்குள் எதிர்ப்புக்களும் பாய்ந்து வந்தன. சென்னை கவர்னர் லார்ட் பெட்லண்ட், வாடியாவை கடுமையாக எச்சரித்தார், பத்திரிகைகளும் முதலாளிகளையே ஆதரித்தன. எல்லா வற்றிற்கும் மறுப்புத் தந்தவர் ஒருவரே. அவரே தொழிற் சங்கத் தளபதி திரு.வி.க

'நியூ இந்தியா' பத்திரிகையும் அவருக்கு ஆதரவு நல்கியது.

## தொழிற் சங்கங்களில் சமதர்ம உணர்ச்சி

ஆரம்ப காலத்திலே தொழிற் சங்கக் கூட்டங்களில் பெரும்பாலும் சம்பள உயர்வு, வேலை நேரக் குறைப்பு, தொழிலாளர் கல்வி, சுகாதாரம் ஆகியனவே பெரும்பாலும் பேசப்பட்டன. இச்சங்கங்களில் பொருளாதார சமதர்ம உணர்ச்சியை ஊட்டியவர் ஒரிருவரே. அவர்களுள் முதன்மை யானவர் திரு.வி.க.

## மத்திய மைய சங்கம்

1920 ஆம் ஆண்டு மார்ச் 21 ஆம் தேதி முதல் முறையாக மாகாணத் தொழிலாளர் மகாநாடு கூடியது. மகாநாட்டில், ''எல்லா தொழிசங்கங்கட்கும் மையமாக ஒரு மத்தியச் சங்கம் இருத்தல் வேண்டும். அச்சங்கத்தில் எல்லாத் தொழிற்சங்கங்களும் சேர்தல் வேண்டும்'' என்று கூறினார் திரு வி.க.

விளைவு?

அதே ஆண்டு ஜூலை நாலாம் தேதி மத்திய சங்கம் சென்னையில் தோன்றியது. அதன் தலைவராகத் திரு.வி.க தேர்ந்தெடுக்கப் பட்டார்.

## வேலை நிறுத்தம்

1921 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலே பக்கிங்காம் கர்னாடிக் மில் தொழிலாளர் பதின்மூவாயிரம் பேர் வேலை நிறுத்தம் செய்தனர்.

வேலை நிறுத்தம் ஒரு நாளா? இரண்டு நாட்களா? ஆ ..று மாதங்கள்

பாதுகாப்பற்ற தொழிலாளர் ஈவிரக்கமின்றி சுட்டுத் தள்ளப்பட்டனர்.

அக்கிரமத்தை எதிர்த்து அஞ்சாது நின்றார் தளபதி, தொழிலாளர் பக்கம் சேர்ந்து.

அதிகார வர்க்கம் சும்மா இருக்குமா? வேலை நிறுத்தத்தை வகுப்புக் கலவரமாக மாற்றியது, கைக் கூலிகள் உதவியுடன்.

அத்துடனன்றி, தொழிலாளர் தலைவர் திரு. வி. கவை அந்தமானுக்கு கடத்தும் முயற்சியில் ஈடுபட்டது. வதந்தியையும் பரப்பியது.

அப்போது ஆட்சியிலிருந்தவர் ஜஸ்டிஸ் கட்சியினர். திரு. வி. கவுடன் கருத்து முரண்பாடு கொண்டவரே மந்திரிகளாக இருந்தனர். என்றாலும் தன்னலமற்ற சேவையே வென்றது!

லார்ட் வில்லிங்டன் சென்னை கவர்னராக அப்போது இருந்தார். அரசு பிரதிநிதி திரு.வி.கவை எச்சரிக்கை மட்டுமே செய்ய முடிந்தது. நாடு கடத்த இயலவில்லை! ஏன்?

''1920 ஆம் ஆண்டு நிகழ்ந்த தொழிலாளர் பெருந் தொல்லையின் போது டாக்டர் நடேச முதலியார், தியாகராய செட்டியாரையும் பனகல் ராஜாவையும் தூங்க விடுவதில்லை. அல்லும் பகலும் என்னைப் பார்த்த

வண்ணமிருப்பர். ஜஸ்டிஸ் ஆட்சியிலே தொழிலாளர் தலைவர்கட்கு எவ்விதத் துன்பமும் விளைதலாகாது என்று பாடுபட்டவருள் டாக்டர் நடேச முதலியாரும் ஒருவர்.*

இவ்வாறு குறிப்பிடுகிறார் திரு.வி.க.

அது மட்டுமா?

ஸர். பி. தியாகராச செட்டியார் தலையிட்டதே காரணம்.

''திரு.வி.கவை நாடு கட்டத்தினால் ஜஸ்டிஸ் மந்திரிமார் பதவி விலகுவர் என்று திட்டவட்டமாகக் கூறிய செட்டியாரை உதாசீனம் செய்துவிட முடியுமா?

முரண்பட்ட, மாறான கருத்துக் கொண்ட ஜஸ்டிஸ் கட்சியினரை இவ்வாறு சொல்லத் தூண்டியது எது?

திரு.வி.கவின் பயன் கருதாப் பணி! ஆன்ம பலம்!

## சிறுமை கண்டு பொங்குவாய்!

1942 ஆம் ஆண்டு நடந்தது மற்றொரு வேலை நிறுத்தம். போலீஸ் புலிகள் துப்பாக்கி முனையால் அதை அடக்கப் பார்த்தது.

விளைவு? துப்பாக்கி ரவைகளைக் கக்கியது. ஏழு பேர் உயிரைக் குடித்தது தொழிற்சாலையினுள்ளே.

வெளியே உயிரிழந்தவர் இருவர்.

தொழிலாளர் நடுவே சென்று கொண்டிருந்தார் திரு.வி.க. துப்பாக்கியினின்றும் வீறிட்டுப் புறப்பட்ட ரவை ஒன்று திரு.வி.கவின் தலைக்கு மேலே உராய்ந்து பறந்து சென்றது.

---

* திரு.வி.க வாழ்க்கைக் குறிப்புக்கள்

அரசாங்கம் இறந்தவர்க்கு உதவி செய்ய மறுத்தது; விசாரணை செய்யவும் மறுத்தது. என்ன சிறுமை!

## கடைசி வேலை நிறுத்தமும் விளைவும்

1947 ஆம் ஆண்டு நாம் சுதந்திரம் பெற்ற ஆண்டு.

அதே ஆண்டு; அதே பக்கிங்காம் கர்னாடிக் மில் தொழிலாளர் பெரியதொரு போராட்டம் நடத்தினர். தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். அந்தோணி பிள்ளை நாடு கடத்தப் பட்டார்.

திரு. வி. க தலைமைப் பொறுப்பு ஏற்க வேண்டி வந்தது.

போராட்டம்; அமைதியான போராட்டமாக நடந்தது; எவ்விதக் கலவரமோ, கலகமோ இல்லை.

இதற்கு திரு.வி.கவுக்கு கிடைத்த பரிசு என்ன?

'வீட்டுக் காவல்' தண்டனை!

நெஞ்சு பொறுக்குதில்லையே! என் செய்வது?

தொழிலாளர் திரண்டு வந்தனர். கணபதி முதலித் தெருவிலிருந்து திரு.வி.க வீட்டை நோக்கி.

வீட்டு மாடியில் அமர்ந்திருந்த திரு. வி. க தொழிலாளரிடம் பேசினார். அறுபதாண்டு கடந்த அறிஞர் திரு. வி. க. குரல்கேட்டு, உருவங் கண்டு ஆறுதல் பெற்றனர் தொழிலாளர்; மீண்டும் திரும்பிப் போந்தனர்.*

அவரை அவர்கள் மறக்கவே இல்லை.

* * *

திரு. வி. க. தன் தொண்டினைப் பற்றி என்ன கருத்து தெரிவித்து இருக்கிறார்.

---

* விரிவுக்கு திரு. சக்திதாசன் சுப்பிரமண்யன் எழுதிய 'திரு. வி. க. வாழ்வும் தொண்டும்', பக். 107-118 காண்க.

சற்று பார்ப்போமா?

"இந்நாட்டில் தொழிலாளர் இயக்கந் தோன்றி இருபத்தைந்து ஆண்டுகளாகின்றன. இருபத்தைந்து ஆண்டு அனுபவம் எனக்குண்டு. புரட்சி நிகழ்ந்ததோ? இல்லை என்றே சொல்வேன். ஒரோ வழி நிகழ்ந்ததென்று சொல்லுதல் கூடும். புரட்சி ஏன் உச்ச நிலையை அடைய வில்லை? சாதி மத வெறி, சம்பிரதாயக் கட்டு, மூட வழக்க வொழுக்கம், மூர்க்கப் பிடிவாதம், முதலாளி அமைப்புக் களில் மோகம், தலைமைப் போராட்டம், விட்டுக் கொடுத்தல் இன்மை முதலிய தளைகள் புரட்சியைத் தகைந்து நிற்கின்றன என்று எனது அனுபவம் சொல்கிறது. இத்தளைகளை உடைத்தெறியத் தோன்றிய இயக்கங்கள் பலப்பல. அவைகளுள் சிறந்தது தொழிலாளர் இயக்கம்.

"புரட்சி புறத்தே முற்றும் நிகழவில்லை; ஒரோ வழி நிகழ்ந்தது; ஆனால் என் அகத்தே நிரம்ப நிகழ்ந்தது. யானும் மனிதன். என்னிடத்தும் கரடுமுரடு மூர்க்கம் முதலிய விலங்கியல்புகள் உண்டு. அவைகளை எப்படிப் புரட்டித் தள்ளுவது? அப்புரட்சிக்கு நூலாராய்ச்சி மட்டும் போதாதென்பதை என் வாழ்க்கை நன்கு உணர்ந்தது. எனது அகத்தில் புரட்சியை ஓரளவில் புரிந்தது இல்வாழ்க்கை; மற்றோரளவில் ஆற்றியவை மற்ற மற்ற இயக்கங்கள்; பெரிதும் நிகழ்த்தியது தொழிலாளர் இயக்கம். இவ்வியக்கம் எனது அகத்தில் அறப் புரட்சியைப் பெரிதும் நிகழ்த்தியதென்று உலகுக்குத் தெரிவிக்கிறேன்.

"தொழிலாளர் பல திறத்தினர். அவரொடு நெருங்கிப் பழகப் பழக விலங்கியல்புகள் ஒதுங்குகின்றன. அவை ஒதுங்க ஒதுங்கப் பொறுமையும் அமைதியும் படிந்து கொண்டே போகும். பொறுமையும் அமைதியும் படியப் பெறாதார் இயக்கத்தை விடுத்து நீங்குவது நல்லது. தொழி லாளரின் உள்நிலையைத் தெரிந்து கொள்வதற்கு வேலை நிறுத்தம் ஒரு கருவி. வேலை நிறுத்தத்தால் வெற்றி

விளைந்தால், தொழிலாளர் உள்ளம் மகிழ்ச்சியில் பொங்கும்; தோல்வி விளைந்தால், அவர் உள்ளங் கனன்று கொதிக்கும். அக்கொதிப்பு புலியெனப் பாயும்; சிங்கமென உருமும்; புயலென வீசும். இவைகளைப் பொறுமையாலும் அமைதியாலும் வெல்லுதல் வேண்டும். இதற்கு திருவள்ளுவர் நூலும், கிறிஸ்துவின் மலைப்பொழிவும், இன்ன பிறவும் செய்யுந் துணையை எழுத்தால் எழுதல் இயலவில்லை.*

வேலை நிறுத்தங்கள்போது என்ன நிகழும்? கதவடைப்புகள் வரும்; நன்மையும் தீமையும் கலப்படமாக வரும்.

அப்போது திரு.வி.க என் செய்வார்? மூழ்குவார்! எழுவார்! மூழ்கி எழ எழ பொறுமையும் அமைதியும் பெறுவார்.

"'வேலை நிறுத்த வேளைகளில் தொழிலாளர் கூட்டத்தில் குழப்பம் இருக்கும்;மேடையில் கலக்கமிருக்கும். யான் கூட்டத்துள் நுழைவேன்; மேடை மீது ஏறி நிற்பேன். பாதி குழப்பங் குறையும். வாய் திறப்பேன். மற்றொரு பாதியும் அடங்கும். உண்மை கூறி 'வேலைக்குப் போங்கள்' என்பேன். எல்லாரும் போவர். என்னுள்ளத்தில் படிந்துள்ள பொறுமையும் அமைதியும் தொழிலாளரை இணங்கச் செய்யும்."

"பொறுமையும் அமைதியும் அந்தணச் செல்வமல்லவோ? அச்செல்வத்தை தொழிலாளர் இயக்கம் வளரச் செய்ததை எனது வாழ்க்கை கண்டது. என் அகத்திலிருந்த கரடு முரடு மூர்க்கம் முதலிய விலங்கியல்புகளைப் பெரிதும் புரட்டித் தள்ளியது தொழிலாளர் இயக்கம். என்னுள் புரட்சி செய்த அவ்வியக்கம் வாழி; அதில் எனது வாழ்க்கையை நிறுத்திய ஆண்டவன் அருள் வாழி.**

---

* வாழ்க்கைக் குறிப்புக்கள், பக். 583, 584.

** வாழ்க்கைக் குறிப்புகள், பக். 585. திரு. வி. க அரசியல், பத்திரிகை தொண்டுகள் பற்றி திரு. சக்திதாசன் சுப்ரமண்யன் எழுதிய 'திரு.வி.க வாழ்வும் தொண்டும்' படிக்க.

# 8

# வரலாற்று நூல்

## இந்தியாவும் விடுதலையும்

வரலாற்று நூல்கள் எத்தனையோ உண்டு. அதிலும் இந்தியாவைப் பற்றி ஆங்கிலேயர் வெளியிட்ட நூல்கள் பலப்பல. இந்திய வரலாற்று ஆசிரியர்களும் ஏராளம், ஏராளம்! என்றாலும் இவைகளினின்று மாறுபட்டு தனித்து நிற்கிறது திரு. வி. கவின் 'இந்தியாவும் விடுதலையும்' என்ற வரலாற்று நூல். அந்நூலைப் படிப்பவர்களுக்கு இக்கூற்று மிகையல்ல என்று புரியும்; அவர் இந்நூல் வாயிலாகக் கூறும் உண்மைகள் எத்திறத்தன என்பதும் புலனாகும்.

## 1940

இந்த அரசியல் மேதை திரு. வி. க இந்த நூலை 1940 இல் எழுதினார். அக்காலம் எத்தகைத்து? இந்தியா ஓர் அடிமை நாடாக வாடி வதங்கி அல்லல்பட்ட காலம்; ஆங்கிலேயர் ஆள்வோர்; சுரண்டல், சுரண்டல் என்று எல்லாப் பக்கங்களிலும் சுரண்டி சுரண்டி இந்தியாவின் சீவனையே அன்னியர் உறிந்து கொண்டிருந்த காலம்.

'எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு!'

என்ற சுதந்திர வேட்கை பீறிட்டு எழுந்த காலம். இந்த வேட்கை எத்தன்மையது? அனுபவ முதிர்வால் ஏற்பட்டதா? அல்லது திடீரென எழுந்த ஏதோ ஒரு இளம் வெறியின் எதிரொலியா?

இதைப் பற்றி ஆராய்வதற்கு உறுதுணையாக உள்ளது 'இந்தியாவும் விடுதலையும்' என்ற நூல்.

எந்த ஒரு நாட்டிலும் சரி விடுதலை வேட்கை அந்தந்த நாட்டின் வரலாற்றின் அடிப்படையில் எழுந்ததாக இருக்க வேண்டும். இஃதே நிலைத்திருக்கும்.

'அச்சமில்லை, அச்சமில்லை' என்ற வீறு நடை போடும் திரு.வி.கவின் இந்த நூல், வேட்கையின் காரண அடிப்படை, வளர்ச்சி, ஏனைய பிற விவரங்களைப் பற்றி மிகத் தெளிவாகக் கூறும்.

1940க்கு முற்பட்ட காலத்தை இந்திய வரலாற்றின் படி மூன்று கூறுகளாகப் பிரிக்கிறார் திரு.வி.க.

இந்தியா பெயர்க் காரணத்தை விளக்கியபின், முற்கால இந்தியாவின் செழுமை, நேர்மை, அந்தண்மை பற்றி சொல்லோவியம் ஒன்றையே தீட்டி விடுகிறார் திரு.வி.க.

முற்காலம் மாறி இடைக்காலம் வருகிறது. இந்தியாவும் இக்காலத்திற்கேற்ப இடைக்கால வரலாற்றைப் பெறுகிறது.

இடைக்காலத்தில் நலிவுற்ற இந்தியாவையே காண்கிறோம். இதற்குக் காரணம் எங்கும் திடீரென ஏற்பட்ட குழப்ப நிலை; அரசியல் கிளர்ச்சிகள்; கலகங்கள். மத்திய ஆட்சியை அசைத்து அதன் பலத்தைக் குறைத்து மாநிலங்கள் ஈடுபட்ட தன்னல செயல்களே இந்த நலிவுக்குக் காரணம்.

இடைக்கால முடிவில் தோன்றியது முஸ்லிம் உலகம். அதனையடுத்து வரும் வரலாறு தற்கால இந்திய வரலாறு.

* * *

## நாவல் தீவு - பாரத கண்டம்

இந்தியா முதன் முதல் நாவல் தீவு என்றே அழைக்கப் பட்டது. பின்னர் பாரதம் என்ற பெயரை, துஷ்யந்தன்-சகுந்தலை மகன் பரதன் ஆண்டதால் பெற்றது. பாரசீகர் இங்கு வந்தனர். சிந்து நதிக்கு அப்பால் வாழ்ந்த வரை 'சிந்து' என்று அழைத்தனர். சிந்து 'ஹிந்து' என்று திரிந்தது. இந்த சிந்து அல்லது இந்து மக்கள் பின்பற்றிய சமயக் கொள்கைகள் 'இந்து மதம்' எனப் பெயர் பெற்றது. ''இப்பொழுது 'ஹிந்துக்கள்' என்னும் பெயரும் இந்தியா என்னும் பெயரும் ஒரு பொருளைக் குறி கொண்டு நிற்க வில்லை. ஹிந்துக்கள் என்பது இந்தியாவில் வாழும் ஒரு சமயத்தவரை உணர்த்தி நிற்கிறது. இந்தியர் என்பது பொதுவாக நாட்டவரைக் குறித்து நிற்கிறது.*

கிரேக்கர் ஹிந்துக்களை, இந்தியா என்றே அழைத்தனர். இந்தியா ஒரு பழம் பெரும் நாடு. நம் நாட்டில், அப் பொழுது வழக்கிலிருந்தவை இரண்டு மொழிகள். இவ்விரு மொழிகள் நாடு முழுவதும் வழக்கத்திலிருந்தன. ஒன்று திராவிடம்; மற்றொன்று வடமொழி அல்லது சமஸ்கிருதம். இவைகளின் ஆதி மொழி பிராகிருதம்.

நாட்டில் இலக்கியம் நல்ல நிலையில் இருந்தது. இயற்கை வளம் கொழித்தது.

மக்கள் வாழ்க்கையும் இயற்கையோடு இயைந்ததாக இருந்தது. சீவகாருண்யமே எங்கும் கைப் பிடிக்கப்பட்டது.

ஆரியர் வந்த பின்பும், உயிர்ப்பலியைத் தவிர்த்தனர். 'அஹிம்சா பரமோ தர்மா!' என்ற கொள்கை நாட்டில் பரவி யிருந்தது. மகாபாரதம், இராமாயணம் என்ற இரு அறப் போர்கள் நடந்தன, அறப்போர் என்று சொல்வது சரியா? சரியே! நாட்டில் தலையெடுத்த அக்கிரமத்தை ஒடுக்கி.

---

* திரு. வி. க, **இந்தியாவும் விடுதலையும்**, பக். 4.

தர்மம் தழைக்கச் செய்வதற்காக ஏற்பட்ட போர்களாத லால், அவை அறப்போர்கள்.

புதுமை எப்போதுமே பழமையிலே வேர் கொள்ளும், பழைமை இல்லையேல் புதுமையே இராது; பிறக்கவும் பிறக்காது. எனவே புதுமையின் வழிகாட்டியே பழைமை அல்லது பழமையின் அனுபவம்.

## முற்கால இந்திய வாழ்க்கை

மனிதன், இக்காலத்திலே கூடி வாழ்ந்தான்; கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தான்.குடும்பங்கள் விரிந்தன; கிராமங்கள் ஏற்பட்டன. இவ்வாறே கிராமங்கள் பெருகின; ஒன்று சேர்ந்தன.

திராவிட கால நாகரீகம், ஆரிய நாகரீகம்—இரண்டும் ஒன்றன் பின் ஒன்றாக இருப்பினும்—ஒரே அடிப்படையைக் கொண்டிருந்தன. அதாவது மக்கள் அனைவரும் நலமாக வேண்டும் என்பதே அந்தக் குறிக்கோள். திராவிடர் நாகரீக வாழ்க்கை மேல் நாட்டு தத்துவ ஞானிகள் அரிஸ்டாட்டில், பிளாட்டோ ஆகியோர் தத்துவ அடிப்படையை ஒத்திருந்தன. ஏன்? இந்தியரின் மநுஸ்மிருதி என்ற தத்துவத்திலும், கிரேக்க நாட்டு தத்துவங்களுக்குமிடையே பொதுவான கருத்துக்கள் இருந்ததே அதற்குக் காரணம்: செய்யும் தொழிலுக்கேற்ப மக்கள் வர்ணங்களாக பிரிக்கப் பட்டனர். ஒரே குடும்பத்தில் ஒருவன் ஆசிரியனாக இருப்பின் அவன் ஆசிரியன் என்ற வர்ணத்தைச் சேர்ந்தவன்; அரசர்க்கு பக்க பலமாக வீரனாக இருப்பின் அவன் அரசினன்; வாணிபஞ் செய்யும் அக்குடும்பத்து ஒருவன் வாணிபன்; மற்றவர் தொழிலாளிகள் எனப் பிரிந்தனர் எனவே ஒரே குடும்பத்தில் தொழில் புரிவோர் பொறுத்து வர்ணம் அமைந்திருத்தது. ஒரே குடும்பத்தில் பற்பல வர்ணத்தினர் இருந்தனர். ஆனால் நாளாவட்டத்தில் வர்ணாச்சிரமம், பிறப்பு வழி வர்ணமாகி விட்டது. உயர்வு

தாழ்வு உணர்ச்சிகளுக்கு பண்டைய இந்தியாவில் இடமே இல்லை.

முற்காலத்தில் ஒவ்வொருவருக்கும் சொத்து இருந்தது. குடும்பத் தலைவன் ஒரு குடும்பத்தின் ஆணிவேர்.

## வாணிபம்

கடல் கடந்த வாணிபமும் உண்டு. அதுவும் பண்டம் மாற்று முறையைப் பின்பற்றி வாணிபத்தைப் பெருக்கின.

ஊரிலுள்ள ஆலமரமோ, அல்லது ஏதோ ஒரு நிழல் தரும் மரத்தின் அடியிலோ கிராம விவகாரங்களை கவனிப்பர். "நீர் நிலைகள், ஆடு மாடுகள் முதலியன மேயுமிடங்கள், சுடுகாடுகள் ஆகியன பொதுவானவை. எவரும் அவைகளை நுகரலாம். கூடி வாழும் அறமே கிராமமாகக் காட்சியளித்தது."*

மெகஸ்தினிஸ் போன்ற அயலாரின் குறிப்புகள் இதனை ருசுப்படுத்துகின்றன.

அக்காலத்திலே படையெடுப்புகள் உண்டு. ஆனால் அவைகள் கிராமங்களையோ பயிர்த்தொழிலையோ பாதிக்க வில்லை.

நல்ல முறையில் மன்னராட்சியும் நடைபெற்றது. இதற்கு உதாரணமாக அமைகிறது மௌரிய ஆட்சி. அதிலும் இடைவிடாது நாற்பது ஆண்டுகள் ஆட்சி புரிந்த அசோகனது ஆட்சி சாலச் சிறந்தது. நாட்டில் தர்மம் இருந்தது. எங்கும் சாந்தி நிலவியது.

புதிய மார்க்கங்கள், புதிய கருத்துக்கள், புதிய சிந்தனைகள் எங்கும் தோன்றின.

சமயக் கலைகள் இந்தியாவின் உயிர் நாடி ஆயின், சமரச சன்மார்க்கம் என்ற சொல் வழக்கில் இருக்கவில்லை.

---

* T. Rangachari.

எனினும் சமரச சன்மார்க்கக் கொள்கைகளை மக்கள் பின்பற்றினர்.

மொஹேஞ்சோதாரோ, ஹாரப்பா ஆகிய இவ்விரு பண்டைய நகரங்களும் நாகரீகத்திற்குச் சிறந்த அத்தாட்சி. உலகே இந்தப் பண்பாட்டைக் கண்டு அதிசயித்தது.

## இடைக்கால நலிவு

சீரும் சிறப்பும் பெற்றிருந்த இந்தியா இடைக்காலத்தில் சில சமயங்களில் நலிவுற்றதேன்? இதன் காரணம் முன்னரே கூறப்பட்டது. இடைக்கால வரலாற்றில் கனிஷ்கர், சமுத்திர குப்தர், சந்திரகுப்த விக்கிரமாதித்யர் போன்றோர் காலங் களில் இந்தியா செல்வாக்கு பெற்றிருந்தது உண்மையே. இந்தியா ஒரு குடையின் கீழிருந்ததும் உண்மையே.

நாட்டிலே பௌத்தமும், ஜைன சமயமும், இந்து சமயமும் இருந்தன ஆனால் சமயப் பகை இல்லை. கள்வர் பயமில்லை. பௌத்த மதக் கோட்பாடுகளைக் கற்க வந்த சீன யாத்திரிகர் இந்நாட்டில் இருந்த நன்னிலையைப் பற்றித் தம் குறிப்புகளில் கூறியுள்ளார்.

இவையெல்லாம் இடைக்காலத்தின் முற்பகுதியில் இருந்தன. பிற்பகுதியில் சீனா, ஜப்பான் போன்ற நாடு களைக் கவர்ந்த கலைச் சிறப்பு, காவியச் சிறப்பு, சமரச சிறப்பு, இலக்கிய சிறப்பு, எல்லாம் குறைந்தன; ஓரளவுக்கு மங்கின; மறையவும் தலைப் பட்டன. ஏன்?

பின்னாளில் கலகம் நுழைந்ததே. தர்மத்தை சாய்த்தது கலகம். கலகத்தை விளைவித்தவர் மன்னர்; அத்துடனா? தர்மமற்ற மதத்திற்கும் ஆக்கம் தந்தனர். விளைவு? மதப் பூசல்! எங்கும் மதப்பூசல்! இந்த கரையான் மக்கள் மனத்தை மெல்ல அரித்தது, மூர்க்கத்தை அதிகப்படுத்தியது.

'எந்த மதத்தினை ஆராய்ந்தாலும் அதன் அடியில் அறமிருக்கும். அருளிருக்கும். இவையற்றது மதமாகாது.

ஆதலின் பூசலுக்குக் காரணம் மத தர்மமற்ற மூர்க்கமே யாகும். மூர்க்கத்தை மதமாகக் கொள்வது தவறு.''*

ஹர்ஷர் காலத்திற்குப் பின் வகுப்பு வேற்றுமைகள் புகுந்தன. பிறப்பு வழி வகுப்பு வேற்றுமைகள் பிறந்தன; பரவின; இந்துக்களிடையே புரையோடின. இந்து மதம் நாளாக நாளாக சாதி மதம் ஆகியது.

## ஜைனத்தின் நிலை

சீவகாருண்யத்தை (அஹிம்சை) ஆணி வேராகக் கொண்ட ஜைனம் முதன்முதல் வளர்ந்தது. வகுப்பு வாதங்கள் முதலிலில்லை என்று திகம்பரர், சுவேதம்பர் என்ற இரு பிரிவுகளாக ஜைனம் பிரிந்ததோ, அன்றே புகுந்தது வகுப்பு வாத போராட்டம். ஜைன சமயத்தின் ஆணி வேரை இந்தப் பிணக்கு அசைக்கத் தொடங்கியது மதத்தின் சாரம் குறைந்தது. பிந்திய விளைவு என்ன இருக்கும் என்று நீங்களே ஊகிக்கலாம்.

## புத்த மதம்: ஆக்கம் குன்றல்

அது சரி, ஜைனத்தின் நிலைதான் இது என்றால், உலகில் பல பக்கங்களிலும் பரவிய பௌத்த மதம் ஏன் மயங்கியது. அன்பு சமயமாக பௌத்தம் இருந்தவரை அது வளர்ந்தது. சங்கங்கள், மடங்கள், சந்நியாசிகள் தோற்று விக்கப்பட்டவுடன் புத்தரின் பிரசாரத்திற்கும் அவர் வழித் தோன்றல்கள் பிரசாரம் செய்த நாத்திகத்திற்கும் வெகு தூரம், வெகு தூரம்! எனவே, தான் பிறந்த நாட்டிலேயே பௌத்தம் ஆக்கம் பெறாதொழிந்தது.

இந்து மதம் சாதி மதமாக இருந்திருந்தால் கூட பரவா யில்லை. சம்பிரதாயங்களையும் சந்நியாசத்தை வலியுறுத்தும் மதமாக மாறியதே அதன் போதாத காலம். சந்நியாசிகள் என்ன செய்தனர்? தீண்டாமை, பெண்ணடிமை ஆகிய

* இந்தியாவும் விடுதலையும், பக். 87.

வற்றை இந்து சமயத்தில் புகுத்தினர்; பல முனிவர் பேரில் பற்பல சம்பிரதாயங்கள், சாத்திரங்கள் என எழுதிக் குவித்தனர்!

இந்தியாவை அழித்தது இவர்கள் செயல். இத்தகைய சாத்திரங்கள் இயற்கை வாழ்வினின்று மக்களை வலுக் கட்டாயமாகப் பிரித்தன. சகோதர நேயத்திற்கு அடிகோலிய நம் நாட்டில் தீண்டாமை, உயர் சாதி, தாழ்ந்த சாதி போன்ற தீமைகள் புகுந்து, நாட்டை வீழ்ச்சியடையச் செய்தன.

## இந்தியாவும் இஸ்லாமும்

இந்நாட்டுடன் வாணிபத் தொடர்பு கொண்டவர்கள் அராபியர். தங்கள் மதமான இஸ்லாத்தை இந்தியாவில் பரப்ப வேண்டும் என்ற பேராவலை இந்நாட்டின் சமய சூழ்நிலை ஏற்படுத்தியது. இதனால்தான் ஏழாம் நூற்றாண்டில் மகமத் காஸிம் சிந்துவைக் கைப்பற்றினார் என்றால் மிகையே அல்ல. இதனை அடுத்து எத்தனையோ படையெடுப்புகள்! கஜினி படையெடுப்புகளுக்குப் பின் கோரி வம்சம் இந்தியாவில் நிலையான அரசை நிறுவியது.

இதுவே முஸ்லீம் உலகம் இந்தியாவில் கால் வைத்து, ஊன்றிய காலம். மொகலாயப் பேரரசுக்கும் முன்னோடியாக அமைந்தது.

## அக்பரின் சமரசம்

மொகலாயர்களிலே சமரச மனப்பான்மை கொண்ட அக்பரை மறக்க இயலுமா? அவரது சமரசக் கொள்கை— இந்து முஸ்லீம் சகோதரத்வம் ஏற்பட வித்திட்டது. ஒற்றுமைக்குரிய கலப்பு மனங்களை நாடு கண்டது; ஆதரித்தது; ஏற்றது.

அக்பரின் பரந்த சமய நோக்குக்கு ஒரு அரிய சான்றாக உள்ளது துளசிதாஸ் இராமாயணம். துளசிதாஸ், குமர குருபரர் காசியில் கம்ப இராமாயணத்தைப் பிரசங்கம்

செய்தனராம். அப்பிரசங்கங்களைக் கேட்டுக் கேட்டு துளசி தாஸ் ஹிந்தியில் இராமாயணம் எழுதினாரென்று டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் கூறுகிறார். ஆக தமிழ்க் கருத்துக் களுக்கு அக்பர் ஆட்சியில் இடம் இருந்ததென்று தெரிகிறது.*

இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காக தூணாக இருந்த அக்பரின் ஆட்சி நீடித்திருக்குமாயின், இந்தியா அனைவரும் வியக்கக்கூடிய நாடாக இருந்திருக்கும்.

## ஆங்கிலேயர் வருகை

அக்பருடைய மைந்தர் ஜஹாங்கீர் அரசு செலுத்திய போதுதான் இரு ஆங்கில தூதுவர் வந்தனர். இங்கிலாந்து மன்னர் முதலாவது ஜேம்ஸ் ஆங்கிலேயர் இந்தியாவில் வாணிபம் செய்ய அனுமதி கோரினார். அப்பணியை மேற் கொண்டு தூதுவராக வந்தவர்களில் ஒருவர் காப்டன் வில்லியம் ஹாக்கின்ஸ்; மற்றவர் ஸர் தாமஸ் ரோ என்பவர். அனுமதி கிடைக்கப் பெற்ற முதல் ஆங்கிலேயர் களும் அவர்களே.

ஷாஜகான்—கலைப் பித்தர். மொகலாய பேரரசின் பொற்காலமாக அமைந்ததில் வியப்பேது? ஆனால் அவுரங்க சீப் காலமோ, ஓங்கி, அடர்ந்து வளர்ந்த ஆலமரம் போன்ற மொகலாய பேரரசை, தன் பிடிவாதத்தால் வெட்டி வீழ்த்தக் கூடியதாக அமைந்தது ஒரு பெருங் குறையே. அரியணைக்காக சூழ்ச்சிகள் ஒரு பக்கம்; குறுகிய சமய வெறி மறுபக்கம்; இஸ்லாமியர்களிடையே ஷியா, சுன்னி என்ற வகுப்புப் பேதங்களைப் புகுத்தி, இந்துக் களிடையேயும் முஸ்லீம்களிடையேயும் ஒற்றுமையைச் சுக்கு நூறாக சிதைத்தது; உடைத்தது! அத்துடனா? கஜானாவும் காலியாகியது.

வகுப்பு வெறியின் எதிரொலி மராட்டிய நாட்டில் ஒலித்தது. வீரசிவாஜியாக உருவெடுத்தது; சீக்கியர் பகை

* திரு.வி.க, இந்தியாவும் விடுதலையும், பக். 107.

யாக வளர்ந்தது; இராஜபுத்திர ஜாட் சாத்னாமிகள் கலக மாக கிளம்பி எங்கும் கலகம், குழப்பம், போராட்டம்! என்ற கலக்க நிலை ஏற்பட்டது.

## குழப்பமும் சூழ்ச்சியும்

வாணிபம் செய்ய வந்த அயல் நாட்டவர் இந்நிலையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளத் தயாரா யினர்.

அவுரங்கசீப் அழித்த இந்திய ஓவியத்தை, பின் வந்த பொம்மை அரசர்கள் மீண்டும் சாயமேற்றி, செப்பனிட முயன்றனர்; ஆனால் தோல்வியே கண்டனர்.

சுதேச இந்துப் பேரரசு நிறுவிய சிவாஜியும், அவுரங்க சீப்பும் ஒத்துழைத்திருந்தால், தற்கால இந்தியா எவ்வளவு உயர்வாக இருந்திருக்கும்.*

இயற்கை எப்போதும் போலவே நல்லதையே செய்தது. பஞ்சம் இல்லை! வெள்ளம் இல்லை! வறுமை இல்லை! பின் நாடு ஏன் தாழ்வுற்றது!

மத வெறி-தீயில் புண்பட்ட இடைக்கால இந்தியா வேதனையில் தவித்தது; கண்ணீர் விட்டது; அப்போது அந்தக் கண்ணீரின் பயிராய் வந்தது தற்கால இந்தியா.

## தற்கால இந்தியா

தற்கால இந்தியாவில் இந்து இராஜ்யமும் அழிந்தது. முஸ்லீம் இராஜ்யமும் அழிந்தது. இந்து முஸ்லீம் பிளவின் விளைவே இது. அதன் வினை எங்கும் பிரிவினை; பிரிவினை என் செய்தது? மேல் நாட்டினரை இந்த ஒற்றுமையின்மை தமக்கு உகந்த முறையில் பயன்படுத்தத் தூண்டியது; இந்திய மண்ணில் அன்னியர் வேரூன்ற, சிதறிக் கிடந்த

---

* திரு. வி. க. இந்தியாவும் விடுதலையும், பக். 125.

சிறு சிறு இராச்சியங்களைப் பகடையாக வைத்தனர். நாடு பிடிக்கும் சூதாட்டத்தில் ஈடுபட்டனர். இச்சூதாட்டத்தில் முக்கிய பங்கேற்றவர்கள் ஆங்கிலேயரும், பிரெஞ்சுக் காரருமே.

ஆர்க்காடு போர்கள், பிளாசிச் சண்டை மூலம், தென்னிந்தியாவிலும் வட இந்தியாவிலும் பிரிட்டிஷ் இந்தியக் கம்பெனி புதியதொரு சாம்ராச்சியத்தை ஏற் படுத்தியது அனைவரும் அறிந்ததே.

முதலிலேயே வெற்றிகண்டு, வேரூன்றியவர்கள், இனி வேகமாக செயல்பட மாட்டார்களோ? பகைமையைத் தூண்டும் சூழ்ச்சிகளில் இறங்கினர். தந்திரமாகத் தனித் தனியே அரசர்களைப் பிரித்தனர். சூழ்ச்சிகள் மலிந்தன இராஜதந்திரம் என்ற பெயரில்.

முடிவு? நாடு அவர்களுடையதே என்று ஆயிற்று. எங்ஙனம்? நேர்மையற்ற போர்கள் மூலம் நாடு மட்டுமா அவர்களுக்குக் கிடைத்தது? நேர்மையற்ற முறையில் செல்வம் குவிந்தது. கிளைவ் முதல் பின்வந்த கவர்னர்களைப் பற்றி வரலாறு கூறும்.

நம் நாட்டுத் தொழில்கள் ஆங்கில வாணிபத்திற்கு போட்டியாக இருந்தன. இதை பேராபத்தாகக் கருதினர் ஆங்கிலேயர். நம் கைத்தொழில்கள் அனைத்தும் ஈவிரக்க மின்றி நசுக்கப்பட்டன; கைவினைஞர் கடுந் தண்டனைக்கு உள்ளாயினர். இத்தண்டனை பெற்ற 'மஸ்லீன்' துணி நெய்வோர் எத்தனை, எத்தனை! மற்றையோர் எத்தனை, எத்தனை! நினைக்க நினைக்க நெஞ்சம் இரத்தம் சிந்தாதோ!

இந்தியரே இந்தியரை வீழ்த்தி இந்திய நாட்டை அடிப் படுத்தினர் சாதி என்றனர். ஒரு சாதி மற்றொரு சாதியை வெறுத்தது; பகை கொண்டது; போரிட்டது; வீழ்த்தியது; மாற்றானுக்கு அடிமையும் படுத்தியது. ஆணவமும் அகங்காரமும் வேறென்ன செய்யும்!

சந்தர்ப்பத்தையும் சூழ்நிலையையும் சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொண்டவருள் ஈடு இணையற்றவர் மார்க்விஸ் வெல்லஸ்லி சுதேச மன்னர்களைத் தம் பிடியில் வைக்கும் அருமையான திட்டமொன்றைத் தீட்டினார். அழகியதொரு பெயரையும் சூட்டினார்.

## துணைப்படைத் திட்டம்

துணைப்படைத் திட்டம் என்றதே அப்பெயர். இத் திட்டத்தை ஏற்றுக்கொண்டவரைத் தம் பிடியில் வைத்து பொம்மையாக ஆட்டி வைத்தனர். ஏற்றுக் கொள்ளாத மன்னரை போரிலே அழித்தனர். இப்படி அழிக்கப்பட்டவரே மைசூர் புலி திப்பு சுல்தான். இது போன்ற அடாத செயல் களுக்கு மற்ற சுதேச இராச்சியங்களும் இலக்கியாயின.

போர் மூலமும், சூழ்ச்சி மூலமும் இந்தியாவைத் தம் வசமாக்கிக் கொண்டனர் ஆங்கிலேயர் என்று மட்டும் சொன்னால் அது பெரிய அபாண்டம்.

லார்ட் வில்லியம் பெண்டிங் போன்ற ஒருசில கவர்னர் ஜெனரல்கள் செய்த சீர்திருத்தங்களை மறத்தலாகாது. வில்லியம் பெண்டிங் என்று சொல்லும்போது, அவரது சீர்திருத்தங்களில் பெரும் பங்கு கொண்ட இராசாராம் மோகன்ராய் நினைவு கூடவே வரும்.

ஆங்கில அரசை விரிவுபடுத்தி ஸ்திரப்படுத்தியவர்களுள் வெல்லெஸ்லிக்கு அடுத்தபடியாக டல்ஹௌஸியைக் கூறலாம். ஆங்கில ஆட்சிக்குட்பட்டிருந்த மீதி சுதேச நாடுகள் இவர் கண்ணை உறுத்தின. இதற்கும் ஒரு யுக்தியைக் கையாண்டார். வாரிசு இல்லாத சுதேச அரசுகள் மீது பாய்ந்தார். ''நீங்கள் எடுத்துக் கொண்ட சுவீகாரம் செல்லாது!'' என்று ஒரேயடியாக மிச்சமிருந்த அரசுகளை நேரடியாக பிரிட்டிஷ் கொடியின் கீழ் கொண்டு வந்தவர். இந்திய மன்னர்கள் இதைக் கண்டனர்; மக்கள் இதைக் கண்டனர். நொந்தனர்; செய்வது யாது என்று தீவிரமாக ஆலோசிக்க முற்பட்டனர்.

இந்த நாடு கைப்பற்றும் யுக்தி முன் டல்ஹௌஸி செய்த சீர்திருத்தங்கள் மறைந்தன. வலுக்கட்டாயமாக புகுத்தப்பட்டது மேல் நாட்டுக் கல்வி முறை. இதில் ஏதேனும் தவறு உண்டோ? நிச்சயம் உண்டு. கூலி உத்தியோகத்திற்காக ஒட்டாத, இந்த நாட்டிற்கு ஒவ்வாத கல்வி முறையைப் பயில, விரைந்தது 'முன்னணி'க் கூட்டம். ஏனைய இந்தியரிடம் இருந்த கொஞ்ச நஞ்ச பழைய வாசனையையும் விரட்டியடித்தது இக்கல்வி முறை. இந்தியப் பண்பாடோ விரைந்தோடி எங்கோ மறைந்தது.

## இராணுவ சீர்திருத்தமும் விளைவும்

சிப்பாய்களிடையே புகுத்தப் பட்டன புதிய தோட்டாக்கள்; இவைகளுக்கு கொழுப்பு பூசப்பட்டிருந்தது. வாயினால் பற்றி இழுத்தால்தான் இவை வேலை செய்யும். இதில் இந்து ராணுவத்தினருக்கும் அதிருப்தி. முஸ்லீம் சிப்பாய்க்கும் அதிகமான வெறுப்பு. இந்த கொழுப்பைப் பற்றிய உண்மையை இரு சாராரும் அறிந்த பின் அது இன்னும் மிகைப்பட்டது.

வலுக்கட்டாயமாக மத மாற்றங்கள் செய்யப்பட்டன. இவை மட்டுமா சிப்பாய்கள் பொறுமையை சோதித்தன? இல்லை, இல்லை!

சிறுமை கண்டு சீறியது இந்தியனின் உள்ளம். எங்கே? பட்டாளத்தில். ஆங்கிலச் சிப்பாய்க்கு மூன்று மடங்கு அதிகமான ஊதியம். இந்தியனுக்கு மிக மிகக் குறைவு. மிக இழிவாக நடத்தப்பட்ட இந்தியச் சிப்பாய்களின் இழி நிலை கண்டு தாய்க்குலம் பொங்கியது. வெறி கொண்டது. பாக்பூரில் கேவலமாக, எக்குற்றமும் இன்றியே ஒரு இந்திய சிப்பாயை ஆங்கில தளபதி நடத்தியதைக் கண்டது! எரிகின்ற இந்நெருப்பிலே எண்ணெய் விட்டது போலாயிற்று. உருத்திரக்காளி கோர நடம்புரியத் தயாராகி விட்டாள்!*

---

* வீர சாவர்காரின் '1857' பார்க்க.

குறித்த நாளில் நாடு முழுவதும் ஆங்கிலேயரை எதிர்ப்பது என்று திட்டமிடப் பட்டது. என்னே துரதிர்ஷ்டம்! பரத்பூர் நிகழ்ச்சி எழுச்சியை ஒரு நாள் முன்னதாகவே தூண்டி விட்டது! ஏன் அவ்வாறு நடந்தது? பெண்கள் தங்கள் வளையல்களைக் கழற்றிக் கொடுத்து, சிப்பாய்களை அணியச் சொன்னால், ஆண்மைக்கு பொறுக்குமோ? முன் தினமே எழுச்சி, எழுச்சி!

## முதல் சுதந்திரப் போர்

ஒரு சில இடங்களில் மட்டுமே எழுச்சி! ஒரே சமயத்தில் எல்லா இடங்களிலும் திட்டமிட்டபடி எழுச்சி இல்லை. ஆங்கிலேயர்களுக்கு இந்த எழுச்சியை சுலபமாக அடக்க அவகாசம் கிடைத்தது. சுதந்திரப் போரின் தலைவர்களான ஜான்சி ராணி லக்ஷ்மிபாய், தாந்தியா தோபி ஆகியோரைச் சூறையாடி அழித்தனர். சிப்பாய்கள், ஐரோப்பிய பெண்களைக் கொன்று குவித்ததாக ''இந்தியாவும் விடுதலையும்'' நூலில் கூறப்படுகிறது. ஆனால் வீரசர்வர்க்கார் எழுதிய '1857' என்ற வரலாற்று நூலில் இதற்கு மாறான விவரம் ஆங்கிலேய தளபதிகளாலேயே எழுதப்பட்ட செய்தி இருப்பதைக் காண்கிறோம்.

இந்த சுதந்திர எழுச்சியை அராஜகமாக அடக்கிய ஆங்கிலேயருள் ஒருவர் நீல்.*

ஆங்கிலேயருக்கு எழுச்சியை அடக்கப் பேருதவி செய்தவர் நைஜாமும், சீக்கியருமே. என்ன செய்யலாம்! இவர்களும் இந்தியரே!

## எழுச்சியும் முடிவும்

எழுச்சியின் முடிவு என்ன? வாணிபராட்சி முடிவடைந்தது. இங்கிலாந்தின் அரசியார்—விக்டோரியா

* இந்த நீல் தளபதிக்கு சிலை வைக்கப்பட்டது. பிற்காலத்தில் இச்சிலையை அகற்ற ஏற்பட்டதே நீலி சத்தியாக்கிரகம்.

மகாராணியார் இந்தியாவுக்கு அரசியானார். ஓர் அறிக்கையும் வெளியிட்டார். அந்த அறிக்கை மூலம் இந்தியருக்கு சமய சம்பிரதாயங்களில் ஆங்கிலேயர் தலையீடு இராது என்று உறுதி கூறினார். இந்தியர்களை ஆங்கிலேய ருக்கு சமமாக நடத்துவதாகவும் கூறப்பட்டது. இனி இந்தியர்கள் பாரபட்சமாக நடத்தப்பட மாட்டாரென்றும் அறிவுறுத்தப் பட்டது.

கவர்னர் ஜெனரல் இராஜ பிரதிநிதியானார்.

இராஜ பிரதிநிதிகளுள் இந்தியர் மனத்தில் நீங்கா இடம் பெற்றவர் லார்ட் ரிப்பன் பிரபு. அவருடைய தல சுய ஆட்சி முறை இந்தியருக்குச் சிறிது மகிழ்ச்சி தந்தது.

கர்ஜான் பிரபுவை இந்தியர் மறக்க மாட்டார். இது உறுதி. ஏன்? அவரே இந்தியாவில், இந்திய மக்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியவர். அவர் செய்த வங்கப் பிரிவினை, மக்களை மேன்மேலும் கவனமாக இருக்கத் தூண்டியது.

இந்திய நாட்டில் இப்போது பஞ்சம், பசி, பட்டினி தாண்டவமாடியது. முன்னர் இருந்த செல்வம் எல்லாம் எப்படி வற்றியது? இயற்கைச் செல்வங்கள் எங்கே போயின?

செல்வம் வற்றவில்லை. சுரண்டப் பட்டது! எங்கும் சுரண்டல், சுரண்டல், சுரண்டல்! இயற்கைச் செல்வங்கள் நமக்கு பயன்படாது ஒழிந்தன. இந்த வறுமை நிலைப் பற்றி எங்கும் பேச்சு! ஆனால் நிலை மாறியதோ? இல்லை! இல்லை!

ஏழை இந்தியன் வாடினான்; வெள்ளையன் வளர்ந் தான்; கொழுத்தான்.

கிராமத் தொழில்கள் நசிந்தன; மற்றவை நசுக்கப் பட்டன. வரிகள் சுமத்தப் பட்டன. நெய்தல் தொழில்

நொந்து போயிற்று. பட்டுத் தொழில் படாத பாடு பட்டு, பட்டுப் போயிற்று.

ஐரோப்பியர் உற்பத்தி செய்த பொருட்களுக்கு ஒரு திறந்த வெளி சந்தையாக மாறி வந்தது இந்தியா.

செல்வ இந்தியா என்ற சாறு நிறைந்த பழத்தின் சாற்றை உறிஞ்சி விட்டு, வெறும் சக்கையாக்கியது இங்கிலாந்து. இதில் தன்னை வளர்த்துக் கொண்டது இங்கிலாந்து.*

இரயில் பாதை பஞ்ச காலத்தில் உதவியது என்பது உண்மையே. இருந்தாலும் எழுச்சியை அடக்கி, ஒடுக்கி, அழிக்கப் பயன்பட்டது போல் அவ்வளவு பயனை மற்றவை களுக்குத் தரவில்லை. சுரண்டலுக்கு அதுவும் ஒரு கருவியாயிற்று.

வரிப் பணம் வசூலித்தார்களே? அது என்னவாயிற்று? வரிப்பணத்தில் ஒரு கணிசமான பகுதி இராணுவத்திற்கும் இராஜபிரதிநிதி ஆகியோர்களுக்கும் மற்று அரசாங்க ஊழியர்களுக்கும் சம்பளமாக செலவாகியது. ஆங்கிலேய னுடைய ஒரு நாளைய வருவாய், இந்தியனுடைய ஒரு மாத வருவாயாக ஆகியது.

ஆங்கிலக் கல்வி பரவியது. அடிமை ஊழிய மோகத்தை மேன்மேலும் வளர்த்தது. கல்வியின் நோக்கம் இதுவோ? விதேசி கல்வி சுதேசியை விரட்டி விட்டது. கிராமங்கள் அழிந்தன. சாதி வெறியைத் தூண்டிப் பற்பல சாதகங்கள் செய்துக் கொள்ளப்பட்டன.

## தீண்டாமை-தீரா நோய்

தீண்டாமை ஒரு தீரா நோய். அதைத் தீர்ப்பது எப்போது? இதைத் தீர்க்கத்தான் எடுக்கப்படும் முயற்சிகள்

---

* ஆதாரம்-டிக்பி 183-இந்தியாவும் விடுதலையும்.

எத்தனை, எத்தனை! இதுவும் ஒரு அரசியல் பகடையாக அல்லவோ பயன்படுத்தப் படுகிறது!

இவ்வளவிலும் ஒரு விஷயம் மகிழ்ச்சி தருகிறது. அது தான் பெண்கள் நிலையில் ஏற்பட்டுள்ள சிறிது முன்னேற்றம்.

## விடுதலை

இந்தியாவுக்கு விடுதலை நிச்சயம் வேண்டும். எத்தகைய விடுதலை? புற விடுதலை. அதாவது அரசியல் விடுதலை. அரசியல் விடுதலையின் அஸ்திவாரம் பொருளாதார விடுதலை. பொருளாதார விடுதலை வேண்டுமாயின், முக்கியமாகத் தேவை சேர்க்கை வாழ்க்கை. தனித்த வாழ்க்கையே இந்தியாவை முதல் முதல் அடிமைக் குழியில் வீழ்த்தியது. எனவே அது வேண்டற்பாலதன்று.

இரண்டாவதாக, உண்மையான விடுதலைக்கு சாதி பாகுபாடுகள் கூடாது. கற்றறிந்த சில சமய சஞ்சீவிகள் மனுஸ்மிருதியை திரித்து நாட்டைக் கெடுத்தனர். இன்று அவர்களே தாம் புகுத்திய ஏற்றத் தாழ்வுகளை சாதகமாக மாற்றிக்கொண்டு சாதிமுறை பிரதிநிதித்துவத்தை கேட்பது நாட்டைக் கூறு போடுவதாகும். இதே நிலை நீடிக்கு மானால், அறப்புரட்சி எழும்; அறப்புரட்சி மறப் புரட்சியாக மாறாதபடி பார்த்துக் கொள்வது நம் கடன்.

சமய ஏற்றத் தாழ்வுகளை கலப்பு மணங்கள் மூலம் ஓரளவு குறைக்கலாம். இந்த வேற்றுமை விஷ வித்துக்கள் மேலே பரவாமல் தடுக்கலாம்.

ஆனால் இந்து முஸ்லீம் வேற்றுமையை இவை மட்டுமே களையுமா? முஸ்லீம் லீக் என்று ஒன்றும், ஹிந்து மகாசபை என்றும் இரண்டும் ஏன்? காங்கிரஸிலேயே இது இருப்பின், அது வகுப்பு வாதங் கடந்த அமைப்பாக எவ்வாறு கொள்வது? சிந்தியுங்கள்.

வேலியே பயிரை மேய்ந்தால் பயிர் செழிக்குமா? 'எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் ஓர் இனம். எல்லோரும்

இந்தியர்' என்ற உணர்வு தோன்றுமா? தோன்றினால் நிலைக்குமா?

## அரசியலில் அறநோக்கு

அறநோக்கு இன்றேல், வகுப்பு வாதம் மிகுமன்றோ? சட்டசபை பதவி சமய அடிப்படையில் அமைவதாக இருந்தால் வகுப்பு வாதம் எவ்வாறு குறையும்? வகுப்பு வாதப் பேய் தலைவிரித்தாட பத்திரிகைகள் செய்யும் கைங்கரியங்கள் எத்தனை, எத்தனை! மேல் நாட்டு நாகரீகத்தின் அடிமைகள் நம் நாட்டு அன்புவழியை பேணுவாரோ? இச்சூழ்நிலையில் சுதேசியம் அழியாமல் என் செய்யும்? பேராசை பேயாட்டம் ஆடாமல் என் செய்யும்?

இதற்கு மாற்று உண்டோ? உண்டு; நிச்சயம் உண்டு. அதுவே சமதர்மம். இதனையே காரல் மார்க்ஸ் தம் சித்தாந்தத்தில் விளக்குகிறார். அருளுடைமை சமதர்மம்; பொருளுடைமை மார்க்ஸியம். இவ்வழியில் மக்களை ஆள்வோர் தன்னலமற்றவராய், பற்றற்றவராய், தியாக சிந்தை உடையவராய், நாட்டு நலனே முக்கியம் என கருதுவோராய் இருப்பது நல்லது. இன்றேல் அழிவுதான்! சும்மா வருமா உலக சகோதர நேயம்?

## அரசியல், பொருளாதார-நாட்டு விடுதலை

அரசியல் பொருளாதார நாட்டு விடுதலைக்காக எழுந்த இயக்கங்கள் பல; அமைப்புகளும் பற்பல அவைகளைப்பற்றி அனைவரும் அறிந்திருப்பார்கள். இவைகளில் சாதிக்கோ, மதத்துக்கோ, ஏதோ ஒரு குறிப்பிட்ட மாகாணத்துக்கோ, சேர்ந்தது அல்லது காங்கிரஸ். இந்த உண்மை அனைவரும் அறிந்ததே. பல திற இடுக்கண்களிடை காங்கிரஸ் வளர்ந்த கதையும் பிரபலமானதே.

## அடக்கு முறை

முதன்முதல் மகாராஷ்டிரத்தில் வந்த 'பிளேக்' பரவிய போது அதிகாரிகளின் வரம்பு மீறிய செயல்களை மக்கள் கண்டித்தனர்; ஒரு தீர்வும் காணாததால் மக்கள் வெகுண்டெழுந்தனர்; எழுச்சி! மக்கள் எழுச்சி! மாநிலம் எங்கும் மக்கள் எழுச்சி! அரசாங்கம் சும்மா இருக்குமா?

எழுச்சியை அடக்கக் கொண்டு வந்தது அடக்குமுறை.

அதிகார வர்க்கம் முதன்முதல் விதித்த அடக்குமுறை இதுவே.

அடுத்த முக்கியமான அடக்குமுறை கர்ஸான் பிரபு காலத்தில் ஏற்பட்டது. ஹிந்து முஸ்லீம்களை பிரித்தாளும் திட்டமாக வங்கம் துண்டாடப் பட்டது. 1903-1905 அக்டோபர் வரை நாடு முழுவதும் கர்ஸானின் யதேச்சாதி காரத்தை எதிர்த்தது.

திலகர் காசி காங்கிரஸ் கூட்டத்தில் ஒரு புத்துணர்வைத் தூண்டினார். தீவிர கட்சி உருபெற்றது. எங்கும் 'வந்தே மாதரம்!' முழக்கம்! 'சுயராஜ்யம் எங்கள் பிறப்புரிமை!' என்ற கோஷம். எது செய்தாலும் அடங்காது அலை மேல் அலையாக வந்த சுயராஜ்ய வேட்கை; சுதேசியமே விசுவ ரூபமெடுத்ததென நாடெங்கும் சுதேசியக் கிளர்ச்சி; அன்னிய பொருட்கள் தீவிர பகிஷ்காரம்; ஆங்கிலேயர் இது கண்டனர்; சிலர் அஞ்சினர். வேறு சிலரோ எள்ளி நகையாடினார்.

எதுவரை?

தாதாபாய் நவ்ரோஜி, சுயராஜ்ய ஒலியை எழுப்பும் வரை;

1907-ல் காங்கிரஸில் மிதவாதி தீவிரவாதி பிரிவு, பிளவு வரும் வரை;

பின் என்ன செய்தது?

இந்த பிளவை தனக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்டது.

பாஞ்சால சிங்கம் லாலா லஜபதிராயை நாடு கடத்தியது. அவர் தீவிரவாதி, நாடு கடத்தினாலும், சிங்கம் சிங்கம் தானே!

திலகருக்கு இதனால் ஆதரவு குறைந்ததா? இல்லை, இல்லை! வ. உ. சிதம்பரம் பிள்ளை, சுப்ரமணிய சிவா, சுப்ரமணிய பாரதி, சுரேந்திரநாத் பானர்ஜி ஆகியோர் திலகர் கட்சியின் தூண்கள் ஆயினர்.

தீவிரவாதி மிதவாதி போராட்டம் வகித்தது 1907-ல் சதிகள் உருவாயின.

## சதியின் விளைவு

திலகருக்கு எதிராக அதிகார வர்க்கத்துடன் சேர்ந்து கொண்டது மிதவாதிகள் தலைமை! குறிக்கோள்தான் என்ன?

தீவிரவாதிகளை ஒடுக்கி, அழித்து, தொலைத்துவிடவே!

முடிந்ததா? ஆஹா, முடிந்ததே! தேசபக்தர் திலகரை நாடு கடத்தியது!

விபின் சந்திர பாலரை சிறையில் அடைத்தது!

அராஜகம் கண்ட இளம் உள்ளங்கள் வெறி கொண்டன; சீறி எழுந்தன: எங்கும் கொலை, கொலை, கொலை!

சிறைகள் நிரம்பி வழிந்தன.

கட்டுக்கடங்காத உணர்ச்சி வெள்ளத்தை, சுதந்திர தாகத்தை அடக்க நாடெங்கும் அடக்குமுறை! அடக்குமுறை!

சுப்ரமணிய பாரதியையும் அரவிந்தரையும் கூட சிறையிலடைக்கத் திட்டமிட்டது அரசு.

ஆனால் நடந்ததென்ன? அரவிந்தர் புதுவை புகுந்தார். சுப்ரமண்ய பாரதி புதுவை புகுந்தார்!

திட்டம்! மண்ணாகியது.

"உரிமை இழந்த நாட்டில் பணக்காரரும், முதலாளிகளும், அதிகார வர்க்கமும் ஒன்றுபட்டு உண்மைத் தேச பக்தர் முயற்சிக்குப் பல வழியிலும் கேடு சூழ்ந்து வருதல் இயற்கையாய் விட்டது. பணக்காரரும், முதலாளிகளும் தேசபக்தர் வேடம் பூண்டு, நன்கு நடித்து, உலகை ஏமாற்றுவது வழக்கம்; ஏமாறுவதில் நமது நாடு முதன்மையாக நிற்பது."*

பின்னர் மிதவாதிகளின் செல்வாக்கு ஓங்கியது. எதிர்ப்பை ஒடுக்கிய ஆங்கிலேயர் என் செய்தனர். தலைநகரை மாற்றினர். இதுவரை தலைநகர் கல்கத்தா. ஆனால் இனி? டில்லி தலைநகர் ஆகியது. மிதவாதிகளுக்கு இதைக் காட்டிலும் பெரிய மூக்கறுப்பு ஏது?

## காங்கிரஸுக்கு புத்துயிர்

அன்னி பெஸண்ட் அம்மையார் ஐயர்லாந்து (ஐரிஷ்) நாட்டைச் சேர்ந்தவர். இந்தியாவுக்கு வந்தார். நம் நாட்டில் விடுதலைக்காக நடந்த போராட்டத்தில் அனுதாபங் கொண்டார். அவரே காங்கிரஸுக்கு புத்துயிர் ஊட்டினார் என்றால் மிகையே அன்று! திலகரும் சிறையிலிருந்து வெளிப் போந்தார்.

அன்னி பெஸண்டின் பத்திரிகைகள் இரண்டு. ஒன்று 'நியூ இந்தியா.' மற்றொன்று 'காமன் வீல்' என்பது. இரண்டும் இந்தியாவின் உரிமைக்காகப் போராடின.

பம்பாயில் 30-வது காங்கிரஸ் சபை கூடியது. அப்போது அன்னி பெஸண்ட் உரிமை முழக்கம் செய்தார்.

---

* 'இந்தியாவும் விடுதலையும்', பக். 293.

''பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துள் சுய ஆட்சி பெற இந்தியா எல்லா வழியிலுந் தகுதியுடையதாயிருக்கிறது. அதைப் பெறுவதற்கு இதுவே காலம்'' என்றார்.

சுரேந்திரநாத் பானர்ஜி, மாளவியா ஆகியோர் இக்கருத்தை ஊர்ஜிதப்படுத்தினர்.

எல்லாவற்றிலும் காங்கிரஸும் முஸ்லீம் லீக்கும் ஒன்றுபட்டே செயல்பட்டன. இவ்விரண்டும் ஒற்றுமையாகவே இருந்து விட்டால், அவ்வொற்றுமை சுயராஜ்யத்திற்கு வழிகோலும் அன்றோ? உடன் பிரித்தாளும் தந்திரத்தைக் கையாண்டது அதிகார வர்க்கம்.

பெஸண்ட் அம்மையாரிடமும் திலகரிடமும் ஈடுகாணம் கேட்டது. ஆனால் ஈடுகாணம் கட்டப்பட்டதா? இல்லை. நேர்மை வென்றது! பம்பாய் ஹைகோர்ட் இந்த ஈடு காணத்தை தடை செய்தது. உரிமைக் குரல் ஓங்கியது. அடக்குமுறை அசைக்கப்பட்டது.

இலட்சுமணபுரி காங்கிரஸில் மிதவாதி, தீவிரவாதி வேற்றுமையைப் போக்கினார் திலகர். ஒற்றுமை நிலவியது.

இலட்சுமணபுரி காங்கிரஸில்தான் சுய ஆட்சித் தீர்மானம் நிறைவேறியது.

1917-ம் ஆண்டு ஜூன் மாதம் பெஸண்ட் அம்மையாரை காப்பில் (வீட்டு காவலில்) வைத்தது. ஏன்? சட்ட வரம்புக் குட்பட்ட கிளர்ச்சியை நடத்தினார். அது தவறாம். எனவே காவலில் வைக்கப்பட்டார்.

இதற்கு எதிரொலியாக எங்கும் எதிர்ப்பு. நாடெங்கும் எதிர்ப்பு. மக்கள் மனத்தில் கொதிப்பு! கொந்தளிப்பு!

விளைந்த பயன் என்ன?

மூன்று மாதத்திற்குள் அம்மையார் விடுதலையடைந்தார். அம்மையார் கோரிய பொறுப்பாட்சி உறுதிமொழி அரசாங்கச் சார்பில் பார்லிமெண்டில் பிறந்தது.

இந்திய நிலைமையை நேரில் கண்டு அறிய இந்திய அமைச்சர் திரு. மாண்டேகு இந்தியாவுக்கு அனுப்பப் பட்டார்.

## முப்பத்திரண்டாவது காங்கிரஸ் தீர்மானங்கள்

கல்கத்தாவில் முப்பத்திரண்டாவது காங்கிரஸ் அன்னி பெஸன்ட் அம்மையார் தலைமையில் கூடிற்று. பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. அவைகளுள் பொறுப்பாட்சி தீர்மானம் முக்கியத்துவம் பெற்றாலும், அதைவிட அதிகமுக்கியத்துவம் பெற்றது அலி சகோதரர்கள் விடுதலை தீர்மானமே. இந்து, முஸ்லீம்—பகை உண்டோ? இது அதன் அறிகுறியோ.

## ரௌலட் சட்டம்

1918—ஒரு முக்கியமான ஆண்டு, இந்திய வரலாற்றில் முக்கியமான ஆண்டு. மாண்டேகு அறிக்கை வெளிவந்தது. இந்த அறிக்கையை ஒட்டி இந்திய அரசியல் சீர்திருத்தச் சட்டம் உருப்பெறத் தருணம் வந்தது! இவ்வாறு அனைவரும் எண்ணினர். ஆனால் ஏமாந்தனர். ஏன்? ஐரோப்பா யுத்தத்தில் பிரிட்டனுக்கு பொன்னையும் உயிரையும் வாரி வழங்கிய இந்தியாவின் உதவியை பிரிட்டன் மறந்தது; நம் நாட்டை ஒறுக்க உளங்கொண்டது, சதி செய்தது. நாட்டில் மூர்க்கத்தனம் அராஜகம் இருப்பதாக ஒரு வதந்தியைக் கிளப்பியது. இதன் உண்மையை ஆராய ரௌலட் என்பவரை தலைவராகக் கொண்ட ஒரு குழுவை அனுப்பியதாக ஒரு நாடகமாடியது. விளைவு?

இந்திய சட்டசபையில் ஒரு மசோதா கொண்டு வரப் பட்டது. சட்ட சபை மசோதாவை அங்கீகரிக்க மறுத்தது! நாடே மறுத்தது, ஆனால் மசோதா நிறைவேறியது. பலாத்காரமாக நிறைவேற்றப்பட்டது என்பதே அப்பட்ட மான உண்மை.

அப்போது இராஜப் பிரதிநிதி லார்ட் செம்ஸ்போர்ட் அவர் கையொப்பமிட்டு, தன் இலச்சினை பொறித்தால் தான் அந்த மசோதா சட்டமாகும். மகாத்மா காந்தி இராஜப்பிரதிநிதியை சந்தித்தார். இம்மசோதாவில் 'இராஜப் பிரதிநிதி இலச்சினை பொறியாது விடுதல் நல்லது' என்று விண்ணப்பித்துக் கொண்டார். லார்ட். செம்ஸ்போர்ட் மகாத்மாவின் விண்ணப்பத்துக்குச் செவி சாய்த்தாரில்லை.*

மகாத்மா என்ன செய்தார்? நாடு முழுவதுஞ் சுற்றிச் சுற்றிச் சத்தியாக்கிரகத்துக்கு நாட்டைப் பயிற்சி பெறச் செய்தார். சத்தியாக்கிரகம் தொடங்குவதற்கு முன்னர், நாட்டின் நிலையைச் சோதிக்க வேண்டி, சத்தியாக்கிரக முறையில் ஒருநாள் கொண்டாடப்பட வேண்டுமென்று, ஒரு அறிக்கை விடுத்தார்.** ஏன்? தம் பயிற்சியால் மக்கள் எவ்வளவு பண்பட்டிருக்கிறார்கள் என்று அறிதற் பொருட்டே.

## பஞ்சாப் படுகொலை

காந்தியடிகள் விரும்பியவாறு சத்தியாக்கிரக நாள் எங்கும் கொண்டாடப்பட்டது. முக்கியமாக பாஞ்சாலம் மிக சிறப்பாகக் கொண்டாடியது.

என்ன விளைவு?

பாஞ்சாலத்தில் அடக்குமுறை தலைவிரித்து ஆடியது.

இராணுவ ஆட்சி மக்களை அச்சுறுத்தியது. ஜாலியன் வாலாபாக்கில் கூடிய பாமர மக்கள் கூட்டத்தைச் சுட்டுத் தள்ளின ஆங்கில பீரங்கிகள். ஜாலியன் வாலாபாக் மிஷின் துப்பாக்கிகளுக்கு அநியாயமாக இரையான ஒன்றுமறியா ஆண்மக்கள் எத்தனை எத்தனை! பெண் மக்கள் எத்தனை,

---

* முன் குறிப்பிட்ட நூல், பக். 308.
** ,, ,, ,, பக். 310.

எத்தனை! உலகே அறியா பச்சிளங் குழவிகள் எத்தனை எத்தனை! எவ்வளவு கொடுமை!

அடுத்தடுத்து ரௌலட் சட்டம், பஞ்சாப் படுகொலை! கிலாபத் இயக்கத்துக்கு நியாயம் பிறக்காதது—ஆகிய எல்லாச் சம்பவங்களும் சுயராஜ்ய வேட்கையை எழுப்பின.

நாட்டு வாரம் கொண்டாட மகாத்மா எண்ணங் கொண்டார். ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் ஆறாம் நாள்-ரௌலட் சட்டத்தின் ஆற்றலை வீழ்த்திய நாள் முதல் பஞ்சாப் படுகொலைநடந்த ஏப்ரல் பதிமூன்றாம் தேதிவரை உள்ள ஒரு வாரமே நாட்டு வாரமாகும்.

இந்த வாரத்தைக் கொண்டாடுவதற்கு வேண்டிய தகுதிகளையும்-முறைகளையும் காந்தியடிகள் தம் அறிக்கை களில் வெளியிட்டார்.*

## 1919

மாண்டேகு செம்ஸ்போர்ட் சீர்திருத்தம் பார்லிமெண்டில் நிறைவேறியது.

இரட்டை ஆட்சி முறை இந்தச் சீர்திருத்தத்தில் இடம் பெற்றது. இந்தியாவின் உரிமை வேட்கைத் தீயை இது தணித்ததா? இல்லை, இல்லை!

அமிர்தசரஸில் முப்பத்து நாலாவது காங்கிரஸ் கூடியது. தலைவர் பண்டித மோதிலால் நேரு.

இக்கூட்டத்தில் திலகர் பெருமான் பொழிந்த சொன்மாரி மக்களை சிந்திக்க செய்தது. சுயராஜ்ய வேட்கையை அதிகரித்தது. அவர் என்ன சொன்னார்?

---

* 10-3-1920—காந்தியடிகளின் அறிக்கை-1, பக். 311, 312-இந்தியாவும் விடுதலையும் பக். 313-314-அரசியல்-பொருளாதாரம், இந்தியாவும் விடுதலையும்.

'ஜாலியன்வாலாவில் பாரத மக்களைச் சுட்டுச் சுட்டுக் கொன்ற டையர் முதலியோரை அவ்விடத்திலேயே பழி தீர்க்கவன்றோ தீர்மானம் நிறைவேற்றல் வேண்டும்?'

என்று மாண்ட்போர்ட் சீர்திருத்தத்துக்கு நன்றியுங் கூற முயன்றவரை கேட்டாரே, அது மக்களை மென்மேலும் உரிமை வேட்கை கொள்ளச் செய்யாதோ?

1920 இல் திலகர் அமரரானார்.

## சத்தியாக்கிரகம்

காந்தியடிகள் இந்திய நாட்டு உரிமைக்காக நடத்திய சத்தியாக்கிரகங்கள் பல; பற்பல. அவைகளுள் சிறந்தவை இரண்டே என்கிறார் திரு.வி.க. இரண்டும் நாட்டின் விடுதலையைக் குறிக்கொண்டு நிகழ்ந்தவை.

1921-ல் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போரால் நாடு முழுவதும் விழிப்புற்றது. பல்லாயிரக் கணக்கான மக்கள் சிறை புகுந்தார்கள்.

1921-இரட்டை ஆட்சி ஏற்படுத்திய மாண்ட்போர்டு சீர்திருத்தத்தை ஒட்டி அமைந்த சட்டசபை திறப்புவிழா. இந்த விழாவை நிகழ்த்தப் போந்த கன்னாட் பிரபுவை இந்தியர் வரவேற்கலாகாது என்ற காந்தியடிகளின் அன்புக் கட்டளையை நாடே ஏற்றது.

அதே போல் 1930-ல் இந்தியாவை வேல்ஸ் இளங்கோ காண வந்தார். இந்திய மக்கள் இளங்கோவை வரவேற்றனரா? இல்லை, இல்லை! பெரியதொரு சாம்ராஜ்யத்தின் வாரிசை புறக்கணித்தது ஏன்? காந்தியடிகளின் அன்புக் கட்டளையின் சக்தியே அதைச் செய்யத் தூண்டியது, பலம் பொருந்திய ஓர் பேரரசை, ஒரு உண்மை யோகி எவ்வாறு துச்சமாக ஆக்கி விட்டார் பார்த்தீர்களா?

காங்கிரஸுக்குள்ளே சுயராஜ்யக் கட்சி தோன்றியது. இதை தோற்றுவித்தவர் தேச பந்து தாஸ் அவர்கள்.

காந்தியடிகள் சுத்த சுயராச்சிய தீர்மானத்தை ஏற்றார் இல்லை.

பல காங்கிரஸ் மகாநாடுகள் கூடின.

## (ஸர். ஜான்) சைமன் கமிஷன்

மாண்டேகு செம்ஸ்போர்ட் சீர்திருத்தத்தை இந்தியா செயல்படுத்திய விதத்தையும், மேற்கொண்டு செய்ய வேண்டியது யாது என்று நேரிற் சென்றறிய ஜான் சைமன் தலைமையில் ஒரு விசாரணைக் கூட்டம் இந்தியாவுக்கு வந்தது. இதனுடைய விசாரணையில் காங்கிரஸ் பங்கு கொள்ளவில்லை. சைமன் கமிஷன் அறிக்கையையும் சமர்ப்பித்தார்.

இரண்டு முறை வட்டமேஜை மகாநாடு கூடிற்று. இரண்டாம் வட்டமேஜை மகாநாட்டிற்குள் காந்தி-இர்வின் உடன்படிக்கை நிறைவேறினமையால் அம்மகாநாட்டில் காந்தியடிகள் கலந்து கொண்டார்.

இதன் பலனாக 1935-ம் ஆண்டு இந்திய அரசியல் சீர்திருத்தச் சட்டமாக நிறைவேறியது. அதன்படி ஒருவித மாகாண சுய ஆட்சி வழங்கப் பட்டது.

## 1937-தேர்தல்

புதிய அரசியல் சீர்திருத்தத்தை ஒட்டி தேர்தல் நடைபெற்றது. காங்கிரஸுக்கு பெருமிதமான வெற்றி. முதலில் பதவி ஏற்பதா வேண்டாமா என்ற தயக்கம் கொண்டது காங்கிரஸ். பின்னர் ஒரு நிபந்தனை மீது காங்கிரஸ் பதவி ஏற்றது. நிபந்தனை யாது? மந்திரிமார் கடனாற்றும்போது, அவர்தஞ் செயலில் கவர்னர் குறுக்கிட்டு தொல்லை விளைத்தலாகாது என்பதே நிபந்தனை.

## காங்கிரஸ் பதவி ஏற்றது

இரண்டரை ஆண்டு பல மாகாணங்களில் காங்கிரஸ் சார்பில் ஆட்சிமுறை நடைபெற்றது. ஆனால் பொது மக்களுக்கு ஏமாற்றம்! ஏமாற்றம்! பெருத்த ஏமாற்றம்! நாடு எதிர்பார்த்தபடி ஆட்சி நடைபெறவில்லை.

இந்தக் குறைக்கான காரணங்கள் சிலவற்றை அரசியல் ஞானி திரு.வி.க குறிப்பிடுகிறார்.

அபேட்சகர்களது தேர்வு-முறை முதலில் ஆராயப் படுகிறது. அபேட்சகரைத் தெரிந்தெடுத்ததில் காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டு நேரிய முறையில் கவலை செலுத்தவில்லை. போரில் தலைப்பட்டு சிறை புகுந்தவர்க்கு சிறப்பளிக்க கருதி, தகுதி, அரசியல் ஞானம் இல்லாதவரை அபேட்சகராக்கினால் பொறுப்பு உணர்ந்து ஆட்சி செய்ய முடியுமோ?

அதுமட்டுமா, இத்தகையோர் அரசியல் ஞானியரின் உதை பந்தாகா விட்டால் பதவி நிலைக்காதே! எனவே அரசியல் ஞானியரின் தன்னலத்திற்குப் பயன்படும் பொம்மை யாயினர் இவர்கள்.

காங்கிரஸ் தான் வகுப்பு வாதத்திற்கு அப்பாற்பட்ட தென்பதை மறந்தது. வகுப்புவாதம் தேர்தலில் மாபெரும் இடம் பெற்றது. இது ஒரு தவறு; தவறு என்றால் சாதாரண தவறல்ல; நாட்டின் ஒற்றுமையைத் தொலைக்கக் கூடிய தீய சக்தி.

இந்தப் பதவியிலிருந்தவர்க்கு சம்பளம் கொடுக்கத் தீர்மானித்தவுடன், பதவி மோகம் அனைவரையும் உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டது.

அது மட்டுமா? மந்திரிமார், காரியதரிசி, மற்ற சட்டசபை அங்கத்தினர் காங்கிரஸில் பொறுப்பான பதவிகள் இன்னமும் ஏற்றிருந்தது—முறையாக இல்லை.

"பதவியிலிருப்போரும் அவரை மேற்பார்வையிடுவோரும் ஒரே கூட்டத்தவர் ஆயின் நீதி எங்ஙனம் விளையும்? எங்ஙனம் வளரும்?"*

ஆங்கிலேயரின் அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட போது கடும் எதிர்ப்பு தெரிவித்த காங்கிரஸ், இன்று அதைத் தவிர்க்க சீர்திருத்தச் சட்டத்தை ஏற்றதா? நீதியையும் நிர்வாகத்தையும் தனித்தனியே பிரித்ததா? இல்லையே!

இது மட்டுமல்லவே. நாளாக ஆக அதன்கண் முதலாளி செல்வாக்கும் புகுந்து கொண்டது. காங்கிரஸ் பம்பாய் முதலாளிகள் வாய்பட்டுக் கிடந்தது வரலாறு அறிந்த உண்மை.

## இந்து முஸ்லிம் பிணக்கு

முதல் சத்தியாக்கிரகத்திற்குப் பின் காந்தியடிகள் தீண்டாமை விலக்கலில் தலைப்பட்டது, முஸ்லீம் லீக்குக்கு ஐயத்தை ஏற்படுத்தியது.

ஜின்னாவின் லீக் காங்கிரஸுடன் பழையபடி இணைந்திருக்கவில்லை. காரணம் அறிய முடியுமோ?

இந்த ஐயத்திற்குப் பின் சுயராஜ்யத்திற்குப் பாடுபட்ட இரு பெரிய இயக்கங்களும் பிரிந்தன; முன்பிருந்த தொடர்பு அறுந்தது, அறுந்தே போயிற்று. அதைத் தொடர்ந்து 'வந்தே மாதரம்' பாடல் இஸ்லாத்துக்கு ஏற்றதல்ல என்ற எதிர்ப்பு; காங்கிரஸ் கொடி; அந்த மூவர்ண கொடியும் இஸ்லாத்துக்கு மாறுபட்டது என்ற கருத்து. எனவே பொதுவானவைகளை கொள்ளலாகாது என்று கிளர்ச்சி! எந்த ஒரு செயலுக்கும் எதிர்ப்பு.**

---

* இந்தியாவும் விடுதலையும், பக். 322.
** விரிவாக இதுபற்றி அறிய-இந்தியாவும் விடுதலையும், பக். 327-329 பார்க்க.

காங்கிரஸ் பதவியேற்காமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்! ஆனால், நடந்ததென்ன என்பதை நீங்களே அறிவீர்கள்!

இந்து மகாசபை முஸ்லீம் லீக்கின் போக்கைக் கண்டித்தது. காங்கிரஸ் முஸ்லீம்களுக்கு விட்டு கொடுப்பதாய் கருதியது.

## காங்கிரஸ் ஆட்சி: நலன்கள்

காங்கிரஸ் ஆட்சியில் குடி நிறுத்தம், கடன் நிவாரணம், திருக்கோயில் திறப்பு முதலிய நன்மைகள் ஏற்பட்டாலும், வறுமைப் பிணி இன்னும் இருந்தது. முதலாளி மனங்கொண்ட மந்திரிமார் வறுமையைப் போக்க எங்ஙனம் முயல்வர்.

## காங்கிரஸின் புதிய போக்கு

1940 ஆம் ஆண்டு காங்கிரசைச் செம்மைப் படுத்த வேண்டும் என்ற எண்ணம் எங்கும் பரவியது. இதில் ஜவஹர்லால் நேரு, சுபாஷ் போஸ் ஆகியோர் ஆர்வங் காட்டினர்.

நடந்ததென்ன?

போஸை நிர்வாகம் விரட்டி ஓட்டியது.

## முன்னேற்றக் கட்சி

போஸ் முன்னேற்ற கட்சி தொடங்கினார். ஆனால் குறுக்கிட்ட ஐரோப்பிய யுத்தம் அவரை முடக்கியது. யுத்தத்திற்கு எவ்வித நிபந்தனையுமின்றி இந்தியா உதவ வேண்டும் என்பது காந்தியடிகளின் உள்ளக்கிடக்கை. ஆனால் காரிய கூட்டம் பிரிட்டனுக்கு உதவு முன்னர், முழு சுயராஜ்யம் இந்தியாவுக்குக் கொடுக்கப்படும் என்றும் அதை நிர்ணயிக்கும் உரிமை இந்தியருடையது என்றும் உறுதிமொழி

பெறல் வேண்டும் என்றும் வற்புறுத்தியது. அது மட்டுமா? அதுவரை மந்திரிமார் பதவி வகிக்கலாகாதென்றும் தீர்மானம் செய்தது.

ஜின்னா அடிக்கடி இராசப் பிரதிநிதியை சந்தித்தார். அவர் உறுதி கூற இயலாமையைத் தெரிவித்தார்.

'காங்கிரஸுக்கு உள்ளும் புறமும் குழப்பமிராவிடின் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் விடை வேறு விதமாக பிறந்திருக்கும்.*

இதைத் தீர்ப்பது எப்படி? காலம் தான் பதில் சொல்ல வேண்டும்!

## தொழில் இயக்கம்

நாட்டின் முதுகெலும்பு பொருள் வளம். பொருள் வளம் வேண்டுமானால் சுரண்டல் நிறுத்தப்படல் வேண்டும் சுரண்டல் நிறுத்தப் பெறுதற்கு அரசியல் விடுதலை தேவை.

அரசியல் விடுதலையின் உயிர்நாடி பொருளாதார விடுதலை. பொருளாதார உரிமை என்பதும் தொழிலரசு என்பதும் ஒன்றே: தொழிலாளர் சுயராஜ்யம் என்றோ சமதர்ம ஆட்சி என்றோ சொல்லப்படுவதும் அஃதே.

பொது மக்கள் நல்லவர்கள். மிகவும் நல்லவர்கள். அதில் ஐயமேதும் இல்லை. ஆனால் தம்மையறியாமலேயே பூசல்களில் ஈர்க்கப்படுவர்; ஈடுபடுத்தப்படுவர். இங்ஙனம் அவர்களை ஈர்த்து ஈடுபடுத்துபவர் யார்? பணக்காரர்களும் படிப்பாளிகளுமே! எனவே சூழ்ச்சிக்காரர்களால் கைப் பாவையாக ஆட்டப்படும், இப்பொதுமக்களுக்கு அரசியல் சட்டம் தெளிவாக புரியுமா? இல்லை, நன்மைதான் செய்யுமா? செய்யாது!

சுயராஜ்யம் முதலாளிகளுக்கு மட்டுமல்ல; தொழிலாளர்க்கும் தேவை. தொழிலாளரின் இரத்தமே முதலாளிக்குப்

* இந்தியாவும் விடுதலையும், பக். 332.

பொருளீட்டிக் கொடுக்கும் இயந்திரம். தொழிலாளர் வருந்த, வருந்த முதலாளிகள் மட்டுமே கொழுத்தால் சமதர்மம் வருமா? வராது, வராது, வாராது! நாட்டில் வளம் குன்றும்; குறையும்; இல்லாமல் போகும். இதனை விஞ்ஞான ரீதியில் கார்ல் மார்க்ஸ் விளக்குகிறார்.* இது புதியதொரு கொள்கை அன்று. பற்பல சமயங்களும் இதையே வலியுறுத்தியிருக்கின்றன. இக்கொள்கையே சமதர்ம கொள்கை.

சமதர்ம கொள்கையின் முதுகெலும்பு தொழிலியக்கம்.

சமதர்மம் தழைத்தல் வேண்டுமாயின் தொழிலியக்கம் தழைக்க வேண்டும்.

தொழிலியக்கம் பற்றி திரு. வி.க கீர் ஹார்டி என்பவர் மூலம் அறிந்தார். மேன்மேலும் ஆழ்ந்து ஆராய்ச்சி செய்தார். திரு. வி. கவின் நட்பு செல்வபதி செட்டியாருக்கு ஏற்பட்டது. திவான் பகதூர் கேசவப்பிள்ளை சென்னை மாகாணசங்கத் தலைவர். இவர்களுடன் மட்டுமின்றி திரு. இலட்சுமண முதலியார், இராமாஞ்சலு நாயுடு ஆகியோருடனும் அடிக்கடி தொழிலாளர் இயக்கம் பற்றி உரையாடல் நடத்தினார் திரு.வி.க.

விளைவு என்ன?

## முதற் தொழிற் சங்கம்

1918 ஆம் ஆண்டில் மார்ச் 2-ந் தேதி சனிக்கிழமை ஜங்காராமாயம்மாள் பங்களாவில், வெங்கடேச குணாமிர்த வர்ஷணி சபையில் முதற் தொழிற்சங்கக் கூட்டம் நடைபெற்றது. அதே சென்னை தொழிற்சங்கமாக உருப்பெற்றது. கேசவப்பிள்ளை, வெளியூர் வாசியாதலால், சென்னைவாசி திரு. வாடியா தலைவராக்கப் பட்டார். கேசவப் பிள்ளையும் திரு.வி.கவும் உபத் தலைவர்கள்.

---

* இந்நூலில் மார்க்ஸியமும் காந்தியமும் தொடர்பு பகுதியில் விரிவான விளக்கம் காண்க.

இது தவிர, வேறு பல சங்கங்கள் சென்னையிலும் வெளியூரிலும் காணப்பட்டன. அவைகளுள் குறிப்பிடத் தக்கவை எம் அண்ட் எஸ். எம் தொழிலாளர் சங்கம், டிராம்வே சங்கம், மின்சார தொழிலாளர் சங்கம், மண்ணெண்ணெய் தொழிலாளர் சங்கம், அச்சுத் தொழிலாளி சங்கம், அலுமினியம் தொழிலாளர் சங்கம், ஐரோப்பிய வீட்டு தொழிலாளர் சங்கம், நாவிதர் சங்கம், தோட்டிகள் சங்கம், போலீஸார் சங்கம், தென்னிந்திய இரயில்வே தொழிலாளர் சங்கம், கோவை நெசவு தொழிலாளர் சங்கம், மதுரை நெசவு தொழிலாளர் சங்கம் ஆகியன.

தென்னிந்தியாவிலிருந்து பறந்த தீப்பொறி, வட இந்தியாவில் விழுந்தது; பற்றிக் கொண்டது. அங்கும் பல தொழிற் சங்கங்கள் தோன்றலாயின.

இங்கிலாந்து, இந்தியா ஆகிய இரு நாடுகளின் பண்பாடுகளின் ஒவ்வாத கலவையாக இருந்தது ஓர் பண்பாடு அதனை பின்பற்றியவர் ஆங்கிலோ இந்தியர். இவர்கள் என்ன செய்தார்கள்? எம் அண்ட் எஸ் எம் தொழிலாளர் கூட்டத்தில் கல்மாரியும் மண்மாரியும் பொழிந்தனர் ஆங்கிலோ இந்தியர். தொழிலாளர் திரண்டு வந்தனர். அவ்வளவே. மூர்க்கர்கள் வேகமாகப் பறந்தனர்.

இத்தகைய தொல்லைகள் ஒன்றா, இரண்டா? பல பல, பல பல!

## தொழிற்சங்கத் தொடக்க சேவை

தொழிற்சங்க சேவை தொடக்கத்தில் ஒருவித சமுதாய ஊழியமாகவும், சீவகாருண்யத் தொண்டாகவுமே கொள்ளப் பட்டது. சங்கக் கூட்டங்களில் சம்பள உயர்வு கேட்கப் பட்டது; வேலை நேரத்தைக் குறைக்க வேண்டும் என்று கோரப்பட்டது; இராப் பாடசாலைகளை அமைக்க வேண்டும் என்றும், சுகாதார வசதிகள் தர வேண்டும், இன்ன பிறவுமே பேசப்படுவது வழக்கம்.

## கதவடைப்பு-வேலை நிறுத்தம்

கதவடைப்பும் வேலை நிறுத்தமும் அடிக்கடி நிகழ்ந்தன. ''இவை சமதர்ம படலத்தின் ஒரு சிறு பகுதி என்பது என் எண்ணம்.''*

முதலாளியின் அடக்குமுறையும், தொழிலாளர் வேலை நிறுத்தமும் பெருகப் பெருகச் சமதர்ம உணர்வு தொழிலாளரிடையே தானே தோன்றும் என்பது திரு. வி. கவின் அசைக்க முடியாத நம்பிக்கை.

இதை அவர் வெளியிட்டாரா? இல்லை! இருந்தும், அக்காலத்திலே வந்த எதிர்ப்புகள் எத்தனை எத்தனை! கண்டித்து எழுதிய பத்திரிகைகள் எத்தனை!

இதனால் இயக்கத்திற்கு ஆதரவாளர் குறைந்தனரோ? இல்லை. 'நியூ இந்தியா' இதழ் எதிர்ப்புக்கு மறு சூடு கொடுத்தது. அதே போல், தேசபக்தனும் தொழில் இயக்கத்துக்கு ஆதரவு கொடுத்தது. இயக்கம் தளர்ச்சி கொள்ளவில்லை! சோர்வும் அதனை பற்றவில்லை! வீறு கொண்டும், நம்பிக்கையோடும் செயல்பட்டது. எச்சரிக்கைகளுக்கும் பஞ்சமில்லை.

இவைகளைக் கண்டு இயக்கம் அஞ்சவில்லை.

## மத்திய சங்கம்

எல்லா தொழிற்சங்கங்களுக்கும் நடுநாயகமாக மத்திய சங்கம் ஒன்று அமைக்கப்பட்டது. முதல் மாகாணத் தொழிலாளர் மகாநாடு முதன் முறையாகவும் கூடியது. திரு. வி. க தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார் வற்புறுத்தப்பட்டார் என்பதே மறுக்க முடியாத உண்மை.

சங்கத்தின் ஒற்றுமை முதலாளிகளை மட்டுமல்ல' அதிகாரிகளையும் நடுங்க வைத்தது. ஏன்?

* திரு வி க. 'இந்தியாவும் விடுதலையும்', பக். 351.

ஒரு தொழிலாளர் சங்கம், கதவடைப்போ வேலை நிறுத்தமோ நிகழ்த்திடின், அந்நிகழ்ச்சியில் எல்லா சங்கங் களும் அனுதாபங் கொண்டு உழைப்பர். அது மட்டுமா? பொது வேலை நிறுத்தமும் செய்யத் தயாராக அனைவரும் இருந்தால், எல்லாருக்கும் கிலி ஏற்படுவது சகஜந்தானே?

அதிகார வர்க்கம் சும்மா இருக்குமா? லார்ட் வில்லிங்டன் தொழிலாளர் சட்டமொன்று செய்யப் புறப்பட்டார். ''லார்ட் பெண்ட்லண்ட் எச்சரிக்கை முதல் பாணம்; லார்ட் வில்லிங்டன் எச்சரிக்கை இரண்டாவது பாணம்; சட்ட நடிப்பு மூன்றாவது பாணம்; தொழிலாளர் எச்சரிக்கையா யிருத்தல் வேண்டும்''* என திரு வி.க. சொல்லி வந்தார்.

லார்ட் வில்லிங்டன் சட்டம் செய்வதற்கு முன்னர் ஒரு விசாரணை கூட்டம் அமைத்தார். அக்கூட்டத்தின் தலைவர் ஜஸ்டிஸ் குமாரசாமி சாஸ்திரியார். இவரே ரௌலட் சட்ட விசாரணைக் குழுவில் இருந்தவர். அந்த விசாரணையில் ஒருவித மறுப்பும் கூறாதவர்; வாய்மூடி மௌனியாய் மற்றவருடன் கலந்து அறிக்கையில் கைச் சாந்துமிட்டவர்.

தொழிலாளர் ரௌலட் சட்டம் பற்றி அறிந்திருந்தனர்; சாஸ்திரியார் பற்றியும் நன்கு அறிந்தவரே.

'ரௌலட் சாஸ்திரி வேண்டாம்!' என்ற கூக்குரலை தொழிற்சங்கங்கள் எழுப்பின. இக்கூக்குரல் எவ்வித கலகத்தையும் ஏற்படுத்தவில்லை.

மத்திய சங்கம் விசாரணைக் குழுவில் பிரதிநிதித்துவம் கேட்டது.

லார்ட் வில்லிங்டன் தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுத்தார். பிரதிநிதிகள் சென்றனர். ஆனால் அவர் தொழிலாளர்களிடமே பேசினார். ஒரே ஒரு தொழிற்சங்கத் தலைவர் சாஸ்திரியின் தலைமைக்கு ஒப்புதல் தெரிவித்தார். மற்றவை எதிர்த்தன.

---

* 'இந்தியாவும் விடுதலையும்', பக். 356.

## ஒற்றுமையின் வெற்றி!

விசாரணைக் குழு அமைக்கும் எண்ணம் கைவிடப்பட்டது.

> ''இது தொழிலாளர் ஒற்றுமையின் வெற்றி!
> தொழிலாளர் பலத்தின் எதிரொலி!
> தொழிலாளர் சமதர்ம கொள்கையின் தீர்வு!''

என்று பெருமிதங் கொண்டார் திரு. வி. க.

## பக்கிங்காங் மில் சம்பவம்

பக்கிங்காம் மில்லில் 20-10-20 நடந்த ஒரு சிறு சம்பவத்தைப் பற்றிக் கூறுகிறார் திரு. வி. க. அதன் விளைவையும் விவரிக்கிறார்..

இதைப் படிக்கும் போது திரு. வி. கவின். சலியா உழைப்பு பளிச்சிடுகிறது. மக்கள் சக்தியை பயன்படுத்திக் கொண்டு அவர் தம் சுய முன்னேற்றத்திற்கு அடிகோலியிருக்கலாம். ஆனால், அப்படி இருப்பின், அவரை வையம் 'தன்னலமற்றவர்' என்று கை கூப்புமோ?

தொழிலாளர் பக்கம் நின்றதால் அவர்க்கு பிறப்பிக்கப்பட்ட தடைகள் எத்தனை?

பஞ்சாயத்து ஏற்பட்டதே, அதில் ஏற்பட்ட எதிர்பாரா திருப்பங்கள்; அதனால் அவர் பட்ட வேதனைகளை அறிந்தால் கல்லும் சிந்தாதோ கண்ணீர்! இதைக் கூற அவர் தம் எழுத்தே தவிர வேறேதும் பொருந்தாது.

'நவசக்தி' யில் அவர் எழுதிய ஆசிரியக் கட்டுரை உண்மை நிலையை அனைவருக்கும் தெளிவாக்கியது. அந்த மாபெரும் பிரச்சினையை எவ்வளவு தெளிவாகத் தமிழ் அண்ணல் தீர்த்து வைத்தார் என்பதை வியப்புடன் பார்க்கிறோம்.

பழம் பெரியதொரு நாடான இந்தியாவின் வரலாற்றைப் படித்தவர், கேட்டவர் அனைவரும் அதன் பெருமை யுன்னி யுன்னி பெருமிதம் கொள்ளும்படியும், அடிமை மோகத்தை விலக்கவும் கலங்கரை விளக்காக நம் நாட்டை காட்டினார் திரு. வி. க. இது அவர்தம் தாய் நாட்டுப்பற்றுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டன்றோ?

தற்கால இந்தியாவின் நிலையை அவர் போன்ற ஆய்ந் தறிந்த அறிஞர் வெகு சிலரே. தெள்ளிய நடையிலே உண்மைகளை பிறர் மனம் புண்படா வண்ணம் எழுதக் கூடிய வன்மை அவரிடமே இருந்ததென்றால் அது மிகையன்று.

பொருளாதாரத்தில் உரிமை வேண்டும் என்று தொழி லாளர்க்கு உணர்வு ஏற்படுத்தியவரே திரு. வி. க வெள்ளையர் மில் முதலாளிகள் செய்த கதவடைப்புகள் எத்தனை, எத்தனை! அந்த வல்லரசு அதிகாரத்தை எதிர்ப்பது என்ன சாமான்யமா?

தொழிலாளர் நலனையே உத்தேசித்து போராடி, திரு. வி. க வெற்றியுங் கண்டார்; இது எதைக் காட்டுகிறது?

அவர் தனிச் சிறப்புக் கொண்ட ஒரே தொழிலாளர் தலைவர் என்பதை எடுத்துக் காட்ட இதைவிட சான்று வேண்டுமா?

போராடிய தொழிலாளர் உணர்ச்சி வசப்பட்டு, மூர்க்க நெறி வழி செல்லாமல் தடுத்து நிறுத்துவது எளிதா!

இந்த மகத்தான செயலை செய்யக்கூடிய ஒரு தொழிற் சங்கத் தலைவர் திரு. வி. க தவிர யாரே உளர்!

தன்னை நாடு கடத்தப் போகிறார்கள் என்று அறிந் தாரே, சிறிதேனும் அச்சங் கொண்டாரா? தொழிற்சங்க வேலைகளினின்று ஒதுங்கினாரா?

அன்று அவர் பயந்து, வழக்குகளைக் கண்டு நடுங்கி, தொழிற்சங்க இயக்கத்திலீடுபட்டு தொல்லைப்படுவதை விடுத்து இருப்பின், தொழிற்சங்க இயக்கம் வளர்ச்சி என்னாகியிருக்கும்.

சிந்தியுங்கள்.

'இந்தியாவும் விடுதலையும்' என்ற நூலைப் படித்து அவர் தம் உயரிய உள்ளத்தைக் காணுங்கள்.

# 9

# திரு. வி. க
# ஒரு சீர்திருத்தவாதி

## அரசியலிலே!

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்து ஆறாம் ஆண்டு இறுதியிலே உலகத்திலே ஒரு பெரிய நிகழ்ச்சியுற்றது. அந்நிகழ்ச்சி எது?

பெரியதொரு சாம்ராஜ்யத்தின் தலைவராக வீற்றிருந்த ஒருவர்—மன்னர் ஒருவர்—முடி துறந்தார். சாம்ராஜ்யம் எது? மன்னர் எவர்? சாம்ராஜ்யம் என்பது பிரிட்டிஷ் சாம்ராஜ்யம். மன்னர் எட்டாம் எட்வர்டு.

இன்றைய நிலையில் பிரிட்டன் பல் இழந்த கிழச்சிங்கம். ஆனால், ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தி ஆறாம் ஆண்டிலே அது பெரியதொரு வல்லரசு.

இத்தகைய வல்லரசின் மன்னராக வீற்றிருந்தவர் எட்டாம் எட்வர்டு.

இவர் ஏன் முடி துறந்தார்? ஒரு பெண்ணின் பொருட்டு. எட்வர்டு மன்னர் தம் மனம் பற்றிய மங்கை ஒருத்தியை மணம் புரிய விரும்பினார். எதிர்ப்புத் தோன்றியது.

எதிர்ப்பு எங்கிருந்து தோன்றியது? பிரபுக்களிடமிருந்து; பிஷப்புகளிடமிருந்து.

எட்வர்டு மன்னர் மனம் பற்றிய மங்கை யார்? வாலிஸ் சிம்சன் என்பவர். அவர் அமெரிக்க நாட்டினர். ஆயினும் அவரது முன்னோர் இங்கிலாந்து நாட்டினரே.

திருமதி வாலிஸ், ஐந்தடி நான்கு அங்குல உயரம் உடையவர்; நல்ல உடையில் விருப்பமுடையவர்; நகை மோகம் இல்லாதவர். நடன வல்லவர்; அமைதியும் இரக்கமும் இயல்பாகக் கொண்டவர். இலக்கியத்தில் மனம் தோய்ந்தவர். மகிழ்ச்சியூட்டுவதில் வல்லவர். நல்ல அழகு டையவர்; எளிமையிலே விருப்பம் உடையவர்.

எட்டாம் எட்வர்டு, ஐந்தாம் ஜார்ஜ் மன்னருக்கும், மேரி ராணிக்கும் பிறந்த முதல் பிள்ளை. இருபத்தி ஐந்து ஆண்டு வேல்ஸ் இளவரசராக இருந்தவர்.

இளமையில் கற்பன கற்றவர்; கேட்பன கேட்டவர். நாடுகள் பல சுற்றியவர். எதையும் தாமே ஆராய்ந்து சீர் தூக்கி முடிவு காணும் ஆற்றல் மிக்கவர். சுறுசுறுப்புடையவர். சோம்பல் இல்லாதவர். தொண்டில் நாட்டம் கொண்டவர். ஏழைகளுடன் நெருங்கிப் பழகியவர். தொழிலாளர் நல் வாழ்வில் கருத்துக் கொண்டவர். 1914-ம் ஆண்டு நடைபெற்ற ஐரோப்பாப் போரில் பணியாற்றியவர்.

வாலிஸ் சிம்சன்-எட்வர்டு காதலுக்கு எதிர்ப்பு எழுப்பிய கூட்டம் அவ்வெதிர்ப்புக்கு கூறிய காரணம் யாது?

எட்வர்டு மன்னர் காதலித்த பெண்மணி, ஒருவரை மணந்தார்; மணவிலக்குச் செய்தார்; மீண்டும் மற்றொருவரை மணந்தார். அவரையும் மணவிலக்குச் செய்து விட்டார்.

''இவ்வாறு இருமுறை மணவிலக்குச் செய்த பெண் ஒருத்தியை மன்னர் மணம் புரிதல் கூடாது.''

''அப்பெண்மணியை நாங்கள் எங்கள் அரசியாக ஏற்றுக் கொள்ள மாட்டோம்'' என்றது பிரபுக்கள் கூட்டம்.

''மணச் சடங்கு புரிய இயலாது'' என்றார் பெரிய பிஷப்.

பெரிய பிஷப் யார்? அவர் தான் காண்டர்பரி ஆர்ச் பிஷப். அப்போது பிரிட்டிஷ் பிரதமராக இருந்தவர் திரு பால்டுவின். பால்டுவின் எவர் வழி நின்று ஆடினார்? பிரபுக்கள் வழி நின்றார்.

எட்டாம் எட்வர்டு மன்னர் முன் தோன்றிய கேள்வி இதுவே. முடியா? காதலா? முடி வேண்டுமேல் காதலை துறக்க வேண்டும்; காதல் வேண்டுமேல் முடி துறத்தல் வேண்டும்.

எட்வர்டு மன்னர் தம் காதலில் உறுதியாக நின்றார். முடி துறந்தார்.

இந்த நிகழ்ச்சியின்போது உலகம் பலவாறு பேசியது. எட்வர்டுமன்னர் முடி துறந்தமைக்கு ஆதரவாகப் பேசியவர் சிலரே. பெரும்பாலோர், அச்செயல் குறித்து வருந்தினரே யன்றி பாராட்டினர் அல்லர்.

ஒரு பெண்ணின் பொருட்டுப் பெரியதொரு சாம்ராஜயத் தலைமைப் பதவி துறந்தது அறிவீனம் என்று பேசியவர் பலர்.

வாலிஸ் சிம்சனின் பக்கம் நின்றவரும் சிலரே. அவர் தம் செயலை ஆதரித்தவரும் சிலரே. வாலிஸ் சிம்சனின் பெருமையைப் பேசிப் பாராட்டியவரும் சிலரே.

இந்த நிகழ்ச்சி குறித்துத் திரு. வி. கவின் உள்ளம் எவ்வாறு எதிரொலிக்கிறது?

'பெண்ணின் பெருமை' என்ற ஒப்பற்ற நூலைத் தமிழ் உலகுக்குத் தந்த திரு. வி. க. பெண்ணின் பெருமைக்கு இழுக்கு நேர்ந்தபோது வாளா கிடப்பரோ? கிடக்க மாட்டார் அன்றோ?

"எட்வர்டைத் தீமைகள் சூழ்ந்தன; முட்டின. அவர் அவைகளை எதிர்த்தாரில்லை. அவர் தியாகத்திற் கருத்துச் செலுத்தி முடி துறந்தார்.

"எட்வர்ட் முடி துறந்த செய்தி பத்திரிகை வாயிலாகவும், பிற வாயிலாகவும், யாண்டும் பரவலாயிற்று. அச்செய்தியை முதல் முதல் யான் பத்திரிகையில் படித்த போது அஃது எனது உள்ளத்தைக் கவர்ந்தது.

"எட்வர்டின் துறவு நிகழ்ச்சி குறித்து என் உள்ளத்தில் பலவித எண்ணங்கள் எழுந்தன. அவைகளை எனது அருமை 'நவசக்தி'யில் வரிவடிவில் வாரந்தோறும் வடித்து வந்தேன்.

"எண்ணங்கள் பல கட்டுரைகளாயின. அக்கட்டுரை களைக் கொண்டதே இந்நூல். கட்டுரைகளை ஒழுங்குபடுத்தி நூன் முறையில் ஒருவாறு செப்பஞ் செய்யலானேன். நூலின் உள்ளுறைக்கேற்ப 'முடியா? காதலா? சீர்திருத்தமா?' என்னுந்தலைப்புச் சூட்டப் பட்டது. இந்நூல் எட்வர்டின் துறவுவரலாற்றைப் பற்றி நிரலே கிளந்து கூறுவது அன்று. அத்துறவைப் பற்றிய ஓர் ஆராய்ச்சி நூல்."*

"காதல் என்பது தெய்வத் தன்மை வாய்ந்தது. அது காமமன்று. காதல் கடலினும் பெரிது. மலையினும் பெரிது உலகினும் பெரிது. அகிலத்திலும் பெரிது. அதற்கு ஈடு மில்லை; எடுப்புமில்லை; காதல் எல்லையற்றது. அதற்கு அகலமுமில்லை; நீளமுமில்லை. காதலின் மாண்பை அறிவார் யார்? காதலரே காதல் வெற்றியை உணர்வர். காதலுக்கு முன்னே, கல்வி என்ன? செல்வம் என்ன? சீர்

---

* 'முடியா! காதலா? சீர்திருத்தமா?'—திரு. வி. க (அணிந்துரை).

என்ன? சிறப்பு என்ன? பதவி என்ன? பட்டம் என்ன? அரசு என்ன? சாம்ராஜ்யம் என்ன? எல்லாம் சிறுமை! சிறுமை! காதலுக்குக் காதலே பெருமை காதலரிடம் காதலே வீறு கொண்டு நிற்கும்.

''இருவரை மணந்து விலகிய ஒருத்தி காதற் கனி யாவளோ' என்பதே புல்லிய உலகைக் கலக்கியிருக்கிறது. வின்ஸர் கோமகளார் மேல் நாட்டுப் பெண்மணி. அவ்வம் மையார் செயலை மேல்நாட்டு வழக்கவொழுக்கக் கண் கொண்டே பார்த்தல் வேண்டும்...

ஒருவர் நிலையை மற்றொருவர் உணராமலும். ஒரு சமூகப் போக்கை வேறொரு சமூகம் உணராலும், ஒரு நாட்டார் வழக்க ஒழுக்கங்களை இன்னொரு நாட்டார் உணராமலும் ஒருவரை மற்றொருவரும், ஒரு சமூகத்தை மற்றொருசமூகமும் ஒரு நாட்டாரை மற்றொருநாட்டாரும் நிந்தித்துக் கூறுவது தவறு. அவரவர் நிலையை—அவ்வச் சமூகப் போக்கை—அவ்வந் நாட்டார் வழக்கவொழுக்கங் களை—நேரிலுணர்ந்தோ, நூல்கள் வாயிலாகத் தெரிந்தோ மற்றவர்பால் கேட்டோ—தெளிவடைந்த பின்னரே மக்கள் செயல்களைப் பற்றி முடிவு கூறுதல் அறம். ஒன்றையும் உணராது வாயில் வந்தவாறு உளறுவது அறமாகாது, ஆகவே, மேல் நாட்டுச் சமூக ஒழுக்கம், சட்டம் முதலிய வற்றைக் கொண்டே வின்ஸர் கோமகளாரது நிலையை அளந்து கூறுவது நியாயம். அவ்வழி விடுத்து ஒரு பெண்மணி மீது பழி பாவங்களைச் சுமத்துவது நியாயமாகாது.''*

எட்வர்ட் ஒரு பெரும் சாம்ராஜியத் தலைமை பூண்டவர். அத்தலைமைக்கு மேல் வேறொரு தலைமை அச்சாம்ராஜ் யத்தில் இல்லை. அப்பெரும் பதவியிலுள்ள ஒருவர் தமது மனத்துக்கிசைந்த ஒரு பெண்மணியை மணக்க விரும்பினர். அவ் விருப்பத்துக்கு மந்திரிசபை இசைந்து வரவில்லை. சாம்ராஜ்யத் தலைவருக்குச் சோதனை ஏற்பட்டது. என்ன

* முடியா? காதலா? சீர்திருத்தமா?', தோற்றுவாய், பக். 11

சோதனை? சாம்ராஜ்யம் பெரிதா? காதல் பெரிதா? என்னுஞ் சோதனை.

எட்வர்டுக்குச் சாம்ராஜ்யம் பெரிதாகத் தோன்றிற்றா? காதலே பெரிதாகத் தோன்றிற்று.

அவர் என்ன நினைத்திருப்பார்?

'நாம் ஒரு பெரிய சாம்ராஜ்யத் தலைவர்; நமக்கு மேல் ஒரு தலைவர் சாம்ராஜ்யத்தில் இல்லை. இத்தகைய தலைமை தாங்கியுள்ள நமக்கு, நாம் விரும்பிய பெண்ணை மணம் செய்யும் உரிமையில்லையே. என்னே சாம்ராஜ்யத் தலைமை!' என்று நினைத்திருப்பர். இந்நினைவெழும் நெஞ்சினர்க்குச் சாம்ராஜ்யத் தலைமை எங்ஙனந் தோன்றும்? அஃது இன்பமாகத் தோன்றுமா? அது சுவையாகத் தோன்றும். தளையாகத் தோன்றும். சிறையாகத் தோன்றும். உரிமையற்ற இடம் எத்தகையாயினும் அது சிறையேயாகும்... ஒரு பெரும் சாம்ராஜ்யத் தலைவருக்குத் தாம் விரும்பிய நங்கையை மணம் செய்து கொள்ள உரிமையில்லை.

இவ்வுரிமை காட்டில் விலங்கோடு வாழும் குறவனுக்கு உண்டு. ஒரு பெரும் மன்னர் மன்னருக்கு இவ்வுரிமை இல்லை. என்ன உலகம்! இங்கிலாந்து உரிமை நாடாம்!

எட்வர்ட் எத்தகையவர்? அவர் உரிமையில் பிறந்து உரிமையில் வளர்ந்து உரிமை வண்ணமாயிருப்பவர். அத்தகைய ஒருவர் சாம்ராஜ்யப் பதவியின் பொருட்டு உரிமையைப் பறி கொடுப்பாரோ? ஒருபோதுங் கொடார்...

உரிமையுணர்வுடையார் எதையுந் தியாகஞ் செய்ய முற்படுவர். அவ்வுணர்வில்லாதார் தியாகத்துக்கு அஞ்சுவர். எட்வர்ட் காதலின் பொருட்டுப் பெருந்தியாகஞ் செய்தார். அவர் தியாகத்தின் பொருளானார். தியாகத்தின் இலக்கியமானார். தியாகமேயானார் என்றுங் கூறலாம். உலக சரித்திரத்தில் எட்வர்டின் தியாகத்தைப் போன்றதொரு தியாகமில்லை.

நாடுகளின் பொருட்டும், சாம்ராஜ்யங்களின் பொருட்டும் உலகில் போராட்டம் மிகுந்துள்ள வேளையில் எட்வர்ட் ஒரு பெரும் சாம்ராஜ்ய பதவியைத் துரும்பாக நினைத்து அதைத் துறத்தல் நேர்ந்தது...

எட்வர்ட் தியாகஞ் செய்த பதவி எத்தகையது? அஃது ஒரு ஜில்லா போர்ட் தலைமைப் பதவியா? ஒரு மாகாண மந்திரிப் பதவியா? ஒரு கவர்னர் பதவியா? ஓர் அரச பதவியா? அஃது இவையெல்லாவற்றினும் பெரிய சாம்ராஜ்யப் பதவியன்றோ?

சிறு சிறு அமைப்பின் தலைமைப் பதவியை இழக்க, மக்கள் எளிதில் ஒருப்படுகிறார்களா? தம்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் மலிந்தாலும், தம்மைப் பிடித்துத் தள்ளினாலும், 'சி!சி!' என்று எள்ளினாலும் ஒரு சிறிய அமைப்பின் பதவியை விட்டகல இக்காலத்தவர் விரும்புகிறாரா? அவர், மானத்தினும் பதவியையே பெரிதாக மதிக்கிறார்; அதற்காக அவர் எவ்வளவு பாடுபடுகிறார்! உழைக்கிறார்; இழிதுறைகளிலும் இறங்குகிறார்! அவர்தம் மனம் உடும்பினும் கடுமையாகப் பதவியைப் பற்றிக் கிடக்கிறது. அவர் மனிதரா? ஒரு பெரும் சாம்ராஜ்யப் பேற்றை உரிமையின் பொருட்டு ஒரு நொடியில் தியாகஞ் செய்த ஒருவர் மனிதரா?

"உலகில் முதலாளி-தொழிலாளி வேற்றுமை உணர்வு, சன்மார்க்கத்தை வளர விடாது. சன்மார்க்க வளர்ச்சிக்கு முதலாளி-தொழிலாளி வேற்றுமையுணர்வு பொன்றியே தீர்தல் வேண்டும். வேற்றுமையுணர்வு எப்படிப் பொன்றும்? இதற்குப் புரட்சி தேவை. புரட்சிக்கு உரியது தொழிலாளர் இயக்கம் என்று சொல்ல வேண்டுவதில்லை. ஆதலின் யான் புரட்சி மனப்பான்மையுடன் தொழிலாளர் இயக்கத்தில் இறங்கினேன்."*

---

* திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள்.

சன்மார்க்கப் பொதுவுடைமையில் சிந்தை தோய்ந்த திரு.வி.க—தொழிலாளர் நலனில் கருத்துக் கொண்ட திரு வி.க—புரட்சியுள்ளம் படைத்த திரு.வி.க—பிரபுக்களின் சூழ்ச்சி பற்றி வெளியிட்ட கருத்துக்களைக் கீழே காணலாம்.

எட்வர்ட் துறவுக்கு மூலகாரணம் பிரபுக்களின் சூழ்ச்சி என்பது முன்னே சொல்லப்பட்டது. பிரபுக்கள் வழியே மந்திரிசபை ஆடிற்று. முதல் மந்திரியும் ஆடினார். மற்றவரும் ஆடினர். இந்நாளில் உலகை ஆட்டி வைப்போர் பிரபுக்களே யாவர்...

''பிரபுக்கள் பண்டை நாளில் தெய்வ பக்தியுடையவர் களாக இருந்தார்கள். தங்கட்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்தார்கள். அவர்கள் தங்கள் நிலபுலங்களையும் பொன் பொருளையும், பிறவற்றையும், தங்கள் உரிமைச் செல்வங் களாகக் கொண்டார்களில்லை. அவைகள் இறைவனுடைய வென்றும், அவைகளின் பயனை மக்கள் அறவழியில் பகிர்ந்துண்பதற்குத் துணை புரியும் தர்மகர்த்தர்கள் தாங்கள் என்றும் எண்ணியே காலங்கழித்தார்கள்.அந்நாளில் பிரபுக்கள் ஜீவகாருண்யமுடையவர்களாக வாழ்ந்தார்கள் என்று சுருங்கச் சொல்லலாம்.

''பின்னே இயந்திர ஆட்சி தோன்றியது. அவ்வாட்சி, பிரபுக்களை ஆசைச் சேற்றில் அழுத்தியது. தன்னலப் பேய், அவர்களை விழுங்கியது. பிரபுக்கள் தங்கள் நலன் கருதியே வாழலானார்கள். தங்கள் நலத்துக்கு ஏழை மக்கள் படைக்கப் பட்டார்கள் என்று எண்ணலானார்கள். ஏழை மக்களை அடக்கியாள வேண்டி அவர்கள் அரசுகளைத் தங்கள் வயப்படுத்தினார்கள். பத்திரிகைகளைத் தங்கள் வயப்படுத்தினார்கள்.

''புரோகிதர்களையும் தங்கள் வயப்படுத்தினார்கள். சட்டங்கள் பல அவர்கள் நலத்துக்கென்றே செய்யப்பட்டன. கோடிக்கணக்கான மக்களைக் கொண்ட ஒவ்வொரு நாடும் ஆங்காங்குள்ள ஒரு சில பிரபுக்களின் வயப்படலாயிற்று.

''பிரபுக் கூட்டத்தின் தன்னலச் செயல்களால் விளைந்த தென்ன? விளைவு முதலாளி-தொழிலாளி போராட்டமே யாகும். மேல் நாடு தற்போது முதலாளி-தொழிலாளி போராட்டத்துக்கு இரையாகி வருதல் கண்கூடு. மேல் நாட்டில் உலகாயதப் புதுமை என்றும் சர்வாதிகாரமென்றும் விலங்கியல்புகள் வீறிடுகின்றன. அந்நாட்டின் செல்வங்கள் பெரிதும் குண்டு பீரங்கிகளுக்கே செலவாகின்றன. அந்நாட்டின் போராட்டம் உலக முழுவதும் பரவி வருகிறது.

''யான் கிறிஸ்துவப் பள்ளிக்கூடத்தில் பயின்று வந்த போது, 'சுவிசேஷ' மொழிகளைப்படித்ததுண்டு; மனப்பாடம் செய்ததுமுண்டு. கிறிஸ்து பெருமான் மலைப் பொழிவைப் பன்முறை யான் பாராயணஞ் செய்திருக்கிறேன்...''*

கிறிஸ்துவின் பெயரால் சொல்லப்படுவன எல்லாம் கிறிஸ்துவின் அறமாகா. கிறிஸ்துவின் பெயரை மட்டும் உதட்டில் முழக்கிக் கிறிஸ்துவுக்கு மாறுபட்ட செயல்களை நிரப்பும் புரோகித மதத்தைக் கிறிஸ்து மதமென்று கருதுவது தவறு... புரோகித மதத்தைத் தொலைக்கவே கிறிஸ்து பெருமான் தோன்றினார். வேதபாரகர், பரிசேயர், சதுசேயர் முதலியவர்கள் கடவுள் பெயரால் அனுப்பித்து வந்த சம்பிரதாய வழக்க ஒழுக்கங்களையும், தேவாலயங்கள் கள்ளர் குகைகளாக மாறியதையும் கடிந்து, கிறிஸ்து நாதர் நிகழ்த்திய அறச் செயல்களைக் கூர்ந்து நோக்குவோர்க்குப் புரோகித மதம் வேறு என்பதும் கிறிஸ்து நெறி வேறு என்பதும் நன்கு புலனாகும்.**

இக்கால பிஷப்புக்கள் எப்படி இருக்கிறார்கள்? அவர்கள் பைபிள் படிக்கிறார்கள்; சுவிசேஷப் பிரசாரஞ் செய்

---

* தமிழ்ச்சோலை அல்லது கட்டுரைத் திரட்டு-முதற் பகுதி, 24-12-1930.

** தமிழ்ச்சோலை அல்லது கட்டுரைத் திரட்டு, 23-12-1931.

கிறார்கள்: நித்திய ஜெபமுஞ் செய்கிறார்கள். ஆனால் அவர்களது வாழ்வில் பைபிள் படிப்பும்,சுவிசேஷ பிரசாரமும் நித்திய ஜெபமும் நுழைந்து ஒன்றுவதில்லை. கலெக்டரைப் போலவும், கவர்னரைப் போலவும், பிஷப்புக்கள் அதிகாரி களாகவே வாழ்கிறார்கள். அன்பைப் பார்க்கிலும் அதிகாரமே அவர்களிடத்தில் விஞ்சி நிற்கிறது. பிஷப்புக்கள் கிறிஸ்துவைப் பற்றிப் பேசுகிறார்களேயன்றி, கிறிஸ்துவைப் போல் வாழ, அவர்கள் விரும்புகிறார்களில்லை. அவர்கள் பிரபுக்கள் உலகில் வாழவே விரும்புகிறார்கள்.

அவர்களுக்குக் கிறிஸ்துவின் உலகம் எங்ஙனம் விளங்கும்?

'எட்வர்ட் திருமணத்திலும், முடி சூட்டலிலும் நாங்கள் கலந்து கொள்ளோம்' என்று கூக்குரலிட்டவர் யார்? பிஷப்புகளல்லவோ? அவர் ஏன் கூக்குரலிடல் வேண்டும்? அவர் அன்புக் கிறிஸ்து உலகில் வாழ்ந்தால் கூக்குரலிட்டி ருப்பரோ? அதிகார சாத்தான் உலகம் கூக்குரலை எழுப்பி விட்டது. சாத்தான் உலகம் சோதனைக்குரியது. அச்சோதனையைக் கடப்பவரே தெய்வப் பிள்ளைகளாவர்.

"...பின்னும் பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலைமேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும், மகிமைகளையும், அவருக்குக் காண்பித்து 'நீர் சாஷ்டாங்க மாக விழுந்து என்னைப் பணிந்து கொண்டால் இவைகளெல்லாவற்றையும் உமக்குத் தருவேன்' என்று சொன்னான். அப்போது இயேசு:

"அப்பாலே போ சாத்தானே! உன் கர்த்தராகிய கடவுளைப் பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய் என்று எழுதியிருக்கிறதே என்றார். அப்பொழுது பிசாசு அவரை விட்டுப் போனான். இதோ, தெய்வ தூதர்கள் வந்து அவருக்குப் பணிவிடை செய்தார்கள்."*

இங்கே சாத்தான் உலகம் எது? கிறிஸ்துவின் உலகம் எது? என்பது நன்கு விளங்குகிறது. இவ்விரண்டில் காண்டர்

* மத்தேயு; 4:8:11.

பரி ஆர்ச் பிஷப் உலகம் எது? அன்பர்களே! சிந்தியுங்கள். பிரபுக்கள் பிஷப்பைத் தூண்டிய போது, 'அப்பாலே போங்கள்' என்று கூற அவருக்கு மனம் எழுந்ததா? சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமைகளையும் கொடுக்க வந்த சாத்தானைப் பார்த்து இயேசு பெருமான் என்ன சொன்னார்? 'அப்பாலே போ சாத்தானே' என்றன்றோ சொன்னார்? அக்கிறிஸ்துவின் அடியவர் சாத்தானுக்கு ஏவல் செய்ய ஒருப்படுவரோ?

காண்டர்பரி ஆர்ச் பிஷப்புக்கும் மற்றவருக்கும் சீற்றம் எழுப்பியது எது? எட்வர்ட் ஓர் 'ஏழை மகளை'த் திருமணம் செய்ய விரும்பியதேயாகும். அப்பெண்மணி இருவரை மணந்து விலகிய பாவியாம். அந்தோ! கிறிஸ்து யாருக்காக உலகில் வந்தார்? ஆர்ச் பிஷப் பதிலிறுப்பாராக, பைபிள் என்ன சொல்கிறது? சத்திய சுவிசேஷம் என்ன சொல்கிறது?

'...தரித்திரருக்குச் சுவிசேஷம், பிரசங்கிக்கப்படுகிறது.'

மத்தேயு: 11: 5

'நீதிமான்களையல்ல பாவிகளையே மனந்திரும்ப வேண்டுமென்று அழைக்க வந்தேன் என்றார்.'

லூக்கா: 5: 32

பரிசேயரில் ஒருவன் தன்னோடு போஜனம் பண்ண வேண்டுமென்று அவரை (கிறிஸ்துவைக்) கேட்டுக் கொண்டான். அவர் அந்தப் பரிசேயன் வீட்டுக்குப் போய்ப் பந்தியிருந்தார். இதோ அந்த ஊரில் பாவியெனப் பேர் வாங்கின ஒரு ஸ்திரீ அவர் பரிசேயன் வீட்டிலே பந்தியிருக்கிறதையறிந்து ஒரு வெள்ளைக்கல் ஜாடியில் பரிமளத் தைலம் கொண்டு வந்து அவர் பாதத்தருகே பின்னாக நின்று அழுது அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைக்கத் தொடங்கித் தன் தலைமயிரினால் துடைத்து அவர் பாதங்களைத் திரும்பத் திரும்ப முத்தம் செய்து பரிமள தைலத்தைப் பூசினாள். அவரையழைத்த

பரிசேயன் அதைக் கண்டு இவர் தீர்க்கதரிசி யென்றால் தம்மைத் தொட்ட ஸ்திரீ இன்னாளென்றும் இப்படிப் பட்டவளென்றும் அறிந்திருப்பார்; இவள் பாவியாயிற்றே என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். இயேசு அவனிடம்: சீமானே உனக்கு நான் ஒரு காரியம் சொல்ல வேண்டும், அவன், சொல்லும் போதகரே என்றான். அப்பொழுது அவர்; ஒருவனிடம் இரண்டு பேர் கடன் பட்டிருந்தார்கள்; ஒருவன் ஐந்நூறு திநாரியமும் மற்றவன் ஐம்பது திநாரியமும் கொடுக்க வேண்டியதாயிருந்தது. கடனைத் தீர்க்க அவர்களுக்கு நிர்வாகமில்லாதபோது இருவருக்கும் மன்னித்து விட்டான். இவர்களில் எவன் அவனிடம் அதிக அன்பாயிருப்பான்? அதைச் சொல் என, சீமான், எவனுக்கு அதிகம் மன்னித்துவிட்டானோ அவனே என்று நினைக்கிறேன் என்றான்.

"அவர் அவனிடம்; சரியாய் நிதானித்தாய் என்று சொல்லி அந்த ஸ்திரீயின் பக்கமாகத் திரும்பிச் சீமானை நோக்கி, இந்த ஸ்திரீயைப் பார்; உன் வீட்டிற்குள் வந்தேன். நீ என் கால்களுக்குத் தண்ணீர் தந்ததில்லை. இவளோ, தன் கண்ணீரினால் என் கால்களை நனைத்துத் தலைமயிரினால் அவைகளைத் துடைத்தாள். நீ என்னை முத்தஞ் செய்ததில்லை. இவளோ நான் உள்ளே வந்ததுமுதல் என் பாதங்களை ஓயாமல் முத்தஞ் செய்தாள். நீ என் தலையில் எண்ணெய் பூசியதில்லை. இவளோ என் பாதங்களில் பரிமள தைலம் பூசினாள். ஆதலால் நான் உனக்குச் சொல்கிறேன்: இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டன......" எனறார். லூக்கா 7:36:50

கிறிஸ்து தரித்திரர்க்கென்றே வந்தார். பாவிகளுக் கென்றே தோன்றினார். அவரடிச்சுவட்டைப் பற்றி நடப் போரும் தரித்திரர்க்கென்றும், பாவிகளுக்கென்றும் வாழ்தல் வேண்டும்; உழைத்தல் வேண்டும். கிறிஸ்து கிறிஸ்து என்று உதட்டளவில் சொல்வதாலும், அவர்தஞ் சுவிசேஷத்தைப் படிப்பதாலும், அதைப் பிரசாரஞ் செய்வ

தாலும் மட்டும் ஒருவர் கிறிஸ்துவின் அடியவராகார். தரித்திரர் நலங் கருதியும், பாவிகள் நலங் கருதியும்மனமாரப் பாடுபடுவோரே கிறிஸ்துவின் அடியவராவர்.

''பிஷப்புக்கள் நீண்ட அங்கிகளைத் தரித்து சுவிசேஷப் பிரசாரஞ் செய்கிறார்கள். ஜெபம் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் தரித்திரர்களுக்கென்றும், பாவிகளுக்கென்றும் வாழ்கிறார்களில்லை. அவர்கள் பிரபுக்களுக்கென்று வாழ்கிறார்கள். பிரபுக்களுக்கென்று வாழ்வோர் எங்ஙனம் கிறிஸ்துவுக்கு அடியவராயிருத்தல் கூடும்?''

பெண்ணின் பெருமை பேசிய திரு வி.க—காதலின் உயர்வு பற்றிப் பேசிய திரு. வி. க—''முடியா காதலா சீர்திருத்தமா?'' நூலில் என்ன சொல்கிறார் பாருங்கள்.

''பெண்ணெனுங்கனி, வாழ்விற்கு வேண்டற்பாலதே. ஆனால் பெண் எனில் எப்பெண்? கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமோ? 'இருவரை மணந்து விலகிய ஒரு பெண்ணையா அரசர் நாடுவது?' என்று உலகங் கேட்கும். எவ்வுலகம் கேட்கும்? பால்டுவின் உலகம் கேட்கும்; பாதிரி உலகம் கேட்கும்.''

'''உலகமென்பது உயர்ந்தோர்மாட்டு' எனும் பொருளுடைய உலகம் கேட்குமோ? காதல் இன்னது என்று உணர்ந்த கடிமண உலகங் கேட்குமோ?''

# 10

# சமூக சீர்திருத்தவாதி திரு. வி. க

## பெண்ணே போற்றி

*பெண்ணின் பெருமை நூலின் முதல் பதிப்பு 1927 ஆம் ஆண்டில் வெளி வந்தது. தொடர்ந்து பல பதிப்புக்கள் வந்துள்ளன.*

*அந்நூலிலே பின்வருமாறு குறிப்பிடுகிறார் திரு.வி.க.*

*''யான் பெண் வயிற்றில் தோன்றினேன்; பெண்ணுடன் பிறந்தேன்; பெண்ணுடன் வாழ்ந்தேன். என் வாழ்விற்கு நாடோறுந் துணை புரியும் இயற்கை, பெண்ணாகவே காட்சியளிக்கிறாள். யான் தொழும் அன்புத் தெய்வமும் பெண்ணாகவே இருக்கிறது. எனது உள்ளத்துள்ள பெண்மை அருளைச் சொரிகிறது. யான் பேசும்மொழி எனக்குப் பெண்ணின்பம் நல்குகிறது. எல்லாம் பெண்மயமாக என்னைச் சூழ்ந்து என்னுடலுக்கும் உயிருக்கும் நலஞ் செய்கின்றன. இத்தகைய பெண் தெய்வத்தை முதன்மை யாகப் போற்றுகிறேன். பெண்ணே, முதன்மையுடையாள். அத்தாயை வணங்குகிறேன்.''**

*சூரிய மண்டலத்திலே எங்கே சூடு அதிகம்? வெளிப் பாகத்திலா, உள் பகுதியிலா?*

---

* **பெண்ணின் பெருமை**-திரு. வி. க, பக். 24-25.

சூரியனைத் தொட்டுப் பார்க்க இயலுமா? இயலாதே! பின்னே இந்த வினாவுக்கு விடைத் தான் காண்பது எப்படி? நிறத்தை உற்றுப் பார்க்கின் உண்மை ஓரளவு புலனாகும். செந்நிறம் கொண்டு செந்தழலாக விளங்கும் பகுதி வெப்பம் மிகுந்த பகுதி, அந்த நிறம் உள்ள இடமே சூடு அதிகம்.

அதனடியில் இருக்கும் நீல நிறப் பகுதியோ, வெப்பம் அடங்கிய பகுதி. இந்த வெப்பமும் தட்பமும் கொண்டதே இவ்வுலகம். வெப்பம், தட்பம் இரண்டுமே விரவியிருந்தால் தான் இயற்கை செவ்வனே இயங்கும். ஏதேனும் ஒரு கூறு அதிகரித்தாலோ, இயற்கை மற்றொன்றை மிகைப்படுத்தித் தானே சமன் செய்யும்.

நம் கோயில்களில் உள்ள மூர்த்திகள் இந்த அரிய தத்துவத்தை எடுத்துக் காட்டுவனவே. வெப்பம் ஆணினத்தைக் குறிக்கும். வெப்பத்தைக் குறைக்கும் தட்பமோ, பெண்ணினம்; ஆண்-சிவன்; பெண்ணோ-சக்தி; எனவே சிவனின்றி சக்தியில்லை; சக்தியும் சிவனன்றி இல்லை. பெண் இன்றேல் ஆணினம் எங்கே? தாய்மை எங்கே? நாடு எங்கே? மக்கள் எங்கே? மற்றவை எங்கே, எங்கே?

## பெண் யார்?

பெண் என்றால் பெண்ணாகப் பிறந்தவர் எல்லோரும் பெண்ணாவரோ? ஆகார்!' பெண் உறுப்போடு இருந்து விட்டால் மட்டும் பெண் ஆகிவிட முடியாது. அத்துடன் கூட அவர்களுக்கு வேறு பல இயல்புகளும் தேவை. பெண் உறுப்போடு வேறு பல இயல்புகளையும் கொண்ட ஒன்றே பெண்ணென்பது. அவ்வியல்புகளின் திரட்சி பெண்மை எனப்படும். இப்பெண்மையுடையது பெண்ணென்க.'

## பெண்மை

"பெண்மையாவது யாது? அடக்கம், பொறுமை, தியாகம், பரநலம், இரக்கம், அழகு, ஒப்புரவு, தொண்டு முதலியன அமைந்த ஒன்று பெண்மை எனப்படும். பெண்மை

என்பதை கூறிட்டு பார்ப்பின், அஃது அடக்கம் முதலிய நீர்மைகளாகப் பிரிந்து நிற்கும்; ஆகவே, அடக்கம் முதலிய இயல்புகளின் திரட்சி பெண்மையாகிறதென்க.''*

பெண் பிறவியின் நோக்கம் தாய்மைத் தொண்டு. இவ்வுலக ஆக்கமும் அழிவும் அவளிடந்தான் இருக்கின்றன.

'ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே!' இது எவ்வளவு உண்மை!

பெண் தன் வயிற்றில் பிறக்கும் பிள்ளைகளைத் தீய வழியில் வளர்த்து உலகில் விட்டால், உலக நிலை என்னாகும்?

பெண்ணின் தாய்மைத் தொண்டு எத்தகைத்து? உலக நலத்துக்கே உரியதன்றன்றோ? இதைவிட உலகில் வேறு பெருமையுண்டோ?

## தாய்மைத் தொண்டு

தாய்மைத் தொண்டு என்பது எளியதன்று. இது பற்றி பேசுவது எளிது; எழுதுவதும் எளிதே! ஆனால் தாய்மைத் தொண்டு எளிதோ? இல்லை, இல்லை, இல்லவே இல்லை. இத்தொண்டு தெய்வீகப் பணி; பயன் கருதாத தியாகப் பணி.**

பெண் என்பதற்கு மற்றொரு பெயரும் உண்டு, அதுவே தியாகம். எனவேதான் பெண்பாற் பெயர்களையே நமது ஆறுகள் பெற்றிருக்கின்றன. காவேரி, கோதாவரி, யமுனை, கங்கை என்று அவை தம் பயன் கருதா இயல்பால் அழைக்கப்படுகின்றன. இயற்கையை வெறுக்கும்போது அவை சீறி எழுகின்றன; வெள்ளமாக கரையை உடைக்கின்றன.

---

* 'பெண்ணின் பெருமை', பக். 12.

** விரிவுக்கு—திரு.வி.கவின் ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' ஒத்து பார்க்க.

சேதம்; அதையும் உதாசீனம் செய்தால், அழித்து, மீண்டும் ஆக்க செயலில் ஈடுபடுகின்றன. உலகில் நாடுகளையும், பெண்களாகவே நினைப்பதற்கும் காரணமிதுவே

## பெண்ணே போற்றி!

பெண்ணின் முதன்மை மறந்தாலோ, ஆங்கே நிகழ்வ தென்ன? கல்வி அருகும்; திரு மறையும்; பொழிவு பறந்தோடும்; அன்பு அழியும்; உரிமை குறுகும்; வாய்மை பறக்கும். தொண்டு திகைப்புறும்; தெய்வ மணமோ கருகும்; இது வரலாறு தந்த பாட்டு.

பெண்ணை 'தேவி' என்று குறிப்பிடுகின்றனர். ஆனால் ஆண் வர்க்கத்தை 'தேவன்' என்று குறிப்பிடுபவர் எத்தனை பேர்!!

வரலாறு என்ன கூறுகிறது? இடைக்காலத்தில் நம் நாட்டில் ஏற்பட்ட மானக் கேட்டைக் கூறுகிறது; நாடு நலங்குன்றச் செய்த சில சுயநல வர்க்கத்தின் இழிச் செயலைக் கூறுகிறது.

இந்த நாடு எத்தகைத்து? பண்டையிலே பெண் ணினத்தைப் பேணி, போற்றி பெருமைக் கொண்ட நாடு அத்வைத பேரொளி சங்கரன் சர்ச்சைக்கு உபயபாரதி என்ற ஆரணங்கை நடுநிலை வகுக்கச் செய்த நாடு;

கணித மேதையும் கர்த்தாவும் ஆகிய லீலாவதியை போற்றிய நாடு;

சுலபா என்ற பெண் புலவரின் புலமையைக் கொண்டாடிய நாடு;

கற்புச் செல்வி சீதைக்காக காவியமே படைத்த நாடு;

சபரியின் தியாகத்தை வாயார, மனதார போற்றிய பழம் பெரு நாடு!

யாஃஞவல்கியர் என்ற தவச்சுடருக்கு நிகர் என காத்யாயினி என்ற பெண் வேதாந்திக்கு ஒரு சூத்திரமே தந்த பெருமை படைத்த நாடு;

அந்தக் காலத்திலே, இவர்களை எல்லாம் மெல்லியலார் என்று சமூகம் ஒதுக்கவில்லை; இழிவு செய்யவில்லை.

எனவே அப்போது நாடு செழித்தது; பெருமை பெற்றது; புகழ் ஏற்றம் அடைந்தது; முன்னேற்றமும் அடைந்தது.

இத்தகைய நாட்டில் இடைக்காலத்தில் என்ன நடந்தது? சுயநலம் பெண்களின் உரிமைகளைப் பறித்தது; கல்வியை பெண்ணினத்திற்கு மறுத்தது; இந்த அடாத செயலுக்கு ஔவையார் வாக்கைக் காட்டி நியாயம் கற்பித்தது. ஔவையார் வாக்கு யாது?

''பேதமை என்பது மாதர்க்கணிகலன்.''

பேதமை என்ற சொல்லுக்கு இவர்கள் கூறிய பொருள் என்ன தெரியுமா? பேதமை என்றால் அறிவு இன்மை; மடமை; இதற்கு ஆதாரமும் காட்டினர். எதிலிருந்து? தமிழ் மறை திருக்குறளிலிருந்து. 'பேதமை' என்ற அதிகாரத்தை தம் செய்கைக்கு ஏற்றாற்போல் திரித்துப் பொருள் கூறினர்.

தமிழ் அறிஞர்கள் இதை ஏற்கவே மாட்டார்கள் என்பது பேருண்மை. ஏன்?

இந்த அதிகாரம் ஆண் வர்க்கத்திற்கும் உரித்தானதே என்பதை அவர் அறியாரோ!

## நெஞ்சு பொறுக்குதில்லையே!

கல்வியை பெண்ணினத்துக்கு மறுத்த செயல் முதல்படி. அடுத்து என்ன செய்தது இந்த சூழ்ச்சி சமூகம்? பெண்டிர்க்கென கட்டுப்பாடுகளை விதித்தது. தானே

தனக்குரிய துணைவனைக் காதலித்துத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பெண்களிடம் இருந்து பறித்தது ஏன்?

தம் மனப்படி பெண்டிரைத் திருமணம் செய்வதற்கே, கடிமணத்தைத் தடுத்த சூழ்ச்சிக் கும்பல், அஞ்சாது கிழவர்க்கு இளம் பெண்களைத் திருமணம் என்ற பெயரில் பலியிட்டது.

ஒரு பெண்ணுக்குப் பிள்ளை பிறக்காவிட்டால், அவளை 'மலடி' என்று இழித்துப் பேசியது. அவளுக்குத் தாய்மைக்கு அருகதை இல்லையா? இல்லை, இந்தக் குறை அவள் கைப் பிடித்த ஆண்மகனிடம் இருக்காதா? அவன் மலடாக இருக்க மாட்டானோ?

இதை நினைக்கவே மறுத்தது சமுதாயம். 'பிள்ளை இல்லை' என்ற குறையைப் பெரிதுப் படுத்தியது; முதலில் மனைவியின் தலையில் பழியைப் போட்டது. வேறொரு பெண்ணை அவள் துணைவனுக்கு மணஞ் செய்வித்தது. என்ன அநியாயம்!

பெண்களுக்கே 'கற்பு'. மற்றவர்க்கில்லை. 'கற்பைப் பேண வேண்டியதும் பெண்; கற்பைக் காக்க வேண்டியதும் பெண் மட்டுமே' என்று ஒருபட்ச நீதியை வலியுறுத்தியது.

ஆண்கள் விலங்குகளாகத் திரியலாம். அதைக் கேட்பார் இல்லை; தடுப்பார் இல்லை.

ஆனால் பெண்ணோ? ஆணின் வெறிக்கு இலக்கானவள்; 'வேசி' பட்டம் பெற்றாள்.

இந்த அநீதிகளைச் சொல்லும் போது, திரு. வி. க இரத்தக் கண்ணீர் வடிக்கிறார்; ஒழுக்கம் இருபாலார்க்கும் உரியதன்றோ!

பெண்ணினத்தைப் 'பேய்!' என்றும் 'மாயை' என்றும் மாசுபடுத்திய சமூகத்தை வெறுக்கிறார் தமிழ்ப் பெரியார்.

"உயிர்களின் தோற்றத்துக்கும் ஆக்கத்துக்கும் மூலமாயிருப்பவள் பெண். அப்பெண்ணின் வளங் குன்றுமேல் உலக வளம் குன்றும்; பெண்ணின் வளம் பெரிதும் அவளது இளமை வளர்ப்பையே ஒட்டி நிற்கும்."*

தாய் தந்தையர் பிள்ளைகளைப் பெறுவது மட்டும் பெருமையாகாது. அவற்றை நல்வழியில் வளர்ப்பதே பெருமை. பிள்ளைகளை ஒழுங்கு முறையில் வளர்க்குந் தொண்டிலும் சிறந்தது பிறிதொன்றுமில்லை.

"பிள்ளைகளை நல்வழியில் வளர்க்க முனையாத பெற்றோர், பின்னை உலகத்துக்குக் கேடு சூழ்ந்தவராவர்; எத்தனையோ பாவங்கட்கு விதையிட்டவர் ஆவர். பிள்ளைகளை—சிறப்பாக பெண் பிள்ளைகளை—வளர்ப்பதில் தாய் தந்தையர் பெருங்கவலை செலுத்துதல் வேண்டும். ஒரு பெண்ணின் வாழ்வு அவளோடு நிற்பதில்லை. அஃது அவள் வழித்தோன்றும் உலகையுந் தொடர்ந்து நிற்பது. 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்பது முதுமொழி. பெண் தாய்மைக்கு உரிய வித்து, அவளது இளமை வளர்ப்பாகலின், அவளது இளமை, நல்வழியில் அரும்புமாறு பெற்றோர் உழைத்தல் வேண்டும்; ஆகவே தாய் தந்தையர் பெண்ணின் தாய்மை விழுப்பமுணர்ந்து, பெண்ணை வளர்ப்பாராக."**

தாய் தந்தையரின் கடமைக்கு இதைவிடச் சிறப்பாக விளக்கம் தர இயலுமா?

வளர்ப்பு எவ்வாறிருக்க வேண்டும்? இதற்கும் விடை தருகிறார் தமிழ்த் தென்றல்:

---

* திரு. வி. க, 'பெண்ணின் பெருமை', பக். 60.
** " " பக். 62.

''குழந்தைகளின் மன மொழி மெய்களில் எக்காரணம் பற்றியும் தீமை படியாதவாறு தாய் தந்தையர் அவர்களைக் காத்து வர வேண்டும்.

''மற்றவர் கூட்டுறவாலும் அவைகட்கு கேடு நிகழாத வாறு காத்து வருதல் சிறப்பு''* என்கிறார் இராயப் பேட்டை முனிவர் பிறிதோரிடத்தில்.

மற்றொரு முக்கியமான எச்சரிக்கையும் விடுக்கிறார் திரு.வி.க.

## அன்பு-அடக்கமானது

அன்பு உள்ளடங்கி அடக்கமாக இருக்க வேண்டும். வெளிப்படையாகக் காட்டக் கூடியது அன்று உண்மையான அன்பு. பிள்ளைகளுக்கு அறிவை வளர்க்க வேண்டும் என்பதற்காக, பள்ளிக்கு தாயும் தினமும் செல்ல வேண்டுவ தில்லை. பிள்ளைக்குத் தரும் பாடங்களை தாய்தான் செய்ய வேண்டும் என்று நினைப்பதும் தவறு. இது குழந்தையின் தன்னம்பிக்கைக்கு ஊறு தேடும்.

தற்காலத்தில 'அன்பு' என்ற சொல்லுக்கு தாய்மார் எப்படி விளக்கம் கூறி, விளக்கத்தை செயலில் காட்டு கின்றனர் என்று அறிஞர்கள் சிந்தித்துப் பார்ப்பாராக.

அது மட்டுமா?

தாய் தன் அறிவை வளர்க்கவோ, பொழுது போக் காகவோ பாலுணர்ச்சியைக் கிளறும் இலக்கியங்களைப் பிள்ளைகள் எதிரில் படிப்பது தவறு: அதைவிட மாபெருந் தவறு அதை ஒளிப்பது. அதேபோல் 'சினிமா' என்று எதையும் பறந்து பறந்து பார்ப்பதும், நல்லதல்ல.

இன்றைய 'வயது வந்தோர்க்கு மட்டும்' என்ற படங் களில் முண்டியடிக்கும் கூட்டத்தில் அதிகமாக உள்ளவர் யார்? சற்றே உன்னிப்பாகக் கவனியுங்கள்!

* 'பெண்ணின் பெருமை, பக். 62.

திரு.வி.க. வின் தீர்க்க தரிசனம் இன்றைய சமுதாயப் போக்கைப் பார்க்கும் போது தெரிகிறதல்லவா?

## பெண்ணும் இயற்கையும்

பெண்ணை எப்படி பேணி வளர்த்தல் வேண்டும் என்ற முறையினை திரு.வி.க விளக்கிக் கூறுகிறார். இயற்கை யோடு கூடிய வாழ்வை பெண் ஏற்று, நடக்கக் கூடிய அளவு பழக்க வேண்டும். இளமையிலேயே இச்சிறந்த இயல்பை ஏற்படுத்தி விட்டால், பின் செயற்கைக்கு அடிமைப் பட எந்தப் பெண்ணும் விழைய மாட்டாள். உணவு பற்றிக் கூறும் திரு.வி.க பெண்மக்கள் உடை பற்றியும் கூறுகிறார்.

''நாகரிகம் முதிர முதிர மக்கட்கு உடை ஏற்பட்டது. உடையை, உடல் நலத்துக்கென அணிதல் வேண்டுமேயன்றி, ஆடம்பரத்துக்கென அணிதல் கூடாது. உலகில் பெரும் பான்மையோர் ஆடம்பரத்துக்கென்றே உடை உடுத்துகின் றனர். இதில் பெண்மக்கள் பேர் பெற்றவர்கள். ஆடம்பர உடை ஒருவரை உயர்த்துவதுமில்லை; அல்லாத உடை ஒருவரைத் தாழ்த்துவமில்லை. உயர்வு தாழ்வு உடையில் இல்லை.*

''நல்லறிவுடைய பெண்மகள், விலை உயர்ந்த உடை களை வாங்கித் தருமாறு எவரையும் வலியுறுத்தாள். தூய எளிய நல்லுடையையே அவள் விரும்புவாள்.''**

''ஆடம்பர'' உடைமீது கருத்தைப் பதிய வைத்துள்ள பெண்ணின் வாழ்வு, பின்னை நலமுறுதல் அரிது. நமது நாட்டில் எத்துணைப் பெண்மக்கள் வாயைக் கட்டி, வயிற் றைக் கட்டி, நாயகனையும் வஞ்சித்து, விலை உயர்ந்த புடவைகளை வாங்கிப் பெட்டியில் வைத்து, அழகு பார்த்து மகிழ்கிறார்கள். உடை எற்றுக்கு என்று இளமையில் உணராத குற்றமே இவ்வறியாமைக்குக் காரணம்.''***

---

* 'பெண்ணின் பெருமை', பக். 94.

** ,, ,, ,,

*** ,, ,, பக். 95.

இக்கால நாகரீக இயல்புக்கு இக்கருத்து எவ்வளவு பொருத்தம்.

## கவர்ச்சியே ஓடு

'பிறர் உள்ளத்தைக் கவரும் முறையில் உடைகோலஞ் செய்யும் பெண்மணிகள் நிலைக் குறித்து இரங்குகிறேன்.'

'தீய எண்ணம் உலவும் மனமுடைய ஆண் மக்கள் மனத்தையும் கவரக்கூடாத அமைதி பொருந்திய உடைக் கோலமும் உண்டு. அத்தகைய தெய்வீக எண்ணமூட்டக் கூடிய உடைக்கோலங் கொள்ளவே பெண்மக்கள் இளமை தொட்டு பழகல் வேண்டும்.'*

## நகைப் பித்து

'நகை. நகை!' என இக்காலத்திலும் பெண்கள் பித்து கொண்டு, அலைவதைக் காண்கிறோம். இதை அவர் கண்டித்தார். எத்தகைய காலத்திலே? நகைதான் பெண்ணின் நிலையான ஆதாரம். அதுவே அவளுடைய முழு சொத்து எனக் கருதிய காலம். இதற்கெனவே சமூகம் அவர்களை 'நகை காய்ச்சி மரமாக' ஆக்கிய காலம். நகை இன்றேல் பெண் இல்லை எனத் திட்டவட்டமாகப் பெண் களை ஒதுக்கிய அக்காலத்தே திரு. வி. க அக்கொள்கையைக் கடுமையாக எதிர்த்தார். ஏன்?

பெண்கள் அணிந்த நகைக் குவியலில் எத்தனையோ ஏழைகள் உழைப்பு கண்டார்! வறுமை கண்டார்; ஏழையின் ரத்தக் கண்ணீரைப் பார்த்தார். நகை அழகு தருவதன்று. பகட்டை வீசுவது. பகட்டு ஒரு பெண்ணுக்குத் தேவையா? இல்லை, இல்லை! பின் அதை சுமப்பானேன்!

இதுவே திரு. வி. கவின் கருத்து.

---

* முன்சொன்ன நூல், பக். 97.

நகைப்பித்தால் நாசமடைந்த குடும்பங்கள் எத்தனை எத்தனை! உடல் நலனுக்காக அணியப்பட்ட ஒரு சில நல் மணிகள் இந்த நகைப்பித்தால் பிற்காலத்தில் போலி மணிகளுக்கும் நகைகளுக்கும் இடங்கொடுத்து, இன்று வெறும் சேர்க்கையாக அன்றோ பொலிந்து விட்டது!

'பெண்ணின் முகம் எனது புத்தகம்' என்றார் அறிஞர் பைரன். பெண்ணின் அழகு முகத்தில், அதிலும் அடக்கம், பொறுமை, அறிவு இவை பொலியும் முகமே—அதுவும் அத்தகைய பெண்ணின் முகமல்லவோ அழகோவியம்? இதற்கு நகை ஏன்? தாய்மைக்கு அஃதொரு அத்தியாவசியமான தேவையோ? திருமணத்திற்கு அஃதொரு சிறப்போ? நகை இல்லையேல் தக்க துணை கிடைக்காதோ? எதற்கு இச் செயற்கை?

## நீதியோ? முறையோ?

கை பிடித்த பெண்ணைக் கைவிட்டு ஓடும் ஆண் மக்கள் ஆண்களோ? இவரை ஏசுவாரில்லை! தூற்றுவாருமில்லை. ஆனால் இவர்கள் கோழைத்தனத்திற்குப் பலியான பெண் மக்களுக்கு மட்டும் 'வாழாவெட்டி' என்ற பட்டம்! நீதியோ?

பதியிலா பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் முறையோ?*

கணவனை இழந்த பெண்களின் அவல நிலைதான் என்ன?

தாரம் இழந்தவன் மீண்டும் புது மாப்பிள்ளை! இது முறையோ?

கைம்மை இருவருக்கும் உள்ளதே. அங்ஙனமிருக்க இந்த அநீதிக்கு என்னென்பது.**

---

* விரிவு பக். 295, 296— 'பெண்ணின் பெருமை'யில் காண்க.

** வாழ்க்கைத் துணை, பக். 296.

நாட்கள் முன்னேறியுள்ளன. நாகரீகமும் முற்றியுள்ளது. மேல் நாட்டு நாகரீகம் நம் நாட்டில் ஊடுருவி உள்ளது. ஆனால் பெண்கள் நிலையோ? சிந்தியுங்கள்!

'மறுமணம்' 'விதவைத் திருமணம்' ஏற்றம் கண்டுள்ளதா? விதவைத் திருமணம் செய்து கொண்ட பெண்களை சமூகம் எந்த நோக்குடன் பார்க்கிறது. நன்முறையில் ஏற்கிறதா?

மணவிலக்கு ஒன்று நடந்துவிட்டால், யாரைக் குறை கூறுகிறது சமூகம்? பெண்ணை; பெண்ணே அதற்குக் காரணம் என்று முடிவு கட்டுவது முறையோ? இல்வாழ்க்கையில் ஆணுக்கு பங்கேயில்லையோ? அறிந்தும், தெரிந்தும் உண்மையை ஏற்க மறுப்பது நீதியோ, முறையோ?

'உரிமையில் ஆணுக்கு உயர்வு, பெண்ணுக்குத் தாழ்வு' என்பதில்லை. கட்டுப்பாட்டுக்கு, 'ஆண் அடங்கி நடத்தல் வேண்டுவதில்லை; பெண் மட்டும் அடங்கி நடத்தல் வேண்டும் என்றும் நியதி இயற்கையில் இல்லை.'*

பெண் என்னும் இறை வாழ்க.

## பெண்மைத் தெய்வம்

"பெண் மகளாகத் தோன்றினாள், மனைவியாக வாழ்ந்தாள்; தாயாக தொண்டு செய்தாள். இப்போதுத் தெய்வமாகக் காட்சி அளிக்கிறாள். உலகீர்! அக்காட்சி காண்மின். தெய்வம், தெய்வம் என்று எங்கு ஓடுகிறீர்? நூற்களை ஏன் ஆராய்கிறீர்!

இதோ தெய்வம்; பெண் தெய்வம்; காணுங்கள்; வழிபடுங்கள்!"** என்றே அழைக்கிறார் திரு. வி. க அனைவரையும்.

---

* வாழ்க்கைத் துணை, பக். 291

** பெண்ணின் பெருமை, பக். 308.

# 11

# மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்

## மதிப்பீடு நூல்

திரு. வி. க காந்தியடிகள் பால் பெரு மதிப்பு வைத்திருந்தார். காந்தியடிகளின் போதனை அவரைக் காந்தமென ஈர்த்தது. காந்தியடிகளைக் கண்டார்; மரியாதை அதிகரித்தது. அவர்தம் பிரசங்கத்தை மொழி பெயர்த்த போது, அவரது ஆழ்ந்த அறிவு திரு. வி. கவை வியக்கச் செய்தது. அவருடன் உழைப்பதைப் பெரும் பேறாகக் கருதினார். காந்தியடிகள் நூல்கள் வெளியானவுடன், அவைகளை மிக்க கவனத்துடன் படிப்பார்; 'யங் இந்தியா'வில் வெளிவரும் காந்தியடிகளின் கொள்கைகளையும் விமர்சனங்களையும் ஊன்றிப் படிப்பார்; அடிகள் பால் கொண்ட அன்பு பன்மடங்கு ஆகும். 'யங் இந்தியா' இதழ்களை மொழி பெயர்த்து வெளியிடுவதில் பேருவகைக் கொண்டார் திரு. வி. க.

காந்தியடிகளின் வாழ்க்கை முறை திரு. வி. கவை மிக மிகக் கவர்ந்தது. எப்படி? இக்காலம் எத்தகைத்து? பொய், புரட்டு, பொறாமை மலிந்தது. மகாத்மா கையாண்ட முறைகள், ஆயுதங்கள் யாவை?

மெய்யே எல்லாவற்றிற்கும் அஸ்திவாரம்; ஆயுதமோ அன்பு என்னும் வில்; இவ்விரண்டினையும் உபயோகித்து

பொய்மையை வீழ்த்தி, வாய்மையை நிலைநாட்டிய பெருந்தகை காந்தியைப் பார்த்துப் பார்த்து பெருமிதம் கொண்டார். அன்புவழி சன்மார்க்க சமரசம் பரப்பிய அண்ணலைப் போற்றினார்; புகழ்ந்தார் தமிழ்க்கடல்.

## பின்னணி

தேச பக்தனில் ஓராண்டு காலம் 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' என்ற தொடர் கட்டுரை வெளிவந்தது. பின்னர் இதுவே 'மனித வாழ்க்கையும் காந்தி அடிகளும்' என்ற சிறு நூலாக வெளிவந்தது. இது 1921 ஆம் ஆண்டில்.

இதன் விரிவு பின்னர் வெளியிடப்பட்டது.

## வெளியீட்டின் போது சூழ்நிலை

இதை வெளியிட்டபோது தமிழ்த் தென்றலுக்கு ஏற்பட்ட துன்பங்கள் ஒன்றா, இரண்டா? பல, பலப் பல. இத் துன்பக் கடலிலிருந்து கரைசேர தோணியாக உதவியது காந்தியடிகளின் கொள்கைகள். சோர்வுற்ற மனத்திற்கு மருந்தாகி, நிவாரணமுமாகியது.

''பிரசாரம் செய்வது எளிது. அதன்படி வாழ்ந்து காட்டுவது சிலரே.'' இது உலக உண்மைகளுள் ஒன்று. அண்ணல் காந்தி இந்த உண்மைக்கு விதிவிலக்கு. இதை அறிவுறுத்தவே உருவாகியது 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' என்ற நூல்.

## மூன்று கேள்விகள்

மனிதன் எவன்?

மனித பிறப்பு எத்தகைத்து?

மனிதனாக வாழ்வதெப்படி?

இந்த மூன்று வினாக்களை எழுப்பி ஒவ்வொன்றிற்கும் விளக்கம் தருகிறார். இந்த விளக்கங்களுடன் அடிகளின்

வாழ்க்கையை ஒப்பிட்டு சீர்தூக்கிப் பார்க்கிறார் இராயப் பேட்டை முனிவர்.

மனிதன் எவன்? மனித பிறப்பு எய்தியவர் எல்லோரும் மனிதராவரோ? ஆகார்.

பின்? இதை எவ்வாறு கண்டறிவது?

'மனித பிறப்பு விழுப்பமுடையது' என்பது ஒருமுகமான விடை. இந்தப் பிறவி எவ்வாறு சிறந்தது? மற்ற உயிர்களைக் காட்டிலும் ஆராயக்கூடிய ஆற்றலுடைய ஆறாவது அறிவு பெற்றிருப்பதே இச்சிறப்பின் காரணம். இந்த ஆறாவது அறிவே பகுத்தறிவு. பகுத்தறிவைப் பயன்படுத்தும் பண்பாளனே மனிதன்.

மனிதனாக வாழ்வது எப்படி? அந்த வாழ்க்கைக்குச் சீர்தூக்கும் கோல் உளதோ? உள்ளது.

அதனுடைய எடை கற்கள் புறத்தூய்மை, அகத்தூய்மை; இவ்விரு தூய்மைகளின் வழிமுறைகள், சத்தியாக் கிரகம் என்பன.

அண்ணல் காந்தியடிகளை இந்த நோக்கில் நோக்கு கிறார்; அவர் தம் வாழ்க்கை முறையை ஆராய்ச்சி செய்கிறார் திரு. வி. க இந்நூலில்.

தமிழ் முனிவர் என்ன கருத்து சொல்கிறார்?

வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து காட்டியவர் காந்தி.

அகத்தூய்மை பிற உயிரை தன்னுயிரைப் போல பேணச் செய்யும்; பிறர்க்கெனவே வாழ்ந்து இன்பம் பெறத் தூண்டும். கொலை, களவு, காமம், குரோதம், பொய் ஆகிய ஐம்பெருங் குற்றங்களைக் கண்டு அஞ்சும்; ஒதுக்கும்; விரட்டும். பிற உயிர்களைத் துன்புறுத்த மனத் தாலும் கூட ஒருக்காலும் எண்ணாதவாறு காவல் புரியும்.

இத்தகைய நடவடிக்கைகள் உள்ள ஒருவனே மனிதன். அவனே கடவுளின் 'மறுபதிப்பு'. இதை அவன் உணர்வான். கடவுளைத் தேடி எங்கும் அலைய மாட்டான். இயற்கையிலே கடவுளைக் காண்பான். அறியாமையைக் கடிவான்; நல்வழியில், சிறந்த தொண்டில், ஆன்மீக பாதையிலே வாழ்க்கையை நடத்துவான். பகவத் கீதை சொல்லியபடி வாழ்வான்; பலன் கருதாத உதவியே செய்பவனாக இருப்பான்.

பொறுப்புள்ள, நேர்மையான, ஒழுக்கமுள்ள வாழ்க்கை நடத்துபவன், மெய்யறிவைத் தேடி காட்டுக்கு ஓடுவானேன்? நல்வழியிலே வாழ்பனை நாடி ஓடிவரும் மெய்யறிவு.

இந்தக் கண்ணோட்டத்தில் காந்தியை பார்க்கிறார் திரு. வி. க. நாமும் அதையே செய்வோமா?

## பிறப்பு வளர்ப்பு

அண்ணல் காந்தி நல்லதொரு வாணிப வேளாளர் குடும்பத்தில் பிறந்தார். நேர்மையான பெற்றோர். தாயோ பண்டை பழக்க வழக்கங்களில் ஊன்றியவர். அண்ணல் ஒரு சிலரை தொடக் கூடாதென்று கட்டு போட்டது, அவர் பழைமை.

தாயின் இக்கொள்கை காந்தியடிகளுக்குப் பிடிக்க வில்லை. நேரிடையாக எதிர்ப்பு தெரிவித்தாரா என்றால் அதுவுமில்லை. பின் மாறுபட்ட ஒரு கொள்கையை வாளா ஏற்கலாமோ? ஏற்றால், சரியாமோ?

மாறுபட்ட கொள்கையாயினும் தாயின் மனத்தை புண் படுத்த விரும்பவில்லை காந்தி. எனவே வாளாக ஏற்றார். இது சரியாகாதோ?

இதே போன்று மற்றொரு எடுத்துக் காட்டையும் கொடுக்கிறார் திரு. வி. க.

காந்தி கடல் கடந்து பயணம் செய்து திரும்பினார் உலகம் புகழ்ந்தது. ஆனால் தனயன் பிராயச்சித்தம் செய்துக் கொண்டால் வீட்டில் நடக்கும் விசேடங்களில் கலக்கலாம் என்று வற்புறுத்தினார். காந்தியடிகள் என்ன செய்தார்? அதற்கு உடன் பட்டார். ஏன்? கோழைத்தனத் தாலா? இல்லை, இல்லை!

அவருடைய விட்டுக்கொடுக்கும் தன்மை கொள்கையை வென்றது. அதனால் என்கிறார் தமிழ்க் கடல். மூத்தோருக்கு வளைந்து, மரியாதையும் மதிப்பு கொடுப்பதன்றோ நற்பண்பு!

## தாய் சொல் மந்திரம்

தாய் சொல்லின்படி நடப்பவர் எத்தனை பேர்? வெகு சிலரே. இந்த ஒரு சிலரைக் காட்டிலும் மிஞ்சிவிட்டார் அண்ணல் தம் தாயிடம் கொண்ட பக்தியில்.

இங்கிலாந்து செல்ல அனுமதி கேட்டார் தாயிடம்; தாயும் அனுமதித்தார். ஒரே ஒரு வாக்குறுதியை மீறுவ தில்லை என்று சத்தியம் செய்துக் கொடுத்தால், அவர் சீமைக்குச் செல்லலாம் என்றார் அன்னை.

''குடி, பெண், புலால் மூன்றையும் என்றுமே தொட மாட்டேன்!'' என்று வாக்கு தந்தார் அண்ணல். பயணம் மேற்கொண்டார். வாய்மையைக் காக்க அவருக்குக் கவச மாகத் தந்தார் அவர் அன்னை ஒரு துளசி மாலையை. தாய் இறந்த பின்னரும் இந்த மாலையே அவரைக் காத்தது; தன்னம்பிக்கை கொடுத்தது; திடசித்தத்தை நல்கியது. இந்தத் துளசி மாலையைக் களைந்துவிட வேண்டுமென போதித்தவர் எத்தனை பேர்? துளசி மாலை, கழுத்தை விட்டிறங்கியதா? இறங்கவே இல்லை. வாய்மையைக் காத்த இந்த அடிகள், அரிச்சந்திரன் என்ற உண்மை விளம்பியை மிஞ்சி விடுவாரன்றோ?

## அடக்கம் அமரருள் உய்க்கும்

அடக்கம் காந்தியடிகளின் அணிகலன். அடக்கத்துடன் பொறுமையும் இணைந்தது. சத்தியாக்கிரகம் உயிர் பெற்றது. சத்தியாக்கிரகம் என்பது யாது?

'சத்தியத்தை ஆக்ரமித்து நிற்பதே இது. தமிழில் 'உண்மையைக் கடைப்பிடித்தல்' என்றே கூறுகிறோம். இந்த சத்தியாக்கிரக மார்க்கம் புதியதல்ல. செம்பொருள் அநாதி; அதே போன்ற சத்தியாக்கிரகமும் அநாதியே. சத்தியாக் கிரக உண்மையை நிலை நிறுத்தப் போராடிய பிரஹ்லாதன் ஒரு சத்தியாக்கிரகியே!

கிரேக்கத் தத்துவ ஞானி சாக்டீஸும் பிரகலாதன் போன்று சத்தியாக்கிரகியே! டால்ஸ்டாயும் ஒரு சத்தியாக் கிரகியே.

என்றாலும் நம் காந்தியடிகளின் சத்தியாக்கிரகத்திற் கும் லியோ டால்ஸ்டாய் சத்தியாக்கிரகத்திற்கும் சிறிது வேற்றுமையுண்டு. இரண்டும் அறமுறையே. அதை விளக்கப் பயன்படுத்தப்படும் சொற்றொடர்களில் வேற்றுமை காண் கிறோம். காலத்திற்கேற்ப அவை பெறும் பெயரும், மற்றொரு வேற்றுமை.

சத்தியாக்கிரகத்தை ''நமது நாட்டார் அருணெறி என்றும், திருநெறி என்றும் நல்லாறு என்றும் சன்மார்க்கம் என்றும் அழைத்துப் போந்தனர்.''*

## 'சத்தியாக்கிரகம்' பெயர் வரலாறு

முதலில் இந்த அருணெறி தென்னாப்பிரிக்காவில் சாத்வீக எதிர்ப்பாகத் (Passive Resistance) ஆகத் தோன்றி யது. 'இண்டியன் ஒபீனியன்' என்றொரு பத்திரிகை இந்த

---

* பக். ௩௩௩-சத்தியாக்கிரகம், மனித வாழ்க்கையும் காந்தி அடிகளும்.

இயக்கத்திற்குப் பொருத்தமான இந்திய சொற்றொடர் காண்போருக்குப் பரிசு தருவதாக அறிவித்தது.

மகன்லால் காந்தி 'சதாக்கிரகம்' என்னும் சொற்றொடர் கண்டு, பரிசும் பெற்றார். அச்சொற்றொடர் தெளிந்த பொருள் நல்குமாறு காந்தியடிகள் 'சத்தியாக்கிரகம்' என்று மாற்றினார். இதுவே 'சத்தியாக்கிரகம்' சொல் உருவான வரலாறு.

சத்தியாக்கிரகம் புதியதல்ல. ஆனால் சொல் தான் புதிது. இது, தற்காலத்திற்கேற்றபடி சுதேசியத்தினின்று வழுவி அல்லல்படும் உயிர்களை அன்பால் அணைத்து, திருத்தும்; பின் உண்மையான தன் வழிக்கு திருப்பும் முறையே சத்தியாக்கிரகம் என்றால் அது மிகையன்று.

இதற்குத் தேவை எவை? உண்மை அன்பு, அஞ்சாமை அருள், அகிம்சை—இவைகளே சத்தியாக்கிரகத்தின் வேர்.

ஆக சத்தியாக்கிரகி யார்? சில சிறப்பியல்புகள் கொண்டவன். அவனுக்குச் சில கோட்பாடுகள் உண்டு. 'இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்வான்.'

பகைவனுக் கருள்வான் பண்புடையவன்.

'வலது கன்னத்தில் அடித்தால் இடது கன்னத்தைக் காட்டு' என்ற இயேசு பிரானின் பொறுமையைக் கடைப் பிடிப்பவன்.

'பொய்மைக்கு பொய்மை; பொறாமைக்குப் பொறாமை; கொலைக்குக் கொலை' என்ற விலங்குணர்வை அடக்கு; ஆற்றினால் ஆத்திரத்தைக் கட்டுப்படுத்து; துராக்கிரகத் திற்கு பணியாது எதிர்ப்பு காட்டு; ஆனால் அன்பு வழியில்; அகிம்சைப் பாதையில் பொறுமையே அணியாய் கொண்டு எதிர்த்துப் போராடு; இதுவே சத்தியாக்கிரகம்' என்கிறார் அண்ணல் தம் விளக்கத்தில்.

## சத்தியாக்கிரகம்-பல்வகை முறைகள்

இடத்திற்கு இடம்; காலத்திற்குக் காலம்; இதன் முறைகள் மாறுபடும். ''அவை ஆங்காங்கே எழு துராக்கிரக நிலையைப் பொறுத்து நிற்கும். சில இடங்களில் சிறிது வருந்தலாகவும், சில இடத்தில் உயிர் துறத்தலாகவும், சிலவிடத்தில் உதவி மறுத்தலாகவும், சிலவிடத்தில் சட்டமறுப்பாகவும், சிலவிடத்தில் உண்ணா நோன்பாகவும், இன்னோரன்ன பிற வழிகளாகவும் சத்தியாக்கிரகம் எழும்.''*

சத்தியாக்கிரகங்களின் வகைகளைப் பற்றி எவ்வளவு தெளிவாகக் கூறிவிட்டார்!

* * *

காந்தியடிகள் பொறுமையைப் போதித்தாரே அதைத் தம் வாழ்க்கையில் கடைப்பிடித்தாரா?

இது அடுத்த ஆராய்ச்சி. பொறுமையைக் கடைப்பிடித்தார். இதற்கு பெருந்துணை செய்த கலங்கரை விளக்கு ஏசுவின் போதனையே.

''நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப் படாதபடிக்கு மற்றவர்களை குற்றவாளிகள் என்று தீர்க்காதிருங்கள்.''**

இப்போதனையைத் தம் வாழ்நாளில் காந்தியடிகள் கடைப்பிடித்த சம்பவங்கள்தான் எத்தனை, எத்தனை!

ஜெனரல் டையர், பஞ்சாப் படுகொலையை நடத்திய வெறிபிடித்த வெள்ளையர். மற்ற காங்கிரஸ் தலைவர்கள் காந்தியடிகளுடன் சேர்ந்து இச்செயலை வன்மையாகக் கண்டித்தனர். ஜெனரல் டையருக்கு இதே போன்ற கடும் தண்டனை கொடுத்தே தீரவேண்டும் என்று வற்புறுத்தினர்.

ஆனால் காந்தி என்ன சொன்னார்?

---

* பக். ௩௪௬—மனித வாழ்க்கையும் காந்தி அடிகளும்

** மத்தேயு சுவிசேஷம், அதிகாரம் 7 (புதிய ஏற்பாடு).

ஜெனரல் டையரை வேலை நீக்கம் மட்டும் செய்தால் போதும்; அவருக்குப் பெருந்தண்டனை ஏதும் கொடுத்தால் அது பெருந்தவறு எனக் கூறினார்.

''பகைவனுக் கருள்வாய், நன்னெஞ்சே!'' என செயலில் கடைப்பிடித்த அண்ணாரது இதயம் எத்துணைப் பெரியது.

இது என்ன பிரமாதம்! 'தமக்கு நேரடி பாதிப்பு ஏற்பட வில்லை. பரந்த மனம், பொறுமை கைகொண்டது' என்று கூறுவோர் பலர்.

அவர்களுக்கும் இங்கே ஓர் அரிய எடுத்துக்காட்டு.

அண்ணல் காந்தி பிரார்த்தனை கூட்டமொன்றில் சுடப் பட்டார். தடுமாறி கீழே சாய்ந்தார் அண்ணல். அப்போதும் அவரது கைகள் கும்பிட்டன; வாய் 'இராம், இராம்' என உச்சரித்தபடியே உயிர் நீங்கியது.

இத்தகைமை எத்தகைத்து? எளிதோ?

## சட்ட மறுப்பு

1907 ஆம் ஆண்டு. தென்னாப்பிரிக்காவில் இந்தியர் கட்டாயமாக பதிவு செய்துக் கொண்டுத்தான் வாழ வேண்டும். இன்றேல் நாடு கடத்தப் படுவார்கள் என்று ஒரு சட்டம் வந்தது.

காந்தியடிகள் இச்சட்டத்தை எதிர்த்தார்.

அரசாங்கம் சும்மா இருக்குமா? அண்ணலை நீதிமன்றத் தில் குற்றவாளி என கூண்டில் நிறுத்தியது. விசாரணையும் நடந்தது. 'யான் குற்றவாளியே' என ஒப்புக் கொண்டார் அண்ணல்.

''ஓர் அறிக்கை செய்ய விரும்புகிறேன்'' என்று கேட்டுக் கொண்டார் அண்ணல்.

வேண்டுகோள் நிராகரிக்கப் பட்டது.

''நாற்பத்தெட்டு மணிநேரத்திற்குள் நீங்கள் நாட்டை விட்டு அகலல் வேண்டும்'' என்ற கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்தார் மாஜிஸ்திரேட்.

நாட்டை விட்டு இம்மியும் நகரவில்லை அண்ணல்.

இங்கேதான் அண்ணலின் சட்ட மறுப்பு வித்திட்டது.

சட்ட மறுப்புக்கு மீண்டும் தண்டனை கிடைத்தது.

அடிகள் முழுத் தண்டனையே வேண்டுமென விரும்பினார். ஆனால் கிடைத்தது, இரண்டு மாத வெறுங்காவல் தண்டனையே!

ஏன்? முழுத் தண்டனை கொடுக்காமல் வெள்ளையர் விட்டதேன்? ஆன்மீகத்தின் முன் அராஜகம் தலை குனிந்தது; பணிந்தது.

## சாம்ப்ரான்

சாம்ப்ரானிலிருந்து ஒரு சேதி வந்தது. மேன்நாட்டு முதலாளிகள் ஆதிக்கம் முழுமையாகவிருந்த இடம் சாம்ப்ரான். அங்கேயிருந்த தொழிலாளர்களோ நம்மவர். இந்தத் தொழிலாளிகளை முதலாளிகள் வருத்துவதாக, அடிகளுக்குச் செய்தி வந்தது.

உண்மை நிலையைக் கண்டறிய அங்குப் போந்தார் அண்ணல்.

அவர் வருகை தங்களுக்கு ஊறு விளைவிக்குமென முதலாளிகள் அஞ்சினர். அவர்கள் செல்வாக்கு ஓர் உத்தரவை பிறப்பிக்கச் செய்தது.

'சாம்ப்ரானுக்கு அண்ணல் வரக்கூடாதெ'ன்று தடை உத்தரவு!

நிகழ்ந்ததென்ன?

தடை உத்தரவை மீறினார் அண்ணல்.

எப்போதும் போல் கைது, விசாரணை எல்லாம் நடந்தன. ஆனால் ஒரு புதுமை!

மாஜிஸ்திரேட் தீர்ப்பு சொல்லாமல் விடுத்தார்!

என்ன ஆச்சரியம்? ஏன்?

காந்தியடிகள் மீது பிறப்பிக்கப்பட்ட கட்டளையை விலக்கும்படி மாஜிஸ்திரேட்டுக்கு ஆணை விடுத்தது அரசாங்கம்.

அத்துடனா?

சாம்ப்ரான் தொழிலாளர் துன்பங்களை விசாரணை புரியும் உரிமையையும் பெற்றார் அண்ணல்.*

ஆன்மீகத்தின் வலிமைக்கு இஃது ஓர் சான்று.

உண்மை என்றும் வெல்லும் என்பதற்கோர் எடுத்துக் காட்டு.

## வரிகொடாமை இயக்கம்

பம்பாயில் உள்ளது கெய்ரா எனும் ஜில்லா. இங்கு இயற்கையின் சீற்றம் காரணமாக விளைச்சல் மிக மிகக் குறைந்தது.

வரி திரட்டும் அதிகாரிகள் இதைப் பொருட்படுத்தவே இல்லை· எவ்வித சலுகையும் கொடுக்க மறுத்தனர்.

"விளைச்சலுக்குத் தக்கவாறு வரி வசூலிக்க வேண்டும்" என்று அரசாங்கத்தை வேண்டினார் அண்ணல். நடந்த தென்ன?

அரசாங்கம் இவர்தம் வேண்டுகோளை உதாசீனம் செய்தது. செவி சாய்க்கவும் மறுத்தது.

---

* விரிவு—மனித வாழ்க்கையும் காந்தி அடிகளும், பக் ௩௮0-காண்க

அண்ணல் என் செய்தார்? பொறுமைப் போர் நிகழ்த்தினார். அரசாங்கம் அதிகார வெறிகொண்டு ஆடியது; தலைவிரித்தாடியது; நிலங்களை ஏலம் போட்டது.

கெய்ரா மக்கள் அசையவில்லை. இறுதியில் அதிகாரம் ஆன்ம பலத்திற்கு அடிபணிந்தது. உண்மையையும் அஞ்சாமையையும் அதிகாரம் ஆட்கொள்ள முடியுமா?

## சிறைகள்

சிறைகள் பலவிதம். ஒருவரை ஒருவர் சிறைப்படுத்தும் முறைகள் பற்பல. ஒரு காலத்தில் நம் நாட்டவர் பெண் மக்களுக்கு கல்வி மறுத்து அடக்கியது ஒருவித சிறை. தீண்டாமை மற்றொருவிதச் சிறை.

சில உரிமைகள் சிலருக்கே உரியன என்பது வேறுவித சிறை.

நிற வேற்றுமையால் ஏற்படும் தொல்லைகளும் சிறையே.

சட்டங்களும் ஏற்படுத்துவது சிறையே.

ஒரு நாட்டுக்கு மற்றொரு நாடு சிறைப்படலும் மற்றொரு வகை.

அறியாமையோ உலகையே உட்படுத்தும் பெருஞ்சிறை.

இதற்கு மாற்று? அண்ணலின் இயக்கங்களே!

## ஒத்துழையாமை இயக்கம்

இதுவும் சத்தியாகிரகத்தின் ஒரு கூறே. அன்னிய பொருட்களின் சந்தையாகியது நம்நாடு வெள்ளையர் ஆட்சியில். அது மட்டுமா? அன்னிய மோகப் பேய் அனைவரையும் பிடித்து ஆட்டியது. சுதேசியத்தை நசுக்கியது. அழித்தது. நம் நாட்டுக் கல்வி அரியணையில் ஆங்கிலப் பெண் வீற்றாள். இந்திய மொழி அணங்குகள் கூற்றேவல் செய்தனர். நமது நீதிமுறைகள்;

அன்பு வழி நியாயத் தீர்ப்புக்கள் மேனாட்டு நீதிக்கு இடங் கொடுத்து ஒதுங்கின. இவை இயற்கைக்கு—நம் நாட்டு இயற்கைக்கு—மாறானவை.

மாறுபட்ட இத்துறைகளை ஒதுக்கும்படி செய்தார் அண்ணல். "சட்டசபையை விலக்குங்கள்; அயல் நாட்டுத் துணிகளை வாங்காதீர்கள்; அயல்நாட்டுக் கல்வியை விட்டொழியுங்கள்!" என்று அறைகூவல் விடுத்தார்.

நாட்டுக் கல்லூரி, நாட்டு பஞ்சாயத்து, காங்கிரஸ் சபை என்ற மூன்று அமைப்புக்களையும் ஆங்காங்கே அமைத்தார் அடிகள்.

விளைவு என்ன?

நாடெங்கும் ஒத்துழையாமை இயக்கம் தீயெனப் பரவியது; வெள்ளையரை நடுக்குறச் செய்தது.

இராட்டைச் சுற்றும் சத்தம் அராஜகத்தைப் பக்க பக்கமாக விரட்டியது.

அண்ணலின் சொற்படி, "கதர் அணிதல் ஓரளவு சிறை மீட்சி; தீண்டாமை விலக்கல் மற்றொரளவு; சட்ட சபை விலக்கு இன்னொரளவு."*

மனத் தூய்மைக்கும், அன்புக்கும், அருளுக்கும் சான்றாக அமைதி அணங்கு நடம் புரியத் தொடங்கினாள்.

## அரசியலில் சத்தியாக்கிரகம்

அரசியல் போரில் சத்தியாக்கிரகத்தை நுழைத்தவர் நம் காந்தியடிகள் ஆவார்.

சத்தியாக்கிரகங்கள் ஒவ்வொருவரும் ஏற்க வேண்டிய நோன்புகளையும் முறைகளையும் வகுத்தார்; அனைவரும் கடைப் பிடித்தொழுகவும் செய்தார்.

---

* பக்.௪௨௦, மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்.

சத்தியாகிரகிகளுக்கு சிறைக் கோட்டம் தவக் கோட்டமாகவும் அறக் கோட்டமாகவும் மாறியது.

## மறுப்பும் எதிர்ப்பும்

இந்த ஒத்துழையாமை இயக்கம் பற்றி கவியரசர் இரவீந்தரநாத தாகூர் குறை கூறினார். அஃது எதிர் மறையையும், மறுப்பையும், பிரிவையுங் கொண்டதென்றார்.

அண்ணல் இந்தக் கூற்றுக்கு மறுப்பு தெரிவித்தார். தாகூரையும் அழைத்தார். எதற்கு?

'நரம்பு வீணையை எறிந்து இராட்டின வீணையை முழக்குமாறு' அழைப்பு விடுத்தார்!

சன்மார்க்கத்தையே தன் உயிராகக் கொண்டார் மகாத்மா.

அவருடைய கடவுள் அன்பு; ஒளி; உண்மை; கொல்லாமை—அவர் கொண்ட விரதம் கொல்லா நோன்பு அவர்தம் மதமாகக் கூடக் கொண்டார் எனலாம். இருப்பினும், அத்தருமத்தினின்று தாம் வழுவி வீழ்ந்ததாக காந்தியடிகளைக் குறை கூறியோர் சிலர். அந்தக் குற்றச் சாட்டுக்கு சில நிகழ்ச்சிகளைச் சுட்டிக் காட்டினர்.

ஆசிரமத்தைச் சுற்றி வெறி நாய்கள் சுற்றி வந்தன; இந்த வெறி பிடித்த நாய்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் ஏறிக்கொண்டே வந்தது. இதனால் ஆசிரம வாசிகள் மிகவும் அவதியுற்றனர்.

அடிகள் இதைக் கண்டார்; வெறி நாய்களைக் கொல்லுமாறு ஆணை பிறப்பித்தார் அண்ணல். இது கொல்லாமை ஆகுமா என்பது ஓர் குற்றச்சாட்டு.

ஆசிரமத்தில் நோய்வாய்ப் பட்டது ஒரு கன்று. ஒவ்வொரு நொடியும் சித்திரவதைப் பட்டது. அதைக் கொல்வித்தார் அண்ணல். இது சரியா? கொல்லா

நோன்பின் கூற்றா? என்று நையாண்டி செய்தனர் குற்றங் காண்போர்.

ஆண்டுரூஸ் என்பவர் ஒரு வெள்ளைக்கார அறிஞர். அவர் அடிகளின் இரு செய்கைகளுக்குக் கண்டனம் தெரிவித்தார்.

ஐரோப்பாவில் பெரும் போர் மூண்டது. காந்தியடிகள் கெய்ரா ஜில்லாவில் ஆங்கிலேயர்க்கென படைத் திரட்டினார். ஆங்கிலேயர் ஈடுபட்ட இந்த போருக்கு நாம் ஆள் திரட்ட வேண்டுமா? வெள்ளையர் யார்? நம்மை அடிமைப் படுத்தி, அதிகாரம் செலுத்துபவர். நமக்கு உரிமைகளைக் கொடாமல் நம்மை மோசமாக, கீழ்த்தரமாக நடத்துபவர். இவர்களுக்காக நம் நாட்டு உயிர்களைப் பலியிட வேண்டுமா என்பது மற்றொரு வாதம்.

அந்நியத் துணிகளை தீக்கிரையாக்கினார் ஒத்துழையாமை இயக்கத்தின் போது. தீக்கிரையாக்குதல் விரும்பத் தக்கதா? அது அழிவு சக்தியின் கொடூரம் அல்லவா? ஆக்க சக்தி அல்லவே! அடிகள் இதற்கென்ன சமாதானம் கூறுகிறார் பார்ப்போம் என்று கருவியவர் பலர்.

காந்தியடிகள் இவைகளுக்குக் கூறிய விடை யாது?

காந்தியடிகள் இவைகளுக்குப் பதிலளித்து தெளிவு படுத்தினரா என்றால் இல்லை. அடிகளின் செய்கைகளை ஆதரித்த ஒரு சிலரில் ஒருவர் தமிழ்க்கடல்.

அடிகள் தம்மைப்பற்றி என்ன கூறுகிறார்?

''நான் தவறுகள் மலிந்த சாதாரண மனிதன்'' என்று ஒத்துக் கொள்கிறார்.

இது, தவற்றை சரியாக்கி விடுமா? இல்லை, பதுங்கல் (escapism) தந்திரமா? இல்லை, இரண்டும் இல்லை.

தவறும், மெய்யும் சூழ்நிலையைப் பொருத்திருக்கும்.

வெறி நாய்களுக்கு அளிக்கப்பட வேண்டிய பாது காப்புகள் பற்றி 'யங் இந்தியா'வில் வெளிவந்த கட்டுரைகள் பல; பற்பல; இவை ஒன்றுமே செய்ய இயலாத இடத்தில், நேரத்தில் அவைகளால் மனிதர்களுக்கு ஆபத்து ஏற்படும். எத்தகைய ஆபத்து? வெறிநாய் கடியுண்டு மனிதர்கள் இறப்பார்கள். இத்தகைய சூழ்நிலை ஏற்படின், அவை களைக் கொல்லலாமென்றும் விரிவாக 'யங் இந்தியா'வில் விவரித்துள்ளார்.

இந்த முடிவின் அடிப்படை இரக்கமே. இரக்கமே அகிம்சை என்பது திரு. வி. கவின் வாதம்.

இதுதான் போகட்டும். கன்றுக்குட்டிக்கு நஞ்சிறக்கிக் கொல்வித்தது சரியா? அது எந்த மனிதரையும் கடித்துத் துன்புறுத்தவில்லையே?

இது எதிர்வாதம் புரிவோர் கூற்று.

கன்றுக்கு நஞ்சிறக்கிக் கொல்விக்க அடிகள் வந்ததேன்? அதன் நிலை யாது என்று ஆராய முனைவரேல், குறை கூறு வோர் வாயடைத்துப் போவர்.

கன்றின் நிலையை நினைத்துப் பாருங்கள். நோய்வாய்ப் பட்டிருந்தது அது. நோய் என்றால் சாதாரண நோயா? அணு அணுவாக அதனை சித்திரவதை செய்யும் கடுந்நோய். படுக்கையிலே அதைத் தள்ளியது அதன் கொடுமை. உறுப்புக்களில் புழுக்கள் நெளிந்தன. ஒவ்வொரு நொடியும் சொல்லொணா வேதனைப்பட்ட அக்கன்றினைச் சற்று நினைத்துப் பாருங்கள்.

இதன் வேதனையைக் குறைத்து உய்விக்க எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சிகள் எத்தனை! அதற்குச் சிகிச்சை செய்ய வந்த மருத்துவர்கள் தாம் எத்தனை, எத்தனை!

கன்றின் வேதனைக்கு மாற்றம் வந்ததா? பலன்? ஒன்றுமில்லை! ஒன்றுமே இல்லை! தீராத நோய்க்கு மருந்து

அத்துடன் வாழக் கற்றுக் கொள்வதே என்று வேதாந்தம் பேசிவிட்டால் கற்றின் பிணி தீர்ந்து விடுமா?

பிறர் துன்புறுவதை வாளாகப் பார்த்துக் கொண்டிருப்பது அறமாமோ? இரக்கமாமோ? இல்லை அன்பாகுமோ?

துன்பத்தைக் களைவதல்லவா சிறந்த தீர்வு? அக்கன்றின் துன்பத்தைக் களைய அமைந்த ஒரே வழி, உயிர் நீக்கல் தவிர வேறு யாது? துயர் துடைக்க மேற்கொண்ட இச் செய்கை, அன்பின்பாற் பிறந்ததே. கன்றின் 'வாழ்வின் முடிவி'லே பிறந்தது உய்வு. உய்வளிக்க உதவியது அறமே; அன்பே; இரக்கமே என்று அடித்துக் கூறுகிறார் திரு. வி. க.

இது காலத்தால் செய்த உதவியன்றோ?

அறிந்தறிந்து மக்களைத் திரட்டி யுத்தம் என்ற பலி பீடத்திற்கு மனதார அனுப்பியதும் சரியோ? அதுவும், நம்மைச் சுரண்டிக் கொழுத்தவர் உதவிக்கு ஒன்றுமறியா மக்களைத் திரட்டி அனுப்புவது மெச்சத் தகுந்த செயலோ?

அண்ணல் ஐரோப்பாப் போருக்கு படைத் திரட்டியது உண்மையே. அஃதும் சரியே என்றார் அண்ணல்.

எப்படி? ஏன்? எவ்வாறு என்ற கேள்விகளுக்கு விடை பகர்ந்தார்,

ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சியால் சில நலன்கள் இந்தியாவுக்கு ஏற்பட்டதை மறத்தலாகாது. அவ்வாட்சிக்கு ஊறு நேர்ந்தால் பின்னே அகிம்சா பேச்சுக்கே இடமிருக்காது. எனவே அவ்வாட்சியைக் காப்பது தம் கடமை. அகிம்சா பிரசாரத்துக்கு அப்போதுதான் இடமிருக்கும் என்பதால் துணை நின்றதாக சமாதானம் கூறினார் அண்ணல்.

அன்னியத் துணிமணிகளை எரித்ததும் தவறல்ல என்று திட்டவட்டமாகக் கூறினார் அடிகள். மக்கள் அப்போதிருந்த நிலை யாது? பகை வெறி அவர்களிடம் ஆதிக்கம் செலுத்தியது. 'கண்ணுக்குக் கண்; பல்லுக்குப் பல்' என்ற நீதி எங்கு

தலை தூக்கி விடுமோ என்ற பீதி எங்கும் இருந்தது. இந்த வெறி திடீரென பீறிட்டு எரிமலையாக வெடிக்கலாம்; எரிமலை வெடித்தால், ஏற்படும் விளைவு அழிவு; பெரும் அழிவு. இந்த வெறி வடிய வடிகால் ஏற்படுத்தி விட்டால், பகை பறந்து போகும். உயிர்ச்சேதம் இல்லா வடிகால் எது? அன்னியத் துணிகளை தீக்கிரையாக்குவதைத் தவிர சிறந்த தொன்றில்லை. எனவே தம் செய்கை தவறே அல்ல என்றார் அடிகள்.

இவ்விடை ஆண்டுரூஸுக்கும் தாகூருக்கும் பிடிக்க வில்லை. 'வார்த்தை சாலம்' என்று கருதினார்கள்.

## அடிகள் போற்றிய அம்மையார்கள்

1896 ஆம் ஆண்டு. நவம்பர் மாதம். இராய்ட்டர் பத்திரிகை அண்ணல் காந்தியின் பிரசாரத்தைத் திரித்துக் கூறியது; ஆதாரமற்ற புளுகுகளைச் சேர்த்துப் பொய்யுரை களை விடாது பிரசுரித்து, வெள்ளையரிடை தவறான கருத்துக்களைப் பரப்பியது. வெள்ளையர் வெகுண்டனர். அண்ணல் காந்தி தென்னாப்பிரிக்கா வந்தவுடன் என்ன செய்தனர்?

மூர்க்கத்தனமாக அடிகளை அடித்தனர்? வரம்பு மீறி நையப் புடைத்தனர். மெய்மறந்து செயலிழந்து வீழ்ந்தார் அண்ணல். அப்போதும் அடிகள் வேகமாக விழுந்தனவே யன்றி குறையவில்லை.

ஆனால் அக்கணம் தம்மை அறியாது நிறுத்தினர் வெள்ளையர். ஏன்? எதிரே நின்றார் ஓர் அம்மையார். அவரைக் கண்டதும் அக்கூட்டம் மரியாதையாக விலகியது. அந்த அம்மையார் யார்?

ஆங்கில போலீஸ் சூப்ரிண்டெண்டெண்ட் அலெக் சாண்டர் அவர்களின் துணைவியாரே.

ஆங்கில அம்மையார்; காத்தார் யாரை? ஒரு கறுப்பரை-தம் இனத்தவர் சீற்றத்தினின்று பாதுகாத்த இவர், தெய்வம் அன்றோ?

அம்மையாரைப் பற்றி காந்தியடிகள் போற்றாத கூட்டமே கிடையாது என்று சொல்லலாம்.

கன்னி எமிலி ஹாப்ஹௌஸ் மற்றொரு ஆங்கிலப் பெண்மணி. அஞ்சாமல் ஆங்கிலேயர் செய்த தீமைகளைச் சுட்டிக் காட்டிக் கடிவதில் சிறிதும் பின்வாங்காதவர்.

இவரது துணிவையும் அஞ்சா நெஞ்சினையும் வாயாரப் போற்றினார் அண்ணல் தம் 'யங் இந்தியா' பத்திரிகையில்.*

## காந்தியடிகள் வாழ்க்கை—ஓர் ஆராய்ச்சி

அடிகளைப் பற்றி நுணுக்கமாக ஆராய்ச்சி செய்யும் திரு. வி. க இவரது வாய்மையைப் போற்றினார். அவரை 'அன்பே உருவானவர்' எனப் புகழ்ந்தார். அவர்தம் செயல்களை ஆராய்ந்தார்; சீர்தூக்கிப் பார்த்தார்; அதற்கு எடைக்கற்களாக அடிகளின் கொள்கைகளையும் பிரசாரங் களையும் போட்டார். தராசின் மற்றொரு தட்டில் அடிகளை நிறுத்தினார்; இந்தத் தட்டு மனிதன் என்பது. தம் ஆழ்ந்த அறிவு என்ற முள்ளின் வழி நின்று சீர் தூக்கிப் பார்த்தார்.

அடிகள் பற்றி மிக்க உயர்வான அபிப்பிராயம் கொண்டி ருந்தாலும் அவர்தம் எல்லாச் செய்கைகளையும் அப்படியே ஏற்கவில்லை தமிழ் முனிவர். சிலவற்றில் மாறுபட்டார்.

''காந்தியடிகள் வாழ்க்கை வருணாச்சிரம தர்மத்தை எவ்வழியில் கொண்டிருக்கிறது என்பதை சிறிது நோக்கு வோம். மகாத்மா காந்தி தம்மை சநாதன இந்து என்று பலவிடங்களில் சொல்லியுமிருக்கிறார்; எழுதியுமிருக்கிறார். அவர் தொழிலுக்கேற்றவாறு சாதிகள் அமைக்கப்பட்ட ஒழுங்கு முறையை வியந்து, வியந்து பாராட்டுகிறார்.**

'சாதியின் பரந்த அமைப்பு இந்து சமய ஞானத்துக்குத் துணை செய்வதாகிறது.'

---

* மனித வாழ்க்கையும் காந்தி அடிகளும்', பக். உ சா அ.
** ,, ,, பக். ககக.

''சாதி ஹிந்து மதத்தின் சக்தியும் இரகசியமும் ஆகும்.''

''நால்வகை சாதிகள் சாலும்.''*

வருணாச்சிரமத்தைப் பற்றி அடிகள் வெளியிட்டுள்ள கருத்துக்களில் பல பொன்னே போல போற்றற்குரியன. ஆனால் ஒன்று மட்டும் என் சிற்றறிவிற்கு விளங்கவில்லை. அஃதென்னை? அது பிறப்பு வழி வருணாச்சிரமம் இயங்க வேண்டுமென்பது. இது குறித்து பன்னெடு நாள் நான் உன்னியதுண்டு. இன்னும் அதன் நுட்பம் எனக்குப் புலனாக வில்லை.''

''பிறப்பையொட்டித் தொழின் முறைகளைக் கட்டுப் படுத்தல் இயற்கை நோக்கைச் சிறைப்படுத்துவதாகும். அவரவர் இயல்புக்கேற்ற தொழில்களை அவரவர் ஏற்றுச் செய்யலாம். அவரவர் இயல்பு வழித் தொழில்களை ஏற்றுச் செய்வதே இயற்கை முறை. பிறப்பு வழித் தொழில்கள் நடைபெறல் வேண்டுமென்று கட்டுப்படுத்துவது இயற்கையை ஒறுப்பதாக முடியும்.''

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்**

என வரூஉந் திருவள்ளுவர் மொழியே இயற்கை நோக்குக்கு அரண் செய்வதாகும். இதுவே சிறியேன் உட்கிடக்கையும்.''**

## திரு. வி. கவின் கண்ணோட்டத்தில்

திரு. வி. க அடிகளை திருவள்ளுவர் கூறிய அந்தண ராகக் கண்டார். விலங்குணர்வு நீக்கப்பெற்ற தன்னடக்க உருவாகக் கண்டார்; சமரச விளக்காகக் கண்டார்; நாட்டில் தியாகராசனாகக் கண்டார்; அனைவருக்கும் பொது

* 'காந்தியடிகள்' - பக். கசஉ - மனித வாழ்க்கையும் காந்தி அடிகளும்.

** மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பக். கசஅ பிறப்பு.

இறையாகக் கண்டார்; வாய்மையின் பேரொளியாகக் கண்டார்.

தங்குற்றங்களை வெளிப்படையாக ஒப்புக்கொண்டு, தம்மைத் திருத்திக் கொள்ளும் இயல்பு கொண்ட உயர்ந்த மனிதனாகக் கண்டார்.

நன்றி மறவாத நற்பண்பாளனாகக் கண்டார்.

பெண்மையைப் போற்றும் பெருந்தகையாகக் கண்டார்.

எவ்வுயிரும் தன்னுயிர் என நலம் பேணும் நல்லாராகக் கண்டார்;

அயர்வில்லா பணி செய்யும் பற்றற்ற உண்மைத் துறவியாகக் கண்டார்.

பலனே பாராத, பாரதமே உயிர் எனக் கொண்ட சத்திய மூர்த்தியாகக் கண்டார்.

'வாழ்க காந்தீயம்; வாழ்க என்றும்!' என வாழ்த்து கூறுகிறார்.

# 12

# இராயப்பேட்டை முனிவரின் பவளங்கள்

## (செய்யுள் நூல்கள்)

### திரு.வி.க இயற்றிய செய்யுள் நூல்கள்

1. உரிமை வேட்கை அல்லது நாட்டுப் பாடல்
2. முருகன் அருள் வேட்டல்
3. திருமால் அருள் வேட்டல்
4. பொதுமை வேட்டல்
5. கிறிஸ்துவின் அருள் வேட்டல்
6. புதுமை வேட்டல்
7. சிவனருள் வேட்டல்
8. கிறிஸ்து மொழிக்குறள்
9. இருளில் ஒளி
10. இருமையும் ஒருமையும்
11. அருகன் அருகே அல்லது விடுதலை வழி

12. பொருளும் அருளும் அல்லது மார்க்ஸியமும் காந்தியமும்

13. சித்தந் திருந்தல் அல்லது செத்து பிறத்தல்

14. முதுமை உளறல்

15. வளர்ச்சியும் வாழ்வும் அல்லது படுக்கைப் பிதற்றல்.

'உரை நடை இருக்கட்டும். அவர் செய்யும் தொண்டு எத்தகையது? பற்பல தொல்லைகளினூடே அவர் தொடக்கத்தில் 'உரிமை வேட்கை அல்லது நாட்டுப் பாடல்' என்று சிறு செய்யுளை வெளியிட்டார். இது செப்டம்பர் 1931. பின்னர் வேட்டல் தொடர்ச்சியில்-முருகன் அருள் வேட்டல், திருமால் அருள் வேட்டல், பொதுமை வேட்டல் என்ற செய்யுள் நூல்கள் வெளியாயின. 1945 முதல் வெளியான நூல்களில் தமிழ்க்கலைத் தவிர ஏனையன செய்யுள் நூல்களே. அவரது கடைசி நூல் 'வளர்ச்சியும் வாழ்வும் அல்லது படுக்கைப் பிதற்றல்.'

இவற்றில் ஒளி வீசுவது திரு.வி.கவின் சமரச சன்மார்க்கக் கருத்துக்கள். இந்நூல்களில் இயற்கையன்னை தாண்டவமாடுகிறாள்; கற்பனை துள்ளுகிறது; உணர்ச்சிகள் அலை பாய்கின்றன. பொதுமை வேட்டலில் சமரச சன்மார்க்கக் கொள்கைகள் இடம் பெறுகின்றன. இங்கு முக்கியமாக இயற்கை வாழ்வு, மனத்தின் இயல்பு, அருளின் பெருமை* ஆகியவற்றின் விளக்கத்திற்கு ஈடு இணை உண்டோ? கிடையாது, கிடையாது.

அவர் முதுமைக் காலத்தில் பிறந்த பாடல்களிலே என்ன காண்கிறோம்? சோர்வா? அச்சமா? இரண்டும் இல்லை.

வீரத் தமிழின் முழக்கம் காண்கிறோம். போராட்ட வீரரின் வீரச் சூளுரைகளைக் கேட்கிறோம். வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிய பேராற்றலின் நேர்மையைப் பார்க்கிறோம்; பணிகிறோம்; போற்றுகிறோம்.

---

* பொதுவுடைமை—இயற்கை நெறி, பக். 15.

சமயச் செய்யுளன்றி, அரசியற் செய்யுளாளி 'அருளுடைமையும் பொருளுடைமையும்' பிறந்தது அவர் முதிய வயதில்தான். கண்ணொளி பட்டதுங் கருத்தொளி முன்னிலும் விளங்கியது தமிழ்த் தென்றலுக்கு.

அந்நூல்களின் அமைப்பையும் தெளிவையும் 'வளர்ச்சியும் வாழ்வும்' இல் உள்ள செய்யுளே விளக்கும்.

**'போரை ஒழிக்க போரில் இறங்கினோம்**
**குண்டைத் தொலைக்க குண்டை எறிந்தோம்**
**வாளை வீழ்த்த வாளை ஏந்தினோம்**
**விளைந்தது என்னை? அளந்து பார்க்க**

## சிவனருள் வேட்டல்

எல்லாவற்றையும் கடந்து நிற்பதே கடவுள். அவருக்குப் பேர் கிடையாது. ஆனால் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு பெயரை வைத்துத்தான் அவரைக் குறிக்கின்றனர். இறைவனை சிவன் என்று புலவர்கள் அழைத்து விட்டனர். எனவே நம் ஆன்றோர் வழியில், முன்னோர் வழியிலும் நின்று தானும் அவனை அப்படியே அழைப்பதாகச் சொல்கிறார் திரு. வி. க சிவனருள் வேட்டல் செய்யுள் நூலில்.

மேலும் சிந்திக்கிறார். எங்கும் நிறைந்த நீக்கமற இருக்கும் அச்சக்தியைக் காண்கிறார்.

''நீ உருவமுடையவன் அல்லன். அருவனும் அல்லன். உனக்கு ஆதியும் இல்லை. அந்தமும் இல்லை. அகண்ட சூனியத்திலும் நீ இருக்கிறாய்; ஒளியிலும் இருக்கின்றாய். எங்கும் நிறைந்திருக்கும் உன்னை எப்படித்தான் நினைப்பது?''

**''முருவு முன்னைப் படைப்பதெது? மாண்புடைய**
**சிவமே**
**மன்னுமுன்றன் பாழ்வெளியில் மாநிலங்களெல்லாம்**

**அருவுருவாய் ஆங்காங்கே அமைந்தமைந்து கோட்டில்**
**அசைந்தசைந்தே இயங்கிவரும் அதிசயந்தா னென்னே''**

என வியக்கிறார்.

எனவே ஆன்ற சான்றோர் அழைத்தவாறே நானும் அழைக்கிறேன்.

**ஒருபெயரும் ஒன்றுமில்லா உனையுஞ்சிவ மென்றே**
**உரைத்துவிட்டார் புலவரந் நாள் ஓதுகின்றேன் அதையே***

ஏறக்குறைய இதே கருத்து உரிமை வேட்கை அல்லது நாட்டுப் பாடலில் (பாட்டு I) தோன்றுவதைக் காண்கிறோம். ஆனால் இங்கே தமிழ்த்தென்றல் ஒரு படி மேலே போகின்றார். அத்தகைய ஒரே கடவுளை எப்படி அறிவது?

இது தான் அவர் கேட்கும் வினா. அதற்கு விடையும் அவரே தருகிறார்.

அது சரி! உலகில் மதங்கள் எத்தனை எத்தனை! சமயப் பிணக்குகள் எத்தனை கோடி! இதில் எது நமக்கு ஏற்ற தென்று தெரியவில்லையே! மனத்திலே இந்தப்பிரச்சினைக்கு தீர்வு ஏற்படாத போது எந்த சமயத்தைப் பின்பற்றுவது? ஒரே கலக்கமாக உள்ளதே; இந்தக் குழப்பத்திற்கு முடிவே கிடையாதா? உண்டு, உண்டு, நிச்சயம் உண்டு! இக்கலக்கத்திற்கும் ஒரு முற்றுப்புள்ளி. உண்டு. அப்படியா? எப்படி?

**''கடவுள் நெறியொன்றென்னுங் கருத்துநிலை வேண்டும்**
**கட்டுமதக் களைகளெலாங் கால்சாய்தல் வேண்டும்''**

---

* திரு. வி. க, **சிவனருள் வேட்டல்**, கடந்த நிலை-2.

அது சரி, மதமில்லை என்றால் வேறு மாற்றமேது? மாற்றமா? உண்டு.

**நடமாடும் கோயிலுக்கு நலம்புரிதல் வேண்டும்.**

நடமாடுங் கோயிலா? அது எது?

நாம் வாழும் உலகிலுள்ள உயிர்கள் அனைத்துமே நடமாடுங் கோவில்களே. அவைகளுக்கு உதவ வேண்டும். எவ்வாறு உதவ வேண்டும்? சரி உதவுகிறோம். அதனால் நமக்கு என்ன ஆதாயம்?

உதவுதலுக்கு கைம்மாறு எதிர்பார்த்தால்; அது உதவியாகுமா? ஆகவே, ஆகாது. பின் என்னதான் செய்வது?

அனைவருக்கும்—வேற்றுமையின்றி சமமாக உதவி செய். பணி செய்தால்? 'பயன் கருதாது பணி செய்' என்பதையே வலியுறுத்துகிறார். இந்தக் கருத்தை ஆணித்தரமாக, 'நடமாடும் கோவில்' என்ற சொற்கள் மூலம் வற்புறுத்துகிறார்.

இப்படிச் செய்ய முடியுமா? செய்தால் கடவுள் நெறி பின்பற்றியவர்கள் ஆவோமா? இது அடுத்த ஐயம்.

பின்பற்றியவர்கள் ஆவோம். எப்போது?

'நான் என்ற அகந்தை அகன்றால்; அத்துடனா? மனத்தாலும் பாவம் செய்வதை ஒழித்தால்......

> **''நான் அழிந்து தொண்டுசெயும் ஞானமதே வேண்டும்;''**

வேறு என்ன செய்ய வேண்டும்?

> **''கொடிய கொலை புலைதவிர்க்குங் குணம்பெருகல் வேண்டும்;''**

ரொம்ப சரி. இதை இரண்டுமே செய்து விடுவோம். உடன், அருள் கிடைத்து விடுமன்றோ?

கிடைக்கும். ஆனால் இன்னும் ஒன்று உளதே !

அப்படியா ? அது என்ன ?

**''கொலைநிகர்க்கும் வட்டிவகை குலைந்திறுகல் வேண்டும்.''**

அது சரி. இவைகளை எல்லாம் தவிர்த்தால் போதுமா? போதாது, போதாது.

இப்படியே ஏக நிபந்தனைகள் வருகிறதே. அடுத்துளது எத்தகையதோ?

மிகவும் எளிமையானதே. அது ஒன்றும் பிரமாதமான தல்ல. இயற்கை வழி வாழ வேண்டும். செயற்கை சேற்றைத் தவிர்க்க வேண்டும்.

இயற்கை வழி வாழ்தற்கான முறையையும் வழியையும் சொல்கிறார் திரு.வி.க.

சுருக்கமாக சன்மார்க்கத்தில் உள்ளது இதன் வெற்றி என்கிறார்.

சன்மார்க்கமாவது எது ?

**''இடமொழியுங் கலையுமென்றும்**
**இயங்கிடுதல் வேண்டும்**
**இயற்கைவளப் புளங்கவரும்**
**இனிமையும் வேண்டுவனே.**

**(உரிமை வேட்கை அல்லது நாட்டுப் பாடல்.**
வேண்டுதல் பாட்டு)

அரியதொரு உண்மையை சிறியதொரு பாட்டில் விளக்கக் கூடிய சிந்தனைத் தெளிவு திரு.வி.கவைப் போல் எல்லோருக்கும் இருக்குமா ?

# முதுமை உளறல்

இன்றைய உலகின் நிலை என்ன? மூத்த வயதினர் இளைய வயதினரிடையே கருத்து ஒற்றுமை நிலவுகிறதா? இல்லையே! இவ்விருவரிடையே ஏற்பட்டுள்ள பிளவு எத்தகையது? பயங்கரமானது. பயங்கரமானது, மிகப் பயங்கரமானது!!! குழந்தைப் பருவத்தினின்று மாறி இளைஞன் பருவம் ஏற்குமுன் நம் பிள்ளைகளுக்கு எதிர்நோக்கும் சிக்கல்கள் தான் எத்தனை, எத்தனை! இந்த பிரச்சினைகள் முன்பு இல்லையா? இல்லை, இவைகள் திடீரென முளைத்தனவா?

குமர பருவம் (Adolescent) என்றும், தலைமுறை இடைவெளி (Generation Gap) தொல்லைகள் என்றும் பேசாதவர் இல்லை. இதனால் விளையும் பற்பல திகைப் பூட்டும் சம்பவங்கள் வராத செய்தி இதழ்களும் உண்டோ? பிற்போக்கு சக்திகள் எவை? முற்போக்கு சக்திகள் எவை? எதை விடுப்பது, எவை ஏற்பது? எப்படி வாழ்வது என்ற பிரச்சினைகள் ஒவ்வொரு நொடியும் எல்லா இடங்களிலும் விச்வரூபம் எடுக்கின்றன; அல்லல் படுத்துகின்றன. பழமைக்கும் புதுமைக்கும் போர், போர், இடைவிடா போர்!

இந்தியாவில் தற்கால இளம் வயதினர் அனுபவத்தை 'பத்தாம் பசலித் தனமாக'க் கருதுவது சரியா? இது ஆராய்ச்சிக்குரியதொன்று.

இளம் வயதினருக்கு ஏற்பட்டுள்ள தொல்லைகளுக்கு தமிழ்த்தென்றல் கொடுக்கும் மருந்து யாது?

முதலில் ஆன்றோர் வழி நின்று ஒழுகு. அவ்வாறு ஒழுகினால் என்னாகும்? தெளிவு பிறக்கும்.

தெளிவு பிறந்தால்? கலக்கம் ஒழியும். கலக்கம் ஒழிந்தால் ஒளி உண்டாகும். ஒளி, அறிவு ஒளியாக வீசும்.

இந்த அறிவு ஒளி வீசினால்? மனத்தில் அமைதி ஏற்படும்; நிலைத்து நிற்கும்.

மனத்தில் அமைதி ஏற்பட்டால் என்னாகும்?

மனத்தில் அமைதி ஏற்படின் நினைப்பு தானாகவே தூய்மையாகும். தூய்மை என் செய்யும்? தூய மனத்தில் அறிவுச் சுடர் பிரகாசமாக எரியும். அதன் ஒளி அறியாமையை போக்கும்; மக்களின் விலங்குத் தன்மையை விலக்கும்; விரட்டும்; ஒழித்துக் கட்டும். மெய் நெறி பிறக்கும்.

இதைக் கூறும் அவர் செய்யுளைப் பார்ப்போமா?

**''முன்னோர் மொழியைப் பொன்னேபோல் போற்றுக;**
**அன்னவர் செம்மொழி மன்னிவானில்**
**ஒலியாய்ப் படிந்தே உலகை ஓம்பலை**
**உன்னி உன்னிப் பன்முறை உன்னுக;**
**தெளிவுண் டாகும்; ஒலியுண்டாகும்;**
**முளைப்பறுந் தொழியும்; நினைப்புத் தூயதாம்;**
**அந்நினைப் புடையார் நன்மொழி அமிழ்தம்**
**இடையீ டின்றித் தொடர்ந்து வழிவழிப்**
**பெய்து பெய்து மெய்ந்நெறி காக்கும்;''***

நவ நாகரீக இளம் வயதுடைய மக்களிடை அமைதி யின்மை ஏற்படுவது ஏன்?

பலர் பற்பல கருத்துக்களைக் கூறுவர்.

அவர்கள் அறிவுக்குத் தக்க வேலையில்லை என்பது பெரும்பான்மையோர் கூற்று.

படித்த இளைஞர்களுக்கு வேலையில்லை! எனவே அல்லல், அவதி, அமைதியின்மை!!

வேலையில் உள்ளவர்களுக்கோ வேறு தொல்லைகள். தொல்லைகள் ஏன்? அமைதிக் குறைவு ஏன்?

---

* முதுமை உளறல், பக். 48.

நாகரீகம் என்ற பெயரில் நடப்பது என்ன? நாகரீகம் என்ற போர்வையில் தேவையற்ற, நம் தகுதிக்கு மீறிய ஆடம்பர வாழ்க்கை மேற்கொண்டோம். ஆடம்பரங்கள்—அத்தியாவசியத் தேவைகளாயின. இவை வெகு வேகமாக மிக மிக அதிகமாகப் பெருகின. இன்று? அவைகளைத் தள்ளவும் முடியவில்லை; ஏற்று சமாளிக்கவும் முடியாமல் திண்டாடுகிறோம். அந்தோ பரிதாபம்? எத்தகைய தவிப்பான நிலை!

ஒரே நிலையில் ஆடம்பரமாக வாழ்ந்தே தீர வேண்டும். இல்லையெனில்? நம் கௌரவம் பறந்தே போய்விடும். நம் போலிக் கௌரவம் பறிபோனால் வாழ முடியுமா? முடியாது, முடியாது!!!

இது கௌரவ பிரச்சினையாக தலைதூக்கும் போது என்ன ஆகும்? ஜேப்படி, கொலை, களவு—இன்னும் பல குற்றச் செயல்களில் மனம் பாயும். எதற்காக? தேவைக்கு வேண்டிய பணத்தை குறுக்கு வழியில் சம்பாதிக்க.

இத்தகைய ஒரு தெளிவற்ற நிலை மாறுமா? மாற்றவும் முடியுமா?

மாற்ற முடியும், மாற்ற முடியும், மாற்ற நிச்சயம் முடியும்! என்று உறுதியாகக் கூறுகிறார் திரு. வி. க.

இந்த உறுதியை எங்கு காண்கிறோம்?

திரு. வி. கவின் 'சித்தம் திருந்தல் அல்லது செத்து பிறத்தல்' செய்யுளில்...

'எப்படி முடியும்?' என்று கூறுகிறார், பாரிக்கலாமா?

**''தொண்டால் மூர்க்கம் அண்டா தொழியும்:**
**மூர்க்கப் புரட்சியால் பார்க்கு நாசம்;**
**அகிம்சை புரட்சியால் அகிலம் உய்யும்;**
**கொலை, புலைக் குறையைக் கலையால் விளக்கும்**

அறிவுக் குருகுலம் பரிவால் அமைக்க;
கொள்ளை காமம் கள்பொய் கொலையென
உள்ளம் தெரியப் பள்ளி காண்க;
கொல்லும் கருவி செய்ய அல்லல் களத்தைச்
சீல விளைவு செய் ஆலயம் ஆக்குக;
அருளற நெறியின் பொருளைப் பரப்புக;
அந்த நெறியால் ஐந்து பாவமும்
அருகி அருகி அருகிப் பொன்றும்
அருளற நெறியில் பொருநிலர் இலரே''*

இந்த காலத்திற்கும், எக்காலத்திற்கும் மக்கள் அமைதியாக வாழ இதைவிடச் சிறந்த அறிவுரை உண்டோ?

## இருமையும் ஒருமையும்

இந்நூல் இவ்வாறு தலைப்பு பெற்றதேன்?
இருமை யாது? ஒருமை யாது?

இருமையாவது இயற்கை—ஆக்கமும் அழிவும்—என்ற இரு கூறுகள் கொண்டது. ஆசை—பேராசை, அதனை அறுத்தல்; உண்மை அதற்கு மாறான பொய்மை; அறிவு அதற்கு எதிரிடையான அறியாமை; போன்ற இரட்டைகள். இவை ஒன்றிற்கொன்று திரிபாகத் தோன்றுவதால் மாறுபட்டன அல்ல. இந்த இருமைக்குப் பின்னே ஒன்று உண்டு. அதுவே ஒருமை.

ஒருமையாவது—ஒன்றாகவுள்ள ஒரு சக்தி; அதுவே கடவுள். பன்மையிலும் ஒருமையாக நீக்கமற நிற்பதே கடவுள். இந்த இருமையை ஆராய்ந்து, நமக்கு ஏற்றதை ஏற்று, தகாதனவையை நீக்க உதவுவது அந்த ஒருமை சக்தியே.

அது எப்போது வரும்? ஒருமைப்பேறு ஒருவனுக்கு.

---

* சித்தம் திருந்தல் அல்லது செத்து பிறத்தல், பக். 18.

**'' விலங்கியல் சார்பை விடுத்து விடுத்துத்**
**தேவியல் சார்பைச் சேரச் சேர**
**இருமை மடியும் ஒருமை படியும்;''***

*வீரன் யார்? அதற்கு எடுத்துக்காட்டு காட்டியபின் தமிழ் முனிவர் திரு. வி. க மாந்தருள் மாணிக்கம் யார் என்று விளக்கம் கூறுகிறார். அவர்கள் சிறப்பியல்புகள் யாவை?*

**''கோணல் மலிந்த ஆணவம் அற்றவர்**
**இகலைத் தாண்டி இனிமை அடைந்தவர்**
**புகழை நீந்திப் புனிதம் உற்றவர்**
**தெய்வச் சேய்களாம் சிறப்புப் பெற்றவர்**
**தன்மைத் தெய்வப் பெண்மை உடையவர்****
**பொய்மை அறியார் புறஞ்சொல் தெரியார்**

*அது சரி அவர்களுடைய செய்கைகள் யாவை?*

**''தீய ரிடத்திலும் நோய ரிடத்திலும்**
**பாவ ரிடத்திலும் பணிகள் செய்வர்**
**வழுக்கி வீழ்ந்தவர் வாழ்க்கை பண்பட**
**ஒழுக்கத் தொண்டுகள் பழுக்க ஆற்றுவர்*****

*இத்தகையோரை எவ்வாறு அழைக்கிறார் திரு.வி.க?*

**'' அவரே அந்தணர் அவரே முனிவர்**
**அவரே சித்தர் அவரே புத்தர்**
**அவரே பெரியர் அவரே தொண்டர்**
**அவரே இனியர் அவரே மனிதர்;******

---

* இருமையும் ஒருமையும்—*'ஒருமைப் பேறு'-198-200-ம் வரி, பக். 18.*

** *'மெய்கண்டவர் நிலை'-பக்-28, 29—360-365-ம் வரிகள்.*

*** *முன்கூறிய நூல் பக். 29, 366-369 வரிகள்.*

**** ,, ,, *370—374 வரிகள்*

இவ்வளவும் இருந்து விட்டால் போதுமா? எச்செயலுக்கும் காத்தாவான ஆண்டவன் அருள் வேண்டாமோ?

நிச்சயம் வேண்டும். அதுவும் சன்மார்க்க வழியில், அகிம்சா மார்க்கத்தில் அந்த அருளைப் பெற்றே ஆக வேண்டும் என்ற கருத்தினை இந்நூலின் கடைசி பதினைந்து வரிகளில் கூறும் திரு.வி.கவின் திறன்தான் என்ன?

## கிறிஸ்துவின் அருள் வேட்டல்

பிறவியில் துன்பத்தைக் கடக்க வேண்டும். துன்பத்தைக் கடப்பதே எல்லா சமயங்களின் குறிக்கோள். இதை முக்தி என்கிறார்கள். ஏதேதோ பெயர் சொல்கிறார்கள். ஆனால் முக்தியை எப்படி அடைவது? காட்டிற்கு ஓடி தவம் செய்தால் முக்தி கிடைக்குமா? கிடைக்காது, கிடைக்காது!!!

பெண்களை மாயை என்று தூற்றி, துறந்து இயற்கைக்கு மாறாக வாழ நினைத்தால், முக்தி ஓடி வருமா? வராது, வராது, வரவே வராது!!

பின்னே கிட்டாத ஒன்றைப் பற்றி சிந்திப்பானேன்? முக்தியைப் பற்றி மறந்து மூர்க்க விலங்கின வாழ்க்கையில் ஈடுபட்டால் என்ன தவறு? தவறு; மிகத் தவறு! ஏன்?

உய்ய வழியா இல்லை? சரியான உய்யும் வழி தெரிந்துக் கொள்ள முயலாமல் இருப்பது யாருடைய அறிவீனம்?

அருள் நெறி போதித்தவர் எத்தனை பேர் இல்லை? சன்மார்க்கம் போதித்த இராமலிங்கரை சிந்திக்கத் தவறினால், அது யாருடைய தவறு? 'அன்பே சிவம்' என்ற திருமூலரையும் 'அறிவே கடவுள்' என்ற தாயுமானாரையும் மறப்பது சரியோ? இவர்களை மறந்தாலும், 'பகைவனுக்கும் கருணை வேண்டி, அவர்தம் தவற்றை மன்னித்த' ஏசுவை மறப்பது சுலபமா?

*அவர் கூறிய முறை யாது?*

**வாக்கை அடக்கின், வயிற்றை ஒடுக்கின், மயிர் வளர்த்து**
**மூக்கைப் பிடித்திடின், மூச்சைத் தடுத்திடின் முத்தி யின்பம்**
**தேக்குமோ ஐயோ செகத்தீர்! அடைமின் சிலுவைஉயிர்**
**போக்கிய ஏசுவின் பொன்னடி இன்பம் புகுத்திடுமே.**

*பொன்னடியைப் பற்றினால் கிடைத்திடுமா? பொன்னடி—ஏசுவின் பொன்னடியைப் பற்றினால் கிடைக்காத தொன்றுமில்லை. ஏன்?*

**''நல்லார்க்கும் பொல்லார்க்கும் ஞாயிறெழ இறைவன்**
**எல்லார்க்குஞ் செய்கின்றான் இன்பு******

*அது சரி, அன்றாடம் ஏதேதோ கவலைகள் உள்ளனவே. அது தீர்ந்தால் தானே ஏசுவை நினைக்க முடியும்?*

*அதைப் பற்றிக் கவலைப்பட நீ யார்?*

**'வானத்தை நோக்கி வளர்சிறகை ஆர்த்தெழும்பும்**
**கானப்புள் காண்மின் கரி*******

**'அவைகள்** *விதைத்தல் அறுத்தல் நிரப்பல் எவைகளையுஞ் செய்வதிலை ஏன்?*

**அவ்வுயிரும் உண்ண அருள்கின்றான் வானப்பன்**
**அவ்வுயிரில் நீர்இழிவோ? அன்று.******

---

* கிறிஸ்துவின் அருள் வேட்டல் *'அறத்தின் இயல்'* 4 *பக். 6.*

** கிறிஸ்து மொழிக் குறள்; *'அன்பு', பக். 64.*

*** *முன் குறிப்பிட்ட நூல், 'உறுதி', 110, பக். 22.*

**** *முன் குறிப்பிட்ட நூல், 'உறுதி', பக். 22*

இந்த உறுதி உனக்கு பரமபிதாவாகிய கடவுளிடத்து இருந்தால் கவலைப்பட மாட்டாய்.

ஏன் தெரியுமா? அப்பனின் அருள். அது எத்தகையது தெரியுமா?

**"கேளும் கொடை வரும். தேடுமே கண்டடைவீர்**
**தாளகலும் தட்டுமே சார்ந்து."***

அப்படியா? அது எங்ஙனம்?

**அப்பனோ அன்பு, நலம் ஆக்கவே ஆர்த்தருள்வன்**
**இப்புவியில் வேண்டுநருக் கென்று****

கிறிஸ்து பெருமானின் தத்துவத்தை எவ்வளவு அழகாக சாறாக பிழிந்து கொடுத்து விட்டார் இராயப்பேட்டை முனிவர்.

## இருளில் ஒளி

பார்வை இழந்து இருள் சூழ்ந்தபோது, ஒளி பிறந்தது. புறக்கண் மங்கியது. ஆனால் அறிவுக்கண் மேன்மேலும் ஒளி பெற்றது. தெளிந்த ஓடையாக அறிவு செயல்பட, திரு.வி.க 'இருளில் ஒளி' நூலை வெளியிட்டார்.

இது நேரம், நம்மை அறியாது மில்டன் என்ற பெரும் ஆங்கில கவிஞனை நினைக்கிறோம். அவருக்குக் கண்பார்வை போனபோது தான் உலகே வியக்கும் 'இழந்த சொர்க்கம்' (Paradise Lost) என்ற உயரிய காவியம் பிறந்தது.

இருளில் ஒளி நூலில் கடவுளியல், உலகியல், வாழ்க்கைக் கூறுகள்—அவைகளின் உட்பிரிவுகளான பல்வேறு அறங்கள்—பொதுமை, புதுமை, புரட்சிகள், காந்தியடிகளின் அசப்சை

---

* முன் குறிப்பிட்ட நூல், 'அப்பன் அருள்', 133, பக். 25.

** " " " " " 137, பக். 25.

வழி, அருளாட்சியே மக்களாட்சி என்று தெளிவுப்படுத்தும் பகுதியும், சமயம் சன்மார்க்கம் அமைதியை கடைப்பிடிக்கும் வழிகள் முதலியன இடம் பெறுகின்றன.

தேவைக்கு மேல் பொருளீட்டலைக் கண்டிக்கும் மார்க்ஸீயம் அல்லது புதுமை புரட்சி. அதனையே காந்தியடிகள் அருளுடன் கூடியதாக இருக்கவேண்டும் என்ற கொள்கை கொண்டுள்ளார். முந்தையது மறப் புரட்சி அல்லது பொருட் புரட்சி. பிந்தியதோ அருட் புரட்சி. நம் நாட்டிற்கு உகந்தது எது என்றும் திரு. வி. க கூறுகிறார்.*

ஆட்சி முறைகளிலும் சிறந்தது அருளாட்சியே. ஏன்? இந்த ஆட்சி முறையில், பிற உயிர்களுக்குத் தொல்லை ஏற்படுவதில்லை; அதனால் துன்பமில்லை. தொல்லை தராதவனை எல்லா உயிரும் தொழும்; இந்த நல்லெண்ணத்தை உருவாக்க வேண்டும்; வளர்க்க வேண்டும்; போற்ற வேண்டுமென்கிறார் திரு.வி.க.

**''எவ்வுயிர்க்கும் தீங்கெண்ணா எண்ணமே நல்ல தந்தச்**
**செவ்வி வளர்த்தல் சிறப்பு''****

மக்கள் ஆட்சி என் செய்யும்?

**''மக்களின் ஆட்சியே மாசுகளைப் போக்குதற்குத்**
**தக்கமருந்தென்று சாற்று:''*****

இந்த அருளாட்சியின் அடித்தளமாவது எது?

---

* இதே கருத்து-**புதுமை வேட்டல்** 8-'அறப் புரட்சி' பக். 30 என்ற செய்யுளில் இருப்பதைக் காணலாம் தக்கது.

** **இருளில் ஒளி,** 'எண்ணம்' 45-குறள் வெண்பா-பக். 34

*** ,, ,, 32- ,, பக். 20.

"மக்களின் அன்பில் மலரும் அருளாட்சி (எனவே,)
தக்கது தக்கது தான்."*

## முருகன் அருள் வேட்டல்

முருகன் பதிகளில் பல இந்த நூலில் பாடப் பெறு கின்றன; பல கோளங்களில் காட்சி அளிக்கும் முருகனை, இத்துதிப் பாடல்கள் மூலம் திரு.வி.க அர்ச்சனை செய் கிறார். பாட்டர்ச்சனை ஒரு சிறந்த வழிபாடு என்பதை விளக்குகின்றன இப்பாடல்கள்.

இந்த இசை அர்ச்சனை செய்ய வேண்டும் என்று ஏன் தோன்றியது தமிழ்க் கடலுக்கு?

இந்தக் கேள்விக்கு 'கழுகுமலை' பாட்டுகளில் ஒன்று விடை பகரும்.

"உலகம் பொல்லா தென்கின்றார். உளமே
பொல்லா தென்றுணர்ந்தேன்; கலக உளத்தைக்
கடந்து நின்றால் கருணை வடிவே உலகெலாம்,
இலகும் உயிர்கள் நின் வடிவே எங்கே
குற்றம் இறையோனே, அலகில் அழகே
அன்பருளே அறிவே கழகு மலையானே."**

வேண்டுவது யாது?

பதவியா? புகழா? அரசா? விண்ணுலகா?

அரசும் விண்ணுலகும் வேண்டேன்."

பின் என்னதான் வேண்டும்?

"வேண்டும் இரங்கும் நெஞ்ச மென்றும் விளங்கும்
மற்ற அறமெல்லாம் ஈண்டி யடியார்
பணி செய்யும் ஈசா! கழகு மலையானே"***

---

* **இருளில் ஒளி**, 'எண்ணம்', 34, பக். 20
** **முருகன் அருள் வேட்டல்**, பக். 18.
*** ,, ,, 34 பக். 20.

பிறிதொரு இடத்தில்:

**'பொருளில்லார்க் கிவ்வுலகும் அருளில்லார் கந்தப்**
**புவியுமிலை என்றுரைத்தார் பொய்யாமொழியாளர்**
**தெருளிரண்டில் ஒன்றுமின்றி திரிகின்றேன் இங்கே**
**திருவெல்லாம் விளங்குகின்ற தெய்வமுருகையா!**
**இருளிருந்து கூவுகின்றேன் எடுத்தணைப்பா ரில்லை**
**இரங்குந் தாய் தந்தை என்றே இறைவ! நினை**
**அடைந்தேன்.**
**மருளிருக்கு மதியனென்று வாளா நீ இருந்தால்**
**வாழ்வதெங்ஙன் இயற்கையிலே வாழும்**
**பெருந் துரையே***

''என்று மனமுருக வேண்டுகிறார். காக்க வேண்டியது முருகன் கடன். யாரை காக்க வேண்டும்? தன்னை வழிபடுவோரை! எப்படிக் காக்க வேண்டும்?

''பொய் பகை பொறாமை லோபம்
புகுந்துறாவாறு'' காக்க வேண்டும்.

அது போதுமா?

வெஞ்சினம், காழ்ப்பு, நோய், பிணி, கேடு செய்யும் எண்ணம், வஞ்சகம் இதனின்றும் காத்தல் வேண்டும்.

**கொலைபுலை நீக்கி யெங்குங் குணஞ்செயல் அறிவைக்**
**காக்க**
**அலைமன அவதி போக்கி அமைதியைக் காக்க காக்க**
**உலகெலாம் ஒன்றி நிற்க உயரறங் காக்க காக்க**
**கலை வளர் மதியந் தோயுங் கடிவரைச்**
**செம்மைத்தேவே****

## திரு. வி. கவும் கார்ல் மார்க்ஸும்

மனிதனின் தனி உடைமையை எதிர்த்தவர் பலர். இந்த தனிமையைத் தொலைக்க வேண்டுமென்று இந்நாளில்

---

* முன் குறிப்பிட்ட நூல், பொது, பக். 45.
** ,, ,, பக். 48.

முனைந்தவர் சிலர். அவருள் குறிக்கத் தக்கவர் கார்ல் மார்க்ஸ்.

கார்ல் மார்க்ஸ் (1818-1883) வாழ்க்கை வரலாற்றை விரிவாக தமது ''பரம்பொருள் அல்லது வாழ்க்கை வழி'' நூலில் கூறுகிறார் திரு. வி. க. அறிஞர் ஹெகலிடம் தத்துவம் பயின்றவர் இந்த ஜெர்மானியர். கருத்து வேற்றுமை விளைந்தது கார்ல் மார்க்ஸுக்கு தனி நபர் பொருளுடைமையில் வெறுப்பும் சேர்க்கையில் சேர்க்கைத் தொழில் முறையில் விருப்பும் உண்டாயின. அக்கால ஜெர்மனிக்கு இக்கொள்கை பிடிக்கவில்லை. விளைவு?

கார்ல் மார்க்ஸ் ஜெர்மனியிலிருந்து துரத்தப் பட்டார். கார்ல் மார்க்ஸ் என்ன செய்தார்? தமக்கு தொல்லை வருகிறதே என்று கொள்கையை விட்டுக் கொடுத்தாரா? இல்லை; இல்லை. தமது கொள்கையில் உறுதியாக நின்றார். ஜெர்மனியில் இருக்க முடியாது பெல்ஜியத்தை நோக்கினார். பெல்ஜியம் அவரை ஏற்றதா? இல்லை. பிரான்ஸுக்கு ஓடினார். எந்த குடியரசு நாடும் அவருக்கு இடந்தரவில்லை. ஏழை மார்க்ஸின் நெஞ்சம் சுழன்றது. கருத்து வேற்றுமையை மதிக்கும் இங்கிலாந்தை அணுகினார். இங்கிலாந்து அவருக்கும் இடம் கொடுத்தது.

இங்கிலாந்து இடங்கொடாமல் அவரை அலைய வைத்திருந்தால், உலகை ஒருமைப்படுத்த வல்ல ''காபிடல்'' போன்ற சீரிய நூல்கள் வெளி வந்திருக்குமோ?

''மார்க்ஸின் உள்ளத்தில் பழைய உலகின் சிறுமைகள் புகுந்தன; அவ்வுலகின் அலைவும் குலைவும் தொடர்ந்து நுழைந்தன. உலகைப் புதுப்பிக்க அவர் உள்ளம் கிளர்ந்து எழுந்து, எழுந்து புதிய உலகைப் படைத்தது.''*

அது நூல்களாகவும், இயக்கமாகவும் உருக் கொண்டது.

மார்க்ஸிஸம் என்றால் என்ன?

---

* ''பரம்பொருள்'', பக். 80.

''ஏகாதிபத்தியக் கொடுமையால் உலகம் பசி-பட்டினி-நோய்-அகால மரணம்-அடக்கு முறை-உரிமைக் கேடு, போர் முதலியவற்றால் அரிக்கப்படுவது கார்ல் மார்க்ஸின் நெஞ்சைப் பிளந்தது; புது உலகைப் படைக்கக் கடவியது. அவரது கல்வியும், கேள்வியும், அறிவும், அன்பும், ஆராய்ச்சியும் அனுபவமும்—முதல், தொழில் அற்ற ஓர் உலகை வறுமை கொடுமை செல்வத் திமிர் அற்ற ஓர் உலகை போலீஸ்-பட்டாளம் அற்ற ஓர் உலகை அரசு அற்ற ஓர் உலகை, உற்பத்தி சாலை போர்க் கருவிகளை வடியாதகைக் காணும் ஓர் உலகை சாதி, மத, நிற, நாடு முதலிய வேற்றுமைகள் நெளியாத ஓர் உலகை, தனிமை அதாவது தன்னலம் அற எல்லோரும் சேர்ந்து தொழில் புரிந்து வாழும் ஓர் உலகை—இவையெலாஞ் சேர்ந்த ஒரு புது உலகைப் படைக்க நெருக்கின. அந்நெருக்கு மார்க்ஸியமாய் ஒரு புது உலகைப் படைத்தது.''*

## முக்கூறு

''மார்க்ஸியம் பொதுவாக சமதர்மம் என்றும், பொது உடைமை என்றும் பேசப்படுகிறது. இது பருமைப் பேச்சு. மார்க்ஸியத்தின் நுண்மையில் நுழைந்து பார்த்தல் வேண்டும். பார்த்தால் மார்க்ஸ் பொதுமையில் முக்கூறு இருத்தல் இனிது விளங்கும். முதற்கூறு—சோஷலிஸம், இரண்டாவது—கம்யூனிஸம்; மூன்றாவது—பெர்பெக்ட் (Perfect) கம்யூனிஸம் அதாவது முழு கம்யூனிஸம். இதை சுத்த கம்யூனிஸம் என்று சொல்லலாம்.''**

தமது மற்றொரு நூலாகிய 'வாழ்க்கை வழியில்' மார்க்ஸியம் பற்றி விரிவாகக் கூறியுள்ள திரு. வி. க மார்க்ஸியத்தையும், காந்தியத்தையும் ஒப்பிடுகிறார்

* பக். 81—பரம்பொருள்.

** முன் குறிப்பிட்ட நூல், பக். 82.

பொருளுடைமையும் 'அருளுடைமையும்' என்ற செய்யுள் நூலில், இந்தியாவுக்கு எது உகந்தது என்றறிய அதைப் பார்க்கலாம்.

## பொருளும், அருளும் அல்லது மார்க்ஸியமும், காந்தியமும்

மார்க்ஸியம் என்பதற்கு ஒரே ஒரு சொல்லில் விளக்கம் கூற திரு.வி.க வினால் தான் முடியும். அதாவது அது பொருள் உடைமை. இந்த தத்துவம் புதியதா என்றால் இல்லை. எத்தனையோ நூற்றாண்டுகளாக இந்தியாவில் பழக்கத்திலிருந்து, பின் நடுவே மறைந்து, மீண்டும் ஒளி வீசும் 'எல்லோருடனும் பகிர்ந்தல்' கொள்கையைப் பின் பற்றி விஞ்ஞான ரீதியாக விளக்கம் தரப்பட்ட ஒரு பொருளாதார தத்துவம்.

அதாவது அதிகப்படியாக, தேவைக்கு அதிகமாக ஒரு சில பொருள் குவிந்து மற்ற இடங்களில் வறுமை தாண்டவ மாடுமானால் என்ன நிகழும்? வறுமை பொறுமை இழக்கும். எரிமலையாக வெடிக்கும்; எத்தகைய எரிமலை? புரட்சி எரிமலை. இந்த எரிமலை வெடித்து ஓரிரு பகுதிகளிலுள்ள பொருளை எடுத்து வலுக்கட்டாயமாக இல்லாதவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கும். இதை தற்கால நாகரீகத்திற்கு ஏற்றாற்போல 'பொதுவுடைமை' என விரிவாக விளக்கிக் கூறுவதே மார்க்ஸியம்.

இந்த புரட்சி தவிர வேறு வழியில் 'பகிர்ந்தளிக்க' முடியாதா என்ற ஐயம் நமக்குத் தோன்றுகிறது. முடியும்.

பண்டைய இந்தியாவில் இந்த 'பகிர்ந்துண்ணல்' பழக்கத்தில் இருந்தது. இதை நாயன்மார் வரலாற்றில் காண்கிறோம். பொதுவுடைமை என்ற சொல், வழக்கில் இல்லாவிட்டாலும் வாழ்க்கை முறையில் இருந்தது. 'விருந்தோம்பல்' என்ற வள்ளுவரின் அதிகாரம் இதற்குச் சான்று கூறும்.

காந்தியமும் பொதுவுடைமையைத் தன் அடித்தளமாகக் கொண்டதே. என்றாலும் வெறும் பொருள் இன்பம்தராது; அமைதி நல்காது என்பது அனுபவம் அறிந்ததொருஉண்மை. எனவே அதற்கு இன்னும் தேவையானது என்ன? அருள்.

'அருளுடையார் எல்லாம் உடையர்'

அருள் என்பது இந்த இடத்தில் எல்லா உயிர்களிடத்தும் அருள் பூண்டொழுகுவது. அதாவது அகிம்சை வழி வாழ்வது.

மார்க்ஸியம்-ஹிம்சை வழி காட்டி அச்சுறுத்துகிறது. இந்த அச்சுறுத்தல் எப்போது நிகழும்? மக்கள் இயற்கை வழிக்கு மாறாக வாழ்ந்தால் அப்போது நிகழும். எனவே காந்தி அடிகள் கூறுவது சுலபமாகப் பின்பற்றக் கூடிய வாழ்க்கை வழி.

இதைப் பின்பற்றத் தவறினால் ஏற்படும் பயங்கர விளைவைக் கூறுவது மார்க்ஸியம். ஆக இரண்டும் ஒன்றே. காந்தீயம் அருள்வழி, மார்க்ஸியம் பொருள் வழி.

இதைக் கூறும் ஓர் எடுத்துக் காட்டு:

**''ஓரறி வுயிரே ஈரறி வுயிராய்**
**ஈரறி வுயிரே மூவறி வுயிராய்**
**மூவறி வுயிரே நாலறி வுயிராய்**
**நாலறி வுயிரே ஐயறி வுயிராய்**
**வளர்தலை முன்னோர் அளந்தளந் துரைத்தனர்;**
**மாவும் மாக்களும் ஐயறிவினனே**
**ஆறாம் அறிவுக் கூறே மனிதன்**
**ஐந்தில் கிடக்கும் விந்தை என்றோ!**
**கொலைபுலை தவிர்த்தால் குலவும் ஆறே;**
**ஆறாம் அறிவுப் பேறு, புவியை**
**அகிம்சையில் வளர்க்கும் மகிமை உடையது.''***

---

* **பொருளும் அருளும் அல்லது மார்க்ஸியமும், காந்தீயமும்,** பக். 35-36.

# 13

## இறுவாய்

### திரு. வி. க ஓர் அந்தணர்

திரு.வி.கவின் நூல்களைப் படித்துப் பார்த்தபின் திரு.வி.க நம் எதிரில் எவ்வாறு தோற்றமளிக்கிறார்?

பெரியவராக; மிக மிகப் பெரியவராகத் தோற்றமளிக்கிறார். இதை புராணக் கதைகளில் விசுவரூபம் என்பர் அங்கே தெய்வத்தை அவ்வாறு வர்ணிப்பார்கள். இங்கே மனிதனாகவே வாழ்ந்து, மனிதருடன் போராடி, உண்மை, நேர்மை, எளிமை என்ற குறிக்கோளுக்காக ஒவ்வொரு நொடியும் வாழ்ந்து, தெய்வத் தன்மை எய்திய திரு.வி,கவைக் காண்கிறோம், வணங்குகிறோம்.

நூல்கள் எழுதியவர் எத்தனையோ பேர்.ஆனால் அதன்படி வாழ்ந்தவரோ வெகு சிலரே. அந்த சிலரில் மிக மிகச் சிலரில் கடைசி வரை அதன்படியே வாழ்ந்து, வழிகாட்டியாய் இருந்து, அமரத்துவம் அடைந்தவரோ, அவர்களிலும் மிகச் சிலரே. இந்தச் சிலருக்கு மட்டும் இந்த உறுதி எவ்வாறு ஏற்பட்டது. அவர் தம் உயர்ந்த உள்ளங் காரணமாக அமைந்ததே இவ்வுறுதி.

திரு. வி. கவின் வாழ்க்கை, அவர்தம் உயர்ந்த உள்ளத்தின் பிரதிபலிப்பு. இந்த பிரதிபலிப்பைக் காட்டுவன அவர் தம் உயர் நூல்கள்.

**'கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக'**

என்றார் பொய்யாமொழியார். அம்மொழியினை வாழ்வில் கடைப்பிடித்த சான்றோர் தமிழ்த் தென்றல்.

அவர்தம் உள்ளம் பரந்த தன்மையுடையது. சிறியோர், பெரியோர், எளியோர், பெருமையுடையோர், பொருள் உடைச் செல்வர், சல்லியில்லா ஏழை என பாகுபாட்டை வெறுத்தது அவர் உயர் உள்ளம்.

'அனைவரும் ஒன்றே'—பிறப்பில் உயர்வு தாழ்வு என்பது கிடையாது என்பதை அவர் உறுதியாக நம்பினார். அதைத் தம் வாழ்க்கையிலும் கடைப்பிடித்தார்.

வறுமையை வலிந்து ஏற்றார். ஆனால் என்றாவது அவர் தம்உள்ளம் அதற்காக வருந்தியதா? இல்லை, இல்லை, இல்லவே இல்லை. வயோதிக காலத்தில், வறுமை கண்ணிழந்த அவரை வாட்டியது. வருத்தியது; அவர்தம் உறுதியை சோதிப்பது போல் தேடி ஓடி அவரிடம் வந்தது பணம்! ஆனால் நடந்ததென்ன?

உறுதி வென்றது. உயர்ந்த உள்ளம் இன்னும் உறுதி பூண்டது.

அன்பு, எளிமை, உயர் சிந்தனை இவை மூன்றும் குடிகொண்ட ஒன்றே உயர்ந்த உள்ளம். இந்த உள்ளம் தனக்கென ஓர் உருவம் கொண்டது. அந்த உருவமே தமிழ்த்தென்றல் என்றால் மிகையன்று.

இராயப்பேட்டை முனிவர் ஓர் அந்தணர். வள்ளுவம் கூறும் அந்தணர். ஏன்? வாழ்க்கையில் 'அறவோர்; மறமெவ் வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகலான்' உயர் அந்தணர்; ஒப்புவமையில்லா உயர் அந்தணர்.

'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்ற மொழியினை ஓயாது முழங்கிய அவர், எம்மதமும் சம்மதம் என ஏற்கும்

பரந்த மனம் கொண்டவர். இறுதிவரை 'சன்மார்க்கமே' 'உலகம் உய்ய வழி சன்மார்க்கமே' என பட்டி தொட்டி தோறும் முழங்கி, தாமே அம்மரபில் வாழ்ந்து காட்ட திரு.வி.க தவிர வேறு யாரால் முடியும்.

சன்மார்க்கப் பொதுவுடைமையே உலக ஏற்றத் தாழ்வுகளைப் போக்கி உய்விக்கச் செய்யும், என்ற உண்மைக் கண்டவர் தமிழ் முனிவர். அதைப் பற்றி ஓய்வின்றி எல்லாவிடங்களிலும் பேசியவர். அவர் பெயர் சன்மார்க்கப் பொதுவுடைமை பெரியார் வரிசையில் நிச்சயம் என்றென்றும் விளங்கும்.

திரு.வி.க ஓர் உலகன்; நடமாடும் தமிழ்க் கலைக்கூடம். நம்மிடையே அவர் அமரராக வாழ்கிறார். நம் உள்ளத்தில் வாழ்கிறார். தமிழனும் தமிழ்நாடும் உள்ளவரை அவரை நிச்சயம் மறக்காது உலகம். கொள்கை வீரர்; பயன் கருதா தியாகி; தேசத் தொண்டில் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவர். தொழிலாளர், தமக்கு உயிர் கொடுத்த பெருந்தகை திரு.வி.கவை மறப்பாரோ? மாட்டார், மாட்டார்!

அவரது கொள்கை வாழையடி வாழையாக வாழ்ந்து வரும்.

வாழ்க திரு. வி. க. வளர்க தமிழ்!

Code No. A 440





திருவாளர் சக்திதாசன் சுப்பிரமணியன் ஒரு பழம் பெரும் தேசிய எழுத்தாளர். 1933 முதல் பத்திரிகை ஆசிரியராகத் தொண்டு புரிந்தவர். 'சுதந்திரச் சங்கு' பத்திரிகையில் அவர் தொடங்கிய எழுத்துப் பணி, இடை விடாது அவர் அமரராகும் வரை தொடர்ந்தது. பத்திரிகைத் தொண்டு தவிர அவர்தம் இலக்கியத் தொண்டும் பாராட்டற்குரியது.

நாற்பத்தி நான்கு நூல்களை எழுதிய பெருமை அவருக்குண்டு. திரு. வி. க வின் சீடரான இவர், தம் ஆசிரியர் பற்றி எழுதிய நூல்களிரண்டு. ஒன்று **'திரு.வி.க. வாழ்வும் தொண்டும்'**, மற்றொன்று **'திரு.வி.க உள்ளமும் உயர் நூல்களும்.'** இதில் இரண்டாவது நூல் அவர்தம் துணைவியார் திருமதி ஜலஜா சக்திதாசனுடன் சேர்ந்து எழுதியது. இது ஒரு திறனாய்வு நூல். அமரர் சக்திதாசன் சுப்பிரமணியன் எழுதிய நாற்பத்தி நான்கு நூல்களில் இருபது நூல்களுக்கு மேல், அவர், தம் துணைவியாருடன் சேர்ந்து எழுதியவையே.

இவை தவிர, திருமதி ஜலஜா சக்திதாசன் எழுதிய ஆய்வு நூல்கள் ஆறு. சமீபத்தில் வெளியான **'திப்பு சுல்தான் ஒரு மதவெறியரா?'** என்ற நூல் பலருடைய பாராட்டும் பெற்றது.